www.Padasalai.Net www.TrbTnpsc.com

# GANGA GUIDE

# தமிழ்

## பருவம் 1, 2, 3 இணைந்தது

7

### புதிய பாடத்திட்டத்தின்படி

- நூல் வெளி
- சொல்லும் பொருளும்
- மதிப்பீட்டு வினாக்கள்
- கலைச்சொல் அறிவோம்
- சிந்தனை வினா-விடை
- கூடுதல் வினாக்கள்
- கற்பவை கற்றபின்
- மனப்பாடப் பாடல்கள்
- மாதிரி வினாத்தாள்
- தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள்

உரையாசிரியர்கள்:

ச. சேட்டு மதார்சா, M.A., M.A., M.Phil., B.Ed., TPT, PGDTR, UGC-NET, Ph.D., Dip.Folk, PGDCA

கோ. பாக்கியநாதன், M.A., M.Phil., B.Ed.,

சி. ஜான் @ மாடசாமி, M.A., B.Ed., M.Phil., | வீ. அபிஷேகா கேத்தரின், M.A., B.Ed.,

SRI GANGA PUBLICATIONS®

(A UNIT OF SHYAMALA GROUP)

Chennai - Tirunelveli

Price ₹ 150 /-

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



*Published By*
*B. ARUMUGAM*
**SRI GANGA PUBLICATIONS**
*(A unit of* ***Shyamala*** *Group)*

## BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **446971431** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000T034** |
| Branch Name | : **Tirunelveli Junction** |

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **510909010051752** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

### CHENNAI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **928507483** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000A031** |
| Branch Name | : **Ashok Nagar** |

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **512020010022514** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

**SRI GANGA PUBLICATIONS**®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# முகவுரை ....

**"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"**

என்று புரட்சிப்பண் பாடினான் பாரதிதாசன்.

தாய்மொழியான தமிழ்ப்பாடத்தில் உயர்மதிப்பெண் பெற்றிடவும், பிழையின்றி இலக்கிய, இலக்கண நடையுடன் எழுதிடவும் இந்த **கங்கா தமிழ்** உங்களுக்கு உறுதுணை புரியும்.

***அன்பார்ந்த மாணவர்களே!***

தன்னம்பிக்கை, கடின உழைப்பு, விடாமுயற்சி எனும் மூன்றையும் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். அன்றாடம் படிப்பதனைப் பழக்கமாக்கிக் கொண்டு, அதனை நிரந்தர வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். எளிய இனிய நடை, தெளிவான சொற்றொடர் அமைப்பு, தமிழ்நாடு அரசின் பாடநூலைத் தழுவிய அனைத்து வினாக்களுக்கும் பயிற்சிகளுக்கும் தெளிவான விடைகள் இவையே கங்கா தமிழின் தனிச்சிறப்பு. இந்த **கங்கா தமிழ்** துணைவனை வாங்கிப் பயன்படுத்தும் நீவிர் அரிய சாதனைகளைப் படைத்திட வாழ்த்துகிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் உணர்வு!!

பதிப்பகத்தார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# முதல் பருவம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஒன்று | மொழி அமுதத்தமிழ் | எங்கள் தமிழ்* | 1 |
| | | ஒன்றல்ல இரண்டல்ல | 7 |
| | | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | 12 |
| | | சொலவடைகள் | 19 |
| | | குற்றியலுகரம், குற்றியலிகரம் | 21 |
| | | **மாதிரி வினாத்தாள் - 1** | 29 |
| இரண்டு | இயற்கை அணிநிழல் காடு | காடு* | 30 |
| | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | 36 |
| | | விலங்குகள் உலகம் | 42 |
| | | இந்திய வனமகன் | 49 |
| | | நால்வகைக் குறுக்கங்கள் | 50 |
| | | திருக்குறள்* | 58 |
| | | **மாதிரி வினாத்தாள் - 2** | 63 |
| மூன்று | நாடு, சமூகம் நாடு அதை நாடு | புலி தங்கிய குகை* | 64 |
| | | பாஞ்சை வளம் | 69 |
| | | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் | 75 |
| | | கப்பலோட்டிய தமிழர் | 82 |
| | | வழக்கு | 85 |
| | | **மாதிரி வினாத்தாள் - 3** | 96 |
| | | தொகுத்தறி மதிப்பீடு | 97 |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# இரண்டாம் பருவம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஒன்று | அறிவியல், தொழில்நுட்பம் அறிவியல் ஆக்கம் | கலங்கரை விளக்கம்* | 100 |
| | | கவின்மிகு கப்பல் | 105 |
| | | தமிழரின் கப்பற்கலை | 110 |
| | | ஆழ்கடலின் அடியில் | 116 |
| | | இலக்கியவகைச் சொற்கள் | 119 |
| | | **மாதிரி வினாத்தாள் - 1** | 126 |
| இரண்டு | **கல்வி** ஓதுவது ஒழியேல் | இன்பத்தமிழ்க் கல்வி* | 127 |
| | | அழியாச் செல்வம் | 131 |
| | | வாழ்விக்கும் கல்வி | 134 |
| | | பள்ளி மறுதிறப்பு | 138 |
| | | ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் | 140 |
| | | **மாதிரி வினாத்தாள் - 2** | 149 |
| மூன்று | கலை, அழகியல் கலை வண்ணம் | ஒரு வேண்டுகோள்* | 150 |
| | | கீரைப்பாத்தியும் குதிரையும் | 154 |
| | | பேசும் ஓவியங்கள் | 158 |
| | | தமிழ் ஒளிர் இடங்கள் | 161 |
| | | தொழிற்பெயர் | 163 |
| | | திருக்குறள் | 168 |
| | | **மாதிரி வினாத்தாள் - 3** | 171 |
| | | தொகுத்தறி மதிப்பீடு | 172 |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மூன்றாம் பருவம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஒன்று | நயத்தகு நாகரிகம் | விருந்தோம்பல் | 175 |
| | | வயலும் வாழ்வும் | 178 |
| | | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | 181 |
| | | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | 185 |
| | | அணி இலக்கணம் | 187 |
| | | **மாதிரி வினாத்தாள் - 1** | 192 |
| இரண்டு | ஒப்புரவு ஒழுகு | புதுமை விளக்கு | 193 |
| | | அறம் என்னும் கதிர் | 196 |
| | | ஒப்புரவு நெறி | 199 |
| | | உண்மை ஒளி | 203 |
| | | அணி இலக்கணம் | 205 |
| | | திருக்குறள் | 210 |
| | | **மாதிரி வினாத்தாள் - 2** | 213 |
| மூன்று | மானுடம் வெல்லும் | மலைப்பொழிவு | 214 |
| | | தன்னை அறிதல் | 218 |
| | | கண்ணியமிகு தலைவர் | 220 |
| | | பயணம் | 223 |
| | | ஆகுபெயர் | 225 |
| | | **மாதிரி வினாத்தாள் - 3** | 232 |
| | | தொகுத்தறி மதிப்பீடு | 233 |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கவிதைப் பேழை

# எங்கள் தமிழ்

## மனப்பாடப் பாடல்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

**நூல் : நாமக்கல் கவிஞர் பாடல்கள்**
**ஆசிரியர் : நாமக்கல் கவிஞர் (வெ. இராமலிங்கனார்)**



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | நாமக்கல் கவிஞர்.வெ .இராமலிங்கனார் |
| இயற்பெயர் | : | இராமலிங்கனார் |
| சிறப்புப்பெயர் | : | நாமக்கல் கவிஞர் , காந்தியக்கவிஞர் |
| சிறப்பு | : | தமிழறிஞர், கவிஞர், விடுதலைப்போராட்ட வீரர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் |
| படைப்புகள் | : | மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி |

## சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊக்கிவிடும் | - | ஊக்கப்படுத்தும் | விரதம் | - | நோன்பு |
| குறி | - | குறிக்கோள் | பொழிகிற | - | தருகின்ற |
| நெறி | - | வழி | அருள் | - | இரக்கம் |
| பொருள் | - | செல்வம், நற்செயல் | அச்சம் | - | பயம் |
| அறம் | - | நற்செயல் | போக்கி | - | நீக்கி |

பருவம் 1 7

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ________

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம் [விடை : அ]

2. 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்

இ) குர + லாகும் ஈ) குர + ஆகும் [விடை : ஆ]

3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) வான்ஒலி ஆ) வானொலி

இ) வாவொலி ஈ) வானலி [விடை : ஆ]

### நயம் அறிக

1. 'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) அருள்நெறி கொல்லா எல்லா
அதுவே கொள்கை என்றும்

2. 'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) அருள் கொல்லா அன்பும்
பொருள் எல்லா இன்பம்

3. 'எங்கள் தமிழ்' பாடலில் இறுதி எழுத்து ஒன்று போல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) தரலாகும் புகழாது ஊக்கிவிடும்
குரலாகும் இகழாது போக்கிவிடும்

### குறு வினா

1. தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

✍ நம் தாய்மொழி தமிழ், அருள் வழிகள் நிரம்பிய அறிவைத் தரும்

✍ கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

✍ நம் தமிழ்மொழி அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

✍ தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் (செல்வம்) பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.

✍ தம்மைப் போற்றாதவரையும் இகழ்ந்து பேசமாட்டார்.

**சிறு வினா**

1. **எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

✍ நம் தாய்மொழி தமிழ், அருள் வழிகள் நிரம்பிய அறிவைத் தருகின்றது. அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

✍ தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவரையும் இகழ்ந்து பேசமாட்டார்.

✍ கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

✍ நம் தமிழ்மொழி அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

**சிந்தனை வினா**

1. **கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தேன் இனிமையானது; தூய்மையானது; சுவைமிக்கது; இன்பம் கொடுப்பது. அதைப் போல இனிமையானது, தூய்மையானது, சுவைமிக்கது, இன்பம் கொடுப்பது தமிழ். எனவே கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. விரதம் | - | அ) வழி |
| 2. நெறி | - | ஆ) நோன்பு |
| 3. குறி | - | இ) தருகின்ற |
| 4. பொழிகிற | - | ஈ) குறிக்கோள் |

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ

இ) 1-ஆ 2-ஈ 3-ஆ 4-இ ஈ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ [விடை : அ]

2. **நாமக்கல் கவிஞர் என்றழைக்கப்படுபவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) வெ.இராமலிங்கனார் ஈ) கவிமணி [விடை : இ]

பருவம் 1 7

**3. காந்தியக் கவிஞர் என்றழைக்கப்படுபவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) வெ.இராமலிங்கனார் ஈ) கவிமணி [விடை : இ]

**4. நாமக்கல் கவிஞர் படைப்புகள் அல்லாத ஒன்று**

அ) மலைக்கள்ளன் ஆ) என்கதை

இ) சங்கொலி ஈ) காந்திபுராணம் [விடை : ஈ]

**5. "அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்" என்று பாடியவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) வெ.இராமலிங்கனார் ஈ) கவிமணி [விடை : இ]

**6. "பொருள்பெற யாரையும் புகழாது
போற்றாதாரையும் இகழாது" – இவ்வடிகளில் அமைந்த முரண் சொற்கள்**

அ) பொருள் - போற்றா ஆ) யாரையம் - தாரையும்

இ) பொருள் - பெற ஈ) புகழாது - இகழாது [விடை : ஈ]

**7. "கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக" – இவ்வடிகளில் 'நோன்பு' என்னும் பொருள் தரும் சொல் எது?**

அ) கொல்லா ஆ) விரதம் இ) குறி ஈ) நெறி [விடை : ஆ]

**8. "கத்தியின்றி இரத்த மின்றி
யுத்தமொன்று வருகுது" – இவ்வடிகளைப் பாடியவர்**

அ) வெ.இராமலிங்கனார் ஆ) பாரதிதாசன்

இ) கவிமணி ஈ) பாரதியார் [விடை : அ]

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிகத்தின் முதல் அரசவைக் கவிஞர்________ விடை: **கவிஞர் வெ.இராமலிங்கனார்.**
2. உலகமொழிகளில் தொன்மையானது ________ விடை : **தமிழ்மொழி**
3. 'எங்கள் தமிழ்' என்னும் தலைப்பில் கவிதை இடம்பெறும் நூல் ________
   விடை : **நாமக்கல் கவிஞர் பாடல்கள்**
4. மலைக் கள்ளன் , சங்கொலி , என் கதை என்னும் நூல்களை எழுதியவர் ________
   விடை:**கவிஞர் வெ.இராமலிங்கனார்**
5. வெ.இராமலிங்கனாரை ________ என்றும் அழைப்பர். விடை : **நாமக்கல் கவிஞர்**
6. நம் அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். விடை : **தமிழ்மொழி**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. எங்கள் தமிழ்மொழி ________ போன்ற மொழியாகும். **விடை : தேன்**

8. விடுபட்ட சீர்களை நிரப்புக.

________அறிவைத் தரலாகும்.

அதுவே ________குரலாகும் **விடை : அருள்நெறி, தமிழன்**

## குறு வினா

**1. நாமக்கல் கவிஞர், 'காந்தியக் கவிஞர்' என அழைக்கக் காரணம் யாது?**

காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் நாமக்கல் கவிஞர், 'காந்தியக் கவிஞர்' என அழைக்கப்படுகிறார்.

**2. நாமக்கல் கவிஞரின் பன்முகத் தன்மையினை எழுதுக.**

1) தமிழறிஞர் 2) கவிஞர் 3) விடுதலைப் போராட்ட வீரர்

**3. நாமக்கல் கவிஞரின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக.**

1) மலைக் கள்ளன் 2) சங்கொலி 3) என் கதை 4) நாமக்கல் கவிஞர் பாடல்கள்

## சிறு வினா

**1. தமிழின் சிறப்புகள் சிலவற்றை எழுதுக.**

- உலக மொழிகளில் தொன்மையானது தமிழ்மொழி.
- மென்மையும் இனிமையும் வளமையும் உடையது.
- வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது.
- காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்கிறது.

**2. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் - குறிப்பு வரைக.**

- இயற்பெயர் : இராமலிங்கனார்
- சிறப்புப்பெயர்: நாமக்கல் கவிஞர், காந்தியக்கவிஞர்.
- சிறப்பு : தமிழறிஞர், கவிஞர், விடுதலைப்போராட்ட வீரர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர்.
- படைப்புகள் : மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி

## கற்பவை கற்றபின்

**1. "எங்கள் தமிழ்" - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே
அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

**2. பின்வரும் நாமக்கல் கவிஞர் பாடலைப் படித்துச் சுவைக்க.**

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!...(கத்தியின்றி ...)
கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட!...(கத்தியின்றி...)

❖❀❖

## விடுகதைகள்

1. ஒற்றைக் காதுக்காரன், ஓடி ஓடி வேலி அடைகிறான். அது என்ன?
2. சின்னத்தம்பி குனிய வச்சான். அது என்ன?
3. திரிஇல்லாத விளக்கு . உலகமெல்லாம் தெரியுது. அது என்ன?

விடை பக்கம் : 204

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கவிதைப் பேழை

# ஒன்றல்ல இரண்டல்ல



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | உடுமலை நாராயணகவி |
| இயற்பெயர் | : | நாராயணசாமி |
| காலம் | : | 25.9.1899 - 23.5.1981 |
| சிறப்புப்பெயர் | : | பகுத்தறிவுக் கவிராயர் |
| பணி | : | தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் |
| சிறப்புகள் | : | கலைமாமணி பட்டம், 31.12.2008ல் இந்திய அஞ்சல் துறை இவரின் அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. உடுமலைப் பேட்டையில் சிலை மற்றும் மணிமண்டபத்தைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. |

பருவம் 1

## சொல்லும் பொருளும்

1. ஒப்புமை - இணை
2. அற்புதம் - விந்தை
3. முகில் - மேகம்
4. உபகாரி - வள்ளல்
5. சொல்ல - கூற
6. தென்றல் - தெற்கிலிருந்து வீசும் காற்று
7. கவி - கவிஞன்(அல்லது) புலவன்
8. அருள் - இரக்கம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ______**

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி [விடை : இ]

2. **வானில் ______ கூட்டம் திரண்டால் மழை பொழியும்**

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில் [விடை : ஆ]

3. **'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பார்த்து எழுதக்கிடைப்பது ______**

அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல
இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல [விடை : ஈ]

4. **'தந்துதவும்' என்னும் சொல்லைப் பார்த்து எழுதக்கிடைப்பது ______**

அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும்
இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் [விடை : அ]

7

5. ஒப்புமை+ இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ______

அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத

இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத [விடை : இ]

## குறுவினா

1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

✍ தமிழ்நாட்டில் வீசும் தென்றலில் தேன் மணம் கமழும்.

✍ சுவைமிகுந்த பழங்களும் தங்கம் போன்ற தானியக் கதிர்களும் விளையும்.

✍ தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

2. 'ஒன்றல்லஇரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.

✍ முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் வேள்பாரி.

✍ புலவரின் சொல்லுக்குத் தன் தலையையே தரத் துணிந்தவன் குமண வள்ளல்.

## சிறுவினா

1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

✍ பகைவரை வென்று பாடுவது பரணி இலக்கியம்.

✍ பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை, திருக்குறள், சங்கஇலக்கியங்கள்

- ஆகியன தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுகிறார்.

தமிழ்

## சிந்தனை வினா

1. தமிழில் அறஇலக்கியங்கள் மிகுதியாகக் காரணம் யாது?

✍ சங்ககாலத்தின் இறுதிப்பகுதி ஆடம்பரமும் ஆரவாரமும் மிக்கது.

✍ கலை என்ற பெயரில் ஒழுக்கக்கேடுகள் தலைதூக்கின.

✍ தமிழகத்தின் அகப்புற ஒழுக்கங்கள் பாதுகாக்கப்படாமல் ஒதுக்கப்பட்டன.

✍ குழப்பமான அச்சூழலில் நீதியும் அறமும் தேவைப்பட்டது.

✍ எனவே ,தமிழில் அறஇலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின.

7

## கூடுதல் வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம்

அ) பரிபாடல் ஆ) பரணி

இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [விடை : ஆ]

2. **பொருத்துக.**

1. பகைவரை வென்றதைப் பாடுவது - அ) பரிபாடல்
2. இசைப்பாடல் - ஆ) பரணி
3. வான்புகழ் கொண்டது - இ) சங்கஇலக்கியங்கள்
4. அகம், புறம் மெய்ப்பொருளாகக் கொண்டது - ஈ) திருக்குறள்

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ
இ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ [விடை : அ]

3. **பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர்**

அ) பாரதியார் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : ஈ]

4. **தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்**

அ) பாரதியார் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : ஈ]

5. **தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ்பெற்ற கவிஞர்**

அ) பாரதியார் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : ஈ]

6. **முல்லைக்குத் தேர் தந்து புகழ்பெற்றவன் ______**

அ) வேள்பாரி ஆ) குமணன் இ) அதியமான் ஈ) பேகன் [விடை : அ]

7. **புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தவன் ______**

அ) வேள்பாரி ஆ) குமணன் இ) அதியமான் ஈ) பேகன் [விடை : ஆ]

8. **இசைப்பாடல் இலக்கியம்**

அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [விடை : அ]

9. **அகம், புறம் மெய்ப்பொருளாகக் கொண்ட இலக்கியம்**

அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [விடை : இ]

10. **வான்புகழ் கொண்ட இலக்கியம்**

அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [விடை : ஈ]

**11. தானியக் கதிருக்குக் கூறப்பட்ட உவமை**

அ) கனி ஆ) தென்றல் இ) பொன் ஈ) தேன் **[விடை : இ]**

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒன்றல்ல இரண்டல்ல பாடலின் ஆசிரியர் ______ **விடை : உடுமலை நாராயண கவி**
2. தமிழ்நாடு நிலவளமும் நீர்வளமும் மட்டுமின்றி ________ வளமும் __________வளமும் நிரம்பியது. **விடை : பொருள், அருள்**
3. தமிழக மன்னர்களும் வள்ளல்களும் ______ மிக்கவர்களாக விளங்கினர். **விடை : கொடைத்திறன்**
4. 'கவிச்சொல்லுக்கு' என்ற சொல்லில் 'கவி'என்பதன் பொருள் ______ **விடை : புலவன்**
5. முல்லைக்குத் தேர் கொடுத்தான் ______ **விடை : வேள்பாரி**

## குறு வினா

**1. "வான்முகிலினும் புகழ்படைத்த உபகாரி" என்ற பாடலடியில் இடம் பெறும் 'முகில்' 'உபகாரி' ஆகிய சொற்களின் பொருள் யாது?**

1. முகில் - மேகம் 2. உபகாரி - வள்ளல்

**2. தமிழ்நாட்டிலுள்ள வளங்கள் யாவை?**

1. நில வளம் 2. நீர் வளம் 3. பொருள் வளம் 4. அருள் வளம்

**3. தமிழ்மொழியிலுள்ள வளங்கள் யாவை?**

1. இலக்கிய வளம் 2. இலக்கண வளம்

**4. தமிழகத்தில் கொடைத்திறன் மிக்கவர்களாகத் திகழ்ந்தவர்கள் யாவர்?**

1. மன்னர்கள் 2. வள்ளல்கள்

**5. மழை மேகத்தை விடப் புகழ்பெற்றவன் யார்? அவன் செயல் யாது?**

✍ மழை மேகத்தை விடப் புகழ்பெற்றவன் : வள்ளல் வேள்பாரி.

✍ அவன் செயல் : முல்லைக் கொடி படர்வதற்குத் தன் விலை உயர்ந்த தேரைக் கொடுத்தல்.

**6. எங்குத் தேன் மணம் கமழும்?**

தமிழகத்தில் வீசும் தென்றல் காற்றில் தேன் மணம் கமழும்.

**7. நன்செய் நிலம் என்றால் என்ன?**

ஆற்றுநீர், குளத்துநீர், கிணற்றுநீர் ஆகிய நீர்வள ஆதாரங்களைக் கொண்டு ஓர் ஆண்டுக்கு மூன்று போகங்கள் வரை வேளாண்மை செய்யும் நிலத்தொகுதி நன்செய் நிலம் எனப்படுகின்றது.

**8. நன்செய் நிலப்பயிர்கள் யாவை?**

நெல், வாழை, கரும்பு.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிறு வினா:**

**1. உடுமலை நாராயண கவி - குறிப்பு வரைக.**

இயற்பெயர் : நாராயணசாமி

காலம் : 25.9.1899 - 23.5.1981

சிறப்புப்பெயர் : பகுத்தறிவுக் கவிராயர்

பணி : தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர்

சிறப்புகள் : கலைமாமணி பட்டம், 31.12.2008ல் இந்திய அஞ்சல் துறை இவரின் அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. உடுமலைப் பேட்டையில் சிலை மற்றும் மணிமண்டபத்தைத் தமிழக அரசு நிறுவியுள்ளது.

**கற்பவை கற்றபின்**

**1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றி எழுதுக.**

1. தமிழ் இலக்கியங்கள் தோன்ற உதவிய வள்ளல்களைத் தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் எனலாம்.

✍ அதியன் (ஔவைக்கு உதவியவன்)

✍ யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை (ஐங்குறு நூறு தொகுப்பித்தவன்)

✍ பூரிக்கோ (குறுந்தொகையைத் தொகுப்பித்தவன்)

✍ பன்னாடு தந்த மாறன் வழுதி (நற்றிணையைத் தொகுப்பித்தவன்)

✍ பாண்டியன் உக்கிரப்பெருவழுதி (அகநானூறு தொகுப்பித்தவன்)

✍ சடையப்ப வள்ளல் (கம்பராமாயணம் எழுத உதவியவர்)

✍ சீதக்காதி, அபுல் காசிம் (சீறாப்புராணம் எழுத உதவியவர்)

✍ சந்திரன் சுவர்க்கி (நளவெண்பா எழுத உதவியவர்)

**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

1. கீழ்க்கணக்கு
2. மேல்கணக்கு
3. அறஇலக்கியம்
4. பெருங்காப்பியம்
5. சிறு காப்பியம்
6. சிறுகதை
7. மரபுக்கவிதை
8. புதுக்கவிதை
9. புதினம்
10. நாட்டுப்புற இலக்கியம்.

❖❀❖

பருவம் 1 7

இயல் 1 உரைநடை உலகம்

# பேச்சு மொழியும் எழுத்து மொழியும்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மொழியின் முதல்நிலை பேசுதல் ________ ஆகியனவாகும்.**
   அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல் **[விடை : ஆ]**
2. **ஒலியின் வரிவடிவம் ________ ஆகும்.**
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு **[விடை : ஆ]**
3. **தமிழின் கிளைமொழிகளில் ஒன்று ________**
   அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம் **[விடை : இ]**
4. **பேச்சுமொழியை ________ என்றும் கூறுவர்**
   அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி **[விடை : ஆ]**

**சரியா தவறா என எழுதுக.**

1. மொழி காலத்திற்கேற்ப மாறுகிறது. **விடை : சரி**
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **விடை : சரி**
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி. **விடை : சரி**
4. எழுத்துமொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம். **விடை: தவறு**
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத் தாழ்வு அவசியம். **விடை: சரி**

**ஊடகங்களை வகைப்படுத்துக.**

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்

| எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|
| செய்தித்தாள் | வானொலி |
| நூல்கள் | தொலைக்காட்சி |
| மின்னஞ்சல் | திரைப்படம் |

தமிழ் 7

**குறு வினா**

**1. மொழின் இருவடிவங்கள் யாவை?**

1. பேச்சுமொழி 2. எழுத்துமொழி

**2. பேச்சுமொழி என்றால் என்ன?**

வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது பேச்சுமொழி ஆகும்.

**3. வட்டாரமொழி எனப்படுவது யாது?**

இடத்திற்கு இடம் பேச்சுமொழி மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் பேச்சுமொழி மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

**சிறு வினா**

**1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| 1. பேச்சுமொழியில் சொற்கள் குறுகி ஒலிக்கும்.<br>எ.கா. நல்லாச் சாப்டான் | 1. எழுத்துமொழியில் சொற்கள் முழுமையாக எழுதப்படும்.<br>எ.கா. நன்றாகச் சாப்பிட்டான் |
| 2. உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | 2. உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| 3. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடம் உண்டு. | 3. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. |
| 4. திருத்தமான மொழிநடையில் அமைகிறது. | 4. திருத்தமான மொழிநடையில் அமைவதில்லை. |

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

- ✍ ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றனர்.
- ✍ வாழும் இடத்தின் நிலஅமைப்பு, இயற்கைத்தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்படும்.
- ✍ அவர்களுக்கு இடையே உள்ள தொடர்பு குறையும் போது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அதுவே ‘கிளைமொழி’ என்பர்.
- ✍ கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழி ஆகும்.

## சிந்தனை வினா

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

✍ இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். இலக்கியங்கள் தாம் தோன்றிய காலச் சூழலைக் காட்டுவதாலும் பண்பாடு, நாகரிகம், சமூக வாழ்க்கை ஆகியவற்றைக் காட்டுவதாலும் அவை அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

✍ வாழ்வோடு இணைந்த சுவை கொண்டு இலக்கியங்கள் படைக்கப்படுவதாலும் நீதிநெறிகளை முன்வைப்பதாலும் இன்றும் இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதாலும் இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்கின்றன.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பேசுவதும் கேட்பதும் மொழியின் ________ நிலை**

அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் **[விடை : அ]**

2. **வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது ________ஆகும்.**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி **[விடை : ஆ]**

3. **கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது ________**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி **[விடை : அ]**

4. **எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் மொழியின் ________ நிலை**

அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் **[விடை : ஆ]**

5. **நேரில் காண இயலாத நிலையில் செய்தியைத் தெரிவிக்க உதவுவது**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி **[விடை : அ]**

6. **மனிதனின் சிந்தனை காலம் கடந்தும் வாழ்வதற்குக் காரணம்**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி **[விடை : அ]**

7. **மொழியின் உயிர் நாடியாக விளங்குவது**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி **[விடை : ஆ]**

8. பேச்சுமொழியில் ‘குழந்தையை நல்லாக் கவனிங்க’ என்று கூறும்போது ‘கவனி’ என்னும் சொல்தரும் பொருள்

அ) பேணுதல் ஆ) கவனித்துச்செல்

இ) பாதுகாப்புப் பொருள் ஈ) பாருங்கள் [விடை : அ]

9. ‘நான் பறவையைப் பார்த்தேன்’ - இத்தொடர் ‘பறவையைப் பார்த்தது யார்?’ என்ற வினாவாக அமையும் போது , அழுத்தம் கொடுக்கவேண்டிய சொல் எது?

அ) பறவை ஆ) நான் இ) பார்த்தது ஈ) யார் [விடை : ஆ]

10. மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள்....... என்பர்.

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி

இ) இலக்கிய மொழி ஈ) வட்டார மொழி [விடை : ஈ]

11. பொருந்தாதவற்றைத் தேர்ந்தேடுக்க.

அ) தமிழ் - கிளை மொழி ஆ) கன்னடம் - கிளை மொழி

இ) மலையாளம் - கிளை மொழி ஈ) தெலுங்கு - கிளை மொழி [விடை : அ]

12. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | - | அ) இரட்டை வழக்கு |
| 2. கன்னடம் | - | ஆ) நல்லாச் சாப்ட்டான் |
| 3. வட்டார மொழி | - | இ) கீது |
| 4. பேச்சு வழக்கு | - | ஈ) கிளை மொழி |

அ) 1- அ, 2 - ஈ, 3-இ, 4-ஆ ஆ) 1- ஈ, 2-ஆ, 3-இ, 4- அ

இ) 1- ஈ, 2 - இ, 3-அ, 4-ஆ ஈ) 1- அ, 2-இ, 3-ஆ, 4-ஈ [விடை : அ]

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. உலக வழக்கு , செய்யுள் வழக்கு பற்றிக் குறிப்பிடுபவர் ________ விடை : தொல்காப்பியர்

2. இரட்டை வழக்கு மொழி ________ விடை : தமிழ்

3. எழுத்துமொழியில் பெரும்பாலும் ________ பேணப்படுகின்றது. விடை : மொழித்தூய்மை

4. ஒருமொழி உயிர்ப்போடு வாழ__________யும், காலம் கடந்து வாழ்வதற்கு __________யும் தேவைப்படுகின்றன. விடை : பேச்சுமொழி, எழுத்துமொழி

5. ‘எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்’ என்று பாடியவர் ________

விடை : பாவேந்தர் பாரதிதாசன்.

பருவம் 1 7

**குறுவினா**

1. **இரட்டை வழக்கு மொழி என்றால் என்ன? சான்று தருக.**

பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி ஆகும்.

சான்று : தமிழ் மொழி

2. **குழந்தைகளுக்குத் தாய்மொழியும் பிறமொழியும் எவ்வாறு அறிமுகமாகின்றன?**

✍ கேட்டல், பேசுதல் என்னும் முதல் நிலையிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாகிறது.

✍ படித்தல், எழுதுதல் என்னும் இரண்டாம் நிலையில் குழந்தைகளுக்குப் பிறமொழிகள் அறிமுகமாகிறது.

3. **பேச்சுமொழி, எழுத்துமொழி என்பதைத் தொல்காப்பியர் எச்சொற்களால் குறிப்பிடுகிறார்?**

1. பேச்சுமொழி - உலக வழக்கு,
2. எழுத்துமொழி - செய்யுள் வழக்கு

4. **தமிழில் இருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் யாவை?**

1. கன்னடம், 2. தெலுங்கு, 3. மலையாளம்

5. **பேச்சுமொழி, எழுத்து மொழி என்னும் இரு கூறுகளையும் கொண்ட மொழி எது?**

தமிழ் மொழி.

6. **பழமையும் புதுமையும் நிறைந்து சிறந்த மொழி எது?**

தமிழ் மொழி.

7. **மொழி என்பது யாது?**

தனது எண்ணங்களையும உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்கு மனிதனால் உருவாக்கப்பட்டதே மொழி என்பர்.

8. **பேச்சுமொழியின் சிறப்புக்கூறுகள் யாவை?**

பேசுபவனின் உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ஆகும்.

9. **ஊடகங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

1. வானொலி 2. தொலைக்காட்சி 3. நாளேடுகள்

10. **திருத்தமான தமிழை எங்கெங்குப் பயன்படுத்த வேண்டும்?**

திருத்தமான தமிழையே ஊடகங்களிலும் இலக்கியங்களிலும் பயன்படுத்த வேண்டும

**சிறு வினா**

**1. பேச்சு மொழி, எழுத்துமொழி, வட்டார வழக்கு ஆகியவற்றை விளக்கி சான்று தருக.**

**பேச்சு மொழி** : வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது பேச்சுமொழி ஆகும். உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்.கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.பேசுபவனின் உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ஆகும்.

**சான்று** : குழந்தையை நல்லாக் கவனிங்க.

**எழுத்துமொழி** : பேச்சு மொழிக்கு நாம் தந்த வடிவமே எழுத்துமொழி . கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்துமொழி. ஒரு மொழியானது நீண்ட காலம் நிலைபெற எழுத்து மொழியே காரணம்.

**சான்று** : நன்றாகச் சாப்பிட்டான்.

**வட்டார வழக்கு** : இடத்திற்கு இடம் பேச்சுமொழி மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் பேச்சுமொழி மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டாரமொழி என்பர்.

**சான்று** : ‘இருக்கிறது’ என்ற சொல்லை ‘இருக்கு’, ‘கீது’ என வழங்குவது.

**நெடு வினா**

**1. பேச்சுமொழியில் சொற்பொருள் வேறுபாடுகள் குறித்து எழுதுக.**

- ✍ பேசப்படும் சூழலைப் பொறுத்து பேச்சுமொழியில் பொருள் வேறுபடும்.
- ✍ எடுத்துக்காட்டாகக் ‘குழந்தையை நல்லாக் கவனிங்க’ என்று கூறும்போது ‘கவனி’ என்னும் சொல் பேணுதல் என்னும் பொருளைத் தருகின்றது. ‘நில்’, ‘செல்’, கவனி’ என்பதில் ‘கவனி’ என்னும் சொல் கவனித்துச் செல் என்னும் பாதுகாப்புப் பொருளைத் தருகின்றது.
- ✍ ஒலிப்பதன் ஏற்ற இறக்கமும் பொருள் வேறுபாட்டைத் தரும்.
- ✍ எடுத்துக்காட்டாக ‘என்னால் போக முடியாது‘ என்னும் தொடர் ஓங்கி ஒலிக்கும் போது மறுப்பையும் , மென்மையாக ஒலிக்கும் போது இயலாமையை உணர்த்துகின்றது.
- ✍ தொடரில் எச்சொல்லுக்கு அழுத்தம் கொடுக்கிறோமோ அதற்கேற்ப பேச்சுமொழியின் சொல் வேறுபடுகின்றது.
- ✍ எடுத்துக்காட்டாக ‘நான் பறவையைப் பார்த்தேன்’ என்னும் தொடரில் ‘நான்‘ என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தால் , ‘பறவையைப் பார்த்தது யார்?’ என்னும் வினாவுக்கு விடையாக அமையும்.
- ✍ ‘பறவையை’ என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தால், ‘நீ எதைப் பார்த்தாய்?’ என்னும் வினாவுக்கு விடையாக அமையும்.
- ✍ ‘பார்த்தேன்’ என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தால், ‘நீ பறவையை என்ன செய்தாய்?’ என்னும் வினாவுக்கு விடையாக அமையும்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சு வழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடர்களை எழுதி வருக.**

(எ.கா.) பேச்சுமொழி - அம்மா பசிக்கிது எனக்குச் சோறு வேணும்.
எழுத்துமொழி - **அம்மா பசிக்கின்றது. எனக்குச் சோறு வேண்டும்.**

1. பேச்சுமொழி - வூட்டுக்கு போகனும்.
எழுத்துமொழி - **வீட்டிற்குப் போக வேண்டும்.**

2. பேச்சுமொழி - வவுறு நிறையா சாப்புடு .
எழுத்துமொழி - **வயிறு நிறைய சாப்பிடு.**

3. பேச்சுமொழி - இன்னிக்கு காத்தால வாங்கிட்டு வந்தே
எழுத்துமொழி - **இன்றைக்குக் காலையில் வாங்கி வந்தேன்.**

4. பேச்சுமொழி - தண்ணி கொண்டா
எழுத்துமொழி - **தண்ணீர் கொண்டு வா.**

**2. பேசும் போது சிலநேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவது உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்த வழக்குச் சொற்களையும் எழுதுக.**

(எ.கா) சொல்லு - சொல், நில்லு - நில், வந்தியா - வந்தாயா?, சாப்டியா - சாப்பிட்டாயா?

| | | | |
|---|---|---|---|
| செல்லு | செல் | போனியா | போனாயா? |
| கொல்லு | கொல் | பார்த்தியா | பார்த்தாயா? |
| வெல்லு | வெல் | சொன்னியா | சொன்னாயா? |
| தள்ளு | தள் | கொடுத்தியா | கொடுத்தாயா? |
| துள்ளு | துள் | செய்தியா | செய்தாயா? |

❖❀❖

## சிந்தனைப்புதிர்

1. முதலெழுத்து தமிழின் அடுத்த எழுத்து கடை மூன்று சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கை தேவை?
2. முதல் இரண்டை இழந்தால் ஒளி இல்லை. கடை இரண்டை ஐந்தறிவு ஜீவனுக்கு காட்டுவது யார்? முதலும் கடையும் சேர்ந்தால் கை இழந்த பெண். மொத்தத்தில் அழகிய பெயராகவும் இருக்கும் நான் யார்?

(விடைகள் பக்கம்– 139)

❖❀❖

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 விரிவானம்

# சொலவடைகள் (பொம்மலாட்டம்)

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**'ஆளுக்கு ஒரு வேலை'**

### முன்னுரை

கல்வியின் அவசியத்தை உணர்த்தும் 'ஆளுக்கு ஒரு வேலை' என்னும் பொம்மலாட்டக் கதை நிகழ்வைச் சிறுகதை வடிவில் காண்போம்.

### பையனின் பிடிவாதமும் பெற்றோர் அறிவுரையும்



அம்மா, அப்பா, பையன் என சிறுகுடும்பம் ஒன்றுள்ளது. அக்குடும்பத்தில் உள்ள பையன் ஒழுங்காகப் பள்ளிக் கூடம் செல்லாமல் ஊர்சுற்றிக் கொண்டே இருப்பான் . யார் அறிவுரை கூறினாலும் கேட்காத பிடிவாத குணம் கொண்டவன். அவனது பிடிவாதத்தை யாராலும் மாற்ற முடியாது.ஒருநாள்அப்பாஅந்தப்பையனிடம்,'இப்பொழுது நீ படிக்கவில்லை என்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது, பள்ளிக்கூடம் போய் படி' என்றார். அம்மாவும், 'படிக்கவில்லையென்றால் யாரும் மதிக்கமாட்டார்கள்' என்றார். அவன் வேண்டா வெறுப்பாகப் பள்ளிக்கூடம் சென்றான்.

### விளையாட அழைத்தல்



வழக்கம் போலவே பள்ளிக் கூடத்தை விட்டு ஓட்டம் பிடிக்கின்றான். விளையாட யாராவது வருவார்களா? என்று பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது எறும்பு ஒன்று வந்தது. அதனை விளையாடக் கூப்பிட்டான். ஆனால் அது தன் குழந்தைகளுக்குத் தீனி கொடுக்க வேண்டும். அரிசி, தவிடு சேகரிக்க வேண்டும். உனக்குத் தான் வேலை இல்லை என்றது. பிறகு தேனீ , பொதிமாடு, ஆமை, முயல் ஆகியவற்றை ஒவ்வொன்றாக விளையாடக் கூப்பிட்டான்.அவனுக்குப் புத்தி புகட்டும் வண்ணம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அவை விளையாட மறுத்து விட்டன.

### மனமாற்றம்

ஈரமான குட்டிச் சுவர் மீது அவன் அமர்ந்தான். சுவர் இடிந்து, அதிலிருந்த பூச்சி, எறும்பு, வண்டு ஆகியன 'உனக்குத் தான் வேலை இல்லை, நாங்கள் சேர்த்த பொருளை எல்லாம் உடைத்து விட்டாயே!' என்றுச் சொல்லி அவனைக் கடித்தன. மனம் மாறிய பையன் தன் அம்மாவிடம், 'உலகத்தில் ஈ, எறும்பு கூட சும்மா இல்லாமல் வேலை செய்கின்றன. படிப்பது தான் என் வேலை என்பதைப் புரிந்து கொண்டேன். இனி ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்கின்றேன்' என்றான்.

### முடிவுரை

'ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை உண்டு. மாணக்கர்களுக்குப் படிப்பது மட்டும் தான் நம் வேலை' என்பதை இக்கதையின் மூலம் நாம் அறியமுடிகின்றது.

கதை உணர்த்தும் நீதி : படி ! முதற்படி! அதுவே வாழ்க்கைப் படி!

பருவம் 1 7

## கற்பவை கற்றபின்

1. **உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

1. வீட்டுக்கு வீடு வாசற் படி.
2. வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்.
3. அடிச்சு வளக்காத புள்ளயும் ஒடிச்சு வளக்காத முருங்கையும் உருப்படாது.
4. எறச்ச கிணறு ஊறும்.
5. நாய் வித்த காசு கொலக்கவா செய்யும்.
6. ஊராரு புள்ளய ஊட்டி வளத்தா தன்புள்ள தன்னால வளரும்.
7. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
8. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
9. காணி சோம்பல் , கோடி கேடு.
10. மானேண்ணா புள்ளி கொறயுமா? மயிலேண்ணா எறகு உதிறுமா?

2. **பாடப்பகுதியில்இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

(எ.கா) குத்துக்கல்லுக்குக் குளிரா வெயிலா என்பது போல் என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.

1. **எறும்பு ஊரக் கல்லும் தேயும் :**
மாணவர்களிடம் ஆசிரியர் எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பது போல தீய பழக்கங்களின் கொடுமையினைக் கூறி மனமாற்றம் அடையச் செய்வார்.

2. **சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?**
கற்பனையில் மிதந்து இருப்பவர்கள் சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா? என்பதை உணர வேண்டும்.

3. **அதிர அடிச்சா உதிர விளையும் :**
அதிர அடிச்சா உதிர விளையும் என்பது போல வாழ்வில் முன்னேற தொடர் முயற்சி செய்தால் போதும்.

4. **காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தான் தெரியும் :**
காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தான் தெரியும் என்பது போல உழைப்பவருக்குத் தான் பணத்தின் அருமை தெரியும்.

5. **பாடிப்பாடி குத்தினாலும் பதறு அரிசி ஆகுமா?**
தீயவன் கோடி ரூபாயைக் கோவில் உண்டியலில் போடுவது பாடிப்பாடி குத்தினாலும் பதறு அரிசி ஆகுமா? என்பது போலப் புண்ணியம் கிடைக்குமா?

❖❀❖

தமிழ் 7

# இயல் 1 கற்கண்டு குற்றியலுகரம், குற்றியலிகரம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன்தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| காசு | எஃகு | ஆறு<br>ஏடு<br>விறகு | எட்டு<br>உழக்கு | பந்து<br>கரும்பு | கொய்து |

**பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.**

1 பசு, விடு, ஆறு, கரு — **விடை :** கரு
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து — **விடை :** பஞ்சு
3. ஆறு , மாசு, பாகு, அது — **விடை :** அது
4. அரசு, எய்து, மூழ்கு,மார்பு — **விடை :** அரசு
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு — **விடை :** எஃகு

### குறு வினா

**1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

குற்றியலுகரம் - குறுமை + இயல் + உகரம்
தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரைமாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

**1. பொருத்துக.**

1. நெடில் தொடர் - அ) எஃகு, அஃது
2. ஆய்தத் தொடர் - ஆ) அரசு, ஒன்பது, கயிறு
3. உயிர்த் தொடர் - இ) பாகு, மாசு, பாடு, காது
4. வன்தொடர் - ஈ) பாக்கு, பேச்சு, பாட்டு



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

அ) 1-அ, 2- ஈ, 3-இ, 4-ஆ ஆ) 1-ஈ, 2-ஆ, 3-இ, 4-அ
இ) 1- இ, 2-அ, 3-ஆ, 4-ஈ ஈ) 1- அ, 2-இ, 3-ஆ, 4-ஈ [விடை : இ]

2. குற்றியலுகரத்தின் வகைகள்
அ) ஆறு ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு [விடை : அ]

3. பொருந்தாத இணையைக் கண்டறிக.
அ) உயிரெழுத்து - 12 ஆ) மெய்யெழுத்து - 18
இ) சார்பெழுத்து - 10 ஈ) தமிழ் எழுத்து - 5 [விடை : ஈ]

4. குற்றியலுகரம் பெறும் மாத்திரை அளவு
அ) ஒன்று ஆ) இரண்டு இ) அரை ஈ) கால் [விடை : இ]

5. குற்றியலிகரம் பெறும் மாத்திரை அளவு
அ) ஒன்று ஆ) இரண்டு இ) அரை ஈ) கால் [விடை : இ]

6. குற்றியலிகரம் பயின்று வந்த சொல்லைத் தேர்ந்தெடுக்க.
அ) எஃகு ஆ) கயிறு இ) பற்று ஈ) கொக்கியாது [விடை : ஈ]

7. பின்வரும் சான்றுகளில் முற்றியலுகரம் அல்லாததைத் தேர்ந்தெடுக்க.
அ) புகு ஆ) பசு இ) பந்து ஈ) ஏழு [விடை : இ]

8. மென் தொடர்க் குற்றியலுகரச் சான்றினைத் தேர்வு செய்க.
அ) எஃகு ஆ) காது இ) எய்து ஈ) மஞ்சு [விடை : ஈ]

9. இடைத் தொடர்க் குற்றியலுகரச் சான்றினைத் தேர்வு செய்க.
அ) எஃகு ஆ) காது இ) எய்து ஈ) மஞ்சு [விடை : இ]

10. தோப்பியாது, கேண்மியா - ஆகிய சொற்கள் ____________ க்குச் சான்று.
அ) குற்றியலிகரம் ஆ) நெடில் தொடர் குற்றியலுகரம்
இ) முற்றியலுகரம் ஈ) குற்றியலுகரம் [விடை : அ]

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் ___________ஆகும்.
விடை : குற்றியலுகரம்
2. முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரைமாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும் இகரம் __________ எனப்படும். விடை : குற்றியலிகரம்
3. தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை __________ என்பர். விடை : முற்றியலுகரம்
4. குறில் எழுத்துகளைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் __________
விடை : கரம்

தமிழ் 7

5. நெடில் எழுத்துகளைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் ________

விடை : கான்

6. குறில்,நெடில் எழுத்துகளைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் __________

விடை : காரம்

7. ஆய்த எழுத்தைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் _________

விடை : கேனம்

8. சார்பெழுத்து _________ வகைப்படும். விடை : பத்து

9. குற்றிலுகரத்தின் வகைகள் _________ விடை : ஆறு

10. _________ என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச்சொற்கள் இல்லை.

விடை : 'வ்'

11. _______, _______, _______ ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை. விடை : சு, டு, று

## குறுவினா

**1. குற்றியலுகரத்திற்குச் சான்று தருக.**

காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

**2. முற்றியலுகரத்திற்குச் சான்று தருக.**

புகு, பசு, விடு, அது, விடு, வறு.

**3. குற்றியலிகரத்திற்குச் சான்று தருக.**

கொக்கியாது, தோப்பியாது, நாடியாது, கேண்மியா, சென்மியா.

**4. முற்றியலுகரம் என்றால் என்ன? சான்று தருக.**

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

**எ.கா.** புகு, பசு, விடு, அது, விடு, வறு.

**5. முதலெழுத்துகள் யாவை?**

உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும்.

**6. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. ஐகாரக்குறுக்கம்
6. ஔகாரக்குறுக்கம்
7. மகரக்குறுக்கம்
8. குற்றியலிகரம்
9. குற்றியலுகரம்
10. ஆய்தக்குறுக்கம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா**

**1. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும் ?அவை யாவை?**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

1. நெடில் தொடர் குற்றியலுகரம்
2. ஆய்தத் தொடர் குற்றியலுகரம்
3. உயிர்த் தொடர் குற்றியலுகரம்
4. வன் தொடர் குற்றியலுகரம்
5. மென் தொடர் குற்றியலுகரம்
6. இடைத் தொடர் குற்றியலுகரம்

## கற்பவை கற்றபின்

**1. ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப்பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள், அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்தெழுதுங்கள்.**

| |
|---|
| **எண்ணுப்பெயர்கள் :** ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து. |
| **குற்றியலுகரச் சொற்கள் :** ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது, பத்து. |

**2. குற்றியலுகர எண்ணுப்பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

வன்தொடர் குற்றியலுகரம் - மூன்று, எட்டு, பத்து
மென் தொடர் குற்றியலுகரம் - ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஒன்பது
உயிர்த் தொடர் குற்றியலுகரம் - ஆறு

**3. குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.**

(எ.கா) ஒன்று - 1 + ½ + ½ = 2
இரண்டு - 1 + 1 + ½ + ½ = 3
மூன்று - 2 + ½ + ½ = 3
நான்கு - 2+ ½ + ½ = 3
ஐந்து - 2 + ½ + ½ = 3
ஆறு - 2 + ½ = 2½
ஏழு - 2 + 1 = 3
எட்டு - 1 + ½ + ½ = 2
ஒன்பது - 1 + ½ + 1 + ½ = 3
பத்து - 1 + ½ + ½ = 2

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.

பாகு, வாகு,

பாடு, சாடு, ஓடு, விடு,

காசு, வீசு, பேசு,

வாது, கேது, சாது, மாது,

வறு, சேறு, செறு,

வது,வடு, பொது.

## மொழியை ஆழ்வோம்

### கேட்க

தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்க.

### பாரதியாரின் சொற்பொழிவுச் செய்தி

தமிழின் சிறப்பை விளக்கும் வண்ணம் காந்தியடிகளிடம் பாரதி நடத்திய கடித உரையாடல் ஒன்றைத் தனது சொற்பொழிவில் எடுத்துரைத்தார்.

காந்தியடிகளின் சொற்பொழிவை நான் கேட்க நேர்ந்தது. வெள்ளையனே வெளியேறு என்பதை அழுத்தமாக வலியுறுத்தினார். அவருடைய சொற்பொழிவைப் பற்றி நான் ஒரு மடல் எழுதினேன். அதில் மகாத்மாவே நேற்றைய சொற்பொழிவில், வெள்ளையனே வெளியேறு என்ற பேச்சு அருமை. ஆனால் ஒரு வருத்தம்.வெள்ளையனை வெளியேறச் சொல்லி , தங்கள் சொற்பொழிவு இந்தியிலோ குஜராத்தியிலோ அமையாமல் ஆங்கிலத்தில் இருந்தது மிகுந்த வருத்தம் அளிக்கின்றது என்று எழுதியிருந்தேன். அதற்கு காந்தியார் மறுமடலில், நான் ஆங்கிலத்தில் பேசியதை நீங்கள் மடலில் குறிப்பிடும் போது ஏன் நீங்களும் ஆங்கிலத்தில் எனக்கு மடல் எழுதினீர் என்றார்.அதற்கு நான், யாருடைய மனமும் புண்படும் படியான செய்தியைப் பேசுவதாக இருந்தாலும், எழுதுவதாக இருந்தாலும் என்னுடைய தாய்மொழியாகிய தமிழைப் பயன்படுத்த மாட்டேன் என்று மடல் எழுதினேன் என்றார்.

### கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

### நான் அறிந்த பழமொழிகள்

தமிழன்னையின் தாழ்பணிந்து வணக்கங்கள் பலசொல்லி என்னுரையை ஆரம்பம் செய்கின்றேன். நான் அறிந்தபழமொழிகள் பற்றிச் சில நிமிடங்கள் பேசுகின்றேன்.பழமொழி என்பது என்ன? நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம்உணர்ந்து கூறிய மொழிகள் பழமொழி ஆகும். அவை அனுபவ மொழிகள். வாழ்க்கையை வளப்படுத்துவன. அவற்றின் வழிநம் எண்ணங்களையும் வாழக்கைப் பாதையையும் முடிவு செய்யலாம. யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே, இக்கதைக்கு அக்கரை பச்சை, ஆடிக் காற்றில்

பருவம் 1 7

அம்மியும் பறக்கும், ஆலும் வேலும் பல்லுக்குறுதிநாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள், அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல் ஆகியன நான் அறிந்த பழமொழிகள் ஆகும். இவை போல பல்லாயிரக்கணக்கான பழமொழிகள் நம் நாட்டில் உள்ளன. அதனை அறிந்து பயன்படுத்துவோம்.நன்றி. வணக்கம்.

**கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தர வேண்டிய சொற்களை எடுத்து எழுதுக.**

கோதை கவிதையைப் படித்தாள்.

| வினா | அழுத்தம் தர வேண்டிய சொல் |
|---|---|
| கோதை எதைப் படித்தாள்? | கவிதை |
| கவிதையைப் படித்தது யார்? | கோதை |
| கோதை கவிதையை என்ன செய்தாள்? | படித்தாள் |

**படத்திற்குப் பொருத்தமான திணையை எழுதுக.**


உயர்திணை


அஃறிணை


உயர்திணை

**கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**

வயல் , முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| முகிலன் | வயல் |
| கயல்விழி | குதிரை |
| தலைவி | கடல் |
| ஆசிரியர் | புத்தகம் |
| சுரதா | மரம் |

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிப் பற்று**

(முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப் பற்று - தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை - முடிவுரை)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## முன்னுரை

‘தாயிற் சிறந்த கோவிலும் இல்லை’ என்பது சான்றோர் பெருமக்கள் பலரின் வாக்காகும். நம்மைப் பெற்ற தாயைவிட சிறந்ததொரு தெய்வம் கிடையாது என்பதால் தான் ‘தாய்மொழி’ என்று அழைத்தனர்.தாய்மொழியின் மீது பற்றுதலோடு இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

## மொழி பற்றிய விளக்கம்

நமது எண்ணங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளவும் , நமது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுவது மொழியாகும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் நாகரிக உயர்வுக்கும் அடிப்படையாக அமைவது மொழியாகும்.

## தாய்மொழிப் பற்று

குழந்தைக்குத் தாய் முதன் முதலில் சொல்லித் தரும் மொழியே தாய்மொழி. குழந்தைகளுக்குத் தாய்மொழி இயல்பாகவே வரும்.கனவிலும் நனவிலும் தாய்மொழியே இயல்பாக அமையும்.அவரவர் தாய்மொழி மீது தணியாத பற்று கொள்ள வேண்டும்.

## தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்

இன்றைய காலத்தில் தாய்மொழியில் பேசவும் படிக்கவும் பலர் தயங்குகின்றனர். இது பெற்ற தாயைப் புறந்தள்ளி வைப்பது போன்றதாகும். எண்ணற்ற உலகம் போற்றும் சான்றோர்கள் தத்தம் தாய்மொழியிலேயே செயல்களைச் செய்து உயர்ந்துள்ளனர்.பாரதியார் , காந்தியடிகள் , இரவீந்திர நாத் தாகூர் எனப் பலரும் பன்மொழி அறிந்திருந்த போதும், சிறந்த உலகம் போற்றும் படைப்புகளைத் தம் தாய்மொழியிலேயே தந்தனர்.சந்திரபோஸ் தன் மகன் ஜெகதீஸ் சந்திரபோஸைத் தாய்மொழி கற்பிக்கும் பள்ளியிலேயே படிக்க வைத்தார். அவர் பிற்காலத்தில் உலகின் தலைசிறந்த அறிவியல் அறிஞரானார்.

## சாதுவன் வரலாறு

ஆதிரையின் கணவன் சாதுவன் வணிகம் செய்ய கப்பற் பயணம் செய்கின்றான் பெருங்காற்றால் கப்பல் கவிழ்ந்து விடுகின்றது. சாதுவன் பிழைத்து நாகர்கள் வாழும் தீவை அடைகின்றான். அவர்கள் மனித மாமிசம் உண்பவர்கள். சாதுவனைத் தின்ன நினைக்கின்றனர். ஆனால் சாதுவன், நாகர்கள் பேசும் மொழியைப் பேசுகின்றான். நாகர்கள் சாதுவனுக்கு வேண்டியதைக் கொடுத்து அனுப்பி வைக்கின்றனர். தாய்மொழியே எதையும் மாற்றும்.

## நமது கடமை

- ✍ அந்நிய மொழி மோகம் கொண்டு அலையாமல் தாய்மொழியின் மீது அளவற்ற பற்றுதல் வைக்கவேண்டும்.
- ✍ தாய்மொழி வழிக் கல்வி பெறுதலே சிறப்பு என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- ✍ கல்லூரிக் கல்வி வரைத் தாய்மொழியிலேயே பயில வேண்டும்.

பருவம் 1 7

## முடிவுரை

ஆங்கில வழிக்கல்வி மூலம் நாம் நம்மை இழந்து கொண்டு இருக்கின்றோம்.நமது பண்பாடு, கலாச்சாரத்தை மீட்டுக் கொண்டுவரத் தாய்மொழிப் பற்றுடன் தாய்மொழில் பயில்வது இன்றைய காலத்தில் அவசியமாகும்.

## மொழியோடு விளையாடு

**தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

**இருதிணை** - உயர்திணை, அஃறிணை.

**முக்கனி** - மா, பலா, வாழை,

**முத்தமிழ்** - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்,

**நாற்றிசை** - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு,

**ஐவகைநிலம்** - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை,

**அறுசுவை** - இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு,

**கட்டங்களிலுள்ள எழுத்துகளை மாற்றி, மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| கை | எ | து |
| ற | து | வி |
| னை | கை | வி |

**விடை:**

| | | |
|---|---|---|
| எ | து | கை |
| து | ற | வி |
| கை | வி | னை |

| | | |
|---|---|---|
| கு | ம | த |
| ந் | தி | த |
| ரை | கு | தி |

**விடை:**

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

**இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.**

1. அரசுக்கு தவறாமல் **வரி** செலுத்த வேண்டும்.
   ஏட்டில் எழுதுவது **வரி** வடிவம்.
2. மழலை பேசும் **மொழி** அழகு.
   இனிமைத் தமிழ் **மொழி** எமது.
3. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை **நடை** பழகும்.
   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்குமொழி **நடை.**
4. நீ அறிந்ததைப் பிறருக்குச் **சொல்.**
   எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொல்.**
5. உழவர்கள் நாற்று **நட** வயலுக்குச் சென்றனர்.
   குழந்தை மெதுவாக **நட** என்போம்.

6. நீதி மன்றத்தில் கொடுப்பது **வழக்கு.**
'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு **வழக்கு.**

## கலைச்சொல் அறிவோம்

1. மரபு - Tradition
2. மொழியியல் - Linguistics
3. ஒலியியல் - Phonology
4. இதழியல் - Journalism
5. ஊடகம் - Media
6. பொம்மலாட்டம் - Puppetry
7. எழுத்திலக்கணம் - Orthography
8. உரையாடல் - Dialogue

❖❁❖

## மாதிரி வினாத்தாள்

### இயல் : ஒன்று

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

**1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள்......................**
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

**2. வானில் ............................ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**
அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

**3. மொழியின் முதல் நிலை பேசுதல் ...................... ஆகியனவாகும்.**
அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல்

**4. பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.**
அ) பசு ஆ) வீடு இ) ஆறு ஈ) கரு

**II. குறு விடை தருக.** **3 x 2 = 6**

5. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகள் யாவை?
6. மொழியின் இருவடிவங்கள் யாவை?
7. குற்றியலிகரம் என்றால் என்ன? சான்று தருக.

**III. சிறு விடை தருக.** **2 x 3 = 6**

8. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?
9. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **1 x 4 = 4**

10. 'கொல்லா விரதம் ...' எனத் தொடங்கி , .....தேன்மொழியாம்' எனமுடியும் நாமக்கல் கவிஞர் பாடல்.

❖❁❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 2 கவிதைப் பேழை

# காடு

**மனப்பாடப் பாடல்**

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே!

**நூல்** : **சுரதாவின் கவிதைகள் தொகுப்பு**
**ஆசிரியர்** : **சுரதா (இராசகோபாலன்)**



**இயற்பெயர்** : இராசகோபாலன்
**பிறப்பு** : 23.11.1921
**சிறப்புப்பெயர்** : உவமைக்கவிஞர்
**படைப்புகள்** : தேன்மழை, சாவின் முத்தம், உதட்டில் உதடு, பட்டத்தரசி, சுவரும் சுண்ணாம்பும், துறைமுகம், வார்த்தைவாசல், எச்சில் இரவு, அமுதும் தேனும்.

**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| ஈன்று | - பெற்று | நச்சரவம் | - விடமுள்ள பாம்பு |
| கொம்பு | - கிளை | விடுதி | - தங்கும் இடம் |
| அதிமதுரம் | - மிகுந்த சுவை | தீபம் | - ஒளி |
| களித்திட | - மகிழ்ந்திட | | |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வாழை, கன்றை ______

அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது [விடை : அ]

2. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம்
இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம் [விடை : ஆ]

3. 'கிழங்கு + எடுக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ______

அ) கிழங்குஎடுக்கும் ஆ) கிழங்கெடுக்கும்
இ) கிழங்குடுக்கும் ஈ) கிழங்கொடுக்கும் [விடை : ஆ]

### நயம் அறிக

பாடலிலுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

| மோனை | எதுகை | இயைபு |
|---|---|---|
| செய்யுளில் அடி (அல்லது) சீரில் உள்ள சொற்களில் முதல் எழுத்து ஒன்று போல (ஒரே மாதிரி) வருவது மோனை ஆகும். | செய்யுளில் அடி (அல்லது) சீரில் உள்ள சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்று போல (ஒரே மாதிரி) வருவது எதுகை ஆகும். | செய்யுளில் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் உள்ள சீரோ எழுத்தோ ஒன்று போல (ஒரே மாதிரி) வருவது இயைபு ஆகும். |
| **பாடலில் உள்ள மோனைச் சொற்கள்:** | **பாடலில் உள்ள எதுகைச் சொற்கள்:** | **பாடலில் உள்ள இயைபுச் சொற்கள்:** |
| கார்த்திகை - காடெல்லாம்<br>பார்த்திட - பார்வை<br>காடு - காய்கனி<br>பச்சை - பன்றி<br>நச்சர - நரியெலாம்<br>சிங்கம் - சிறுத்தை | கார்த்திகை-பார்த்திட-பார்வை<br>களித்திடவே - குளிர்ந்திடவே<br>குரங்கு - மரங்கள்<br>பச்சை - நச்சர<br>சிங்கம் - எங்கும் | ஈன்றெடுக்கும் - நிழல் கொடுக்கும் கனிபறிக்கும் - தடையிருக்கும் -கிழங்கெடுக்கும் |

### குறு வினா

1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?

✍ காட்டுப்பூக்களுக்குக் கார்த்திகை விளக்கை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

பருவம் 1 7

2. **காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

- ✍ காட்டிலுள்ள மலர்களைக் காணும் கண்கள் குளிர்ச்சி பெறும்.
- ✍ காடு பல வகையான பொருள்களையும் காய்கனிகளையும் தரும்.
- ✍ எல்லோரும் சேர்ந்துமகிழ்ந்திட குளிர்ந்த நிழல் தரும்.
- ✍ காட்டு விலங்குகளுக்கு உணவாகக் கனி தரும்.

**சிறு வினா**

1. **'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

- ✍ பன்றிகள் காட்டிலுள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும்.
- ✍ நரிக் கூட்டம் ஊளையிடும்.
- ✍ மிகுந்த சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடைபோடும்.
- ✍ இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை ஆகிய விலங்குகள் எங்கும் அலைந்து திரியும்.

**சிந்தனை வினா**

1. **காட்டை இயற்கை விடுதியாகக் கவிஞர் கூறக் காரணம் என்ன?**

- ✍ பறவைகள் , விலங்குகள் உள்ளிட்ட அஃறிணை உயிர்களுக்குத் தேவையான உறையுள் (தங்குமிடம்) – உணவு ஆகியன காட்டில் இயற்கையாகவே உள்ளன.
- ✍ மரங்கள், செடி கொடிகள் ஆகியன பூச்சிகள், புழுக்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றிற்குத் தங்குமிடம் மற்றும் உணவை இயற்கை அன்னையே வழங்குவதால், காட்டை இயற்கை விடுதியாகக் கவிஞர் கூறுகிறார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **இராசகோபாலன் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர்**

அ) பாரதியார் ஆ) உடுமலை நாராயணகவி
இ) சுரதா ஈ) கவிமணி [விடை : இ]

2. **உவமைக்கவிஞர் என்றழைக்கப்படக் கூடிய கவிஞர்**

அ) பாரதியார் ஆ) உடுமலை நாராயணகவி
இ) சுரதா ஈ) கவிமணி [விடை : இ]

3. **தேன்மழை, துறைமுகம், அமுதும் தேனும் முதலிய நூல்களைப் படைத்த கவிஞர்**

அ) பாரதியார் ஆ) உடுமலை நாராயணகவி
இ) சுரதா ஈ) கவிமணி [விடை : இ]

தமிழ் 7

4. **கார்த்திகை விளக்குகள் போன்று இருந்தவை**

அ) காடு ஆ) மலர்கள் இ) காய்கனி ஈ) மயில் **[விடை : ஆ]**

5. **பொருத்துக.**

1. அதிமதுரம் - அ) மகிழ்ந்திட
2. களித்திட - ஆ) மிகுந்த சுவை
3. கொம்பு - இ) பெற்று
4. ஈன்று - ஈ) கிளை

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ **[விடை : அ]**

6. **பொருத்துக.**

1. மயில்கள் - அ) கிழங்குகளைத் தோண்டி உண்ணும்
2. பன்றிகள் - ஆ) கலக்கமடையும்
3. பாம்புகள் - இ) புதிய நடை போடும்
4. யானைகள் - ஈ) நடனமாடும்

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ **[விடை : ஆ]**

7. **__________ குயில் கூவுமடி! பாடலடியில் இடம்பெறும் தகுந்த சொல்லால் நிரப்புக.**

அ) கருங் ஆ) பூங் இ) மணிக் ஈ) சிறு **[விடை : ஆ]**

8. **புதுநடை போட்டது எது?**

அ) பாம்பு ஆ) பன்றி இ) குரங்கு ஈ) யானை **[விடை : ஈ]**

**பருவம் 1** **7**

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. _________, _________ நமக்கு எப்போதும் காட்சிக்கு இன்பம் தருபவை.
**விடை : காடும் கடலும்**

2. உவமைகளைப் பயன்படுத்தி கவிதை எழுதுவதில் வல்லவர் _________.
**விடை : சுரதா**

3. காடு என்னும் கவிதை அமைந்த நூல் _________. **விடை: சுரதாவின் கவிதைகள்**

4. சுரதாவின் கவிதைகள் என்ற நூலில் காடு என்னும் கவிதை அமைந்த பகுதி _________.
**விடை : இயற்கை எழில்**

5. காடு என்ற கவிதை அமைந்த பாவகை _________. **விடை : கிளிக்கண்ணி**

6. நரிக்கூட்டம் ________. விடை : **ஊளையிடும்**

## குறு வினா

**1. சுரதா என்பதன் பெயர்க்காரணம் யாது?**

இராசகோபாலன் பாரதிதாசன் மீது பற்றுக்கொண்டவர். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். எனவே தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் எனமாற்றிக்கொண்டார்.அதன் சுருக்கமே சுரதா என்பதாகும்.

**2. கவிஞர் சுரதாவை 'உவமைக்கவிஞர்' என அழைக்கப்படுவது ஏன்?**

உவமைகளைப் பயன்படுத்தி கவிதை எழுதுவதில் வல்லவர் என்பதால் சுரதா 'உவமைக்கவிஞர்' என அழைக்கப்படுகிறார்.

**3. சுரதாவின் படைப்புகள் யாவை?**

1. தேன்மழை 2. துறைமுகம் 3. அமுதும் தேனும்

**4. கிளிக்கண்ணி என்னும் பாவகை குறித்து எழுதுக.**

கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் கிளிக்கண்ணி ஆகும்.

**5. 'காட்டின் வளமே நாட்டின் வளம்' எனக் அறிஞர் கூறக் காரணம் யாது?**

ஒரு நாட்டின் வளம் , அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகளின் அளவைப் பொருத்தே மதிப்பிடப்படுகின்றது. அதனால் தான் 'காட்டின் வளமே நாட்டின் வளம்' என அறிஞர் கூறுகின்றனர்.

**6. 'காடு' பாடலில் பறவைகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

- ✍ பச்சை நிறமுடைய மயில்கள் நடனமாடும்.
- ✍ பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும்.

**7. இயற்கைத் தங்குமிடம் எது?**

இயற்கைத் தங்குமிடம் : காடு

**8. எங்கும் திரியுமடீ! - இதில் 'திரிந்தவை' எவை?**

சிங்கம், புலி, கரடி, சிறுத்தை.

## சிறு வினா

**1. சுரதா - குறிப்பு வரைக.**

- ✍ **இயற்பெயர்** : இராசகோபாலன்
- ✍ **பிறப்பு** : 23.11.1921
- ✍ **சிறப்புப்பெயர்** : உவமைக்கவிஞர்
- ✍ **சுரதா - பெயர்க் காரணம்** : பாரதிதாசன்மீதுபற்றுக்கொண்டவர்.பாரதிதாசனின்இயற்பெயர் சுப்புரத்தினம். எனவே தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார். அதன் சுருக்கமே '**சுரதா**' என்பதாகும்.
- ✍ **படைப்புகள்** : 1.தேன்மழை 2. துறைமுகம் 3.அமுதும் தேனும் முதலியன.

தமிழ் 7

**2. ‘காடு’ என்னும் கவிதையில் இடம் பெறும் அஃறிணை உயிர்கள் யாவை?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. குரங்கு | 2. கிளி | 3. மயில் | 4. பன்றி | 5. பாம்பு | 6. நரி |
| 7. யானை | 8. குயில் | 9. சிங்கம் | 10. புலி | 11.கரடி | 12. சிறுத்தை |

**3. காட்டைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?**

கா, கால், கான், கானகம், அடவி, அரண், புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில்,அறல், பதுக்கை, கணையம்.

**4. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தேன் இனிமையானது; தூய்மையானது; சுவைமிக்கது; இன்பம் கொடுப்பது. அதைப் போல இனிமையானது, தூய்மையானது, சுவைமிக்கது, இன்பம் கொடுப்பது தமிழ். எனவே கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

❖❁❖

**விடுகதைகள்**

4. மூடாத வாய்க்கு முழு வால். அது என்ன?
5. மண்டை உண்டு . கட்டை இல்லை . பூ உண்டு . மணமில்லை. அது என்ன?
6. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்கின்ற பூக்கள். அது என்ன?
7. பிடி இல்லாத குடையைத் தொட முடியவில்லை. அது என்ன?
8. மரத்திற்கு மரம் தாவுவான், குரங்கு அல்ல. பட்டைத் தீட்டியிருப்பான், சாமியார் அல்ல. அது என்ன?
9. ஊளையிட்டாலும் ஊரைச்சுமந்து செல்வான். அது என்ன?

விடை பக்கம் : 204

❖❁❖

பருவம் 1 7

# இயல் 2 கவிதைப் பேழை — அப்படியே நிற்கட்டும் அந்த மரம்



| | |
|---|---|
| **பெயர்** | : இராசமார்த்தாண்டன் |
| **திறன்கள்** | : இதழாளர், கவிதைத் திறனாய்வாளர். |
| **பரிசு** | : ராஜமார்த்தாண்டன் கவிதைகள் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர். |
| **படைப்புகள்** | : ராஜமார்த்தாண்டன் கவிதைகள், சிறந்த கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் நூல் படைத்துள்ளார். |

## சொல்லும் பொருளும்

1. பரவசம் – மகிழ்ச்சிப்பெருக்கு
2. துஷ்டி கேட்டல் – துக்கம் விசாரித்தல்
3. தாண்டி – கடந்து
4. பழந்தின்னி – பழம் உண்ணும்
5. பரவி – விரவி
6. வடகோடி – வட எல்லை



## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது __________**

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு

இ) பச்சைக்காய் ஈ) செங்காய் [விடை : ஆ]

2. **'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை __________**

அ) ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்

இ) வேகவைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள் [விடை : அ]

3. **'பெயரறியா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது __________**

அ) பெயர + றியா ஆ) பெயர் + ரறியா

இ) பெயர் + அறியா ஈ) பெயர + அறியா [விடை : இ]

4. **'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது __________**

அ) மன + மில்லை ஆ) மனமி + இல்லை

இ) மனம் + மில்லை ஈ) மனம் + இல்லை [விடை : ஈ]

5. **‘நேற்று + இரவு’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________**

அ) நேற்றுஇரவு ஆ) நேற்றிரவு இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு [**விடை : ஆ**]

## குறுவினா

1. **நாவல் மரம் எத்தனை தலைமுறையாக அங்கு நின்றிருந்தது?**

நாவல் மரம் இரண்டு தலைமுறையாக அங்கு நின்றிருந்தது.

2. **சிறுவர்களுக்கு நாவல் பழம் கிடைக்க உதவியோர் யாவர்?**

1. காக்கை 2. குருவி 3. மைனா
4. பெயரறியாப் பவைகள் 5. அணில் 6. காற்று

## சிறுவினா

1. **நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

1. ஊரின் வட எல்லையில் ஐந்து வயதில் பார்த்த போதும், ஐம்பது வயதைத் தாண்டி இப்பொழுது பார்க்கின்ற போதும், தாத்தாவின் தாத்தா நட்டு வைத்த நாவல் மரம் அப்படியே இருக்கின்றது.
2. அந்த நாவல் மரத்தில் பச்சைக்காய்கள் மாறி செந்நிறமாய்ப் பழுக்கும் போது சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கும்.
3. பளபளக்கும் பச்சை இலைகளுடக் கருநீலக்கோலிக்குண்டுகள் போல நாவற்பழங்கள் கிளைகளில் தொங்குவதைப் பார்க்கும் போதே நாவில் நீர் ஊறும்.
4. காக்கை, குருவி, மைனா, பெயரறியாப் பவைகள், அணில், காற்று ஆகின உதிர்த்துவிடும் நாவல் பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும்.
5. தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் நாவல்பழம் பொறுக்குகின்றனர்.
6. இரவின் மெல்லிய நிலா வெளிச்சத்தில் பழந்தின்னி வௌவால் கூட்டம் மரத்தில் பழம் தின்னப் படை எடுக்கும்.
7. அப்பா வரும் வரை நாவல் மர நிழலில் கிளியாந்தட்டு விளையாடுவோம்.நேற்று நண்பகல் என் மகன் விளையாடியதும் இந்த நாவல் மர நிழலில்தான்.

## சிந்தனை வினா

1. **பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ஏன் பார்க்க விரும்பவில்லை?**

1. பெருங்காற்றினால் நாவல் மரம் வேரோடு வீழ்ந்து விட்டது. அதனைப் பார்க்க ஊர்மக்கள் பதற்றத்தில் விரைந்து செல்கின்றனர்.
2. குன்றுகளின் நடுவே உள்ள பெரிய மலை போல அந்த நாவல் மரம் கவிஞர் மனதில் நிற்பதால் பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தை அவர் பார்க்க விரும்பவில்லை.
3. அந்த மரம் கவிஞர் நினைவில் வாழ்கின்றது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **சிறந்த கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் நூல் படைத்த கவிஞர்.**
அ) ராஜமார்த்தாண்டன் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : அ]

2. **ராஜமார்த்தாண்டன் கவிதைகள் என்னும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர்**
அ) ராஜமார்த்தாண்டன் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : அ]

3. **'பெருவாழ்வு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ________**
அ) பெரு + வாழ்வு ஆ) பெ + ருவாழ்வு
இ) பெருமை + வாழ்வு ஈ) பேர் + வாழ்வு [விடை : இ]

4. **ஊரின் வடகோடியில் இருந்த மரம் ________**
அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

5. **தாத்தா நட்டு வைத்த மரம்**
அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

6. **பொருத்துக.**
1. பரவசம் - அ) துக்கம் விசாரித்ததல்
2. துஷ்டி கேட்டல் - ஆ) விரவி
3. பரவி - இ) எல்லை
4.கோடி - ஈ) மகிழ்ச்சிப்பெருக்கு
அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : ஆ]

7. **'செங்காய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ________**
அ) செம்மை + காய் ஆ) செம் + காய்
இ) செங் + காய் ஈ) செ + காய் [விடை : அ]

8. **இரவில் படையெடுத்து வரும் பழந்தின்னி ________**
அ) வௌவால் கூட்டம் ஆ) காக்கைக் கூட்டம்
இ) குருவிக் கூட்டம் ஈ) மைனாக் கூட்டம் [விடை : அ]

9. **நாவற்பழங்களை உதிர்த்துவிடுவனவற்றுள் பறவைகள் அல்லாத ஒன்று ________**

அ) காக்கை ஆ) குருவி இ) அணில் ஈ) மைனா [விடை : இ]

10. **பெருவாழ்வு வாழ்ந்த மரம் ________**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

11. **நேற்று இரவுப் பேய்க்காற்றில் வேரோடு சாய்ந்தது ________**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

12. **குன்றுகளின் நடுவே மாமலை போன்றது ________**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

13. **கொல்லிப்பாவை என்னும் சிற்றிதழை நடத்தியவர்**

அ) ராஜமார்த்தாண்டன் ஆ) கவிமணி

இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : அ]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே ________ **விடை : மரங்கள்**

2. ________ பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. **விடை : மரங்கள்**

3. ________ பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும். **விடை : நாவல்**

4. தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் ________ பொறுக்குகின்றனர் **விடை : நாவல்பழம்**

5. அப்படியே நிற்கட்டும் அந்த மரம் - என்ற நூலை இயற்றியவர் ________ **விடை : ராஜமார்த்தாண்டன்**

6. குன்றுகளின் நடுவே மாமலை போல நின்றது ________ **விடை : மாமரம்**

## குறு வினா

1. **நாவல் மரம் தோற்றம் குறித்துக் கவிஞர் கூறுவன யாவை?**

ஊரின் வட எல்லையில் ஐந்து வயதில் பார்த்த போதும், ஐம்பது வயதைத் தாண்டி இப்பொழுது பார்க்கின்ற போதும், தாத்தாவின் தாத்தா நட்டு வைத்த நாவல் மரம் அப்படியே இருக்கின்றது.

2. **சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கக் காரணம் யாது?**

நாவல் மரத்தில் பச்சைக்காய்கள் மாறி செந்நிறமாய்ப் பழுக்கும் போது சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**3. எப்போது நாவில் நீர் ஊறும்?**

பளபளக்கும் பச்சை இலைகளுடக் கருநீலக்கோலிக்குண்டுகள் போல நாவற்பழங்கள் கிளைகளில் தொங்குவதைப் பார்க்கும் போதே நாவில் நீர் ஊறும்.

**4. சிறுவர் கூட்டம் அலைமோதக் காரணம் யாது?**

காக்கை, குருவி ,மைனா ,பெயரறியாப் பவைகள், அணில், காற்று ஆகின உதிர்த்துவிடும் நாவல் பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும்.

**5. தங்கைகள் யாருக்காக நாவல் பழம் பொறுக்குகின்றனர்?**

தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் நாவல்பழம் பொறுக்குகின்றனர்.

**6. இரவு நேரத்தில் நாவல்மரத்தை நோக்கிப் படைஎடுத்தது எது? ஏன்?**

இரவின் மெல்லிய நிலா வெளிச்சத்தில் பழந்தின்னி வௌவால் கூட்டம் மரத்தில் பழம் தின்னப் படை எடுக்கும்.

**7. ஊர்மக்கள் எதனைப் பார்க்கச் சென்றனர்?**

பெருங்காற்றினால் நாவல் மரம் வேரோடு வீழ்ந்து விட்டது. அதனைப் பார்க்க ஊர்மக்கள் பதற்றத்தில் விரைந்து செல்கின்றனர்.

**8. கவிஞர் மனதில் என்றும் நிற்பது எது?**

குன்றுகளின் நடுவே உள்ள பெரிய மலை போல அந்த நாவல் மரம் கவிஞர் மனதில் என்றும் நிற்கிறது.

**சிறு வினா:**

**1. கவிஞர் ராஜமார்த்தாண்டன் - குறிப்பு வரைக.**

**பெயர்** : இராசமார்த்தாண்டன்

**திறன்கள்** : இதழாளர், கவிதைத் திறனாய்வாளர்.

**பரிசு** : ராஜமார்த்தாண்டன் கவிதைகள் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர்.

**படைப்புகள்** : ராஜமார்த்தாண்டன் கவிதைகள், அப்படியே நிற்கட்டும் அந்த மரம், சிறந்த கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் நூல் படைத்துள்ளார்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஏதேனும் ஒரு மரம் குறித்து வருணனையாக ஐந்து தொடர்கள் எழுதுக.**

**பலாமரம்**

- ✍ நெடுநெடுனு வளர்ந்த மரம், நேர்த்தியான பலாமரம்
- ✍ முக்கனியில் இரண்டாம் கனி தரு மரம்
- ✍ பெரும்பழம் சுமந்ததால் உன்மேனி இளைத்ததோ?
- ✍ பழுமரத்தை நாடி பரவசமாய் பறவை வரும்
- ✍ கொடுக்க குறையாத அமுதசுரபி மரம் பலாமரம்

**2. உங்கள் பகுதியிலுள்ள மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

வேப்ப மரம், புளிய மரம், அரசமரம், ஆல மரம், வாழை மரம், முருங்கை மரம், தென்னை மரம்,பனை மரம், பாக்கு மரம், பலா மரம், தேக்கு மரம், சந்தன மரம், அத்தி மரம், வாகை மரம், புங்க மரம்.

❖❁❖

## ஒரு வரி தமிழ்ப் பொன்மொழிகள்

1. இதயம் ஒரு இரகசிய சுரங்கம்.
2. எண்ணங்கள் அழகானால் வாழ்க்கை அழகாகும்.
3. இழந்ததை மறந்து விடு, இருப்பதை இழக்காமல் இருக்க.
4. மனம் அழகானால் வாழ்க்கையும் பூவனம் ஆகும்.
5. கவலைகள் கனவைப் போல மறந்து போகும்.

❖❁❖

பருவம் 1
7

இயல் 2 உரைநடை உலகம்

# விலங்குகள் உலகம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **ஆசிய யானைகளில் ஆண் - பெண் யானைகளை வேறுபடுத்துவது**
அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால்நகம் [**விடை : ஆ**]

2. **தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம்**
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியகரை
இ) முண்டந்துறை ஈ) கூந்தக் குளம் [**விடை : இ**]

3. **'காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**
அ) காடு + ஆறு ஆ) காட்டு + ஆறு
இ) காட் + ஆறு ஈ) காட் + டாறு [**விடை : அ**]

4. **'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**
அ) அனைத்து + துண்ணி ஆ) அனை + உண்ணி
இ) அனைத் + துண்ணி ஈ) அனைத்து + உண்ணி [**விடை : ஈ**]

5. **'நேரம் + ஆகி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________**
அ) நேரமாகி ஆ) நேராகி இ) நேரம்ஆகி ஈ) நேர் ஆகி [**விடை : அ**]

6. **'வேட்டை + ஆடிய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________**
அ) வேட்டைஆடிய ஆ) வேட்டையாடிய
இ) வேட்டாடி ஈ) வேடாடி [**விடை : ஆ**]

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' என்று அழைக்கப்படும் விலங்கு ________
**விடை : புலி**

2. யானைக் கூட்டத்திற்கு ஒரு ________ யானைதான் தலைமை தாங்கும்.
**விடை : பெண்**

3. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் ________ **விடை : அடர்ந்த முடிகள்**

தமிழ் 7

## குறு வினா

**1. காடு – வரையறு.**

✍ மனிதர்களின் முயற்சியின்றி வளர்ந்த மரங்கள், செடி, கொடிகள், புல், புதர்கள், பூச்சியினங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பல உயிர்களின் வாழ்விடம் காடாகும்.

✍ இடையிடையே காட்டாறுகளும், நீரோடைகளும் இருக்கும்.

✍ மனிதனின் முதல் இருப்பிடம் காடு.

**2. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகிறது ஏன்?**

✍ யானைகள் பொதுவாக மனிதர்களைத் தாக்குவதில்லை.

✍ யானைகள் செல்லும் வழிப்பாதைகளில் மனிதர்கள் குறுக்கிடும்போது, அவர்களைத் தாக்குகின்றன.

✍ மேலும் யானைக்குக் கண்பார்வைக் குறைவு, கேட்கும் ஆற்றலும் மோப்ப ஆற்றலும் மிகுதியாக உள்ளது.

**3. கரடி ‘அனைத்துண்ணி’ என அழைக்கப்படுவது ஏன்?**

பழங்கள், தேன், உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல், கரையான் என அனைத்தையும் உண்பதால் கரடி ‘அனைத்துண்ணி’ என அழைக்கப்படுகின்றது.

**4. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.**

1. புள்ளிமான் 2. சருகுமான் 3. மிளாமான் 4. வெளிமான்

## சிறு வினா

**1. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

✍ புலிகள் தனித்து வாழும் இயல்பு உடையன.

✍ ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குச் செல்லாது.

✍ கருவுற்ற புலியானது 90 நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் வரைப் பெற்றெடுக்கும்.அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து வரும்.

✍ அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளைப் பிரித்து அனுப்பிவிடும்.

## சிந்தனை வினா

**1. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.**

1. மழை வளம் குறையும்.
2. மண் தரிசு நிலமாக மாறிவிடும்.
3. காட்டுயிரிகள் வாழ்விடம் அழியும்.
4. குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும்.
5. உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்.
6. மண் வளம் சேர்க்கும் நுண்ணுயிரிகள் அழியும்.
7. மண்ணரிப்பு ஏற்படும்.
8. நோய் தீர்க்கும் மூலிகைகள் அழியும்.
9. பருவநிலைமாறும்.
10. புவி வெப்பமயமாகும்.
11. நிலத்தடி நீர்க்குறையும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்த இடம் ________**

   அ) மேட்டுப்பாளையம் ஆ) குன்னூர்
   இ) ஊட்டி ஈ) கோத்தகிரி [விடை : அ]

2. **தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் ________**

   அ) ஈரோடு ஆ) கோவை இ) நாமக்கல் ஈ) சேலம் [விடை : ஆ]

3. **தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகம் அமைந்துள்ள இடம்**

   அ) வேடந்தாங்கல் ஆ) கோடியகரை
   இ) முண்டந்துறை ஈ) கூந்தக் குளம் [விடை : இ]

4. **உலகில் உள்ள யானை வகைகள்**

   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு [விடை : ஆ]

5. **ஆண் , பெண் ஆகிய இரண்டுக்கும் தந்தம் கொண்ட யானை வகை ________**

   அ) ஆப்ரிக்க யானை ஆ) ஆசிய யானை
   இ) அமெரிக்க யானை ஈ) தாய்லாந்து யானை [விடை : அ]

6. **நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல் , இலை தழைகளை உணவாகக் கொள்ளும் விலங்கு**

   அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [விடை : ஈ]

7. **கேட்கும் ஆற்றலும் மோப்ப ஆற்றலும் மிகுதியாக உள்ள விலங்கு**

   அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [விடை : ஈ]

8. **நன்கு வளர்ந்த கரடியின் எடை**

   அ) 160 கி ஆ) 100 கி இ) 106 கி ஈ) 601 கி [விடை : அ]

9. **தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த உணவையும் வேட்டையாடாத விலங்கு**

   அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [விடை : இ]

10. **பண்புள்ள விலங்கு என்றழைக்கப்படும் விலங்கு**

    அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [விடை : இ]

11. **இரவில் மட்டும் வேட்டையாடும் தன்மை கொண்ட விலங்கு**

    அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [விடை : இ]



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

12. அழகில் சிறந்த மான் வகை

அ) புள்ளிமான் ஆ) சருகுமான்

இ) மிளாமான் ஈ) வெளிமான் [விடை : அ]

13. இயற்கை விஞ்ஞானிகள் காட்டுக்கு அரசனாகக் குறிப்பிடும் விலங்கு

அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) சிங்கம் [விடை : இ]

14. 'நினைவாற்றல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______

அ) நினை + ஆற்றல் ஆ) நினை + வாற்றல்

இ) நினைவு + ஆற்றல் ஈ) நினைவு + வாற்றல் [விடை : இ]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்திய வனக்கல்லூரி அமைந்த மாவட்டம் ______ விடை : கோவை
2. காட்டுவிலங்குகளின் உறைவிடம் ______ விடை : முண்டந்துறை புலிகள் காப்பகம்
3. மனிதனின் முதல் இருப்பிடம் ______ விடை : காடு
4. முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் பரப்பளவு______ விடை : 895 சதுரமீட்டர்
5. கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வனவியல் சார்ந்த படிப்புகள் ______, ______. விடை : இளநிலை வனவியல், முதுநிலை வனவியல்
6. மிகுந்த நினைவாற்றலைக் கொண்ட விலங்கு ______ விடை : யானை
7. பாசம் நிறைந்த விலங்கு ______. விடை : யானை
8. யானைக்குக் கடிப்பதற்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு ______. விடை : 65 லிட்டர்
9. ______ ஒரு அனைத்துண்ணி. விடை : கரடி
10. காட்டு அரசன் ______. விடை : சிங்கம்
11. விஞ்ஞானிகள் என்ற பிறமொழிச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் ______. விடை : அறிவியலறிஞர் (அல்லது) அறிவியலாளர்

## குறுவினா

1. ஆதினி எங்குச் சென்றாள்? எதற்காகச் சென்றாள்?

✍ ஆதினி தன் அம்மாவுடன் முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்குச் சென்றாள்.

✍ காட்டு விலங்குகள் பற்றிய புகைப்படத்தொகுப்பிற்குத் தேவையான புகைப்படங்கள் எடுப்பதற்காகச் சென்றாள்.

பருவம் 1 7

**2. முண்டந்துறை புலிகள் காப்பகம் குறித்து வன அலுவலர் கூறியது யாது?**

✍ தமிழ்நாட்டிலேயே இரண்டாவது மிகப்பெரிய காப்பகம் : முண்டந்துறை புலிகள் காப்பகம்.

✍ 895 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது.

✍ யானை , புலி , சிறுத்தை , மான் , கரடி , காட்டுமாடு போன்ற அரிய விலங்குகள் வாழ்கின்றன.

– என்று முண்டந்துறை புலிகள் காப்பகம் குறித்து வன அலுவலர் கூறினார்.

**3. முண்டந்துறை புலிகள் காப்பகத்தல் வாழும் அரிய விலங்குகள் யாவை?**

1. யானை 2. புலி 3. சிறுத்தை 4. மான் 5. கரடி 6. காட்டுமாடு

**4. உலகில் உள்ள யானை வகைகள் எத்தனை? அவை யாவை?**

உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. அவையாவன:

1. ஆசிய யானை 2. ஆப்பிரிக்க யானை

**5. ஆசிய யானைக்கும் ஆப்பிரிக்க யானைக்கும் உள்ள வேறுபாடு யாது?**

**1. ஆசிய யானை**

ஆண்யானைக்குத் தந்தம் உண்டு, பெண் யானைக்குத் தந்தம் இல்லை.

**2. ஆப்பிரிக்க யானை**

ஆண்,பெண் யானைகள் இரண்டுக்குமே தந்தம் உண்டு.

**6. ஒரு காட்டு வளத்தைக் குறிக்கும் குறியீடு எது?**

புலியே ஒரு காட்டு வளத்தைக் குறிக்கும் குறியீடாகும்.

**7. தமிழ்நாட்டில் வனக் கல்லூரி எங்கு அமைந்துள்ளது?**

தமிழ்நாட்டில் வனக் கல்லூரி கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ளது.

**8. வனவியல் சார்ந்த படிப்புகள் யாவை? அவை எங்குள்ளன?**

✍ வனவியல் சார்ந்த படிப்புகள் இளநிலை வனவியல் , முதுநிலை வனவியல் ஆகும்.

✍ கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அவை கற்பிக்கப்படுகின்றன.

**9. புலியைப் பண்புள்ள விலங்கு எனக் கூறக் காரணம் யாது?**

தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த உணவையும் வேட்டையாடாத விலங்கு. எனவே புலியைப் பண்புள்ள விலங்கு என் கூறுகின்றனர்.

**10. புலியைக் காட்டுக்கு அரசன் என இயற்கை விஞ்ஞானிகள் கூறக் காரணம் யாது?**

✍ நீளம், உயரம், பருமன், எடை, பலம், வேட்டைத் திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தைவிட புலியே உயர்ந்தது.

✍ எனவே, புலியைக் காட்டுக்கு அரசன் என இயற்கை விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**11. அழகில் சிறந்த மான் வகை எது?**

நம் நாட்டில் உள்ள புள்ளி மானே அழகில் சிறந்ததாகும்.

தமிழ் 7

**12. சிங்கங்களின் வகைகளைக் குறிப்பிடுக.**

1. ஆசியச் சிங்கம் 2. ஆப்பிரிகச் சிங்கம்

**13. யானைகள் அடிக்கடி இடம்பெயரக் காரணம் யாது?**

யானைகள் தண்ணீர் மற்றும் உணவுக்காகஇடம்பெயர்ந்து கொண்டே இருக்கும்.

**14. சிங்கம் குறித்து நீவிர் அறிந்த செய்திகள் யாவை?**

✍ ஆசியச் சிங்கம், ஆப்பிரிக்கச் சிங்கம் என இரண்டு வகைச் சிங்கம் உள்ளன.

✍ இந்தியாவில் குஜராத்தில் 'கிர் சரணாலயத்தில்' மட்டுமே ஆசியச் சிங்கங்கள் உள்ளன.

## சிறு வினா

**1. யானைகள் குறித்து நீவிர் அறிந்ததை எழுதுக.**

✍ யானைகள் எப்போதும் கூட்டமாகவே வாழும்.

✍ கூட்டத்திற்குப் பெண் யானை தலைமை தாங்கும்.

✍ தண்ணீர் மற்றும் உணவுக்காக யானைகள் இடம்பெயர்ந்து கொண்டே இருக்கும்.

✍ நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவும், 60 லிட்டர் தண்ணீரும் தேவைப்படும்.

✍ மிகுந்த நினைவாற்றலும் பாசமும் கொண்ட விலங்கு.

✍ கண்பார்வைக் குறைவு, மோப்ப ஆற்றல் மிகுதி.

**2. கரடி குறித்து நீவிர் அறிந்த செய்திகள் யாவை?**

✍ நன்கு வளர்ந்த கரடி 160 கிலோ எடை வரை இருக்கும்

✍ பழங்கள் மற்றும் தேன் உண்பதற்காக கரடி மரம் ஏறும்.

✍ பழங்கள், தேன், உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல், கரையான் என அனைத்தையும் உண்பதால் கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுகின்றது.

✍ தன் அடர்ந்த முடிகள் மூலம் எதிரிகளிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றது.

## கற்பவை கற்றபின்

**1. விலங்குகள் தொடர்பான பழமொழிகளைத் திரட்டி வருக.**

1. பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி

(எ.கா.) : புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

2. சாது மிரண்டால் காடு கொள்ளாது.

3. யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே.

4. நொண்டிக் கழுதைக்குச் சருக்கினது சாக்காம்.

5. வீட்டில் எலி , வெளியில் புலி.

6. நாயப் பொறந்தாலும் நல்லாப் பொறக்கனும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



7. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசைன.

8. ஆடு மாடு இல்லாதவன் அடைமழைக்கு ராசா.

9. தூங்கணாங் குருவிக்குக் குரங்கு புத்தி சொல்லுச்சாம்.

**2. காட்டு விலங்குகளின் படங்களைத் திரட்டி படத்தொகுப்பு உருவாக்குக.**



❖❁❖

## ஒரு வரி தமிழ்ப் பொன்மொழிகள்

6. சிறந்த புத்தகம் நல்ல நண்பன்.
7. நூலகம் அறிஞர்கள் வாழும் இடம்.
8. புத்தகங்கள் கனவுகளை வளர்க்கும்.
9. வீட்டிற்கு ஒரு நூலகம் அமைப்போம்.
10. தோல்வி இறுதி அல்ல.

❖❁❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 2 விரிவானம்

# இந்திய வனமகன்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?**

**முன்னுரை**

அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சார்ந்தவர் ஜாதவ்பயேங். 'இந்திய வனமகன்' என்று இவர் அழைக்கப்படுகிறார். பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவே உள்ள மிகப்பெரிய தீவில் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கினார். அதனை எப்படி உருவாக்கினார்? என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**மரம் வளர்க்கும் எண்ணம்**

1979ல் பிரம்மபுத்திரா ஆற்றில் பெருவெள்ளம் ஏற்பட்டது. மரங்கள் இல்லாத தீவில் பாம்புகள் கரை ஒதுங்கின.சில பாம்புகள் இறந்தன. பல பாம்புகள் வெப்பம் தாங்காமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. இக்காட்சி ஜாதவ்பயேங்கை மிகவும் பாதித்தது. ஊர்ப் பெரியவர்கள் 'தீவில் மரங்கள் இல்லாததுதான் காரணம்' என்றனர். அவரிடம் தீவு முழுவதும் மரம் வளர்க்கும் எண்ணம் தோன்ற ஆரம்பித்தது. ஊர் மக்களிடம் தீவில் மரம் வளர்க்கலாம் என்று அவர் கூறிய போது, அதனை யாரும் ஏற்கவில்லை.

**விடா முயற்சி**

ஜாதவ்பயேங் தீவில் விதைகளை விதைக்கத் தொடங்கினார். நன்கு பராமரித்தார். ஆனால் அவைகள் முளைக்கவில்லை. வனத்துறை அறிவுறுத்தலால் மூங்கில் மரங்களை வளர்க்கத் தொடங்கினார். அவை நன்கு வளர ஆரம்பித்தது. அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.மூங்கிலைத் தவிர வேறு எந்த மரமும் இத்தீவில் வளரவில்லை. அசாம் வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாத் அவர்களின் அறிவுறுத்தலின்படி மண்புழுவுடன் சிவப்புக் கட்டெறும்பை அத்தீவு மண்ணில்விட்டார். சிறிது சிறிதாக மண்ணின் தன்மை மாறி பசும்புல்லும் மரங்களும் வளரத் தொடங்கின.

**புதிய காடு உருவானது**

மரங்களில் விளைந்த பழங்களை உண்டு, அதன் கொட்டைகளை விதையாகச் சேமித்து வைத்து விதைத்தார். கால்நடைகளை வளர்த்து அதன் சாணங்களை மரங்களுக்கு உரமாக்கினார். மழை பெய்யாத காலங்களில் பானை பெரிய மூங்கில் துணை கொண்டு சொட்டு சொட்டாக நீரினை மரங்களுக்குவிட்டார். மரங்கள் பெருகி வளர்ந்து, அத் தீவு பெருங்காடானது.யானைகள், பாம்புகள், கழுகுகள், காண்டாமிருகங்கள், புலிகள் முதலிய காட்டு விலங்குகள் வரத்தொடங்கின.

**முடிவுரை**

ஜாதவ்பயேங் போல நாமும் காட்டை உருவாக்க முயல்வோம். அதற்கு அடையாளமாக நம் வீட்டைச் சுற்றி மரங்களை நட்டு, அவை நன்கு வளரும் வரை காக்க வேண்டும். இந்திய வனமகன் வழியில் நாமும் செல்வோம்.

மரம் வளர்ப்போம் ! மழை பெறுவோம்!காட்டினை உருவாக்குவோம்!

பருவம் 1 7

இயல் 2 கற்கண்டு

# நால்வகைக்குறுக்கங்கள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேட்கை என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ________

அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு **[விடை : ஆ]**

2. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ________

அ) போன்ம் ஆ) மருண்ம்
இ) பழம் விழுந்தது ஈ) பணம் கிடைத்தது **[விடை : ஈ]**

3. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ________

அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் **[விடை : ஆ]**

### குறு வினா

1. ஔகாரம் எப்போது முழுமையாக ஒலிக்கும்?

ஔ, வெள என ஔவைகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தன்னுடைய இரண்டு மாத்திரையில் முழுமையாக ஒலிக்கும்.

2. சொல்லின் முதல், இடை, கடை ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?

**ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை**

முதல் - 11/2 மாத்திரை

இடை - 1 மாத்திரை

கடை - 1 மாத்திரை

3. மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

1. வலம் வந்தான்
2. போன்ம்

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

1. மூவிடங்களிலும் குறுகும் குறுக்கம்________
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : அ]

2. சொல்லுக்கு முதலில் மட்டுமே குறுகும் குறுக்கம்
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஆ]

3. வையம், சமையல், பறவை ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : அ]

4. ஔவையார், வௌவால் ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஆ]

5. சொல்லின் இடையிலும் கடையிலும் வராத குறுக்கம்
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஆ]

6. மகரக்குறுக்கத்தின் மாத்திரையளவு
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : ஈ]

7. ஆய்தக்குறுக்கத்தின் மாத்திரையளவு
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : ஈ]

8. மெய்யெழுத்து பெறும் மாத்திரையளவு
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : அ]

9. உயிர்க்குறில் பெறும் மாத்திரையளவு
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : ஆ]

10. உயிர்க்நெடில் பெறும் மாத்திரையளவு
    அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு [விடை : ஈ]

பருவம் 1 7

**11. வலம் வந்தான், போன்ம், மருண்ம் ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்**

அ) ஐகாகரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்

இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : இ]

**12. முஃஃடீது, கஃஃறீது ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்**

அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்

இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஈ]

**13. பொருத்துக.**

1. ஐகாரக்குறுக்கம் - அ) ஔவையார்,வௌவால்
2. ஔகாரக்குறுக்கம் - ஆ) வலம் வந்தான்
3. மகரக்குறுக்கம் - இ) முஃஃடீது , கஃஃறீது
4. ஆய்தக்குறுக்கம் - ஈ) சமையல்,பறவை

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ

இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : ஆ]

**14. ஆய்தக்குறுக்கம் இடம் பெறாத சொல்**

அ) அஃஃது ஆ) முஃஃடீது இ) கஃஃறீது ஈ) பஃஃறுளி [விடை : அ]

**15. பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

1. ஐகாரக்குறுக்கம் - ஒன்றரை மற்றும் ஒரு மாத்திரை
2. ஔகாரக்குறுக்கம் - இரண்டு மாத்திரை
3. மகரக்குறுக்கம் - கால் மாத்திரை
4. ஆய்தக்குறுக்கம் - கால் மாத்திரை [விடை : 2]

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. சில இடங்களில் தன்னுடைய மாத்திரையளவு குறைந்து ஒலிப்பவை ________
   விடை : **குறுக்கங்கள்**
2. 'ஐ' என்ற எழுத்து பெறும் மாத்திரையளவு ________ விடை : **இரண்டு**
3. அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து பெறும் மாத்திரையளவு ________ விடை : **அரை**
4. ________ சொல்லின் இடையிலும் இறுதியிலும் வாராது. விடை : **ஔகாரம்**
5. ஆய்தம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிப்பது ________ விடை : **ஆய்தக்குறுக்கம்.**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## குறுவினா

**1. ஔகாரக்குறுக்கம் என்றால் என்ன?சான்று தருக.**

ஔகாரம் தன் இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரையாக குறைந்து ஒலிப்பது ஔகாரக்குறுக்கம் எனப்படும்: சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும்.

**சான்று:** ஔவையார் , வௌவால்

**2. ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன?சான்று தருக.**

ஐகாரம் தன் இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரையாக குறைந்து ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும். சொல்லுக்கு முதல் , இடை , கடை ஆகிய இடங்களில் குறுகும்.

**சான்று:** சைவம் , சமையல்

**3. மகரக்குறுக்கம் என்றால் என்ன?சான்று தருக.**

மகரம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிப்பது மகரக்குறுக்கம் எனப்படும்.

**சான்று:** வலம் வந்தான்

**4. ஆய்தக்குறுக்கம் என்றால் என்ன?சான்று தருக.**

ஆய்தம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிப்பது ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

**சான்று:** கற்றீது.

## கற்பவை கற்றபின்

**1. ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைத் தொகுத்தெழுதுக.**

**எடுத்துக்காட்டு :**

| ஐகாரக்குறுக்கம் | ஔகாரக்குறுக்கம் | மகரக்குறுக்கம் | ஆயுதக்குறுக்கம் |
|---|---|---|---|
| ஐம்பது<br>மடையன்<br>தலைவன்<br>கடலை<br>ஐவர்<br>ஐந்து<br>படையல்<br>வடை<br>தடை<br>படை | ஔடதம்<br>ஔவை<br>கௌதாரி<br>கௌரி<br>தௌலீஸ்வரம்<br>ஔவியம்<br>ஔதசியம்<br>ஔதா<br>ஔவுதல் | தரும் வண்டி<br>வரும் வளவன்<br>வரும் வண்டி<br>போன்ம்<br>மருண்ம்<br>தரும் வளவன்<br>பெறும் வணிகன் | கஃறீது<br>ப ஃறீது<br>முஃடீது<br>பஃறுளி<br>பஃறொடை<br>பஃறாழிசை |

பருவம் 1 7

## மொழியை ஆழ்வோம்

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.**

### காட்டு வளமே நாட்டு வளம்!

அனைவருக்கும் வணக்கம்.காட்டு வளமே நாட்டு வளம்! என்பதைப் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். ஒரு நாட்டு வளம் எப்படி முடிவு செய்யப்படுகின்றது என்றால், அந்த நாட்டில் உள்ள நீர் வளம், நில வளம், தொழில் வளம் ஆகியவை கொண்டு தான் கணக்கிடப்படுகின்றது. நீர் வளத்திற்குக் காரணம் மழை. மழையினால் மட்டுமே நீர் வளத்தைப் பெருக்க முடியும். அந்த மழைக்கு அடிப்படைக் கராணம் காடுகள்தான். காடுகள் இல்லையென்றால் நீர் வளம் நாட்டில் இல்லை.காடுகளும் காட்டுயிரிகளும் நிலவளமாகிய மண்வளத்தை மேம்படுத்துகின்றது.நிலமும் நீரும் பெருகவில்லை என்றால் நாட்டின் தொழில் வளம் கிடையாது. எனவே காட்டு வளமே நாட்டு வளம் என்று கூறி நிறைவு செய்கின்றேன். நன்றி.

### காட்டின் பயன்கள்

அனைவருக்கும் வணக்கம்.காட்டின் பயன்கள் என்பதைப் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். காட்டின் பயன்கள் ஒன்றல்ல. இரண்டல்ல.அவை பலவாகும்.விலங்குகள், பறவைகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள், ஊர்வன ஆகிய எண்ணற்ற உயிரிகளுக்கு உணவையும் உறைவிடத்தையும் தருவது காடே. உயிர்வளியை அதிகமாக உற்பத்தி செய்து கொடுக்கின்றது. மழை வளத்தைப் பெருக்குகின்றது. மண்ணைப் பண்படுத்துகின்றது. குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்கும். உணவுப்பெருக்கம் ஏற்படும்.பருவநிலை சீரடையும். மண்ணரிப்பு தடுக்கப்படும்.நிலத்தடி நீர் மட்டத்தைப் பெருக்கும்.புவி வெப்பமயமாதலைத் தடுக்கும். எனவே காட்டின் பயன் அறிந்து காடுகள் வளர்ப்போம் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.நன்றி.

**அறிந்து பயன்படுத்துவோம்**

| பால் ஐந்து வகைப்படும் | அஃறிணை | | உயர்திணை | | |
|---|---|---|---|---|---|
| 1. ஆண்பால்<br>2. பெண்பால்<br>3. பலர்பால்<br>4. பலவின்பால்<br>5. ஒன்றன்பால் | **ஒன்றன்பால்** | **பலவின்பால்** | **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** |
| | ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால் | ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின் பால் | ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால | ஓர் பெண்ணைக் குறிப்பது பெண்பால் | ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர் பால் |
| | **சான்று:** கல், பசு | **சான்று:** மண் புழுக்கள் பசுக்கள் | **சான்று:** மாணவன் செல்வன் | **சான்று:** ஆதினி மாணவி | **சான்று:** மாணவர்கள் மக்கள் |

**எதிர்ப்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.**

1. மகளிர் x ஆடவர்
2. அரசன் x அரசி
3. பெண் x ஆண்
4. மாணவன் x மாணவி
5. சிறுவன் x சிறுமி
6. தோழி x தோழன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

படத்திற்குப் பொருத்தமான பாலை எழுதுக





ஒன்றன் பால் ஆண்பால் ஒன்றன் பால்





பெண்பால் பலர்பால் பலவின் பால்



பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.

**(எ.கா) :** கண்ணகி சிலம்பு அணிந்தான்.

**விடை :** கண்ணகி சிலம்பு அணிந்தாள்.

| | | |
|---|---|---|
| 1 | கோவலன் சிலம்பு விற்கப் போனாள். | கோவலன் சிலம்பு விற்கப் போனான். |
| 2 | அரசர்கள் நல்லாட்சி செய்தார். | அரசர்கள் நல்லாட்சி செய்தனர். |
| 3 | பசு கன்றை ஈன்றன. | பசு கன்றை ஈன்றது. |
| 4 | மேகங்கள் சூழ்ந்து கொண்டது. | மேகங்கள் சூழ்ந்து கொண்டன. |
| 5 | குழலி நடனம் ஆடியது. | குழலி நடனம் ஆடினாள். |

கடிதம் எழுதுக.

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**நண்பனுக்குக் கடிதம்**

23, பெரியார் வீதி,
சேலம் - 3.
10.6.2019.

ஆருயிர் நண்பா!

உன் அன்பு நண்பன் எழுதும் கடிதம்.நானும் என் குடும்பத்தாரும் மிகுந்த நலத்துடன் இருக்கின்றோம். நீயும் உன் குடும்பத்தாரும் நலமா?எங்கள் பள்ளியில் கடந்த வாரம் மதுரைக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றார்கள்.அங்குச் சென்ற அனுபவத்தை உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.மதுரை என்றால் இனிமை என்பதைப் பாடநூலில் தான் படித்திருக்கின்றேன்.அங்குச் சென்றபோது தான் அந்த இனிமையை உணர்ந்தேன்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்றேன். அங்கு எவ்வளவு நுணுக்கமான கலைநுட்பம் தெரியுமா? காணக் கண் கோடி வேண்டும் நண்பா! குமரகுருபரரின் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்ப்பாடல்கள் கல்வெட்டுகளில் அங்குச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.பின்னர் நாயக்கர் மகாலுக்குச் சென்றோம். அங்குள்ள ஒவ்வொரு தூணும் கதைகள் பல சொல்லும். அங்குள்ள நாட்டிய அரங்கு மிகவும் பொலிவுடன் உள்ளது. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் சென்றோம்.அங்குள்ள நூலகத்தைக் கண்டு வியந்து தமிழ்ச்சங்கமே ! இதுவோ? என்று நினைத்தேன்.அடுத்த வாரம் நேரில் வரும் போது இன்னும் விளக்கமாகக் கூறுகின்றேன்.அன்புடன் முடிக்கின்றேன்.வாழ்க வளமுடன்.

இப்படிக்கு
உயிர் நண்பன்,
ப. இளங்கதிர்

உறைமேல் முகவரி

பெறுநர்
ச.கதிரவன்,
34,புதுக் காலனி,
கரூர்-3

## மொழியோடு விளையாடு

**வட்டத்திலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




1. புதையல் 2. இயல் 3. கயல் 4. புயல் 5. கடல்
6. தையல் 7. புல் 8. கல் 9. இல்லை 10. இயல்பு

**சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.**

| வாழை | தயிர் | கூடு | திடல் | பாட்டு |
|---|---|---|---|---|
| குருவி | கொய்யா | சோறு | பழம் | பறவை |
| விளையாட்டு | கூட்டம் | அவரை | போட்டி | காய/ |

**(எ.கா) :** வாழை + காய் - வாழைக்காய்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| 1. குருவி | + | கூடு | - | குருவிக்கூடு |
| 2. விளையாட்டு | + | திடல் | - | விளையாட்டுத் திடல் |
| 3. தயிர் | + | சோறு | - | தயிர்ச் சோறு |
| 4. கொய்யா | + | பழம் | - | கொய்யாப் பழம் |
| 5. விளையாட்டு | + | போட்டி | - | விளையாட்டுப்போட்டி |
| 6. அவரை | + | காய் | - | அவரைக்காய் |

**விடுகதைக்கு விடை எழுதுக.**

1. மரம் விட்டு மரம் தரவுவேன்; குரங்கு அல்ல.
   வளைந்த வாலுண்டு; புலி அல்ல
   கொட்டைகளைக் கொறிப்பேன்; கிளி அல்ல.
   முதுகில் மூன்று கோடுகளை உடையவன். நான் யார்?................ **விடை : அணில்**
2. என் பெயர் மூன்று எழுத்துகளைக் கொண்டது.
   முதலெழுத்தை நீக்கினால் மறைப்பேன்.
   இரண்டாம் எழுத்தை நீக்கினால் குரைப்பேன்.
   மூன்றாம் எழுத்தை நீக்கினால் குதிப்பேன். நான் யார்?.................. **விடை : குதிரை**
3. வெள்ளையாய் இருப்பேன். பால் அல்ல.
   மீன் பிடிப்பேன்; தூண்டில் அல்ல
   தவமிருப்பேன்; முனிவரல்ல நான் யார்?................. **விடை : கொக்கு**

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| தீவு | - Island | உவமை | - Parable |
| இயற்கை வளம் | - Nature Resource | காடு | - Jungle |
| வன விலங்குகள் | - Wild Animals | வனவியல் | - Forestry |
| வனப் பாதுகாவலர் | - Forest Conservator | பல்லுயிர்மண்டலம் | - Bio Diversity |

❖❀❖

பருவம் 1 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 2 வாழ்வியல்

# திருக்குறள்

## மனப்பாடப் பாடல்

1. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
   தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.
2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.
3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.
4. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
   வகுத்தலும் வல்லது அரசு.

**நூல்** : **திருக்குறள்**
**ஆசிரியர்** : **திருவள்ளுவர்**



**ஆசிரியர்** : திருவள்ளுவர்

**காலம்** : 2000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்

**வேறுபெயர்கள்** : செந்நாப்போதார், பொய்யில்புலவர், முதற்பாவலர்.

**சொல்லும் பொருளும் :**

| | | | |
|---|---|---|---|
| அழுக்காறாமை | - பொறாமை கொள்ளாமை | ஏதிலார் | - பிறர் |
| அழுக்காறு | - பொறாமை | பூரியார் | - இழிந்தவர் |
| ஆக்கம் | - செல்வம் | வாய்மை | - உண்மை |
| கேடு | - வறுமை | செவ்வியான் | - சான்றோர் |

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்க.**

1. **வாய்மை எனப்படுவது ---------**

அ) அன்பாகப்பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்
இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல் [விடை : ஆ]

2. **-------- செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.**

அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்
இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன் [விடை : இ]

3. **'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ---------**

அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்
இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம் [விடை : இ]

4. **'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ---------**

அ) யா + எனின் ஆ) யாது + தெனின்
இ) யா + தெனின் ஈ) யாது + எனின் [விடை : ஈ]

5. **யாது + எனின் என்ற சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ---------**

அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு [விடை : ஆ]

6. **தீது + உண்டோ என்ற சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ---------**

அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டோத
இ) தீதிண்டோ ஈ) தீயுண்டோ [விடை : அ]

7. **சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்துக.**

| | விடை |
|---|---|
| அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல். | **1. ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்.** |
| ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல். | **2. ஈ) பொருள்களைச் சேர்த்தல்.** |
| இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல் | **3. இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்** |
| ஈ) பொருள்களைச் சேர்த்தல். | **4. அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.** |

**குறு வினா**

1. **எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?**

ஒருவர் தன் மனம் அறிய பொய்சொல்லக் கூடாது. அவ்வாறு கூறினால் அவர் மனமே அவரைச் சுடும்.

பருவம் 1 7

**2. வாழும் நெறி யாது?**

ஒருவர் தன் மனத்தில் பொறாமை இல்லாது ஒழுக்க நெறியோடு வாழ வேண்டும்.

**3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?**

உள்ளத்தில் பொய்யில்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவர்.

**கீழ்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.**

| | | | |
|---|---|---|---|
| பொருட்செல்வம் | எல்லாம் | பூரியார் | செல்வத்துள் |
| கண்ணும் | அருட்செல்வம் | உள | செவிச்சொல் |
| அச்செல்வம் | தலை | செல்வம் | ------- |

**விடை :**

**1. அருட்செல்வம்  செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.**

**2. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.**

**பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

அறவழி என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் தேசத்தந்தை காந்தியடிகள். அவர் தம் சிறு வயதில் ‘அரிச்சந்திரன்’ நாடகத்தைப் பார்த்தார். அதில் அரிச்சந்திரன் என்னும் மன்னர் ‘பொய் பேசாமை’ என்னும் அறத்தை எத்தகை சூழ்நிலையிலும் தவறாமல் கடைப்பிடித்தார். இந்த நாடகத்தைக் கண்ட காந்தியடிகள் தாமும் பொய் பேசாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இப்பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது.

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
   அழுக்காறு இலாத இயல்பு.

2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.

3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

**விடை : 3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

தமிழ் 7

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. முப்பால், பொய்யா மொழி, தெய்வ நூல் போன்ற பிறபெயர்களில் அழைக்கப்படும் நூல்

அ) திருக்குறள் ஆ) ஏலாதி
இ) திரிகடுகம் ஈ) ஆசாரக்கோவை [விடை : அ]

2. திருக்குறளில் அமைந்த மொத்த குறட்பாக்கள்

அ) 133 ஆ) 1330 இ) 70 ஈ) 38 [விடை : ஆ]

3. திருக்குறள் பகுப்பு

அ) மூன்று ஆ) நான்கு இ) ஒன்பது ஈ) 133 [விடை : அ]

4. பொருத்துக

1. அழுக்காறு - அ) செல்வம்
2. ஆக்கம் - ஆ) பொறாமை
3. கேடு - இ) பிறர்
4. ஏதிலார் - ஈ) வறுமை

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : அ]

5. பொருத்துக

1. பூரியார் - அ) இழிந்தவர்
2. வாய்மை - ஆ) சான்றோர்
3. செவ்வியான் - இ) உண்மை
4. தீது - ஈ) குற்றம்

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : ஈ]

6. தீங்கு தராத சொற்களைச் சொல்லுதல் -------

அ) வாய்மை ஆ) அருள்
இ) அழுக்காறாமை ஈ) இறைமாட்சி [விடை : அ]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒருவர் ___________ பொய் சொல்லக் கூடாது. **விடை : நெஞ்சறிய**
2. அவ்விய நெஞ்சத்தான் ___________ செவ்வியான். **விடை : ஆக்கமும்**
3. தன் குற்றம் காணப்பவருடைய வாழ்வில் ________ இல்லை. **விடை : துன்பம்**
4. சிறந்த செல்வம் ___________ **விடை : அருட்செல்வம்**
5. தன்னெஞ்சு அறிவது ___________. **விடை : பொய்யற்க**

## குறு வினா:

**1. செவ்வியான் கேடு நினைக்கப்படும் எப்போது?**

பொறாமை கொண்டவருடைய செல்வம், பொறாமை இல்லாதவருடைய வறுமை சான்றோரால் ஆராயப்படும்.

**2. எப்போது வாழ்வில் துன்பம் இல்லை?**

பிறருடைய குற்றத்தைக் காண்பது போல தன் குற்றத்தைக் காண்பவருக்குவாழ்வில் துன்பம் இல்லை.

**3. எப்போது புறங் கூறுதல் கூடாது?**

நேருக்கு நேர் நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அவர் இல்லாத போது புறங்கூறல் கூடாது.

**4. அருட்செல்வம் , பொருட்செல்வம் குறித்து வள்ளுவர் கூறுவது?**

1. செல்வங்களுள் சிறந்தது அருட்செல்வம்
2. பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

## சிறு வினா

**சிறந்த அரசின் செயல்கள் யாவை?**

1. பொருள் வரும் வழிகளை அறிதல்.
2. பொருள்களைச் சேர்த்தல்.
3. சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்
4. பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.

– ஆகியன சிறந்த அரசின் செயல்கள் ஆகும்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மாதிரி வினாத்தாள்
### ஏழாம் வகுப்பு - தமிழ்
### இயல் - இரண்டு

காலம் : 30 நிமிடம் மதிப்பெண் :20

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

**1. காடெல்லாம் - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) காடு + எல்லாம் ஆ) காடு + டெல்லாம்

இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம்

**2. நாவல் பழத்திற்கு உவமையாகக் கூறப்பட்டது -------**

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு

இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

**3. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் -------**

அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை

இ) முண்டந்துறை ஈ) கூந்தன் குளம்

**4. மகரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு**

அ) ஒன்று ஆ) அரை இ) கால் ஈ) இரண்டு

**II. குறு விடை தருக.** **3 x 2 = 6**

5. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா உரைப்பன யாவை?
6. மானின் வகைகள் சிலவற்றைக் கூறுக.
7. மகரக்குறுக்கத்திற்குச் சான்றுகள் தருக.

**III. சிறு விடை தருக.** **3 x 2 = 6**

8.காட்டை இயற்கை விடுதி என்று ஏன் அழைக்கின்றோம்?

9.கரடிகள் குறித்து நீவிர் அறிந்த செய்தியை எழுதுக.

**IV. கடிதம் எழுதுக.** **1 x 4 = 4**

10. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

❖❀❖

பருவம் 1 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 3 கவிதைப் பேழை

# புலி தங்கிய குகை

### மனப்பாடப் பாடல்

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

**நூல்** : **புறநானூறு**
**ஆசிரியர்** : **காவற்பெண்டு**

**காவற்பெண்டு :**

- சங்ககாலப் பெண்பாற் புலவர்
- கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய்
- படைப்பு : புறநானூற்றில் ஒரு பாடல்

தமிழ்

## சொல்லும் பொருளும்

1. சிற்றில் - சிறு வீடு 2. கல் அளை - கற்குகை 3. யாண்டு - எங்கே வயிறு.
4. ஈன்ற வயிறு - பெற்றெடுத்த 5. குடில் - வீடு

## பாடநூல் மதிப்பீட்டு வினா

7

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ‘யாண்டு’ என்ற சொல்லின் பொருள் ________
அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது [விடை : ஆ]

2. ‘யாண்டுளனோ?’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) யாண்டு + உளனோ? ஆ) யாண் + உளனோ?
இ) யா + உளனோ? ஈ) யாண்டு + உனோ? [விடை : அ]

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. **'கல் + அளை' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________**

அ) கல்லளை ஆ) கல்அளை இ) கலலளை ஈ) கல்லுளை [**விடை : அ**]

**குறு வினா**

1. **தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?**

தம் வயிற்றுக்குத் தாய் 'புலி தங்கிய குகை'யை உவமையாகக் கூறுகிறார்.

**சிறு வினா**

1. **தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

✍ சிறிய என் வீட்டிலுள்ள தூணைப் பற்றிக் கொண்டு , எதுவும் தெரியாதவள் போல நீ 'உன் மகன் எங்கே?' என்று என்னைக் கேட்கின்றாய்.

✍ அவன் எங்கு இருக்கின்றான் என்று எனக்குத் தெரியாது. ஆனால் 'புலி தங்கிய குகை' போன்று அவனைப் பெற்ற வயிறு என்னிடம் உள்ளது.

✍ அவன் இங்கு இல்லை ஆனால் போர்க்களத்தில் இருக்கலாம். போய்க் காண்பாயாக!

– என்று தன் மகன் குறித்துத் தாய் கூறினாள்.

**சிந்தனை வினா**

1. **தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?**

✍ புலி மிகுந்த வலிமையானது, சுறுசுறுப்பானது, தன்னம்பிக்கை மிக்கது, வீரம் மிகுந்தது.

✍ அதைப் போல வீரம் மிக்கவன் மகன்.

✍ இருள் நிறைந்த குகையில் புலி இருப்பது போல், இருள் நிறைந்த வீரம் மிக்க கருவறையில் தன் மகன் உறங்கி வளர்ந்தான்.

✍ புலி குகையை விட்டு வேட்டைக்குச் செல்வது போல பகைவர்களை வேட்டையாடுவதற்கு மகன் போர்க்களம் சென்று இருக்கின்றான்.

✍ அதனால் தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுகிறார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவா ________**

அ) ஔவையார் ஆ) ஒக்கூர் மாசாத்தியார்
இ) காவற்பெண்டு ஈ) வெண்ணிக்குயத்தியார் [**விடை : இ**]

2. **எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ________**

அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு
இ) திருக்குறள் ஈ) திருமுருகாற்றுப்படை [**விடை : அ**]

**3. தமிழ்மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூல்**

அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு

இ) பதிற்றுப்பத்து ஈ) குறுந்தொகை **[விடை : அ]**

**4. கோப்பெரு நற்கிள்ளி __________ மன்னன்.**

அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ **[விடை : ஆ]**

**5. காவற்பெண்டு பாடிய பாடல் அமைந்த நூல் __________**

அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு

இ) பதிற்றுப்பத்து ஈ) குறுந்தொகை **[விடை : அ]**

**6. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) காவற்பெண்டு - பெண்பாற் புலவர்

ஆ) காவற்பெண்டு - சங்ககாலப் புலவர்

இ) காவற்பெண்டு - புறநானூற்றில் பாடல் பாடினார்

ஈ) காவற்பெண்டு - கோப்பெரு நற்கிள்ளியின் தாய் **[விடை : ஈ]**

**7. பொருத்துக.**

1. சிற்றில் - அ. கற்குகை
2. கல் அளை - ஆ. சிறு வீடு
3. யாண்டு - இ. பெற்றெடுத்த
4. ஈன்ற வயிறு - ஈ. எங்கே

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ

இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ **[விடை : அ]**

**8. 'புலிசேர்ந்து போகிய கல்அளை போல' - இதில் 'குகை' என்னும் பொருள்**

அ) சேர்ந்து ஆ) போகிய இ) அளை ஈ) போல **[விடை : இ]**

**9. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) இல் - வீடு ஆ) அளை - குகை

இ) ஈன்ற - பெற்ற ஈ) யாண்டு - இங்கே **[விடை : ஈ]**

**10. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க.**

அ) அன்னையே! உன் மகன் எங்கு உள்ளான்?

ஆ) உன் மகன் எங்கு உள்ளான்?அன்னையே!

இ) எங்கு அன்னையே உன் மகன் உள்ளான்?

ஈ) உன் மகன் எங்குஅன்னையே உள்ளான்? **[விடை : அ]**

தமிழ் 7

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ‘புலி தங்கிய குகை’ என்னும் தலைப்பில் அமைந்தப் பாடலை எழுதியவர்__________
விடை : **காவற்பெண்டு**

2. தமிழர்கள் பழங்காலம் தொட்டே __________, __________ சிறந்து விளங்கினர்.
விடை : **கல்வியிலும், வீரத்திலும்**

3. நாட்டைக்காக்க __________ செல்வது முதற்கடமை. விடை : **போர்க்களம்**

4. கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்க புலவர் _______. விடை : **காவற்பெண்டு**

5. ‘புலி தங்கிய குகை’ என்னும் தலைப்பில் அமைந்தப் பாடல் புறநானூற்றில் __________வது பாடல். விடை : 86

## குறு வினா

**1. காவற்பெண்டு - குறிப்பு வரைக.**

✍ சங்ககாலப் பெண்பாற் புலவர்.

✍ கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய்.

✍ படைப்பு : புறநானூற்றில் ஒரு பாடல்.

✍ கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்க புலவர் இவர்.

**2. புறநானூறு குறிப்பு வரைக.**

✍ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று : புறநானூறு

✍ இது பண்டைத் தமிழ்மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீரம். முதலியவற்றை வெளிப்படுத்தும் நூல்

**3. புலவரிடம் பெண் வினவியது யாது ?**

அன்னையே ! உன் மகன் எங்கு உள்ளான்? என்று புலவரிடம் பெண் வினவினாள்.

**4. ‘புலிசேர்ந்து போகிய கல்அளை போல’ தொடர் பொருள் யாது?**

பொருள் : புலி தங்கிச் சென்ற குகை போல்

**5. தன் மகன் எங்கு இருக்கக் கூடும் என்று புலவர் கூறுகின்றார்?**

தன் மகன் போர்க்களத்தில் இருக்கக் கூடும் என்று புலவர் கூறுகின்றார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்

**1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. அஞ்சிஅத்தை மகள் நாகையார் | 11. காவற்பெண்டு | 21. நெடும்பல்லியத்தை |
| 2. அஞ்சில் அஞ்சியார் | 12. ஞமிழிஞாலளார் | 22. பாரிமகளிர் |
| 3. அள்ளூர் நன்முல்லையார் | 13. குளம்பாதாயனார் | 23. பூங்கண் உத்திரையார் |
| 4. ஆதி மந்தியார் | 14. குறமகள் இளவெயினி | 24. பெருங்கோப்பெண்டு |
| 5. ஊன் பித்தை | 15. குறமகள் குறியெயினி | 25. நக்கண்ணையார் |
| 6. ஒக்கூர் மாசாத்தியார் | 16. குன்றியனார் | 26. பேய்மகள் இளவெயினி |
| 7. கச்சிப்பேட்டு நன்னாகையார் | 17. தாயங்கண்ணியார் | 27. பொன்மணியார் |
| 8. கழார்கீரன் எயிற்றியார் | 18. நக்கண்ணியார் | 28. பொன்முடியார் |
| 9. காக்கைப் பாடினியார் | 19. நல்வெல்லியார் | 29. வெண்ணிக்குயத்தியார் |
| 10.காமக்கண்ணிப் பசலையார். | 20. நன்னாகையார் | 30. வெள்ளிவீதியார் |

**2. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றின் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.**



வேல்



வாள்



ஈட்டி



வில்

❖❀❖

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 3 கவிதைப் பேழை

# பாஞ்சை வளம்

| | |
|---|---|
| **தொகுப்பாசிரியர்** | : நா.வானமாமலை |
| **நூல்** | : வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல் |
| **காலம்** | : 1917 - 1980 |
| **ஆர்வம்** | : நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள் சேகரித்து தொகுப்பு நூல் வெளியீடு |
| **ஊர்** | : திருநெல்வேலி நாங்குநேரி |
| **படைப்புகள்** | : தமிழர் வரலாறும் பண்பாடும், தமிழர் நாட்டுப் பாடல்கள், உயிரின் தோற்றம், முத்துப்பட்டன் கதை முதலியன. |

பருவம் 1 7

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| சூரன் | - வீரன் | வாரணம் | - யானை |
| பொக்கிஷம் | - செல்வம் | பரி | - குதிரை |
| சாஸ்தி | - மிகுதி | சிங்காரம் | -அழகு |
| விஸ்தாரம் | - பெரும்பரப்பு | கமுகு | - பாக்கு |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **ஊர்வலத்தின் முன்னால் __________ அசைந்து வந்தது.**

   அ) தோரணம் ஆ) வானரம் இ) வாரணம் ஈ) சந்தனம் **[விடை : இ]**

2. **பாஞ்சாலங்குறிச்சியில் __________ நாயை விரட்டிடும்.**

   அ) முயல் ஆ) நரி இ) பரி ஈ) புலி **[விடை : அ]**

3. **மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது __________**

   அ) மெத்தை விரிக்கப்பட்ட வீடு ஆ) படுக்கையறை உள்ள வீடு
   இ) மேட்டுப்பகுதியில் உள்ள வீடு ஈ) மாடிவீடு **[விடை : ஈ]**

4. **'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________**

   அ) பூட்டு + கதவுகள் ஆ) பூட்டும் + கதவுகள்
   இ) பூட்டின் + கதவுகள் ஈ) பூட்டிய + கதவுகள் **[விடை : ஆ]**

5. **'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) தோரணம் + மேடை ஆ) தோரண + மேடை

இ) தோரணம் + ஒடை ஈ) தோரணம் + ஓடை **[விடை : அ]**

6. **வாசல் + அலங்காரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) வாசல்அலங்காரம் ஆ) வாசலங்காரம்

இ) வாசலலங்காரம் ஈ) வாசலிங்காரம் **[விடை : ஆ]**

**பொருத்துக.**

| **வினா :** | | **விடை :** | |
|---|---|---|---|
| பொக்கிஷம் | - அழகு | **பொக்கிஷம்** | **- செல்வம்** |
| சாஸ்தி | - செல்வம் | **சாஸ்தி** | **- மிகுதி** |
| விஸ்தாரம் | - மிகுதி | **விஸ்தாரம்** | **- பெரும்பரப்பு** |
| சிங்காரம் | - பெரும்பரப்பு | **சிங்காரம்** | **- அழகு** |

## குறுவினா

1. **பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.**

✍ பாஞ்சாலங்குறிச்சி நகரில் பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருக்கும்.

✍ அவை மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாக இருக்கும்.

2. **பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**

பூஞ்சோலைகளும் சந்தனமரச் சோலைகளும் ஆறுகளும் நெல் வயல்களும் பாக்குத் தோப்புகளும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு சேர்க்கும்.

## சிறுவினா

1. **பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**

✍ பாஞ்சாலங்குறிச்சியில் ஒவ்வொரு வீடுகளிலும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும்.

✍ வீடுகளெல்லாம் மதில்களால் சூழப்பட்ட மாடி வீடுகளாக இருக்கும்.

✍ வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்ததாகவும் இருக்கும்.

2. **பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.**

✍ வீரம் நிறைந்த பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டும்.

✍ பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.

✍ மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

**சிந்தனை வினா**

1. **நாட்டுப் புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் யாது?**

1. மாவீரன் கட்டபொம்மன் வீரம் நிறைந்தவர்.
2. அஞ்சா நெஞ்சினர்.
3. ஆங்கிலேய உயர் அதிகாரிகளை நேருக்கு நேராகவே தன் நாட்டு உரிமைக்காக எதிர்த்தவர்.

ஆகிய காரணத்தினாலும், மக்கள் மனதில் வீரம் நிறைந்தவராக இடம் பிடித்திருப்பதாலும் நாட்டுப் புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படுகின்றார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடலைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர் ________**

அ) நா.வானமாமலை ஆ) சு.சண்முகசுந்தரம்
இ) அன்னகாமு ஈ) சண்முக சுந்தரம் [விடை : அ]

2. **குறையில்லாத வீரன் ________**

அ) கட்டபொம்மன் ஆ) ஆங்கிலேயன்
இ) மருது ஈ) நா.வானமாமலை [விடை : அ]

3. **கட்டபொம்மனின் நாடு ________**

அ) மதுரை ஆ) செஞ்சி
இ) பாஞ்சாலங்குறிச்சி ஈ) பாளையங்கோட்டை [விடை : இ]

4. **பாஞ்சாலங்குறிச்சியில் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும் இடம்**

அ) கடைகள் ஆ) வீதிகள் இ) வீடுகள் ஈ) சோலைகள் [விடை : இ]

5. **நீர்நிலையின் ஒரே துறையில் நின்று பால்போன்ற தண்ணீரைக் குடிப்பவை ________**

அ) குயில், மயில் ஆ) யானை, பசு இ) பசு, புலி ஈ) முயல், நாய் [விடை : இ]

6. **பாஞ்சாலங்குறிச்சியின் தண்ணீருக்குக் கூறப்பட்ட உவமை ________**

அ) பால் ஆ) மணி இ) அமுதம் ஈ) சந்தனம் [விடை : அ]

7. **கறந்து வைத்த பாலைக் குடிக்காதது ________**

அ) காகம் ஆ) குயில் இ) மயில் ஈ) பசு [விடை : அ]

8. **வீரம் மிகுந்த நாடு ________**

அ) மதுரை ஆ) செஞ்சி
இ) பாஞ்சாலங்குறிச்சி ஈ) பாளையங்கோட்டை [விடை : இ]

www.Padasalai.Net www.TrbTnpsc.com


9. பாஞ்சாலங்குறிச்சியில் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடியது ________
அ) காகம் ஆ) குயில் இ) மயில் ஈ) பசு [விடை : இ]

10. அன்பு வளரும் நாடு ________
அ) மதுரை ஆ) செஞ்சி
இ) பாஞ்சாலங்குறிச்சி ஈ) பாளையங்கோட்டை [விடை : இ]

11. பொருத்துக.
1. வாரணம் - அ) பாக்கு
2. பரி - ஆ) அழகு
3. சிங்காரம் - இ) குதிரை
4. கமுகு - ஈ) யானை
அ) 1-ஈ 2-இ 3-ஆ 4- அ ஆ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ
இ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ ஈ) 1-அ 2- ஈ 3-ஆ 4-இ [விடை : அ]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'பாஞ்சை' என்ற அழைக்கப்படும் நாடு ________ விடை : பாஞ்சாலங்குறிச்சி
2. தமிழ்நாட்டில் பல வகையான ________ இலக்கியங்கள் வழங்கி வருகின்றன. விடை : நாட்டுப்புற
3. கதைப்பாடல் என்பது ________ தழுவிய பாடல். விடை : கதை
4. 'பரி வளரும் சாலை' - இதில் 'பரி' என்பதன் பொருள் ________. விடை : குதிரை
5. 'கமுகு' என்பதன் பொருள் ________. விடை : பாக்கு
6. ________யில் மாங்குயில் கூப்பிடுமாம். விடை : சோலை
7. முயலும் ________ விரட்டும். விடை : நாயை
8. வரந்தருபவள் ________ விடை : சக்கமாதேவி

தமிழ் 7

## குறு வினா

1. குயில்கள் எங்கு கூவும் ? மயில்கள் எப்படி விளையாடும்?

குயில்கள் சோலைகளில் கூவும். மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும

2. பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு சேர்ப்பன எது?

பூஞ்சோலைகளும் சந்தனமரச் சோலைகளும் ஆறுகளும் நெல் வயல்களும் பாக்குத் தோப்புகளும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு சேர்க்கும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**3. கரந்த பாலைக் காகம் குடிக்காததற்குக் காரணம் யாது?**

மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

**4. பசு மற்றும் புலியின் செயல் யாது?**

பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.

**5. எவ்வெற்றுக் கெல்லாம் பாஞ்சாலங்குறிச்சியில் இடங்கள் இருந்தன?**

1. யானைக் கூடம்
2. குதிரைக் கொட்டில்
3. தோரணங்கள் கட்டப்பட்ட மேடை
4. தாயம் ஆடுவதற்கான இடம்.

**6. பாஞ்சாலங்குறிச்சியில் வீரம் நிறைந்த விலங்குகள் எவை?**

1. முயல்
2. பசு

**7. வீரபாண்டியகட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அஃறிணை உயிர்கள் யாவை?**

1. யானை
2. குதிரை
3. குயில்கள்
4. மயில்கள்
5. முயல்
6. வேட்டை நாய்
7. பசு
8. புலி
9. காகம்.

**8. வீரபாண்டியகட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள விலங்குகள் யாவை?**

1.யானை 2.குதிரை 3.முயல் 4.வேட்டை நாய் 5.பசு 6.புலி

**9. வீரபாண்டியக ட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பறவைகள் யாவை?**

1.குயில்கள் 2.மயில்கள் 3.காகம்

## சிறு வினா:

**1. "சில அதிசயங்கள் சொல்கின்றேன் கேளுமையா" - பாஞ்சாலங்குறிச்சி அதிசயங்கள் யாவை?**

1. வீரம் நிறைந்த பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டும்.
2. பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.
3. மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

பருவம் 1 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com


## கற்பவை கற்றபின்

**உங்கள் வீட்டிலுள்ள பெரியோரிடம் நாட்டுப்புறக் கதைப்பாடல்களைக் கேட்டு வந்து வகுப்பறையில் பகிர்க.**

**முடுகு**

எட்டுத் திசையும் பதினாறு கோணமும்
கட்டியே காத்தவன் கட்டபொம்மன்
ஆத்துரு வாழும் அண்ணா சாய்பு
அண்ணனும் தம்பியும் வல்லவனாம்
குளத்தூர் வாழும் சுப்பையா
கொள்ளை யடிப்பதில் வல்லவனாம்
கிழக்கே எல்லையாம் கீழக்கரை
மேக்க எல்லையாம் சூலக்கரை
ஆயிரம் கண்ணுள்ள மாரியம்மா
ஆதரிக்க வேணும் இந்த நேரம்

❖❀❖

## நகைச்சுவைப் புதிர்

1. கடுமையான மழை நேரத்தில் ஒருவர் குடையின்றி பாதையில் நடந்து சென்றார் . அவரின் தலைமுடி ஒன்று கூட நனையவில்லை. காரணம் என்ன?
2. ஒரு விமானம் விபத்துக்குள்ளாகிவிட்டது, தப்பியவர்களை எங்கு அடக்கம் செய்வார்கள்?

விடை பக்கம் – 170

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 3 உரைநடை உலகம்

# தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முத்துராமலிங்கத்தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் ________

அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி
இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி [விடை : இ]

2. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர் ________

அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி [விடை : ஆ]

3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் ________

அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க ஈ) நேதாஜி [விடை : அ]

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' என்று அழைக்கப்படும் விலங்கு ________

விடை : **புலி**

2. யானைக் கூட்டத்திற்கு ஒரு ________ யானைதான் தலைமை தாங்கும்.

விடை : **பெண்**

3. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன்________ விடை : **அடர்ந்த முடிகள்**

### குறு வினா

1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?

1. வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளை உண்டாக்கியவர்.
2. உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர். சுத்தத் தியாகி.

- என்று முத்துராமலிங்கத்தேவரைப் பெரியார் பாராட்டியுள்ளார்.

பருவம் 1 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?**

1. முத்துராமலிங்கத்தேவர், ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சி ஏற்படும் வகையில் வீர உரையாற்றினார்.
2. அவரது பேச்சைக் கேட்டு மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர்.
3. இதனால், அவரைப் பலமுறை ஆங்கில அரசு கைது செய்தது.
4. மேலும், வாய்ப்பூட்டுச் சட்டம் முலம் மேடைகளில் அரசியல் பேசக் கூடாது என்று அவருக்குத் தடைவிதித்தது.

**3. முத்துராமலிங்கர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.**

1. முத்துராமலிங்கத்தேவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார்.
2. சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகிய பலதுறை ஆற்றல் உடையவராக விளங்கினார்.

**சிறு வினா**

**1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புப் பற்றி எழுதுக.**

✍ நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்.

✍ அவரைத் தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

✍ முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று 06.9.1939ல் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார்.

✍ நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.

✍ விடுதலைக்குப் பின்னர் நேதாஜி என்ற பெயரில் வார இதழ் நடத்தினார்

**2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**

✍ 1938 காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார்.

✍ மதுரையில் இருந்த நூற்பாலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

✍ உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார்.

✍ பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிந்தனை வினா**

**சிறந்த தலைவருக்குரிய பண்புகள்எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

1. உரிமைக்காகப் போராடுதல்
2. மக்கள் நலம் காத்தல்
3. பொதுநல வாழ்வு
4. பேச்சாற்றல்
5. சாதி, மத, இன,மொழி ஆகியன பாராமை
6. ஒழுக்கம் காத்தல்
7. பிறர்நிலையில் தன்னை வைத்துப்பார்த்தல்
8. மனிதநேயம்
9. நாட்டுப்பற்று
10. தியாக உணர்வு

- ஆகியன சிறந்த தலைவருக்குரிய பண்புகளாக நாங்கள் கருதுகின்றோம்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தந்தைப் பெரியாரால் ‘சுத்தத் தியாகி’ என்று பாராட்டப்பட்டவர் ________**

அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி **[விடை : அ]**

2. **முத்துராமலிங்கத் தேவர் பிறந்த ஊர் ________**

அ) பசும்பொன் ஆ) மதுரை இ) கோவை ஈ) சென்னை **[விடை : அ]**

3. **முத்துராமலிங்கத் தேவர் தொடக்கக் கல்வி பயின்ற இடம் ________**

அ) பசும்பொன் ஆ) மதுரை இ) இராமநாதபுரம் ஈ) கமுதி **[விடை : ஈ]**

4. **முத்துராமலிங்கத் தேவர் படித்துக்கொண்டிருந்த போது பரவிய நோய் ________**

அ) காலரா ஆ) பிளேக்
இ) மலேரியா ஈ) மஞ்சள் காமாலை **[விடை : ஆ]**

5. **வடஇந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின் படி கைது செய்யப்பட்ட தலைவர் ________**

அ) பாலகங்காதர திலகர் ஆ) காந்திஜி
இ) நேதாஜி ஈ) திரு.வி.க **[விடை : அ]**

6. **வங்கச் சிங்கம் என்று போற்றப்படுபவர்**

அ) பாலகங்காதர திலகர் ஆ) காந்திஜி
இ) நேதாஜி ஈ) திரு.வி.க **[விடை : இ]**

7. **நேதாஜி என்னும் வார இதழை நடத்தியவர் ________**

அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி **[விடை : அ]**

பருவம் 1 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

8. முத்துராமலிங்கத் தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் ________
அ) சாயல்குடி ஆ) பசும்பொன் இ) இராமநாதபுரம் ஈ) வங்கம் [விடை : அ]

9. முத்துராமலிங்கத் தேவரின் பேச்சு விடுதலைப்போருக்கு உதவும் என்று கூறியவர் ________
அ) பாலகங்காதர திலகர் ஆ) காமராசர்
இ) நேதாஜி ஈ) திரு.வி.க [விடை : ஆ]

10. தென்னாட்டுச் சிங்கம் என்றழைக்கப்படக் கூடியவர் ________
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

11. முத்துராமலிங்கத் தேவர் முதன் முதலில் சட்ட மன்றத்தேர்தலில் வெற்றி பெற்ற ஆண்டு________
அ) 1947 ஆ) 1937 இ) 1957 ஈ) 1973 [விடை : ஆ]

12. முத்துராமலிங்கத் தேவர் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்திய இடம் ________
அ) கமுதி ஆ) பசும்பொன்
இ) சாயல் குடி ஈ) இராமநாதபுரம் [விடை : அ]

13. குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்ட ஆண்டு
அ) 1948 ஆ) 1984 இ) 1949 ஈ) 1943 [விடை : அ]

14. பாரதமாதா கூட்டுறவுப் பண்டக சாலை ஏற்படுத்தப்பட்ட இடம்
அ) கமுதி ஆ) பசும்பொன்
இ) சாயல் குடி ஈ) இராமநாதபுரம் [விடை : அ]

15. பாரதமாதா கூட்டுறவுப் பண்டக சாலை ஏற்படுத்தியவர் ________
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

16. ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தியவர் ________
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

17. உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தியவர் ________
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

**18. பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடியவர் ________**

அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இளமையில் அன்னையை இழந்து இஸ்லாமியத் தாய் ஒருவரால் பாலூட்டி வளர்க்கப்பட்டவர் ________
   **விடை : முத்துராமலிங்கத் தேவர்**
2. முத்துராமலிங்கத் தேவர் உயர்நிலைக் கல்வியைப் படித்த இடங்கள் ________ ,________
   **விடை : மதுரை, இராமநாதபுரம்**
3. முத்துராமலிங்கத் தேவர் இளமையிலேயே ________ ஆர்வம் மிகுதி .
   **விடை : அரசியல்**
4. நேதாஜி மதுரைக்கு வந்த ஆண்டு ________ . **விடை : கி.பி.1939**
5. நேதாஜி பெயரில் வார இதழ் ஒன்றை நடத்தியவர் ________ **விடை : முத்துராமலிங்கத் தேவர்**
6. முதன் முதலில் முத்துராமலிங்கத் தேவர் பேசிய தலைப்பு ________
   **விடை : விவேகானந்தர் பெருமை**
7. இந்திய அரசால் முத்துராமலிங்கத் தேவர் தபால்தலை வெளியிடப்பட்ட ஆண்டு________
   விடை : கி.பி.1995
8. ஆங்கில ஆட்சியில் மக்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம்________
   **விடை : குற்றப்பரம்பரைச் சட்டம்.**
9. முத்துராமலிங்கத் தேவர் ________ கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டார்.
   **விடை : மதுரை வைத்தியநாத ஐயர்**

## குறுவினா

**1. முத்துராமலிங்கத் தேவர் எங்கு எப்போது பிறந்தார்?**

முத்துராமலிங்கத் தேவர் 30.10.1908 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்ற ஊரில் பிறந்தார்.

**2. முத்துராமலிங்கத் தேவரின் பெற்றோர் யாவர்?**

தந்தை : உக்கிர பாண்டியத்தேவர், தாய் : இந்திராணி அம்மையார்.

**3. முத்துராமலிங்கத் தேவரின் படிப்பு பாதியில் நின்ற காரணம் யாது?**

இராமநாதபுரத்தில் படித்துக்கொண்டிருந்த போது , அவ்வூரில் 'பிளேக்' நோய் பரவியதால் அவரின் படிப்பு பாதியில் நின்றது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. **முத்துராமலிங்கத் தேவரின் அரசியல் குரு யார்?**

நேதாஜி சுபாஷ் சந்திர போசு.

5. **முத்துராமலிங்கத் தேவர் குறித்து மூதறிஞர் இராஜாஜி கூறியது யாது?**

முத்துராமலிங்கத் தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது .உதடுகளில் இருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது, அவர் வழக்கம் என்று முத்துராமலிங்கத் தேவர் குறித்து மூதறிஞர் இராஜாஜி பாராட்டுகிறார்.

6. **முத்துராமலிங்கத் தேவர் பேச்சு குறித்து வட இந்திய இதழ்கள் பாராட்டிய செய்தி யாது?**

பாராளுமன்றத்தில் அவர் பேசிய ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர்காலத்தில் விட்டல் பாய், வல்லபபாய் பட்டேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல் இருந்ததாக வடஇந்திய இதழ்கள் பாராட்டின.

7. **முத்துராமலிங்கத் தேவரின் சிறப்புப்பெயர்கள் யாவை?**

1. தேசியம் காத்த செம்மல் 2. வித்யா பாஸ்கர் 3. பிரவசன கேசரி
4. சன்மார்க்க சண்ட மாருதம் 5. இந்து புத்தசமய மேதை

8. **விவசாயிகளின் தோழன் முத்துராமலிங்கத் தேவர் என்பதற்கான நிகழ்வினைக்குறிப்பிடுக.**

1. முத்துராமலிங்கத் தேவர் 'ஜமீன் விவசாயிகள் சங்கம்' ஏற்படுத்தி விவசாயிகள் துன்பம் போக்கப் பாடுபட்டார்.
2. தமக்குச் சொந்தமான 32½ சிற்றூர்களில் இருந்த விளை நிலங்களைக் குத்தகை இல்லாமல் உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார்.

9. **முத்துராமலிங்கத் தேவர் சிறைவைக்கப்பட்டிருந்த இடங்கள் யாவை?**

1. அலிப்பூர் 2. அமராவதி 3. தாமோ 4. கல்கத்தா 5. சென்னை 6. வேலூர்

10. **முத்துராமலிங்கத் தேவர் எப்போது மறைந்தார்?**

30.10.1963ல் முத்துராமலிங்கத் தேவர் மறைந்தார்.

## சிறு வினா

1. **முத்துராமலிங்கத் தேவரின் இளமைக்காலம் குறித்து எழுதுக.**

**பிறப்பு :**

முத்துராமலிங்கத் தேவர் 30.10.1908இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்ற ஊரில் பிறந்தார்.

**முத்துராமலிங்கத் தேவரின் பெற்றோர் :**

தந்தை : உக்கிர பாண்டியத்தேவர் தாய் :இந்திராணி அம்மையார். இளமையில் அன்னையை இழந்து இஸ்லாமியத் தாய் ஒருவரால் பாலூட்டி வளர்க்கப்பட்டார்.

**படிப்பு பாதியில் நின்ற காரணம் :**

இராமநாதபுரத்தில் படித்துக்கொண்டிருந்த போது , அவ்வூரில் 'பிளேக்' நோய் பரவியதால் அவரின் படிப்பு பாதியில் நின்றது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **முத்துராமலிங்கத் தேவருக்கு அரசு செய்த சிறப்புகள் யாவை?**

**அரசு விழா**

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் அவர் தோன்றி மறைந்த அக்டோபர் 30 ஆம் நாள் தமிழக அரசின் சார்பில் அரசு விழா எடுக்கப்படுகின்றது.

**படம் மற்றும் சிலை**

- ✍ தமிழகச் சட்டமன்றத்தில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- ✍ சென்னையில் அரசு சார்பாகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- ✍ நாடாளுமன்ற வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது.

**தபால்தலை**

இந்திய அரசால் 1995ல் இவரின் தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது.

3. **பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையை நிறுவியவர் யார்?எதற்காக நிறுவப்பட்டது?**

**நிறுவியவர் :**

பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையை நிறுவியவர் : முத்துராமலிங்கத் தேவர்

**நிறுவக்காரணம்**

கமுதியில் வியாபாரிகள் விவசாய உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைப்பதற்காக பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையை நிறுவினார்.

### கற்பவை கற்றபின்

**நாட்டுக்கு உழைத்த சிறந்த பிற தலைவர்கள் பற்றிய பிற செய்திகளைத் திரட்டி எழுதுக.**

**காந்தியடிகள்:**

- ✍ அகிம்சை வழியில் நாட்டு விடுதலைக்குப்பாடுபட்டவர்.
- ✍ வெள்ளையனே வெளியேறு இயக்கம் , உப்புச் சத்தியாகிரகம் ,ஒத்துழையாமை இயக்கம் ,தீண்டாமை ஒழிப்பு ,மதுவிலக்கு முதலியன

**நேதாஜி :**

இந்திய தேசிய இராணுவத்தை அமைத்து ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்.

**வ.உ.சிதம்பரனார்**

நம் நாட்டிற்காகச் சுதேசக் கப்பல் வாங்கியவர். நாட்டுமக்களுக்காக சிறையில் செக்கிழுத்தவர்.

**ஜவஹர்லால் நேரு**

காந்தியடிகளுடன் இணைந்து நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்.

**பூலித்தேவன்**

ஆங்கிலேயரை எதிர்த்து தன்பகுதியை வென்றவர்.விடுதலைப் போரின் முதல் முழக்கமிட்டவர்.

**வீரபாண்டிய கட்டபொம்மன்**

ஆங்கிலேயருக்கு வரி கொடுக்கமாட்டோம் என்று ஆங்கிலேயரை எதிர்த்தவர்.

பருவம் 1 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





# இயல் 3 விரிவானம் கப்பலோட்டிய தமிழர்



**இரா. பி. சேது**

- தமிழறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், வழக்குரைஞர்.
- சிறப்பு : சொல்லின் செல்வர், தமிழின்பம் நூலுக்குச் சாகித்ய அகாதெமி விருது.
- படைப்புகள் : ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம் ஊரும் பேரும், மேடைப் பேச்சு.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**1. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்றெல்லாம் போற்றப்படுபவர் வ.உ.சிதம்பரனார் ஆவார். ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசி கப்பல் இயக்கிய பெருமைக்குரியவர் வ.உ.சிதம்பரனார். அவரின் உரை வழி , அவரது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

**சுதேசக் கப்பல்**

தூத்துக்குடியில் கொற்கை துறைமுகத்தில் முத்து வாணிகத்தில் நம்மவர் சிறந்திருந்தனர். கப்பல் வணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். ஆனால் ஆங்கிலேயர் ஆதிக்கத்துப் பின்னர், கப்பல்களில் ஆங்கிலக் கொடி பறந்தது. நம்மவர் கூலிகளாக அக்கப்பலில் வேலை செய்தனர்.இந்நிலையை மாற்ற பாண்டித்துரையாரைத் தலைவராகக் கொண்டு சுதேசக் கப்பல் நிறுவனத்தை வ.உ.சிதம்பரனார் உருவாக்கினார்.இக்கப்பல் முதன் முதலில் கொழும்பு நோக்கிச் சென்றது.

**ஆங்கிலேயரின் அடக்குமுறை**

சுதேசக் கப்பல் வணிகம் வளரத் தொடங்கியது. ஆங்கிலக் கப்பல் வணிகம் வீழத் தொடங்கியது. அதனால் ஆங்கிலேயர்கள் வ.உ.சிதம்பரனாரையும் அவரத நண்பர்களையும் பயமுறுத்தினர். அதற்கெல்லாம் கவலைப்படாமல் ‘வந்தே மாதரம்’ என்ற முழக்கத்தை எழுப்பினார். இதனைக் கேட்ட மக்கள் விடுதலைக்கு ஆதரவாக ஊக்கம் அடைந்தனர். ஆங்கில அரசு வ.உ.சிதம்பரனாரைச் சிறையில் அடைத்தது.

**வ.உ.சிதம்பரனாரின் தியாகம்**

வ.உ.சிதம்பரனார் கோவைச்சிறை, கண்ணூர்ச் சிறை ஆகியவற்றில் கொடும்பணி செய்தார்.அவர் உடல் சலித்தது, உள்ளம் தளரவில்லை. சிறையதிகாரி வ.உ.சிதம்பரனாரிடம் அறிவுரை கூற “உனக்கும் உன் கவர்னருக்கும் மன்னனுக்கும் புத்தி சொல்வேன்” என்றார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

சிறையில் செக்கிழுத்தார்.சிறையில் கைத்தோல் உரிய கடும்பணி செய்தார்.செந்தமிழும் கன்னித் தமிழும் கண்ணீரைப் போக்கியது.

### தமிழ்ப்பற்றும் ஏக்கமும்

வ.உ.சிதம்பரனார் தொல்காப்பியம், இன்னிலை கற்றுத் தன் துன்பங்களை மறந்தார். ஆங்கிலத்தில் ஆலன் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை ‘மனம் போல் வாழ்வு’ என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார். மெய்யறிவு, மெய்யறம் முதலிய சிறு நூல்களைப் படைத்தார். சிறைவாழ்வு முடிந்து வ.உ.சிதம்பரனார் வெளியில் வந்த போது தன் குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்தார். ஆனால் கடற்கரையில் தன் ஆசைக்குழந்தை சுதேசக் கப்பலைக் காணாமல் வருத்தம் அடைந்தார் என்று நற்காலம் வருமோ என்று ஏங்கினார்.

### முடிவுரை

“பயக் காண்பது சுதந்திர வெள்ளம்

பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்”

என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?

என்று உருக்கமாகப் பேசி கடற்கரையை விட்டு அகன்றார் வ.உ.சிதம்பரனார்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. சொல்லின் செல்வர் என்று போற்றப்படுபவர்**

அ) அண்ணா ஆ) இரா.பி. சேது
இ) வ.உ.சி ஈ) பாண்டித்துரையார் [விடை : ஆ]

**2. தமிழின்பம் என்னும் நூலை எழுதியவர்**

அ) அண்ணா ஆ) இரா.பி. சேது
இ) வ.உ.சி ஈ) பாண்டித்துரையார் [விடை : ஆ]

**3. இரா.பி. சேதுவின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல்**

அ) தமிழின்பம் ஆ) ஆற்றங்கரையினிலே
இ) கடற்கரையினிலே ஈ) தமிழ் விருந்து [விடை : அ]

**4. வ.உ.சிதம்பரனார் பேசுவதாக அமைந்த நம் பாடப்பகுதி இரா.பி. சேதுவின் நூல்**

அ) தமிழின்பம் ஆ) ஆற்றங்கரையினிலே
இ) கடற்கரையினிலே ஈ) தமிழ் விருந்து [விடை : இ]

**5. சாகித்ய அகாதெமி விருது பெற்ற முதல் நூல்**

அ) தமிழின்பம் ஆ) ஆற்றங்கரையினிலே
இ) கடற்கரையினிலே ஈ) தமிழ் விருந்து [விடை : அ]

பருவம் 1 7

## கற்பவை கற்றபின்

1. **பாரதியார், கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு வகுப்பறையில் உரையாற்றுக.**

**பாரதியார்**

வணக்கம். நான் தான் உங்கள் முறுக்கு மீசை பாரதி பேசுகின்றேன்.மாணவர்களே நலமா? ஒருமுறை எனக்குப் பிடித்த பலகாரம் பற்றி ஒருவர் கேட்டார். நான் சற்றும் தயங்காமல் முறுக்கு என்றேன். அது குறித்த காரணம் இவர் கேட்டார்.முறுக்கு என்றுச் சொல்லும் போது நாடி நரம்புகள் எல்லாம் முறுக்கேறி வெள்ளையர்களை அடித்து நொறுக்க வேண்டும் என்ற உணர்ச்சி பெருக்கேற்படுகின்றது.அதனால் நான் முறுக்கை வீரப்பலகாரம் என்றே அழைக்கின்றேன்.இப்போதும் முறுக்கேறி இலஞ்சம், ஊழல் செய்பவரை அடக்க முறுக்கு மீசை துடிக்கின்றது .சரி ! நேரம் ஆகிவிட்டது இற்றொரு நாள் வருகின்றென்.

❖❀❖

## விடுகதைகள்

10. அரிசி போல் பூ பூக்கும் .அம்மாடி எனச் சொல்லும் காய்காய்க்கும். அது என்ன?
11. கீழே வரும் ஆனால் மேலே போகாது. அது என்ன?
12. அடிப்பாதை இருக்கும் கால் இருக்காது. அது என்ன?
13. கைகள் இருக்கும் . ஆனால் தட்ட முடியாது. அது என்ன?
14. கண் உண்டு ஆனால் பார்க்க முடியாது? அது என்ன?
15. அடி மேல் அடிவாங்கி, அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?

விடை பக்கம் : 204

❖❀❖

தமிழ் 7

இயல் 3 கற்கண்டு

# வழக்கு, போலி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### பொருத்துக.

| வினா | விடை |
|---|---|
| 1.பந்தர் - முதற்போலி | 1.பந்தர் - கடைப்போலி |
| 2.மைஞ்சு - முற்றுப்போலி | 2.மைஞ்சு - முதற்போலி |
| 3.அஞ்சு - இடைப்போலி | 3.அஞ்சு - முற்றுப்போலி |
| 4.அரையர் - கடைப்போலி | 4.அரையர் - இடைப்போலி |

### குறு வினா

1. **வழக்கு என்றால் என்ன?**

முன்னோர்கள் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

2. **தகுதி வழக்கு வகைகள் யாவை?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

★ இடக்கரடக்கல் ★மங்கலம் ★குழூஉக்குறி

3. **வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது. இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.**

இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல் : நஞ்சு, சரியான சொல் : நைந்து.

வாழைப்பழம் மிகவும் **நஞ்சு** விட்டது.

வாழைப்பழம் மிகவும் **நைந்து** விட்டது.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. **வழக்கு __________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து [விடை : அ]

2. **இயல்பு வழக்கு __________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து [விடை : ஆ]

பருவம் 1
7

3. **தகுதி வழக்கு __________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து **[விடை : ஆ]**

4. **முன்பின் தொக்கப் போலி எனக்குறிப்பிடப்படுவது**

அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி

இ) மரூஉ ஈ) முதற்போலி **[விடை : ஆ]**

5. **புறநகர், கால்வாய், தசை, கடைக்கண் ஆகிய சான்றுகள் __________க்குச் சான்றாகும்.**

அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி

இ) மரூஉ ஈ) முதற்போலி **[விடை : ஆ]**

6. **இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் __________**

அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி

இ) மரூஉ ஈ) முதற்போலி **[விடை : இ]**

7. **தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது**

அ) இயல்பு வழக்கு ஆ) தகுதி வழக்கு

இ) மரூஉ ஈ) இலக்கணப்போலி **[விடை : ஆ]**

8. **ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சொற்கள்**

அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்

இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி **[விடை : அ]**

9. **பொன்னைப் பறி என்பர் - இது எவ்வகைத் தகுதி வழக்கிற்குச் சான்று?**

அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்

இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி **[விடை : அ]**

10. **கால் கழுவி வந்தான், குழந்தை வெளியே போய்விட்டது - இவை எவ்வகைத் தகுதி வழக்கிற்குச் சான்றுகள்?**

அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்

இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி **[விடை : இ]**

12. **சுடுகாட்டை நன்காடு என்பது**

அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்

இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி **[விடை : ஆ]**

13. **போலி __________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து **[விடை : ஆ]**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**14. இடக்கரடக்கல் அல்லாதது__________**

அ) கால் கழுவி வந்தான் ஆ) குழந்தை வெளியே போய்விட்டது

இ) ஒன்றுக்குப் போய் வந்தேன் ஈ) சுடுகாட்டை நன்காடு **[விடை : ஈ]**

**15. பொருத்துக.**

1. ஒன்றுக்குப் போய் வந்தேன் - அ) மங்கலம்
2. கறுப்பு ஆடு என்பதை வெள்ளாடு என்பது - ஆ) இடக்கரடக்கல்
3. பொன்னைப் பறி என்பது - இ) மரூஉ
4. தஞ்சாவூரைத் தங்சை என்பது - ஈ) குழூஉக்குறி

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ

இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ **[விடை : அ]**

**16. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) கால்வாய் - இலக்கணப்போலி

ஆ) மைஞ்சு - முதற்போலி

இ) இலஞ்சி - இடைப்போலி

ஈ) முகன் - முற்றுப்போலி **[விடை : ஈ]**

**17. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) குழந்தை வெளியே போய்விட்டது - இடக்கரடக்கல்

ஆ) செத்தாரைத் துஞ்சினார் எனல் -மங்கலம்

இ) ஆடையைக் காரை எனல் -மரூஉ

ஈ) தசை - இலக்கணப்போலி **[விடை : இ]**

## குறுவினா

**1. வழக்கு எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

வழக்கு இரண்டு வகைப்படும். அவையாவன:

★ இயல்பு வழக்கு ★ தகுதி வழக்கு

**2. இயல்பு வழக்கு என்றால் என்ன?**

ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களால் குறிப்பிடுவது இயல்பு வழக்கு ஆகும்.

**3. இயல்பு வழக்கு எத்தனை வகைப்படும்?அவை யாவை?**

இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். அவையாவன :

★ இலக்கணமுடையது ★ இலக்கணப்போலி ★ மரூஉ

**4. இலக்கணப்போலி என்றால் என்ன?**

இலக்கண முறைப்படி அமையாவிட்டாலும் ,இலக்கணமுடையதைப் போல ஏற்றுக்கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.

**5. இலக்கணப்போலிக்குச் சான்றுகள் தருக.**

★புறநகர் ★கால்வாய் ★தசை ★கடைக்கண்

**6. தஞ்சை , நெல்லை ஆகிய சொற்கள் எவ்வகை வழக்குச் சொற்கள் என்பதைக் குறிப்பிட்டு விளக்குக.**

தஞ்சை, நெல்லை ஆகிய சொற்கள் இயல்பு வழக்குச் சொற்களில் மரூஉச் சொல்லாகும்.

இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும். தஞ்சாவூரைத் 'தஞ்சை' என்றும், திருநெல்வேலியை 'நெல்லை' என்பதும் மரூஉச் சொற்களாகும்.

**7. தகுதி வழக்கு என்றால் என்ன?**

ஏதேனும் ஒரு காரணத்தினால் பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது தகுதி வழக்கு ஆகும்.

**8. தகுதி வழக்கு எத்தனை வகைப்படும் ? அவையாவை?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவையாவன :

★ இடக்கரடக்கல் ★ மங்கலம் ★ குழூஉக் குறி

**9. இடக்கரடக்கல் என்றால் என்ன? சான்று தருக.**

பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத்தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொல்லால் குறிப்பிடுவது இடக்கரடக்கல் ஆகும்.

**சான்று :** கால் கழுவி வந்தான்.

குழந்தை வெளியே போய்விட்டது.

**10. மங்கலம் என்றால் என்ன? சான்று தருக.**

மங்கலம் இல்லாத சொற்களை மங்கலமான வேறு சொல்லால் குறிப்பிடுவது மங்கலம் ஆகும்.

**சான்று :** ஓலை - திருமுகம்

கறுப்பு ஆடு - வெள்ளாடு

சுடுகாடு - நன்காடு

**11. குழூஉக்குறி என்றால் என்ன? சான்று தருக.**

ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சாற்கள் குழூஉக்குறி எனப்படும்.

**சான்று :** பொன்னைப் பறி என்பர் (பொற்கொல்லர் பயன்படுத்துவது)

ஆடையைக் காரை என்பர் (யானைப்பாகர் பயன்படுத்தவது)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**12. போலி என்றால் என்ன?**

ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவது போலி எனப்படும்.

**13. போலி எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

போலி மூன்று வகைப்படும். அவையாவன :

★ முதற்போலி ★ இடைப்போலி ★ கடைப்போலி

**14. முதற்போலி என்றால் என்ன? சான்று தருக.**

சொல்லின் முதலில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவதுமுதற்போலி எனப்படும்.

**சான்று** : பசல் – பைசல் , மஞ்சு – மைஞ்சு, மயல் – மையல்

**15. இடைப்போலி என்றால் என்ன? சான்று தருக.**

சொல்லின் இடையில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவது இடைப்போலி எனப்படும்.

**சான்று** : அமச்சு –அமைச்சு, இலஞ்சி – இலைஞ்சி, அரசர் – அரைசர்

**16. கடைப்போலி (இறுதிப்போலி) என்றால் என்ன? சான்று தருக.**

சொல்லின் இறுதியில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவது கடைப்போலி(இறுதிப்போலி) எனப்படும்.

**சான்று** : அகம் – அகன், முகம் – முகன், பந்தல் – பந்தர்

**17. முற்றுப்போலி என்றால் என்ன? சான்று தருக.**

ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி ஆகும்.

**சான்று** : ஐந்து – அஞ்சு



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

1. மூவகைப் போலிகளிலும் எந்தெந்த எழுத்துகள் எந்தெந்த எழுத்துகளாக மாறுகின்றன என்பதை அறிந்து எழுதுக.

| போலி வகை | சான்று | சரியான எழுத்து | போலியான எழுத்து |
|---|---|---|---|
| முதற்போலி | பசல் - **பைசல்** | ப | பை |
| | மஞ்சு - **மைஞ்சு** | ம | மை |
| | மயல் - **மையல்** | ம | மை |
| இடைப்போலி | அமச்சு - **அமைச்சு** | ம | மை |
| | இலஞ்சி - **இலைஞ்சி** | ல | லை |
| | அரயர் - **அரையர்** | ர | ரை |
| கடைப்போலி | அகம் - **அகன்** | ம் | ன் |
| | நிலம் - **நிலன்** | ம் | ன் |
| | பந்தல் - **பந்தர்** | ல் | ர் |

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடங்கள் பேசுக.**

1. **தேசியம் காத்த செம்மல் : முத்துராமலிங்கத்தேவர்**

வணக்கம். தேசியம் காத்த செம்மல்முத்துராமலிங்கத்தேவர் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன்.கேளுங்கள். முத்துராமலிங்கத்தேவர், ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சி ஏற்படும் வகையில் வீர உரையாற்றினார். அவரது பேச்சைக் கேட்டு மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர். இதனால் ,அவரைப் பலமுறை ஆங்கில அரசு கைது செய்தது.மேலும், வாய்பூட்டுச் சட்டம் முலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடைவிதித்தது. முத்துராமலிங்கத்தேவர் தமிழ் , ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார். சிலம்பம் , குதிரை ஏற்றம் , துப்பாக்கிச் சுடுதல், சோதிடம் , மருத்துவம் ஆகிய பலதுறை ஆற்றல் உடையவராக விளங்கினார்.நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்,அவரைத் தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று 06.9.1939ல் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர். விடுதலைக்குப் பின்னர் நேதாஜி என்ற பெயரில் வார இதழ் நடத்தினார்1938 காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார்.மதுரையில் இருந்த நூற்பாலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு மாதம் சிறைத் தண்டனை பெற்றார். உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை

நடத்தினார்.பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார். தேசியம் காத்த செம்மல் : முத்துராமலிங்கத்தேவர் போல உழைப்போம். உயர்வோம். நன்றி.

**2. கப்பலோட்டிய தமிழர் : வ.உ.சிதம்பரனார்.**

வணக்கம். கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார். பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன்.கேளுங்கள்.கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்றெல்லாம் போற்றப்படுபவர் வ.உ.சிதம்பரனார் ஆவார்.ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசி கப்பல் இயக்கிய பெருமைக்குரியவர் வ.உ.சிதம்பரனார். தூத்துக்குடியில் கொற்கை துறைமுகத்தில் முத்து வாணிகத்தில் நம்மவர் சிறந்திருந்தனர்.கப்பல் வணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். ஆனால் ஆங்கிலேயர் ஆதிக்கத்துப் பின்னர், கப்பல்களில் ஆங்கிலக் கொடி பறந்தது. நம்மவர் கூலிகளாக அக்கப்பலில் வேலை செய்தனர்.இந்நிலையை மாற்ற பாண்டித்துரையாரைத் தலைவராகக் கொண்டு சுதேசக் கப்பல் நிறுவனத்தை வ.உ.சிதம்பரனார் உருவாக்கினார்.இக்கப்பல் முதன் முதலில் கொழும்பு நோக்கிச் சென்றது. சுதேசக் கப்பல் வணிகம் வளரத் தொடங்கியது. ஆங்கிலக் கப்பல் வணிகம் வீழத்தொடங்கியது. அதனால் ஆங்கிலேயர்கள் வ.உ.சிதம்பரனாரையும் அவரத நண்பர்களையும் பயமுறுத்தினர். அதற்கெல்லாம் கவலைப்படாமல் 'வந்தே மாதரம்' என்ற முழக்கத்தை எழுப்பினார்.இதனைக் கேட்ட மக்கள் விடுதலைக்கு ஆதரவாக ஊக்கம் அடைந்தனர்.ஆங்கில அரசு வ.உ.சிதம்பரனாரைச் சிறையில் அடைத்தது. வ.உ.சிதம்பரனார் கோவைச்சிறை, கண்ணூர்ச் சிறை ஆகியவற்றில் கொடும்பணி செய்தார்.அவர் உடல் சலித்தது, உள்ளம் தளரவில்லை. சிறையதிகாரி வ.உ.சிதம்பரனாரிடம் அறிவுரை கூற 'உனக்கும் உன் கவர்னருக்கும் மன்னனுக்கும் புத்தி சொல்வேன் என்றார்.சிறையில் செக்கிழுத்தார்.சிறையில் கைத்தோல் உரிய கடும்பணி செய்தார்.செந்தமிழும் கன்னித் தமிழும் கண்ணீரைப் போக்கியது.அவரைப்போல நாட்டுக்காக உழைப்போம் என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.நன்றி.

**அறிந்து பயன்படுத்துவோம்**

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய் ஆகும். | ஒரு தொடரில் வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று கொண்டு முடித்து வைப்பது பயனிலை ஆகும். | யாரை ? எதை? எவற்றை? என்ற வினாக்களுக்கு விடையாக அமைவது செயப்படு பொருள் ஆகும். |
| **சான்று:**<br>நீலன் பாடத்தைப் படித்தான்.<br>பாரி யார்?<br>புலி ஒரு விலங்கு | **சான்று:**<br>கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.<br>கரிகாலன் யார்?<br>கரிகாலன் ஒரு மன்னன். | **சான்று:**<br>நான் கவிதையைப் படித்தேன்.<br>என் புத்தகத்தை எடுத்தது யார்?<br>நெல்லின் கனியைத் தந்தவர் அதியமான். |

பருவம் 1 7

**பின்வரும் தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க.**

1. வீரர்கள் நாட்டைக் காத்தனர்.
2. பொதுமக்கள் அந்நியத் துணிகளைத் தீயிட்டு எரித்தனர்.
3. கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீனக் கொடி பறந்தது.
4. திருக்குறளை எழுதியவர் யார்?
5. கபிலர் குறிஞ்சிப்பாட்டை எழுதிய புலவர்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| வீரர்கள் | காத்தனர் | நாட்டைக் |
| பொதுமக்கள் | தீயிட்டு எரித்தனர் | அந்நியத் துணிகளைத் |
| பாண்டியனுடைய | மீனக்கொடி பறந்தது | கொற்கைத் துறைமுகத்திலே |
| திருக்குறளை | யார்? | எழுதியவர் |
| கபிலர் | குறிஞ்சிப்பாட்டை | எழுதிய புலவர் |

**எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும்படி ஐந்து தொடர்களை எழுதுக.**

1. கண்ணன் பாடம் படித்தான்.
2. மேரி ஓவியம் வரைந்தாள்.
3. நான் கவிதை எழுதினேன்.
4. விதை விருட்சமாக வளர்ந்தது.
5. ஆசிரியர் செய்யுளைக் கற்பித்தார்.

**கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**நான் விரும்பும் தலைவர் - பெரியார்**

**முன்னுரை :**

ஏன், எப்படி, எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பி? அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும். அதன் தந்தை பெரியார். வெண்தாடி வேந்தர்? பகுத்தறிவு பகலவன்? வைக்கம் வீரர்? ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட பெரியாரை நான் விரும்பும் தலைவர் ஆவார்.

**இளமை :**

ஈரோடு நகரில் 1879ல் பெரியார் பிறந்தார். தொடக்கக் கல்வியுடன் தம் படிப்பை நிறுத்திக் கொண்டு தம் தந்தையின் வணிகத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

**வைக்கம் வீரர் :**

கேரளத்தில் வைக்கம் என்னும் ஊரில் தலை விரித்தாடிய தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். அதனால் வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சுயமரியாதை இயக்கம் :**

பெரியார் காங்கிரசிலிருந்து விலகி 1925ல் சுயமரியாதை இயக்கம் தொடங்கினார். இந்த இயக்கத்தின் வாயிலாக சாதி ஏற்றத்தாழ்வு போக்குதல்? தீண்டாமை ஒழித்தல்? மூடநம்பிக்கை ஒழித்தல்? பெண்ணுரிமை நிலைநாட்டுதல் ஆகும்.

**பெரியார் சீரமைத்த எழுத்துகள் :**

'ஐ' என்பதை 'அய்' எனவும்? 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

**பெண்ணுரிமை போற்றியவர் :**

பெண்ணுரிமை, பெண் கல்வி, சொத்துரிமை, அரசுப்பணி, மறுமணம் ஆகியவற்றிற்காகப் பெரியார் போராடினார். பெண்கள் மாநாடுகள் பல நடத்தி பெண்களை விழிப்படையச் செய்தார். 13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வே.ராவுக்குப் பெரியார் பட்டம் கொடுக்கப்பட்டது.

**கவரக் காரணம் :**

- ✍ சிக்கனம் மற்றும் எளிமையான வாழ்கை.
- ✍ சுயமரியாதை போற்றல்.
- ✍ பெண்ணுரிமை பேசுதல்.
- ✍ சாதி, மத ஏற்றத்தாழ்வுகளைக் களைதல்.
- ✍ கல்வியில் புரட்சி

- ஆகிய காரணங்களால் பெரியாரை விரும்புகின்றேன்.

**முடிவுரை :**

தொண்டு செய்து பழுத்த பழமான பெரியாரைப் போற்றுவோம். அவரின் வழி நடப்போம்.

**மொழியோடு விளையாடு**

**இடைச்சொல் 'கு' சேர்த்து எழுதுக.**

(எ.கா.) : வீடு சென்றான் - வீடு+கு+சென்றான். - வீட்டுக்குச் சென்றான்.

1. மாடு புல் கொடுத்தார் - மாடு+கு+புல் கொடுத்தார். - மாட்டுக்குப் புல் கொடுத்தார்.
2. பாட்டு பொருள் எழுது - பாட்டு+கு+பொருள் எழுது. - பாட்டுக்குப் பொருள் எழுது.
3. செடி பாய்ந்த நீர் - செடி+கு+பாய்ந்த நீர் - செடிக்குப் பாய்ந்த நீர்
4. முல்லை தேர் தந்தான் பாரி - முல்லை+கு+தேர் தந்தான் பாரி. - முல்லைக்குத் தேர் தந்தான் பாரி.
5. சுவர் சாந்து பூசினாள். -சுவர்+கு+சாந்து பூசினாள். -சுவருக்குச் சாந்து பூசினாள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| கண் | அழகு உண்டு | கண்ணழகு | கண்ணுண்டு |
| மண் | | மண்ணழகு | மண்ணுண்டு |
| விண் | | விண்ணழகு | விண்ணுண்டு |
| பண் | | பண்ணழகு | பண்ணுண்டு |

**அகம் என முடியும் சொற்களை எழுதுக.**

1. நூலகம் 2. குறளகம் 3. நகலகம்
4. அச்சகம் 5. துறைமுகம் 6. தமிழகம்

**கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.**

1. திருக்குறள் ௩ பால்களைக் கொண்டது.
2. எனது வயது **கக**
3. நான் படிக்கும் வகுப்பு **எ**
4. தமிழ் இலக்கணம் **ரு** வகைப்படும்.
5. திருக்குறளில் **கஙரு** அதிகாரங்கள் உள்ளன.
6. இந்தியா **கசுசஎ** ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

**குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ப் | பூ | ர் | கு | ம | ர | ன் |
| ரு | தா | கா | ன் | க | க் | க | நா | லை |
| வ | ந் | ம | யா | ர் | டு | ட் | க | ம |
| ள் | ஜி | ரா | ஜா | யா | ர் | ட | ம் | ன |
| ளி | ஜா | ச | ர | தி | யா | பொ | மை | ன் |
| ய | ரா | ர் | னா | ர | ப | ம் | த | சி |
| ம் | இ | டி | ண் | பா | ர | ம | மி | ற |
| மை | வா | ஞ் | சி | நா | த | ன் | ழி | ப் |
| ர் | யா | சி | ச் | நா | லு | வே | ல் | பு |

1. மூதறிஞர் - இராஜாஜி
2. வீரமங்கை - வேலுநாச்சியார்
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன் - கட்டபொம்மன்
4. வெள்ளையரை எதிர்த்தவன் - சின்னமலை



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. கொடிகாத்தவர் - திருப்பூர் குமரன்
6. எளிமையின் இலக்கணம் - கக்கன்
7. தில்லையடியின் பெருமை - வள்ளியம்மை
8. கப்பலோட்டிய தமிழர் - சிதம்பரனார்
9. பாட்டுக்கொரு புலவன் - பாரதியார்
10. விருதுப்பட்டி வீரர் - காமராசர்
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி - நாகம்மை
12. மணியாட்சியின் தியாகி - வாஞ்சி நாதன்

## கலைச்சொல் அறிவோம்

1. கதைப்பாடல் - Ballad
2. துணிவு - courage
3. தியாகம் - sacrifice
4. அரசியல் மேதை - Political Genius
5. பேச்சாற்றல் - Elocution
6. ஒற்றுமை - Unity
7. முழக்கம் - Slogan
8. சமத்துவம் - Equality

❖❀❖

## விடுகதைகள்

16. அச்சு இல்லாத சக்கரம் , அழகு காட்டும் சக்கரம். அது என்ன?

17. ஒற்றைக் கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?

18. அடித்ததல் விலகாது , அணைத்தால் நிற்காது. அது என்ன?

19. வந்தும் கெடுக்கும் , வராமலும் கெடுக்கும். அது என்ன?

20. பூமியிலே பிறக்கும் புகையாய் போகும். அது என்ன?

விடை பக்கம் : 204

❖❀❖

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மாதிரி வினாத்தாள்

### ஏழாம் வகுப்பு - தமிழ்

### இயல் - மூன்று

காலம் : 30 நிமிடம் மதிப்பெண் :20

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 4 x 1 = 4**

1. 'யாண்டு' என்ற சொல்லின் பொருள் --------

அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

2. பொருத்துக.

1. வாரணம் - அ) பாக்கு
2. பரி - ஆ) அழகு
3. சிங்காரம் -இ) குதிரை
4. கமுகு - ஈ) யானை

அ) 1-ஈ 2-இ 3-ஆ 4- அ ஆ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ

இ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ ஈ) 1-அ 2- ஈ 3-ஆ 4-இ

3. பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடியவா --------

அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி

இ) திரு.வி.க. ஈ) காந்திஜி

4. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) கால்வாய் - இலக்கணப்போலி

ஆ) மைஞ்சு - முதற்போலி

இ) இலஞ்சி -இடைப்போலி

ஈ) முகன் - முற்றுப்போலி

**II. குறுவிடை தருக. 3 x 2 = 6**

5. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

6. வீரபாண்டியகட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அஃறிணை உயிர்கள் யாவை?

7. முத்துராமலிங்கர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

**III. சிறு விடை தருக. 3 x 2 = 6**

8. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

9. முத்துராமலிங்கத் தேவருக்கு அரசு செய்த சிறப்புகள் யாவை?

**IV. விரிவான விடையளிக்க. 1 x 4 = 4**

10. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

❖❀❖

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மாதிரி வினாத்தாள் - தொகுத்தறி மதிப்பீடு
### ஏழாம் வகுப்பு - தமிழ்
### பருவம் - 1

காலம் : 2.00 மணி மதிப்பெண் : 60

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 14 x 1 = 14**

**அ. பொருள் எழுதுக.**

1. விரதம் 2. கமுகு

**ஆ) பிரித்து எழுதுக.**

3. பூட்டுங்கதவுகள் 4. யாண்டுளனோ

**இ) சேர்த்து எழுதுக**

5. கல் + அளை 6. வாசல் + அலங்காரம்

**ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

7. கரடிகளைத் தேனியிடமிருந்து காப்பாற்றுவது அதன் --------
8. மொழிக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ---------
9. யாண்டு என்னும் சொல்லின் பொருள் --------
10. சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ---------
11. பாஞ்சாலங்குறிச்சியில் நாயை விரட்டியது --------

**உ) பொருத்துக**

| | |
|---|---|
| 12. பொக்கிஷம் | - அழகு |
| 13. விஸ்தாரம் | -செல்வம் |
| 14. சிங்காரம் | - பெரும்பரப்பு |
| | - மிகுதி |

**II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளிக்க. 6 x 2 = 12**

15. காந்தியக் கவிஞர் என்றழைக்கப்படக் கூடியவர் யார்? ஏன்?
16. காட்டின் பயன்களாக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
17. வாழும் நெறி யாது?
18. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகின்றாள்?
19. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தயைது?
20. பேச்சுமொழி என்றால் என்ன?
21. இரட்டை வழக்கு மொழி என்று எதனைக் கூறுவர்?
22. கரடி அனைத்துண்ணி என அழைக்கப்படுவது ஏன்?
23. பாரத மாதா கூட்டுறவு பண்டகசாலையை நிறுவியவர் யார்?
24. முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறுவன யாவை?



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**III. அடிபிறழாமல் எழுதுக. 3 + 2 = 5**

25. “பச்சை...” எனத் தொடங்கி , ...கூவுமடி” என்பது வரையுள்ள சுரதாவின் கவிதைப்பாடல்.
26. வாய்மை எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

**IV. எவையேனும் மூன்றனுக்குச் சுருக்கமாக விடையளிக்க. 3 x 2 = 6**

27. முதலெழுத்துகள் யாவை?
28. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?
29. குற்றியலிகரம் என்றால் என்ன?
30. ஔகாரக்குறுக்கம் என்றால் என்ன?
31. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

**V. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளில் விடையளிக்க. 2 x 5 = 10**

32. அ) நாவல் மர நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) பாஞ்சாலங்குறிச்சியில் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.

33. அ) காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

**V. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க. (இரண்டு மட்டும்) 2 x 5 = 10**

34. நீவிர் கண்டு களித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
35. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.
36. நான் விரும்பும் தலைவர் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

**VI. வட்டத்திலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக. 1 x 3 = 3**




❖❁❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7

# தமிழ்

## இரண்டாம் பருவம்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கவிதைப் பேழை

# கலங்கரை விளக்கம்

**மனப்பாடப் பாடல்**

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை....

**நூல் : பெரும்பாணாற்றுப்படை**
**ஆசிரியர் : கடியலூர் உருத்திரங்கண்ணனார்**

**கடியலூர் உருத்திரங்கண்ணனார்:**

- சங்ககாலப் புலவர்
- கடியலூரில் வாழ்ந்தவர்.
- பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை மற்றும் பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

தமிழ் 7

## சொல்லும் பொருளும்

1. மதலை - தூண் 2. நெகிழி - தீச்சுடர் 3. அழுவம் -கடல்
4. சென்னி - உச்சி 5. உரவுநீர் - பெரு நீர்ப்பரப்பு 6. கரையும் - அழைக்கும்
7. வேயா மாடம் - வைக்கோல்போன்றவற்றால்வேயப்படாது,திண்மையாக(வலிமையாக) சாந்து பூசப்பட்ட மாடம்.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வேயா மாடம் எனப்படுவது ________.**
   அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
   இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது [விடை : ஆ]

2. **உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்**
   அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை [விடை : இ]

3. **கடலில் துறை அறியாமல் கலங்குவன ________.**

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மாடங்கள் [**விடை : ஆ**]

4. **தூண் என்னும் பொருள் தரும் சொல் ________.**

அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை [**விடை : ஈ**]

## குறு வினா

1. **மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?**

மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது : கலங்கரை விளக்கின் ஒளி.

2. **கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?**

கலங்கரை விளக்கில் இரவுநேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

## சிறு வினா

1. **கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகள் யாவை?**

- கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழாமல் தாங்கிக்கொண்டு இருக்கும் தூண் போலத் தோற்றம் அளிக்கின்றது.
- அது ஏணி கொண்டு ஏறமுடியாத அளவுக்கு உயரத்தைக் கொண்டு இருக்கின்றது.
- வைக்கோல் ஆகியவற்றால் வேயப்படாமல் வலிமையான சாந்து (சுண்ணாம்பு) பூசப்பட்ட வானத்தை முட்டும் மாடத்தை உடையது.
- அம் மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறை (எல்லை) அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறை (எல்லை) நோக்கி அழைக்கின்றது.

## சிந்தனை வினா

1. **கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

- கடல் ஆய்வு செய்பவர்கள்
- மீனவர்கள்
- கப்பற் படை வீரர்கள்
- கடலில் மூழ்கி முத்தெடுப்பவர்கள்

பருவம் 2 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com


## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெரும்பாணாற்றுப்படை மற்றும் பட்டினப்பாலை ஆகிய நூல்களின் ஆசிரியர்
அ) கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆ) தொண்டைமான் இளந்திரையன்
இ) முடதாமக்கண்ணியார் ஈ) நக்கீரர் [விடை : அ]

2. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன்
அ) கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆ) தொண்டைமான் இளந்திரையன்
இ) முடதாமக்கண்ணியார் ஈ) நக்கீரர் [விடை : ஆ]

3. உருத்திரங்கண்ணனார் வாழ்ந்த ஊர்
அ) கடியலூர் ஆ) மதுரை
இ) புகார் ஈ) கலங்கரைவிளக்கம் [விடை : அ]

4. கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைப்பது
அ) கடற்கரை ஆ) கப்பல்
இ) கலங்கரை விளக்கம் ஈ) மாடம் [விடை : இ]

5. கடலில் துறை அறியாமல் கலங்குவது
அ) கடற்கரை ஆ) மரக்கலங்கள்
இ) கலங்கரைவிளக்கம் ஈ) மாடம் [விடை : ஆ]

6. கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பம்
அ) கடற்கரை ஆ) கப்பல்
இ) கலங்கரைவிளக்கம் ஈ) மாடம் [விடை : இ]

7. வானம் ஊன்றிய மதலை போன்றது
அ) கடற்கரை ஆ) கப்பல்
இ) கலங்கரைவிளக்கம் ஈ) மாடம் [விடை : இ]

தமிழ் 7

**குறு வினா**

1. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பற்றி நீவிர் அறிவன யாவை?
- சங்ககாலப் புலவர்
- கடியலூரில் வாழ்ந்தவர்.
- பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை மற்றும் பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **பெரும்பாணாற்றுப்படை பற்றி நீவிர் அறிவன் யாவை?**

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று : பெரும்பாணாற்றுப்படை
- இயற்றியவர் : கடியலூர் உருத்திரங்கண்ணனார்.
- இந்நூல் ஆற்றுப்படை இலக்கியம் சார்ந்தது.
- பாட்டுடைத்தலைவன் : தொண்டைமான் இளந்திரையன்

3. **ஆற்றுப்படை இலக்கியம் என்றால் என்ன?**

வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்று திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுசது ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.

4. **'வேயா மாடம்' தொடர் பொருள் கூறுக.**

**வேயா மாடம்** : வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது, திண்மையாக (வலிமையாக) சாந்து பூசப்பட்ட மாடம்.

5. **ஞெகிழி , அழுவம் ஆகிய சொற்களின் பொருள் யாது?**

ஞெகிழி - தீச்சுடர், அழுவம் - கடல்

**சிறு வினா**

1. **பத்துப்பாட்டு நூல்கள் யாவை?**

- திருமுருகாற்றுப்படை
- மதுரைக்காஞ்சி
- பொருநராற்றுப்படை
- நெடுநல்வாடை
- பெரும்பாணாற்றுப்படை
- குறிஞ்சிப்பாட்டு
- சிறுபாணாற்றுப்படை
- பட்டினப்பாலை
- முல்லைப்பாட்டு
- மலைபடுகடாம்

**கற்பவை கற்றபின்**

**1.கடற்கரைக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்க.**

**கடற்கரை காட்சிகள் (மெரினா)**

- உலகிலேய இரண்டாவது பெரிய கடற்கரை மெரினாக் கடற்கரை.
- சென்னைத் துறைமுகத்தை உள்நாட்டு, வெளிநாட்டுக் கப்பல்கள் அணிவகுத்து வருகின்றன.
- அவை நங்கூரம் பாய்ச்சி நிற்கும் அழகு அருமை.
- மீன் பிடிக்கச் சென்று மீண்டு வரும் மீனவர்கள் படகுகள் கம்பீரமாய் காட்சியளிக்கின்றன.
- காலை நோக்கி வரும் கடல் அலைகள் பிடிக்கமுடியாத மாயமான்கள்.
- கடலைக் கண்டு மகிழ மக்கள் கூட்டம் ஏராளம்.
- சங்குகளும், சிப்பிகளும் கடற்கரையில் கொட்டிக்கிடக்கின்றது.

பருவம் 2 7

2. 'கலங்கரை விளக்கம்' – மாதிரி ஒன்று செய்து வருக.

மாணவர் செயல்பாடு

3. கடலும், கலங்கரை விளக்கமும் – ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுக.



❖❀❖

## விடுகதைகள்

21. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும், ஒரு தூசி கிளம்பாது. அது என்ன?

22. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?

23. வேகாத வெய்யிலில் வெள்ளையப்பன் விளைகின்றான். அது என்ன?

24. அனைவரையும் நடுங்க வைப்பான் , ஆதவனுக்கே அடங்குவான். அது என்ன?

25. ஒற்றைக் கால் குள்ளனுக்கு எட்டு கை. அது என்ன?

விடை பக்கம் : 204

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கவிதைப் பேழை

# கவின்மிகு கப்பல்

**மருதன் இளநாகனார்**

- சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
- கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள 35 பாடல்களைப்பாடியவர்.
- மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| உரு | - அழகு | போழ | - பிளக்க |
| வங்கூழ் | - காற்று | நீகான் | - நாவாய் ஓட்டுபவன் |
| வங்கம் | - கப்பல் | எல் | - பகல் |
| கோடு உயர் | - கரை உயர்ந்த | மாட ஒள்ளெரி | - கலங்கரை விளக்கம் |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **இயற்கை வங்கூழ் ஆட்ட - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ________**

அ) நிலம் ஆ) நீர் இ) காற்று ஈ) நெருப்பு [**விடை : இ**]

2. **மக்கள் ________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.**

அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில் [**விடை : ஈ**]

3. **புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது**

அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல் [**விடை : இ**]

4. **'பெருங்கடல்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல்
இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல் [**விடை : ஆ**]

5. **இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது.**

அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி
இ) இன்றாகி ஈ) இன்றாஆகி [**விடை : இ**]

பருவம் 2 7

6. **எதுகை இடம்பெறாத இணை ____________**

அ) இரவு - இயற்கை ஆ) வங்கம்-சங்கம்

இ) உலகு -புலவு ஈ) அசைவு - இசைவு **[விடை : அ]**

## பொருத்துக.

**வினா :**

1. வங்கம் - பகல்
2. நீகான் - கப்பல்
3. எல் - கலங்கரை விளக்கம்
4. மாட ஒள்ளெரி - நாவாய் ஓட்டுபவன்

**விடை :**

**1. வங்கம் - கப்பல்**
**2. நீகான் - நாவாய் ஓட்டுபவன்**
**3. எல் - பகல்**
**4. மாட ஒள்ளெரி - கலங்கரை விளக்கம்**

## குறுவினா

1. **நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?**

நாவாயின் தோற்றம் உலகம் இடம்பெயர்ந்தது போன்று இருந்ததாக அகநானூறு கூறுகிறது.

2. **நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணைசெய்கிறது?**

இரவும் பகலும் ஓரிடத்தில் நிற்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தி நாவாய் ஓட்டிகளுக்குத் துணை செய்கின்றது..

## சிறுவினா

1. **கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?**

✍ உலகம் இடம்பெயர்ந்தது போன்று அழகிய தோற்றமுடையது நாவாய்.

✍ அது புலால் நாற்றம் உடைய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும்.

✍ இரவும் பகலும் ஓரிடத்தில் நிற்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தும்.

✍ உயர்ந்த தரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

- என்று கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு விளக்குகிறது.

தமிழ் 7

## சிந்தனை வினா

1. **தரைவழிப்பயணம் , கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?**

தரைவழிப்பயணம், கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நான் விரும்புவது : கடல்வழிப் பயணம்.

**காரணம் :** கடலின் அழகைக் கண்டு மகிழவும், கடல் வாழ் உயிரினங்களைப் பார்க்கவும், கடல் தீவுகளின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழவும் கடல்வழிப் பயணமே சிறந்தது. எனவே, நான் கடல்வழிப் பயணத்தை விரும்புகின்றேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல்..
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) பரிபாடல் ஈ) அகநானூறு [விடை : ஈ]

2. கலித்தொகையில் மருதத்திணைப் பாடல்களைப் பாடிய புலவர்
அ) மருதன் இளநாகனார் ஆ) கபிலர்
இ) பேயனார் ஈ) நல்லந்துவனார் [விடை : அ]

3. கவின் மிகு கப்பல் என்னும் தலைப்பில் அமைந்த பாடல் இடம் பெறும் நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) பரிபாடல் ஈ) அகநானூறு [விடை : ஈ]

4. 'எல்' என்ற சொல்லின் பொருள்
அ) அழகு ஆ) பகல் இ) பிளக்க ஈ) கரை [விடை : ஆ]

5. பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்வது...
அ) நாவாய் ஆ) கலங்கரை விளக்கம்
இ) காற்று ஈ) நீகான் [விடை : அ]

6. கலங்கரை விளக்கம் என்னும் பொருள் தரும் சொல்...
அ) மாட ஒள்ளெரி ஆ) நீகான்
இ) எல் ஈ) கோடு உயர் [விடை : அ]

**பொருத்துக.**

| வினா : | | விடை: | |
|---|---|---|---|
| 1. உரு | - பிளக்க | **1. உரு** | **- அழகு** |
| 2. போழ | - அழகு | **2. போழ** | **- பிளக்க** |
| 3. வங்கூழ் | - கரை உயர்ந்த | **3. வங்கூழ்** | **- காற்று** |
| 4. கோடு உயர் | - காற்று. | **4. கோடு உயர்** | **- கரை உயர்ந்த** |

**குறு வினா**

1. புலால் நாற்றமுடையது எது?
அலை வீசும் பெரிய கடல் நீர் புலால் நாற்றமுடையது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **உள்ளம் உவகையில் துள்ளும் எப்போது?**

அலைவீசும் கடலில் அசைந்தாடிச் செல்லும் கப்பலைக் காண உள்ளம் உவகையில் துள்ளும்.

3. **கப்பல் என்பதற்குப் பாடலில் இடம் பெறும் வேறு சொல் எது?**

கப்பல் என்பதற்குப் பாடலில் இடம் பெறும் வேறு சொல் : வங்கம்

4. **அகநானூறு குறிப்பு வரைக.**

✍ அகநானூறு எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.

✍ புலவர் பலரால் பாடப்பட்ட 400 பாடல்களைக் கொண்டது.

✍ நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல் இதுவே.

5. **மருதன் இளநாகனார் குறிப்பு வரைக.**

✍ சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.

✍ கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள 35 பாடல்களைப்பாடியவர்.

✍ மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.

### சிறு வினா:

1. **எட்டுத்தொகை நூல்கள் யாவை?**

| | | | |
|---|---|---|---|
| ❖ நற்றிணை | ❖ குறுந்தொகை | ❖ பரிபாடல் | ❖ அகநானூறு |
| ❖ ஐங்குறுநூறு | ❖ புறநானூறு | ❖ பதிற்றுப்பத்து | ❖ கலித்தொகை |

### கற்பவை கற்றபின்

1. **கடலில் கிடைக்கும் பொருட்களின் பெயர்களைத் தொகுக்க.**

முத்து, உலோகத் தாதுக்கள், எண்ணெய், இயற்கை வாயு, வளிம நீரேறிகள், பவளம், சுண்ணாம்பு கற்கள், சிப்பிகள், சங்குகள், உப்பு.

2. **கடற்பயணம் பற்றிய சிறுகதை ஒன்றனை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

**கடல் - எஸ்.கண்ணன்**

அவன் ஒரு இளைஞன். அவனது குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். கள்ளச்சாரயம் குடித்து அவன் அப்பா இறந்துவிட்டார். அம்மா மற்றும் திருமண வயதில் தங்கை அவனுக்கு. அவனுக்குக் கிடைத்த வேலையில் குடும்பத்தை நடத்தவே பணம் போதவில்லை. தங்கையின் திருமணத்தை எப்படி நடத்தப் போகிறோம் என்ற கவலையே அவனுக்குப் பெரிதாக இருந்தது.

மனதின் நிம்மதிக்காக அனைவரும் கடற்கரை நோக்கிச் செல்வர். அவனும் அப்படியும் சில நாட்கள் சென்றான். கை நிறைய எப்போது சம்பாதிப்பது? எப்போது தங்கைக்குத் திருமணம் செய்வது? இவை அவன் மனதை அழுத்திக் கொண்டே இருந்தது. ஒரு நாள்

தற்கொலை செய்யலாம் என்ற எண்ணத்துடன் கரையோரம் அமர்ந்து இருந்தான். அது இரவு நேரம் கடற்கரையில் யாருமில்லை.

கடல் நீர் அவன் வேதனை போல் உப்பாகவே இருந்தது. தூரத்தில் யாரோ கடலை நோக்கி ஒடுவது போல் இருந்தது. இவன் அவளைக் காப்பாற்றினான். அவளது அப்பா, அம்மா ஓடோடி வந்தனர். திருமணம் ஆன மூன்று மாதத்தில் கணவன் இறந்ததால் அவள் இத்தகைய முடிவுக்கு வந்ததை அறிந்தான்.

அந்தப் பெண்ணின் அப்பா, பெரிய கார் நிறுவனத்தின் முதலாளி. இவன் நிலையை அறிந்து, அவனுக்கு வேலையும் கொடுத்து, அவனது தங்கைக்கும் திருமணம் செய்து வைத்தார். அவனது நன்னடத்தையால் நிறுவனத்தின் எம்.டி. ஆக உயர்ந்தான். முதலாளி அவரது பெண்ணையும் திருமணம் செய்து வைக்கின்றார். மீண்டும் தனக்கு வாழ்வு தந்த கடற்கரைக்குச் செல்கின்றான். அலை ஆனந்தத்துடன் ஆர்ப்பரித்து, அவன் மீது விழுந்தது. இன்பத்தில் கடல் நீர் இனிமையானது.

❖❀❖

## விடுகதைகள்

26. எட்டாத இராணியாம், இரவில் வருவாள், பகலில் மறைவாள். அது என்ன?

27. மண்ணுக்குள் கிடப்பான். மங்களகரமானவன். அது என்ன?

28. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள். அது என்ன?

29. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை. அது என்ன?

30. மண்டையில் போட்டால் மகிழ்ந்து சிரிப்பான். அது என்ன?

31. நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?

விடை பக்கம் : 204

❖❀❖

பருவம் 2 7

இயல் 1 உரைநடை உலகம்

# தமிழரின் கப்பற்கலை

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தமிழரின் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ----------.**
அ) கலம் ஆ) வங்கம் இ) நாவாய் ஈ) ஓடம் **[விடை : ஈ]**

2. **தொல்காப்பியம் கடற்பயணத்தை ---------- வழக்கம் என்று கூறுகின்றது.**
அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர் **[விடை : இ]**

3. **கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி**
அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்டை ஈ) சமுக்கு **[விடை : அ]**

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் __________ என அழைக்கப்படும்.
**விடை : தொகுதி**

2. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது __________ **விடை : நங்கூரம்**

3. இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் __________ எனக்குறிக்கப்படும்.
**விடை : கண்ணடை**

### பொருத்துக.

| வினா : | | விடை: | |
|---|---|---|---|
| 1. எரா | - திசைகாட்டும் கருவி | **1. எரா** | **- அடிமரம்** |
| 2. பருமல் | - அடிமரம் | **2. பருமல்** | **- குறுக்கு மரம்** |
| 3. மீகாமன் | - குறுக்கு மரம் | **3. மீகாமன்** | **- கப்பலைச் செலுத்துபவர்** |
| 4. காந்த ஊசி | - கப்பலைச் செலுத்துபவர் | **4. காந்த ஊசி** | **- திசைகாட்டும் கருவி** |

### தொடர்களில் அமைத்து எழுது.

1. **நீரோட்டம்** - ஆழ்துளைக்கிணறு அமைக்கும் முன்னர் **நீரோட்டம்** பார்ப்பர்.
2. **காற்றின் திசை** - கப்பலைக் **காற்றின் திசை**க்கேற்ப செலுத்துவர்.
3. **வானியல் அறிவு** - தமிழர் **வானியல் அறிவில்** சிறந்து விளங்கினர்.
4. **ஏற்றுமதி** - பண்டைய காலத்தில் கடல்வணிகம் மூலம் **ஏற்றுமதி** நடைபெற்றது.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**குறு வினா**

**1. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.**

எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து தோண்டப்பட்டவை 'தோணி' எனப்பட்டன.

**2. கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ)பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?**

மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்றாக இணைக்க இடையே தேங்காய் நார் (அல்லது) பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இருக்கி ஆணிகளை அறைந்தனர்.

**3. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களை க் கூறுக.**

- ❖ எரா
- ❖ பருமல்
- ❖ வங்கு
- ❖ கூம்பு
- ❖ பாய்மரம்
- ❖ சுக்கான்
- ❖ நங்கூரம்

- போன்றவை கப்பல் உறுப்புகள் ஆகும்.

**சிறு வினா**

**1. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.**

**சிறிய நீர்நிலைகளைக் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்கள் :**

- ❖ தோணி
- ❖ ஓடம்
- ❖ படகு
- ❖ புணை
- ❖ மிதவை
- ❖ தெப்பம்

**கடல்களைக் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்கள்:**

- ❖ கலம்
- ❖ வங்கம்
- ❖ நாவாய்

**2. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றிக் கூறுக.**

- ✍ காற்றின் திசை அறிந்து கப்பல்கள் செலுத்தும் முறையைத் தமிழர் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.
- ✍ கடலில் காற்று வீசும் திசை, நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் நன்கு அறிந்து வைத்து, உரிய காலத்தில் உரிய திசையில் கப்பலைச் செலுத்தினர்.
- ✍ திசைகாட்டும் கருவி மற்றும் விண்மீன்களின் நிலையை வைத்து திசையை அறிந்து கப்பலைச் செலுத்தினர்.
- ✍ சிறந்த வானியல் அறிவை மாலுமிகள் பெற்றிருந்தனர்.
- ✍ கோள்களின் நிலையை வைத்துப் புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும் கடல் நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து சரியான காலத்தில் கப்பலைச் செலுத்தினர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**3. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?**

✍ கப்பல் தண்ணீரிலேயே இருப்பவை என்பதால் தண்ணீரால் பாதிப்பு ஏற்படாத மரங்களையே பயன்படுத்தினர்.

✍ நீர்மட்டவைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் மரங்களையும் பக்கங்களுக்குத் தேக்கு, வெண் தேக்கு மரங்களைப் பயன்படுத்தினர்.

✍ சுழி உடைய மரங்களைத் தவிர்த்தனர்.

✍ மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்றாக இணைக்க இடையே தேங்காய் நார் (அல்லது) பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இருக்கி ஆணிகளை அறைந்தனர்.

✍ சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் கப்பல் பழுதடையாமல் நீண்டகாலம் உழைத்தன.

✍ இரும்பு துருப்பிடிக்கும் என்பதால் மரஆணிகளைப் பயன்படுத்தினர்.

## சிந்தனை வினா

**1. இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.**

✍ கப்பலில் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தால் நீண்டநாட்கள் பயணம் செய்யவேண்டும். அதனால் கால விரையம் ஏற்படும்.

✍ அதிவிரைவுக்குக் கடற்பயணம் பயன்படுவதில்லை.

✍ கடல் உயிரினங்கள் மற்றும் புயல் போன்றவை அச்சத்தை ஏற்படுத்தும்.

✍ அதிகபொருட்செலவை ஏற்படுத்தும்.

- போன்ற காரணங்களால் இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளவில்லை.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டதைக் கூறும் நூல்**

அ) திருக்குறள் ஆ) பட்டினப்பாலை
இ) பதிற்றுப்பத்து ஈ) சேந்தன் திவாகரம் [விடை : ஆ]

**2. பலவகையான கப்பல்களின் பெயரைக்குறிப்பிடும் நூல்**

அ) திருக்குறள் ஆ) பட்டினப்பாலை
இ) பதிற்றுப்பத்து ஈ) சேந்தன் திவாகரம் [விடை : ஈ]

தமிழ் 7

**3. மரத்தினால் ஆன ஆணி**

அ) தச்சுமுழம் ஆ) தொகுதி இ) கண்ணடை ஈ) கம்மியர் [**விடை : ஆ**]

**4. பழந்தமிழர் --------- வழிகாட்டிகளாகப் பயன்படுத்தி கடல்பயணம் செய்திருக்கலாம்.**

அ) ஆமைகள் ஆ) குதிரைகள் இ) யானைகள் ஈ) மரங்கள் [**விடை : அ**]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் ________ நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

**விடை : கட்டும் கலையை**

2. கப்பல் கட்டும் கலைஞர்கள் ________ என்று அழைக்கப்பட்டனர்.

**விடை : கம்மியர்**

3. ________ என்பது இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ஆகும்.

**விடை : கண்ணடை**

4. மரத்தின் வெட்டப்பட்ட பகுதியை ________ என்பர். **விடை : வெட்டுவாய்**

5. இத்தாலி நாட்டு கடற்பயணி ________. **விடை : மார்க்கோபோலோ**

6. காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள்________ எனப்பட்டன.

**விடை : பாய்மரக்கப்பல்கள்**

## குறுவினா

**1. தமிழர்கள் கப்பல் கட்டும் தொழிலில் பரந்து பட்ட அறிவு பெற்றிருந்தனர் என்பதை விளக்கும் நூல்கள் எவை?**

❖ திருக்குறள் ❖ பட்டினப்பாலை ❖ அகநானூறு ❖ பதிற்றுப்பத்து
❖ சேந்தன் திவாகரம்

**2. தமிழர்கள் அயல்நாடுகளுக்குக் கப்பலில் சென்றனர் என்பதற்குச் சான்று ஒன்று தருக.**

நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று இடம்பெற்றுள்ளது.இதுவே, தமிழர்கள் அயல்நாடுகளுக்குக் கப்பலில் சென்றனர் என்பதற்குச் சான்று ஆகும்.

**3. பெரிய கப்பற்படை கொண்டு பலநாடுகள் வென்ற சோழர்கள் யாவர்?**

❖ இராசராச சோழன் ❖ இராசேந்திர சோழன்

**4. கரிமுக அம்பி , பரிமுக அம்பி என்றால் என்ன?**

**கரிமுக அம்பி :** பெரிய படகுகளில் முன்பக்கத்தில் யானையின் தலை போன்று வடிவமைப்பது.

**பரிமுக அம்பி :** பெரிய படகுகளில் முன்பக்கத்தில் குதிரையின் தலை போன்று வடிவமைப்பது.

**5. தமிழர்கள் பயன்படுத்திய பாய்மரங்கள் யாவை?**

❖ பெரிய பாய்மரம் ❖ திருக்கைத்திப் பாய்மரம்
❖ காணப்பாய் மரம் ❖ கோசுப்பாய்மரம்

**6. கப்பல் செலுத்துபவர்களுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

❖ மாலுமி ❖ மீகாமன் ❖ நீகான் ❖ கப்பலோட்டி

**சிறு வினா**

**1. பாய்மரங்களைக் கட்டும் கயிற்றின் வகைகள் யாவை?**

❖ ஆஞ்சான் கயிறு ❖ தாம்பாங்கயிறு ❖ வேடாங்கயிறு
❖ பளிங்கைக்கயிறு ❖ மூட்டாங்கயிறு ❖ இளங்கயிறு
❖ கோடிப்பாய்க்கயிறு

**2. கலங்கரை விளக்கம் - பொருள் விளக்கம் தருக.**

✍ கலம் என்றால் கப்பல்.

✍ கரைதல் என்றால் அழைத்தல்.

✍ கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளில் 'கலங்கரை விளக்கம்' எனப்பட்டது.

## கற்பவை கற்றபின்

(பக்கம் - 12)

**1. பல்வகையான கப்பல்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**






**2. தரைவழிப்பயணம், கடல்வழிப்பயணம், வான்வழிப்பயணம் ஆகியவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**ஆசிரியர் :**

மாணாக்கர்களே! தரைவழிப்பயணம் , கடல்வழிப்பயணம் , வான்வழிப்பயணம் ஆகியவை குறித்து இன்று கலந்துரையாடல் செய்யுங்கள்.

**யாழினி :**

இன்றைய நிலையில் தரைவழிப்பயணம் மட்டுமே சிறந்தது. ஏனென்றால், செல்ல வேண்டிய இடத்திற்கு ஊர்திகள் மூலம் விரைவாகச் செல்லலாம். எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் செல்லலாம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**அமுதன் :**

கடலின் அழகைக் கண்டு மகிழவும் , கடல் வாழ் உயிரினங்களைப் பார்க்கவும், கடல் தீவுகளின் இயற்கைக் காட்சிகளை கண்டு மகிழவும் கடல்வழிப் பயணமே சிறந்தது. எனவே, நான் கடல்வழிப் பயணத்தை விரும்புகின்றேன்.

**காவ்யா :**

தரை மற்றும் கப்பல் வழி பயணங்களைவிடச் சிறந்தது வான்வழிப்பயணம் ஆகும். பல நாட்கள் செல்ல வேண்டிய பயணத்தை ஒரு சில மணி நேரங்களிலேயே செல்லலாம். அதிவிரைவுக்கு ஏற்றது.

**ஆசிரியர் :**

நன்று மாணவர்களே!

❖❁❖

## சிந்தனைப்புதிர்

3. நடுவழிய ஒய்வுக்காம், கடை யிரண்டில் ஏதுமில்லை, மூன்றெழுத்தில் உடுத்தலாம், மொத்தத்தில் பெண்கள் விருப்பம். நான் யார்?

4. கடைசி எழுத்து மாறினால் தின்னலாம், முதலும் கடைசியும் சேர்ந்தால் குளிரும். மொத்தத்தில் முருகன் இடம். சொல்லுங்கள்.

விடை பக்கம் : 139

## விடுகதை

31. நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?

32. அடி மலர்ந்தது நுனி மலராத பூ. அது என்ன?

33. பந்திக்கு வரும் முந்தி, வெளியே வரும் பிந்தி. அது என்ன?

34. கோணல் இருந்தாலும், குணம் மாறாது. அது என்ன?

35. அறைகள் அறநூறு. அத்தனையும் ஒரே அறைகள். அது என்ன?

விடை பக்கம் : 204

❖❁❖

இயல் 1 விரிவானம்

# ஆழ்கடலின் அடியில்



**ஜூல்ஸ் வெர்ன்**

- அறிவியல் புனைகதைகளின் தலைமகன் என்று புகழப்படுபவர்.
- பிரான்சு சாட்டைச் சார்ந்தவர்.
- பல அறிவியல் கண்டுபிடிப்புகள் கண்டுபிடிப்பதற்கு முன்னே தம் புதினத்தில் அதைப்பற்றிக் கூறியவர்.
- எண்பது நாள்களில் உலகைச் சுற்றி , பூமியின் மையத்தை நோக்கி ஒரு பயணம் , ஆழ்கடலின் அடியில் முதலிய புதினங்களைப் படைத்தவர்.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி வரைக.**

**கதைமாந்தர் அறிமுகம்:**

| | |
|---|---|
| பியரி | - விலங்கியல் பேராசிரியர் |
| ஃபராகட் | - அமெரிக்கா நியூயார்க்கிலிருந்து புறப்பட்ட போர்க் கப்பலின் தலைவர். |
| நெட் | - ஈட்டி எறிந்து திமிங்கிலங்களை வேட்டையாடுவதில் வல்லவர். |
| கான்சீல் | - பியரியின் உதவியாளர். |

### முன்னுரை

அறிவியல் புனைகதைகளின் தலைமகன் என்று புகழப்படுபவர் ஜூல்ஸ் வெர்ன். அவர் எழுதிய 'ஆழ்கடலின் அடியில்' என்ற புதினத்தின் கதையினைச் சுருக்கிக் காண்போம்.

### விலங்கைத் தேடிய பயணம்

கடலில் உலோகத்தால் ஆன உடம்பு கொண்ட ஒரு விலங்கு கடலில் செல்வோரைத் தாக்கியது. அதனைக் கண்டுபிடித்து அழிக்க பியரி, ஃபராகட்,நெட்,கான்சீல் ஆகியோர் கொண்ட குழு நியூயாாக் நகரில் இருந்து ஒரு போர்க்கப்பலில் செல்கின்றது. அமெரிக்கா முதல் ஜப்பான் வரை மூன்று மாதங்களாகத் தேடியும் அந்த விலங்கு கிடைக்கவில்லை. ஒரு நாள் அந்த விலங்கு இவர்களின் கப்பலைத் தாக்கியது. பீரங்கிக் குண்டுகளும், நெட்டின் ஈட்டியும் அந்த விலங்குகளை எதுவும் செய்ய முடியவில்லை. அது இவர்களைத் தூக்கி வீசியது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### நீர்மூழ்கிக் கப்பல்

அது விலங்கன்று. நீர் மூழ்கிக் கப்பல் என்பதை அவர்கள் அறிந்தனர். அவர்களை நீர் மூழ்கிக் கப்பல் வீரர்கள் சிறைபிடித்தனர். அந்த நீர் மூழ்கிக் கப்பல் பெயர் நாட்டிலஸ் என்றும் , அதன் தலைவர் நெமோ என்பதையும், இக்கப்பலை விந்தையான விலங்கு என்று நம்ப வைத்ததையும் நேமோ கூறிவிட்டு, இச்செய்தி அறிந்த உங்களை வெளியில் அனுப்ப முடியாது. எனக்கான இந்தத் தனி உலகத்தில் தான் நீங்களும் இருக்க வேண்டும் என்றார். அனைவரும் அச்சப்பட்டனர்.

### கப்பலின் இயக்கம்

கப்பலுக்குத் தேவையானவை எப்படி உங்களுக்குக் கிடைக்கின்று என்று பியரி, நெமோவிடம் கேட்டார். அதற்கு அவர் மின்சாரம் தயாரிக்க தவையான கருவிகள் உள்ளன, கப்பலில் மிகப்பெரிய நீர்த்தொட்டி உள்ளது. அதனை நிரப்பும் போது கப்பல் கடல் அடியிலும் நீர் வெளியேறும் போது மேல் செல்கின்றது. சில நாட்களுக்கு ஒரு முறை கப்பல் மேலே வரும் பொழுது சுவாசிக்கத் தேவையான காற்றைப் புதுப்பித்துக்கொள்ளும், காற்றுச் சேகரிக்கும் நிறைய பைகளும் உள்ளன என்றார்.

### மணல் திட்டில் சிக்கிய கப்பல்

ஒரு நாள் மணல் திட்டில் கப்பல் சிக்கிவிட்டது. தூரத்தில் தெரிந்த தீவில் காய்கறி வாங்கி வர அவர்களை, நெமோ இசைவளித்தார். அவர்கள் காய்கறிகள் வாங்கிக் கொண்டு திரும்பும் போது அத்தீவில் உள்ளவர்கள் துரத்தினார்கள். அவர்கிளிடம் மாட்டாமல் கப்பல் வந்து சேர்ந்தனர். அக்கப்பலை அவர்கள் முற்றுகையிட்டனர். கடலின் நீர்மட்டம் உயர கப்பல் மேலே வந்தது. ஆறு நாள் போராட்டத்திற்குப் பிறகு கப்பல் பயணம் தொடர்ந்தது. கடலுக்கடியில் அவர்கள் செல்லும் போது, முத்துக்குளித்துக் கொண்டிருந்த இந்தியர் ஒருவரை சுறாவிடம் இருந்து காப்பாற்றினர்.கடலடியின் உன்னத காட்சிகளை எல்லாம் கண்டு மகிழ்ந்தனர்.

### முடிவுரை

பெரும் கடல் சுழலில் கப்பல் மாட்டிக் கொண்டது. மூவரும் தூக்கிவீசப்பட்டனர். மயக்கநிலையில் நார்வே நாட்டு மீனவர் குடிசையில் இருந்ததை விழித்துப் பார்த்தனர். நெமோவும் கப்பலும் என்ன ஆனது என்று தெரியவில்லை.

## கற்பவை கற்றபின்

1. ஆழ்கடல் காட்சியொன்றைக் கற்பனையாகப் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.




பருவம் 2
7

2. நீர்மூழ்கிக் கப்பல் இயங்கும் முறைபற்றிய செய்திகளைத் திரட்டி தொகுத்து எழுதுக.

✍ தண்ணீரில் ஒரு பொருள் தன் எடையை விட அதிக எடையுள்ள நீரை வெளியேற்றினால் மட்டுமே அப்பொருள் மிதக்கும் என்பது ஆர்க்கிமிடிஸ் தத்துவம்.

✍ அதன் அடிப்டையில் தான் நீர் மூழ்கிக்கப்பல்கள் இயங்குகின்றன.

✍ சரளைத் தொட்டிகள் நீர் மூழ்கிக் கப்பல்களைச் சுற்றி வடிவமைக்கப்பட்டு இருக்கும்.

✍ இது காற்றால் நிரப்பப்பட்டு இருக்கும். சுற்றிக் காற்று இருப்பதால், நீரில் இருக்கும் காற்றை வெளியேற்றினால் இந்த இடத்தில் நீரானது நிரம்பும்.

✍ இப்படி நிரம்பினால் எடை அதிகரிக்கும் கப்பல் நீரில் மூழ்கும்.

❖❁❖

**விடுகதைகள்**

36. நீரிலே உயிர் பெற்று நிலத்திலே நீர் இறைப்பான். அது என்ன?

37. ஒற்றைக் கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?

38. நடக்கத் தெரியாதவனுக்கு வழிகாட்டுவான். அது என்ன?

விடை பக்கம் : 204

**ஒரு வரி தமிழ்ப் பொன்மொழிகள**

11. தீமையை நன்மையால் வெல்.

12. தன்னம்பிக்கையும் உழைப்பும் வெற்றி தரும்.

13. ஒழுக்கம் உயர்வு தரும்.

14. வாசிப்பதே உண்மையான சுவாசிப்பு.

15. மிகப்பெரிய ஆயுதம் புத்தகம்.

❖❁❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கற்கண்டு

# இலக்கியவகைச் சொற்கள்

பருவம் 2 7

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் -------**
   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் [**விடை : அ**]
2. **பலபொருள் தரும் ஒரு சொல் என்பது -------**
   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் [**விடை : ஆ**]
3. **வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ------**
   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு [**விடை : இ**]

**பொருத்துக.**

| வினா | விடை |
|---|---|
| 1) இயற்சொல் - பெற்றம் | **1) இயற்சொல் - சோறு** |
| 2) திரிசொல் - இரத்தம் | **2) திரிசொல் - அழுவம்** |
| 3) திசைச்சொல் - அழுவம் | **3) திசைச்சொல் - பெற்றம்** |
| 4) வடசொல் - சோறு | **4) வடசொல் - இரத்தம்** |

**குறு வினா**

1. **மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?**
   மண், பொன் என்பன பெயர்இயற்சொல்வகைச் சொற்கள் ஆகும்.
2. **இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?**
   1. பெயர்இயற்சொல் 2. வினைஇயற்சொல் 3. இடைஇயற்சொல் 4. உரி இயற்சொல்
3. **குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?**
   குங்குமம், கமலம் என்பன தற்சமம் வகை வடசொற்கள் ஆகும்.

**சிறு வினா**

1. **இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   இலக்கிய வகைச் சொற்கள் நான்கு வகைப்படும். அவை யாவன:
   1) இயற்சொல் 2) திரிசொல் 3) திசைச்சொல் 4) வடசொல்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.**

திரிசொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு நிலையில் வரும்.

ஒரு பொருள் குறித்த பல திரிசொல், பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனவும் இரு வகைப்படுத்தலாம்.

**3. பண்டிகை, கேணி என்பன எவ்வகைச் சொற்கள்? விளக்குக.**

பண்டிகை, கேணி என்பன திசைச்சொற்கள் ஆகும்.

**விளக்கம் :** பண்டிகை, கேணி ஆகிய சொற்கள் தமிழில் வழக்கில் இருந்தாலும் இவை தமிழ்ச்சொற்கள் அன்று. வடமொழி தவிர பிறமொழிகளிலிருந்து வந்த சொற்கள் திசைச்சொற்கள் ஆகும்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

**1. கடல், கப்பல் என்பன ________**

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் [**விடை : அ**]

**2. வங்கூழ், அழுவம் என்பன ________**

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் [**விடை : ஆ**]

**3. சாவி, சன்னல், பண்டிகை, இரயில் என்பன ________**

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் [**விடை : இ**]

**4. வருடம், மாதம், கமலம் என்பன ________**

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல் [**விடை : ஈ**]

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நடந்தான், வந்தான் என்பது ________ இயற்சொல். **விடை : வினை**
2. அவனை, அவனால் என்பது ________ இயற்சொல். **விடை : இடை**
3. மாநகர் என்பது ________ இயற்சொல். **விடை : உரி**
4. இயம்பினான், பயின்றான் என்பது ________ திரிசொல். **விடை : வினைத்**
5. அன்ன, மாா் என்பது ________ திரிசொல். **விடை : இடைத்**
6. இரயில், பெற்றம் என்பன ________ சொற்கள். **விடை : திசைச்**
7. வடசொற்களை ________, ________ என இரு வகையாகப் பிரிப்பர். **விடை : தற்சமம், தற்பவம்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### குறுவினா

**1. சொல் என்றால் என்ன? சான்று தருக.**

ஓர் எழுத்த தனித்தும் ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது சொல் எனப்படும்.

**சான்று :** பூ, அறம்

**2. சொல் என்னும் பொருள் தரும் வேறு சொற்கள் யாவை?**

❖ மொழி ❖ பதம் ❖ கிளவி

**3. திரிசொல் என்றால் என்ன? சான்று தருக.**

கற்றோர்க்கு மட்டும் விளங்குவதாகவும், இலக்கியங்களில் மட்டும் பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொல் ஆகும்.

**சான்று :** வங்கூழ் (காற்று), அழுவம்(கடல்)

**4. திசைச்சொல் என்றால் என்ன?**

வடமொழி தவிர பிறமொழிகளிலிருந்து வந்த சொற்கள் திசைச்சொல் ஆகும்.

**5. வடசொல் என்றால் என்ன?**

வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் வடசொற்கள் ஆகும்.

### சிறு வினா

**1. இலக்கண முறைப்படி சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இலக்கண முறைப்படி சொற்கள் நான்கு வகைப்படும். அவையாவன:

1) பெயர்ச்சொல் 2) வினைச்சொல் 3) இடைச்சொல் 4) உரிச்சொல்

### கற்பவை கற்றபின்

**நாளிதழ் செய்தியொன்றை எடுத்துக்கொண்டு அதிலுள்ள நால் வகைச் சொற்களையும் வகைப்படுத்திப் பட்டியல் உருவாக்குக.**

**நாளிதழ் செய்தி : "இறைத்து ஊரும் கேணி போல கல்வி அறிவில் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும். இதழ் விரிந்து மணம் பரப்பும் புஷ்பம் போல மேன்மை பெற வேண்டும் என்று மாணவர்களைத் தலைவர்கள் வாழ்த்தினர்".**

| இயற்சொல் | திரிசொல் | திசைச்சொல் | வடசொல் |
|---|---|---|---|
| கல்வி<br>மாணவர்கள்<br>அறிவில்<br>தலைவர்கள்<br>சிறந்து | இறைத்து<br>கேணி<br>இதழ்<br>மேன்மை | கேணி | புஷ்பம் |

பருவம் 2 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மொழியை ஆள்வோம்

**கேட்க.**

**கடற்பயணம் தொடர்பான கதைகளைப் பெரியோரிடம் கேட்டு மகிழ்க.**

கப்பல் ஒன்றில் சுற்றுலா செல்ல இருபது பேர் ஆயத்தமானார்கள்.துறைமுகத்தை நோக்கி மகிழ்வுடன் அனைவரும் சென்றனர். கப்பல் வந்தவுடன் நான்கு குடும்பத்தாரும் கப்பலில் அமர்ந்தனர். கப்பல் சிறிது தூரம் செல்லுகையில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என திருவிழா போல இருந்தது. கபிலனின் குடும்பமும் தங்கள் ஐந்து வயது மகனிடம் கடலின் அழகைக் கூறி மகிழ்ந்து வந்தனர்.

கப்பல் ஒரு தீவை அடைந்தது. அங்கு அனைவரும் உணவு உண்டு விட்டு, ஓய்வெடுத்தனர். மாலை நேரம் ஆனவுடன் மீண்டும் கப்பல் பயணம் தொடங்கியது.இரவு வேகமாகச் சென்றது. காலையில் புத்துணர்வுடன் கப்பலில் இருந்து கடல் நீரைத் தொட்டு மகிழ்ந்தனர். கபிலனின் ஐந்து வயது மகன் கடல் நீரைத் தொட ஆசைப்பட்டான். கபிலன் தூக்க, மகன் தண்ணீரைத் தொட்டு மகிழ்ந்தான்.

திடீரென கப்பல் குலுங்கியது. ஏதோ ஒரு சத்தம் கப்பல் பயங்கரமாக ஆடத்தொடங்கியது. கபிலனின் மகன் கையை முதலை ஒன்று கவ்வி இழுத்தது. காப்பற்ற கதறி அழுது முயற்சித்தனர். மாலுமி குழந்தையை விடவில்லை என்றால் இந்தக் கப்பல் விபத்துக்குள்ளாகி மற்ற 19 பேரும் இறக்க நேரிடும் என்றார். கபிலன் தன் மகனுக்காக 19 பேர் சாக வேண்டுமா எனச் சொல்லி தன் மகனை முதலையிடம் காவு கொடுத்து 19 பேர் உயிரைக் காப்பாற்றி கதறி அழுதான்.

**பின்வரும் தலைப்புகளில் இரண்டு நிமிடங்கள் பேசுக.**

**கப்பல்களின் வகைகளும் பயன்களும்**

தாயே! தமிழே! வணக்கம். கப்பல்களின் வகைகளும் பயன்களும் என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் பேசுகின்றேன். வர்த்தகக் கப்பல்கள், கடற்படை கப்பல்கள் என பல வகைக் கப்பல்கள் உள்ளன. வர்த்தகக் கப்பல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சரக்குக் கப்பல், பயணிகள் கப்பல், சிறப்பு தேவைக் கப்பல் ஆகியனவாகும். சரக்குக் கப்பல்கள் உலர் மற்றும் திரவ சரக்குப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றது. பயணிகளுக்குப் பயன்படும் கப்பல் பயணிகள் கப்பல். கடல் பகுதி எல்லையைப் பாதுகாக்கும் கப்பல் கப்பற்படைக்கப்பல் ஆகும்.நன்றி.

**அறிந்து பயன்படுத்துவோம்**

காலம் மூன்று வகைப்படும் : 1. இறந்தகாலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம்

1. **இறந்தகாலம்** : நடந்த செயலைக்குறிப்பது இறந்தகாலம்.
   **சான்று** : பார்த்தான், ஆடினாள்.
2. **நிகழ்காலம்** : நடக்கும் செயல்களைக் குறிப்பது நிகழ்காலம்.
   **சான்று** : பார்க்கிறான், ஆடுகின்றாள்.
3. **எதிர்காலம்** : நடக்கவிருக்கும் செயலைக் குறிப்பது எதிர்காலம்.
   **சான்று** : காண்பான், ஆடுவாள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**கட்டங்களை நிரப்புக.**

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் |
| எழுது | எழுதினாள் | எழுதுகிறாள் | எழுதுவாள் |
| ஓடு | ஓடினாள் | ஓடுகிறாள் | ஓடுவாள் |
| சிரி | சிரித்தாள் | சிரிக்கிறாள் | சிரிப்பாள் |
| பிடி | பிடித்தாள் | பிடிக்கிறாள் | பிடிப்பாள் |
| இறங்கு | இறங்கினாள் | இறங்குகிறாள் | இறங்குவாள் |

**பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.**

1. அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

   **விடை :** அமுதன் நேற்று வீட்டுக்கு **வந்தான்.**

2. கண்மணி நாளை பாடம் படித்தாள்.

   **விடை :** கண்மணி நாளை பாடம் **படிப்பாள்.**

3. மாடுகள் இப்பொழுது புல் மேயும்.

   **விடை :** மாடுகள் இப்பொழுது புல் **மேய்கிறது.**

4. ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.

   **விடை :** ஆசிரியர் நாளை சிறுதேர்வு **நடத்துவார்.**

5. நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் செல்கிறோம்.

   **விடை :** நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் **சென்றோம்.**

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**பயணங்களின் பலவகை**

**முன்னுரை - பயணத்தின் தேவை - தரைவழிப்பயணம் - கடல்வழிப்பயணம் - வான்வழிவழிப் பயணம் - முடிவுரை**

**முன்னுரை :**

பயணம் என்பது சங்ககாலம் முதல் நிகழ்ந்து வருகின்றது. நடைபயணமாகத் தொடங்கிய பயணத் தோற்றம் அறிவியல் வளர்ச்சியால் இன்று பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. பயண நேரம் இன்று மிகவும் சுருங்கிவிட்டது.

பருவம் 2

7

**பயணத்தின் தேவை :**

மனிதன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளுக்காவும், பண்டமாற்று முறைக்காகவும், பொருட்களைவாங்கவும்விற்கவும்சந்தைப்படுத்தவும். தம்உறவினர் மற்றும் நண்பர்களைத் தொடர்பு கொள்வதற்கும், மருத்துவத் தேவைக்காகவும் பயணத்தின் தேவை ஏற்பட்டது. பயணத்தின் தன்மைக் கேற்ப தரைவழிப்பயணம், கடல்வழிப்பயணம், வான்வழிவழிப் பயணம் என வகைப்படுத்தப்பட்டது.

**தரை வழிப்பயணம் :**

பழங்காலம் முதல் தரைவழிப்பயணமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நடைபயணமாகவே ஆரம்ப கால கட்டத்தில் பயணம் மேற்கொள்ளப்பட்டது.மாட்டு வண்டி, குதிரை வண்டியின் மூலம் நடைபெற்ற தரைவழிப் பயணம். பின்னர் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக மிதிவண்டி, மகிழ்வுந்து, பேருந்து, சரக்குந்து, தொடர்வண்டி ஆகியவை மூலம் தரைவழிப்பயணம் விரைவாக மேற்கொள்ளப்பட்டது.

**கடல்வழிப்பயணம் :**

கப்பல் போன்றவற்றில் கடல்வழியாகச் செல்லும் பயணம் கடல்வழிப்பயணம் ஆகும். கடலின் அழகைக் கண்டு மகிழவும், கடல் வாழ் உயிரினங்களைப் பார்க்கவும், கடல் தீவுகளின் இயற்கைக் காட்சிகளை கண்டு மகிழவும் கடல்வழிப் பயணமே சிறந்தது. தீவுகள் மற்றும் வெகு தொலைவு நாடுகளுக்குப் பொருட்களை அனுப்பவும் , அயல் நாடுகளுக்கு வணிகம் செய்யவும் கடல்வழிப்பயணம் பயன்பட்டது.

**வான் வழிப்பயணம் :**

விமானம் உள்ளிட்ட வாகனங்கள் மூலம் வான்வழியில் பயணம் மேற்கொள்வது வான்வழிப்பயணம் ஆகும்.தரை மற்றும் கப்பல் வழி பயணங்களைவிடச் சிறந்தது வான்வழிப்பயணம். பல நாட்கள் செல்ல வேண்டிய பயணத்தை ஒருசில மணி நேரங்களிலேயே செல்லலாம்.அதிவிரைவுக்கு ஏற்றது வான்வழிப் பயணம்.

**முடிவுரை :**

பயணம் செய்வதில் பாதுகாப்பான முறைகளை அறிந்து பயன்படுவது பயணிகளாகிய நம் கடமையாகும்.பயணத்தில் வீண் விளையாட்டுக்களைத் தவிர்க்க வேண்டும்.

**“பயணத்தில் தேவை கவனம்”**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மொழியோடு விளையாடு

**குறுக்கெழுத்துப் புதிர்.**

**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அறிவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 த | ந் | தை | | 2 அ | றி | 3 வி | ய | ல் |
| லை | | 4 தே | ர் | வு | | ய | | த |
| வ | ளை | | | | | ப் | | 5 மு |
| ர் | ட | 6 இ | | தொ | | பு | | |
| | ட் | | ல் | ட | 8 உ | | | சி |
| | 9 க | 10 இ | ல | க் | கு | | ள் | ச் |
| | | | | க | | | 11 நா | ழ் |
| 12 நூ | | | | ம் | | | | கி |
| று | ள | ர | 13 வ | | லி | 14 ஒ | | 15 ம |

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|
| 1. அச்சான் - தந்தை | 6. அபாயம் -இடர் |
| 2. விஞ்ஞானம்- அறிவியல் | 8. தேகம் - உடல் |
| 4. பரீட்சை - தேர்வு | 13. சரித்திரம் - வரலாறு |
| 10. லட்சியம் - இலக்கு | 14. சத்தம் - ஒலி |
| **மேலிருந்து கீழ்** | **கீழிருந்து மேல்** |
| 1. அதிபர் - தலைவர் | 5. ஆதி - முதல் |
| 3. ஆச்சரியம் - வியப்பு | 9. உத்தரவு - கட்டளை |
| 7. ஆரம்பம் - தொடக்கம் | 11. தினம் -நாள் |
| 12. சதம் - நூறு | 15. சந்தோசம் - மகிழ்ச்சி |

**குறிப்புகளைக் கொண்டு 'மா' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.**

| குறிப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. முக்கனிகளுள் ஒன்று | மா | | | | |
| 2. கதிரவன் மறையும் நேரம் | மா | லை | | | |
| 3. பெருந்திரளான மக்கள் கூட்டம் | மா | நா | டு | | |
| 4. எழுத்துகளை ஒலிக்கும் காலஅளவு | மா | த் | தி | ரை | |
| 5. அளவில் பெரிய நகரம் | மா | ந | க | ர | ம் |

## நிற்க அதற்குத் தக..

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| கலங்கரை விளக்கம் | - Light house | பெருங்கடல் | - Ocean |
| கப்பல் தொழில் நுட்பம் | - Marine technology | கடல்வாழ் உயிரினம் | - Marine creature |
| நீர் மூழ்கிக் கப்பல் | - Submarine | துறைமுகம் | - Harbour |
| புயல் | - Storm | மாலுமி | - Sailor |
| நங்கூரம் | - Anchor | கப்பல் தளம் | - Shipyard |

❖❁❖

## மாதிரி வினாத்தாள்

**ஏழாம் வகுப்பு - தமிழ்**

**இயல் - ஒன்று**

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

1. வேயா மாடம் எனப்படுவது ________.
   அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
   இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது

2. மக்கள் ________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.
   அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில்

3. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது
   அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்

4. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ________.
   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு

**II. குறு விடை தருக.** **3 x 2 = 6**

5. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணைசெய்கிறது?
6. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
7. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

**III. சிறு விடை தருக.** **3 x 2 = 6**

8. கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகள் யாவை?
9. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றிக் கூறுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **1 x 4 = 4**

10. ‘வானம் ஊன்றிய ...’ எனத் தொடங்கும் கலங்கரை விளக்கப் பாடல்.

❖❁❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 2 கவிதைப் பேழை

# இன்பத்தமிழ்க் கல்வி



| | |
|---|---|
| **இயற்பெயர்** | - சுப்புரத்தினம் |
| **பெற்றோர்** | - தந்தை - கனகசபை, தாய் - இலக்குமி |
| **பிறப்பு** | - 1891 ஏப்பிரல் 29ம் நாள், புதுவை |
| **சிறப்புப் பெயர்** | - பாரதிதாசன், பாவேந்தர், புரட்சிக் கவி |
| **படைப்புகள்** | - குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன. |
| **பணி** | - புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியர் பணி என்கதை, சங்கொலி |

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| எத்தனிக்கும் | - முயலும் | துயின்றிருந்தார் | - உறங்கியிருந்தார் |
| வெற்பு | - மலை | கவி | - கவிதை, பாடல் |
| கழனி | - வயல் | சித்திரம் | - ஓவியம் |
| நிகர் | - சமம் | நிகர் | - சமம், போல |
| பரிதி | - கதிரவன் | இன்னல் | - துன்பம் |
| அன்னதோர் | - அப்படி ஒரு | ஆவி | - உயிர் |
| கார்முகில் | - மழைமேகம் | | |

### பாடநூல் மதிப்பீட்டு வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது __________

அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம் **[விடை : அ]**

2. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல

அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி **[விடை : அ]**

3. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) ஏடே + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்

இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன் **[விடை : இ]**

4. **'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்
இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார் **[விடை : அ]**

5. **என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________**

அ) என்றுஉரைக்கும் ஆ) என்றிரைக்கும்
இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும் **[விடை : ஈ]**

## பொருத்துக.

| வினா | | விடை | |
|---|---|---|---|
| 1. கழனி | - கதிரவன் | **1. கழனி** | **- வயல்** |
| 2. நிகர் | - மேகம் | **2. நிகர்** | **- சமம்** |
| 3. பரிதி | - சமம் | **3. பரிதி** | **- கதிரவன்** |
| 4. முகில் | - வயல் | **4. முகில்** | **- மேகம்** |

## குறு வினா

1. **பாரதிதாசனின் மனதைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?**

❖ வானம் ❖ நீரோடை ❖ தாமரை ❖ காடு ❖ வயல்
❖ மேகம் ❖ தென்றல் ❖ மயில் ❖ அன்னம் ❖ கதிரவன்

2. **தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்?**

✍ தமிழ்நாட்டு மக்களின் அறியாமை தூக்கம் களையும்,
✍ வாழ்வில் துன்பங்கள் நீங்கும்,
✍ நஞ்சில் தூய்மை உண்டாகும், வீரம் வரும்.

- ஆகியவற்றைத் தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகளாகப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்.

## சிறு வினா

1. **'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை நும் சொந்த நடையில் எழுதுக.**

பாரதிதாசன் கவிதை எழுத ஏட்டினை எடுத்தார். வானம் தன்னைக் கவிதையாக எழுதும்படிக் கூறியது. நீரோடை, தாமரை, காடு, வயல், மேகம் ஆகியன அவரைக் கவர்ந்து தங்களைக் கவிதை எழுதும்படி அவரிடம் வேண்டியது.மயில் போன்ற பெண்கள் அன்பைக் கவிதையாக எழுதும்படிக் கூறினர். தென்றல், மயில், அன்னம், கதிரவன். வீரர்கள் ஆகியனவும் அவரிடம் கவிதை எழுத வேண்டின.

தமிழ் 7

ஆனால் துன்பத்தில் கிடக்கும் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். அதனை நீங்க இன்பத்தமிழ்க் கல்வி கற்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பம் நீங்கும். மனதில் தூய்மை உண்டாகும். வீரம் வரும்.

## சிந்தனை வினா

**1. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- ✍ எளிதில் பொருள் விளங்கி நன்கு பாடப்புரிதல் ஏற்படும்.
- ✍ பழந்தமிழ் கலை, பண்பாடு, மரபு ஆகியன காக்கப்படும்.
- ✍ தொன்மையையும் வரலாற்றையும் நன்கு உணரலாம்.
- ✍ விழுமிய தமிழ்ச்சிந்தனைகளை அறியலாம்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பாரதிதாசனின் சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல்**

அ) பாண்டியன் பரிசு ஆ) அழகின் சிரிப்பு
இ) பிசிராந்தையார் ஈ) குடும்பவிளக்கு [விடை : இ]

**2. பின்வருவனவற்றுள்'கதிரவனை'க் குறிக்கும் சொல்**

அ) நிகர் ஆ) பரிதி இ) முகில் ஈ) கழனி [விடை : ஆ]

**3. பின்வருவனவற்றுள்'மேகம்' என்பதைக் குறிக்கும் சொல்**

அ) நிகர் ஆ) பரிதி இ) முகில் ஈ) கழனி [விடை : இ]

**4. வீரர்களின் தோள்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது**

அ) மயில் ஆ) மேகம் இ) தாமரை ஈ) மலை [விடை : ஈ]

**5. பசுமையான தோகைகளை உடையது ------**

அ) தாமரை ஆ) பெண்கள் இ) மயில் ஈ) சோலை [விடை : இ]

## குறு வினா

**1. என்னைக் கவிதையாக எழுதுக என்று பாரதிதாசனிடம் முதலில் கூறியது எது?**

வானம், தன்னைக் கவிதையாக எழுதுக என்று பாரதிதாசனிடம் முதலில் கூறியது.

**2. பாரதிதாசனிடம் கவி ஓவியமாகத் தங்களைத் தீட்டுமாறு கூறியவை எவை?**

❖ நீரோடை ❖ தாமரை மலர்கள்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3. **பெண்கள் எதனைக் கவிதையாக எழுதச் சொன்னனர்?**
பெண்கள் அன்பினைக் கவிதையாக எழுதச் சொன்னனர்.

4. **பாரதிதாசனிடம் வேல் ஏந்திய வீரர்கள் எதனை எழுதுமாறு வேண்டினர்?**
பாரதிதாசனிடம் வேல் ஏந்திய வீரர்கள் மலை போன்ற தங்களின் தோள்களின் அழகை எழுதுமாறு வேண்டினர்.

5. **பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?**
குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு.

## சிறு வினா

1. **பாரதிதாசன் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **இயற்பெயர்** | - சுப்புரத்தினம் |
| **பெற்றோர்** | - தந்தை - கனகசபை, தாய் - இலக்குமி |
| **பிறப்பு** | - 1891 ஏப்பிரல் 29ம் நாள், புதுவை |
| **சிறப்புப் பெயர்** | - பாரதிதாசன், பாவேந்தர், புரட்சிக்கவி. |
| **படைப்புகள்** | - குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன. |
| **பணி** | - புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியர் பணி |

## கற்பவை கற்றபின்

1. **இயற்கைக்காட்சி குறித்து நான்கு வரிகளில் கவிதை எழுதுக.**

"பூமித் தாயே! பசுமை போர்த்தியவளே!
நீலக் கடலாய் அலங்கரித்தவளே!
கதிரவன் காட்சியில்.... பொன் தகடானவளே!
உன்னரும் வளத்தால் இன்னுயிர்கள் வாழ்கின்றனவே!"

2. **'தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது' என்பதை வகுப்பில் கலந்துரையாடுக.**

ஆங்கல வழிக்கல்வி படித்தால் மட்டுமே உயர முடியும் என்றெண்ணிக் கொண்டிருப்போரே! கவனியுங்கள். வாழ வந்த ஆங்கிலேயரைக்கூட விரட்டினோம். ஆனால், ஆங்கில மொழியை விரட்டாமல் அதன் மீது மோகம் கொண்டு அதன் வழியில் கற்க அலைகின்றோம். இது எப்படி இருக்கின்றது தெரியுமா? தன் தாயைப் புறந்தள்ளிவிட்டு, அயலாம் தாயைப் போற்றுவது போலத்தான். எல்லா வளமும் புதைந்துள்ள மொழி நம் தாய்மொழி. அதன் வழியிலேயே நாம் கல்வி பெறுவது சிறப்பு.ஔவையாரும் கம்பரும் சேக்ஸ்பியரும் காந்தியடிகளும் தாகூரும் எப்படிச் சிறந்தனர் தெரியுமா? அனைவரும் அவரவர் தாய்மொழியால் தான் சிறந்தனர். எனவே, சிறந்த நம் தாய்மொழியிலேயே கல்வி பெறுவோம்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 2 கவிதைப் பேழை

# அழியாச் செல்வம்

**மனப்பாடப் பாடல்**

வைப்புழிக் கோட்படா வாயத்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வல்வார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.

**நூல் : நாலடியார்**
**ஆசிரியர் : சமணமுனிவர்**

## சொல்லும் பொருளும்

வைப்புழி - பொருள் சேமித்து வைக்குமிடம்
கோட்படா - ஒருவரால் கொள்ளப்படாது
வாய்த்து ஈயில் - வாய்க்கும் படி கொடுத்தலும்
விச்சை - கல்வி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் ________**

அ) வீடு ஆ) கல்வி
இ) பொருள் ஈ) அணிகலன் [விடை : ஆ]

**2. கல்வியைப் போல் ________ செல்லாத செல்வம் வேறில்லை.**

அ) விலையில்லாத ஆ) கேடில்லாத
இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத [விடை : அ]

**3. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ________**

அ) வாய்த்து + ஈயின் ஆ) வாய் + தீயின்
இ) வாய்த்து + தீயின் ஈ) வாய் + ஈயீன் [விடை : அ]

பருவம் 2 7

4. **'கேடில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) கேடி + இல்லை ஆ) கே + இல்லை
இ) கேள்வி + இல்லை ஈ) கேடு + இல்லை **[விடை : ஈ]**

5. **எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) எவன்ஒருவன் ஆ) எவன்னொருவன்
இ) எவனொருவன் ஈ) ஏன்னொருவன் **[விடை : இ]**

## குறுவினா

1. **கல்விச் செல்வத்தின் இயல்புகளாகி நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.**

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் பிறரால் கொள்ளப்படாது. கொடுத்தாலும் குறையாது, அரசரால் கவர முடியாது.

## சிறுவினா

1. **கல்விச்செல்வம் குறித்த நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

கல்வியைப் பொருள் போலக் குவித்து வைத்தாலும் பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்குக் கொடுத்ததலும் குறையாது. அரசராலும் கவர முடியாது.ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்கவேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகாது.

## சிந்தனை வினா

1. **கல்விச்செல்வம் அழியாத செல்வம் எனப்படுவது ஏன்? - சிந்தித்து எழுதுக.**

1. நீர், நெருப்பு ஆகியவற்றால் கல்வி அழியாது.
2. திருடர்களால் கல்வியைத் திருடமுடியாது.
3. கல்வியை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாலும் குறையாது.

- எனவே, பிற செல்வங்கள் அழியும். ஆனால்கல்விச் செல்வம் அழியாதது ஆகும்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **சமணமுனிவர் பலரால் எழுதப்பட்ட நூல் ________**

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) பழமொழி ஈ) திரிகடுகம் **[விடை : ஆ]**

2. **நாலடியார் ________ நூல்களுள் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) பதினெண்மேல்கணக்கு **[விடை : இ]**

3. **வேளாண் வேதம் என்று அழைக்கப்படும் நூல் ________**

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) பழமொழி ஈ) திரிகடுகம் **[விடை : ஆ]**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

4. **திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றத் தக்க நூல் ________**

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) பழமொழி ஈ) திரிகடுகம் **[விடை : ஆ]**

5. **விச்சை என்பதன் பொருள் ________**

அ) கல்வி ஆ) பொருள் இ) களவு ஈ) அரசர் **[விடை : அ]**

## சிறுவினா

1. **நாலடியார் பற்றி நீவிர் அறிவன யாவை?**

✍ சமண முனிவர் பலரால் எழுதப்பட்ட நூல் நாலடியார்.
✍ நாலடியார் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
✍ 400 வெண்பாக்களால் ஆனது.
✍ அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் பகுப்பு கொண்டது.
✍ இது நாலடி நானூறு, வேளாண் வேதம் என்றும் அழைக்கப்படும் நூல்.
✍ திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றத் தக்க நூல் ஆகும்.

## கற்பவை கற்றபின்

1. **கல்வியின் சிறப்பை விளக்கும் பிற பாடல்களைத் திரட்டி எழுதுக.**

1. ஓதுவது ஒழியேல்! - **ஔவையார்**
2. கல்விக்கு அழகு கசடற மொழிதல் - **அதிவீரராம பாண்டியன்**
3. உடலின் சிறுமைகண் டொண்பிலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார். - **நன்னெறி**
4. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. - **திருக்குறள்**

2. **கல்வியின் சிறப்பை விளக்கும் கதை ஒன்றினை அறிந்து வகுப்பறையில் கூறுக.**

இரு அரசர்களுக்கு இடையே பயங்கரப் போர் நடக்கின்றது. இதில் தோல்வியுற்ற மன்னன் வெற்றி பெற்ற மன்னால் கைது செய்யப்படுகின்றான்.தோல்வியுற்ற மன்னன் அரசவையில் நிறுத்தப்படுகின்றான். வெற்றி பெற்ற மன்னர் உனக்குத் தூக்கு தண்டனை உன் கடைசி ஆசை என்ன? என்று கேட்கின்றார். அதற்கு தோற்ற மன்னர் கண்ணாடிப் பாத்திரத்தில் பருக நீர் வேண்டும் என்றார். அதன் படி மன்னர் ஆணையிட, பணியாள் தண்ணீரைக் கொடுத்தார்.

அதைக் குடிக்காமல் தோற்ற மன்னன் தயங்குகின்றான். மேலும் இதைக் குடிப்பதற்குள் உன் வீரர்கள் கொன்று விடுவார்களோ என்று பயமாக உள்ளது என்றார். இந்த நீரைக் குடிக்கும் வரை உன்னைக் கொல்ல மாட்டோம் என்றார். கண்ணாடிப் பாத்திரத்தை உடைத்து, அந்தத் தண்ணீரை எடுத்துத் தாருங்கள் குடிக்கின்றேன் என்றார். மன்னர் கல்வியால் வந்த நுண்ணறிவு கண்டு அம்மன்னனை விடுதலை செய்து மீண்டும் நாட்டைக் கொடுத்தான்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


இயல் 2 உரைநடை உலகம்

# வாழ்விக்கும் கல்வி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் ________
அ) கல்வி ஆ) காலம் அறிதல்
இ) வினையறிதல் ஈ) மடியின்மை [விடை : ஆ]

2. கல்வியில்லாத நாடு ________ வீடு.
அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத
இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத [விடை : அ]

3. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ________
அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்
இ) பாரதியார் ஈ) பாரதிதாசன் [விடை : இ]

4. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) உயர் + வடைவோம் ஆ) உயர் + அடைவோம்
இ) உயர்வு + வடைவோம் ஈ) உயர்வு + அடைவோம் [விடை : ஈ]

5. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________
அ) இவைஎல்லாம் ஆ) இவையெல்லாம்
இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம் [விடை : ஆ]

### சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. செல்வம் - கல்விச்**செல்வம்** என்றும் அழியாதது.
2. இளமைப்பருவம் - **இளமைப்பருவம்** கல்விக்கு உரிய பருவம் ஆகும்.
3. தேர்ந்தெடுத்து - நல்ல நூல்களைத் **தேர்ந்தெடுத்துப்** படிக்க வேண்டும்.

### குறு வினா

1. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?

எதிர்காலத்தில் பிற உயிரினங்கள் என்னவாகும் என்பதைச்சொல்ல முடியும். ஆனால், மனிதப் பிறவியின் எதிர்காலத்தைக் கூறவே முடியாது. இதுவே மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?**

கல்வி அறிவு இல்லாதவர்கள் விலங்குகள் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

3. **நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?**

படிக்க வேண்டிய நூல்களை நன்கு ஆழ்ந்து ,ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

## சிறு வினா

1. **கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.**

✍ உலகில் எல்லாச் செல்வங்களும் அழிந்துவிடும்.

✍ இருபது இருபத்தைந்தாண்டுக்கு முன் இங்கு இருந்த ஆலமரம் எங்கே என்றால் புயலில் விழுந்துவிட்டது என்போம்.

✍ இங்கிருந்த பெரிய கட்டடம் எங்கே என்றால், மழையால் இடிந்து விட்டது என்பர்.

✍ 10 ஆண்டுக்கு முன் 2 இலட்சம் ரூபாய் வைத்திருந்தவர். இன்று இரண்டு ரூபாய் கடன் கேட்கிறார் என்போம்.

- எல்லாம் அழியும். ஆனால் கல்வி அப்படியன்று. 10 ஆண்டுக்கு முன்னர் பட்டம் பெற்றவர் இன்று 10ம் வகுப்பு ஆகிவிட்டார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் கல்வி அழியாதது. வள்ளுவரும் ''கேடில் விழுச்செல்வம் கல்வி .....'' என்கின்றார்.

2. **கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?**

கல்வி ஓர் ஒளிவிளக்கு. இருக்கும் இடத்தை ஒளிமயம் ஆக்கும். அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவன் கற்றுவிட்டால், அப்படிப் பலருக்கும் ஒளி தருவது தான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்.

## சிந்தனை வினா

1. **நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?**

✍ உண்மைப் பொருளை விளக்க வேண்டும்.

✍ நன்னெறிப் பாதை காட்ட வேண்டும்.

✍ அனைவருக்கும் எளிதில் புரியும் வண்ணம் இருக்க வேண்டும்.

✍ எளிமை, தெளிவு ஆகியவை கொண்ட நடையில் இருத்தல் வேண்டும்.

- ஆகியன நல்ல நூலின் இயல்புகளாக நான் கருதுவன ஆகும்.

பருவம் 2 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **திருக்குறளனார் என்று அழைக்கப்படுபவர் ________**

அ) வீ.முனிசாமி ஆ) மு.வ இ) திரு.வி.க ஈ) கவிமணி [**விடை : அ**]

2. **வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை உள்ளிட்ட நூல்களை எழுதியவர் ________**

அ) வீ.முனிசாமி ஆ) மு.வ இ) திரு.வி.க ஈ) கவிமணி [**விடை : அ**]

3. **உலகில் மிகவும் அருமையானது ________**

அ) காலம் ஆ) கல்வி இ) பொருள் ஈ) செல்வம் [**விடை : அ**]

4. **________ ஓர் ஒளி விளக்கு.**

அ) காலம் ஆ) கல்வி இ) பொருள் ஈ) செல்வம் [**விடை : அ**]

5. **நன்றின்பால் உய்ப்பது அறிவு - என்று கூறியவர் ________**

அ) வீ.முனிசாமி ஆ) திருவள்ளுவர்

இ) திரு.வி.க ஈ) கவிமணி [**விடை : ஆ**]

தமிழ் 7

### குறுவினா

1. **திருக்குறளார் வீ.முனிசாமி இயற்றிய நூல்கள் யாவை?**

- வள்ளுவர் உள்ளம்
- வள்ளுவர் காட்டிய வழி
- திருக்குறளில் நகைச்சுவை

2. **மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படித்தால் தான் பொருள் விளங்கும் என்பதற்கு திருக்குறளனார் கூறும் ஒப்புமை யாது?**

மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படித்தால் தான் பொருள் விளங்கும் என்பதற்கு திருக்குறளனார் கூறும் ஒப்புமை கத்தரிக்காய் , வாழைக்காய், கீரை இவை எல்லாம் பூமிக்கு மேல் விளையும். சில மண்ணுக்குள்ளே இருக்கும் அதை நாம் தான் தோண்டி எடுக்க வேண்டும் என்பதாகும்.

3. **திருக்குறளனாரின் புகழ்பெற்ற நூல் எது?**

உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம்

4. **பள்ளி பற்றி பாரதியாரின் கருத்து யாது?**

நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். அதனால் தான் ''பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்'' என்றார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. **விளக்கில்லாத வீடு எது?**

கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு ஆகும்.

6. **கல்வி அறிவுல்லாதவர்களை மிகுதியாக குறை கூறியவர் யார்?**

திருவள்ளுவரே கல்வி அறிவுல்லாதவர்களை மிகுதியாக குறை கூறியவர் ஆவார்.

7. **எவை அழியும் என்பதற்குத் திருக்குறளனார் கூறும் உவமைகள் எவை?**

❖ ஆலமரம் ❖ பெரிய கட்டடம் ❖ இரண்டு இலட்ச ரூபாய் பணம்

## கற்பவை கற்றபின்

1. **கல்வி தொடர்பான பாடல் வரிகளைத் தொகுத்து எழுதுக.**

**(எ.கா.) கல்வி கரையில, கற்பவர் நாள் சில.**

1. இளமையில் கல்.
2. கேடில் விழுச்செல்வம் கல்வி.
3. கற்க கசடற.
4. ஓதுவது ஒழியேல்!
5. கல்விக்கு அழகு கசடற மொழிதல்
6. உடலின் சிறுமைகண் டொண்பிலவர் கல்விக்
7. கடலின் பெருமை கடவார்.

❖❀❖

## ஒரு வரி தமிழ்ப் பொன்மொழிகள

16. மனதுக்குப் பயிற்சி வாசிப்பு.

17. படிப்பு தான் உயர வழி.

18. வாசிப்பு அருமையான ருசி , அதைத் தினம் சுவைக்கப் பழகு.

19. அறிவு ஒன்று தான் அச்சத்தை முறிக்கும் மருந்து.

20. துன்பத்திற்கான மருந்து அமைதி.

❖❀❖

பருவம் 2

7

இயல் 2 விரிவானம்

# பள்ளி மறுதிறப்பு

**சுப்ரபாரதிமணியன்**
குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகிய கருத்துகளை மையமாக வைத்து தம் படைப்புகளைப் படைப்பவர். கனவு என்னும் இதழை நடத்தி வருபவர்.
**படைப்புகள் :** பின்னல், வேட்டை, தண்ணீர் யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை முதலியன.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.**
**(அல்லது)**
**'பள்ளி மறுதிறப்பு' சிறுகதையினைச் சுருக்கி எழுதுக.**

### முன்னுரை

சுப்ரபாரதிமணியன் இயற்றிய 'பள்ளி மறுதிறப்பு' சிறுகதையில் மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கமாகக் காண்போம்.

### மதிவாணனும் கவினும்

மதிவாணனும் கவினும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். கோடைவிடுமுறையில் ஒன்றரை மாதம் இருவரும் பின்னலாடை நிறுவனத்திற்கு வேலைக்குச் சென்றனர். பள்ளி மறுதிறப்புக்கு இரண்டு நாட்கள் தான் இருந்தது. வேலைக்குச் செல்வதற்காக இருவரும் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு இருந்தனர். கவின் தான் மீண்டும் பள்ளிக்குப் போவதில்லை. வாராவாரம் சம்பளம், திரைப்படம் பார்க்க காசு, பரோட்டா, போண்டா, வீட்டில் யாரும் திட்டுவதில்லை. இந்த மகிழ்ச்சி போதும் என்றான். மதிவாணனும் சற்றே குழம்பினான்.

### மதிவாணனின் சிந்தனை

படிக்கின்ற வயதில் வேலை தேவையா? மருத்துவர், பொறியாளர், வெளிநாட்டு வேலை என்று மதிவாணன் உள்ளும் கனவுகள் இருந்தன. தொழிலாளியாகவே கடைசி வரைக்கும் இருக்க வேண்டுமா என்பதை நன்கு சிந்தித்தான். எதிரில் இருந்த விளம்பரப் பலகையில் அம்பேத்கரும் அப்துல் கலாமும் தென்பட்டனர். இவரைப் போல உயர வேண்டும் என்றால் படிப்பு தேவை என்பதை நன்கு உணர்ந்தான்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### படிக்காதவரின் நிலை

பேருந்து நிறுத்தத்தில் முதியவர் ஒருவர். அங்கிருந்த சிறுவர்களிடம், இந்தப் பேருந்து நல்லூர் செல்லுமா? எனக் கேட்டார். அதற்கு அவர்கள் எதுவும் சொல்லவில்லை. மீண்டும் அந்தப் பெரியவர் கேட்டார். சிறுவர்கள் எங்களுக்குப் படிக்கத் தெரியாது என்றனர். இது கூடப் படிக்கத் தெரியாதா என்றார் பெரியவர். அதற்கு ஒருவன் ஏன் உங்களுக்குப் படிக்கத் தெரியாத என்று கேட்டு, அனைவரும் சிரித்தனர். மதிவாணன் அவரிடம் நல்லூர் இது போகாது. போகும் பேருந்து வரும் போது சொல்கின்றேன் என்றான்.இதையெல்லாம் பார்த்து கல்வி தான் தலைநிமிரச் செய்யும் என்பதை உணர்ந்து, பள்ளியை நோக்கி நடந்தான் மதிவாணன்.

### முடிவுரை

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'' என்பதைப் புரிந்து கொண்டு இளமையில் மதிவாணன் கல்வி கற்க விருப்பம் கொண்டான். இன்று கிடைக்கும் பணத்தை விட நாளை கிடைக்கும் மதிப்புக்காக இன்றே கல்வி கற்க வேண்டும்.

## கற்பவை கற்றபின்

1. **பள்ளி மறுதிறப்பு என்னும் கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.**

2. **எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள் ? வகுப்பில் கலந்துரையாடுக.**

✍ எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுதப்படிக்கச் சொல்லித் தருவேன்.

✍ எழுதப்படிக்கத் தெரியாத ஒரே காரணத்திற்காக, தன்மானம் இழந்த நிலை போக்க அவர்களுக்கு எழுதப் படிக்க கற்றுத் தருவேன்.

❖❀❖

## சிந்தனைப்புதிர் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ஆபத்து | 2. கண்மணி | 3. பட்டு | 4. பழனி |

❖❀❖

பருவம் 2 7

# இயல் 2 கற்கண்டு ஓரெழுத்து ஒரு மொழி, பகுபதம், பகாப்பதம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நன்னூலின் படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை ________

அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46 [விடை : ஆ]

2. 'எழுதினான்' என்பது ________

அ) பெயர்ப் பகுபதம் ஆ) வினைப்பகுபதம்

இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம் [விடை : ஆ]

3. பெயர்ப் பகுபதம் ________ வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு [விடை : இ]

4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு ________

அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி [விடை : இ]

### பொருத்துக.

**வினா :**

1. பெயர்ப் பகுபதம் - வாழ்ந்தான்
2. வினைப்பகுபதம் - மன்
3. பெயர்ப் பகாப்பதம் - நனி
4. வினைப் பகாப்பதம் - பெரியார்

**விடை :**

1. பெயர்ப் பகுபதம் - பெரியார்
2. வினைப்பகுபதம் - வாழ்ந்தான்
3. இடைப் பகாப்பதம் - மன்
4. உரிப் பகாப்பதம் - நனி

### சரியான பகுபத உறுப்பை எழுதுக.

| போவாள் - போ + வ் + ஆள் | நடக்கின்றான் - நட + க் + கின்று + ஆன் |
|---|---|
| **போ** - பகுதி | **நட** - பகுதி |
| **வ்** - எதிர்கால இடைநிலை | **க்** - சந்தி |
| **ஆள்** - பெண்பால் வினைமுற்று விகுதி | **கின்று** - நிகழ்கால இடைநிலை |
| | **ஆன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி |

தமிழ் 7

**பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.**

| பார்த்தான் - பார் + த் + த் +ஆன் | | பாடுவார் - பாடு + வ் + ஆர் | |
|---|---|---|---|
| பார் | - பகுதி | பாடு | - பகுதி |
| த் | - சந்தி | வ் | - எதிர்கால இடைநிலை |
| த் | - இறந்தகால இடைநிலை | ஆர் | - ஆண்பால் வினைமுற்று விகுதி |
| ஆன் | - ஆண்பால் வினைமுற்று விகுதி | | |

## குறு வினா

**1. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?**

ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒருமொழி ஆகும்.

எ.கா. பூ

**2. பதத்தின் இருவகைகள் யாவை?**

பகுபதம், பகாப்பதம் என பதம் இருவகைப்படும்.

**3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவையாவன : பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

## சிறு வினா

**1. விகுதி எவற்றைக் காட்டும்?**

❖ திணை ❖ பால் ❖ முற்று ❖ எச்சம்

**2. விகாரம் என்பது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

**(எ.கா.)** வந்தனன் - வா(வ) + த்(ந்) + த் +அன் +அன்

**வா** - பகுதி, இது 'வ' எனக் குறுகி இருப்பது விகாரம்.

**த்** - சந்தி, இது 'ந்' எனத் திரிந்து இருப்பது விகாரம்.

**த்** - இறந்தகால இடைநிலை

**அன்** - சாரியை

**அன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி

**3. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும். அவையாவன:

1. பெயர்பெயர்ப்பகுபதம் 2. இடப்பெயர்ப்பகுபதம் 3. காலப்பெயர்ப்பகுபதம்
4. சினைப்பெயர்ப்பகுபதம் 5. பண்புப்பெயர்ப்பகுபதம் 6. தொழில்பெயர்ப்பகுபதம்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

1. ஓரெழுத்து ஒருமொழியில் உள்ள குறில் சொற்களின் எண்ணிக்கை
   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு [விடை : ஆ]
2. பசு என்னும் பொருள் தரும் சொல் ____________
   அ) ஆ ஆ) ஈ இ) ஊ ஈ) ஏ [விடை : அ]
3. கொடு என்னும் பொருள் தரும் சொல் ____________
   அ) ஆ ஆ) ஈ இ) ஊ ஈ) ஏ [விடை : ஆ]
4. இறைச்சி என்னும் பொருள் தரும் சொல் ____________
   அ) ஆ ஆ) ஈ இ) ஊ ஈ) ஏ [விடை : இ]
5. அம்பு என்னும் பொருள் தரும் சொல் ____________
   அ) ஆ ஆ) ஈ இ) ஊ ஈ) ஏ [விடை : ஈ]
6. ஓரெழுத்து ஒருமொழியில் உள்ள நெடில்சொற்களின் எண்ணிக்கை
   அ) 42 ஆ) 40 இ) 43 ஈ) 2 [விடை : ஆ]
7. நன்னூல் என்ற இலக்கண நூலை எழுதியவர் ____________
   அ) பவணந்தி முனிவர் ஆ) ஆறுமுக நாவலர்
   இ) தொல்காப்பியர் ஈ) அகத்தியர் [விடை : அ]
8. பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை ____________
   அ) 6 ஆ) 2 இ) 5 ஈ) 42 [விடை : அ]
9. பகாப் பதத்தின் வகை ____________
   அ) மூன்று ஆ) நான்கு இ) ஆறு ஈ) ஐந்து [விடை : ஆ]

**பொருத்துக.**

| வினா : | | விடை : | |
|---|---|---|---|
| 1. ஐ | - சோலை | 1. ஐ | - தலைவன் |
| 2. கா | - இகழ்ச்சி | 2. கா | - சோலை |
| 3. கூ | - பூமி | 3. கூ | - பூமி |
| 4. சீ | - தலைவன் | 4. சீ | - இகழ்ச்சி |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**குறுவினா**

1. **ஓரெழுத்து ஒருமொழியில் உள்ள குறில் சொற்களின் எண்ணிக்கை யாது? அவை உணர்த்தும் பொருள் யாது?**

நொ, து ஆகிய இரண்டும் ஓரெழுத்து ஒருமொழியில் உள்ள குறில் சொற்கள் ஆகும்.

**உணர்த்தும் பொருள் :**

- நொ – நோய்
- து – உண்

2. **பகுபதங்கள் என்றால் என்ன?**

சிறு சிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்கள் பகுபதங்கள் ஆகும்.

3. **வினைப்பகுபதம் என்றால் என்ன? சான்று தருக.**

பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.

**சான்று :** உண்கின்றான் – உண் + கின்று + ஆன்

4. **சந்தி என்பது யாது?**

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி ஆகும்.

5. **சாரியை என்பது யாது?**

இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை ஆகும்.

**சிறு வினா**

1. **இலக்கண முறைப்படி சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இலக்கண முறைப்படி சொற்கள் நான்கு வகைப்படும். அவையாவன:

1) பெயர்ச்சொல் 2) வினைச்சொல்

3) இடைச்சொல் 4) உரிச்சொல்

**கற்பவை கற்றபின்**

1. **பாடப்பகுதியில் இடம் பெற்ற சொற்களில் பகுபதம் பகாப்பதம் ஆகியவற்றைத் தனித்தனியே தொகுக்க.**

| பகுபதம் | பகாப்பதம் |
|---|---|
| சிந்தித்தார், படைத்தார், குளிர்ந்த, வந்தது, இரக்கத்தை, எழுதுங்கள், எழுதியுள்ளார். | வானம், காடு, ஓடு, தென்றல், மயில், ஏடு, தாமரை, வீரம், வேல் |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


**2. உங்கள் வகுப்பு மாணவ - மாணவிகளின் பெயர்களைப் பகுபதம் , பகாப்பதம் என வகைப்படுத்துக.**

| பகுபதம் | பகாப்பதம் |
|---|---|
| 1. கருப்பண்ணன் | 1. கலை |
| 2. கண்ணன் | 2. ராணி |
| 3. எழிலன் | 3. கலா |
| 4. பூவழகன் | 4. மலர் |
| 5. மலரவன் | 5. நகுல் |
| | 6. செந்தில் |

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடங்கள் பேசுக.**

### கல்வியின் சிறப்பு

வணக்கம். கல்வியின் சிறப்பு பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். இளமையில் கல், கேடில் விழுச்செல்வம் கல்வி, கல்விக் கரையில, கற்பவர் நாள் சில, கற்க கசடற, ஓதுவது ஒழியேல் ஆகியன கல்வியின் அவசியத்தைக் கூறும் பாடல் வரிகளாகும். மனிதனை வேறுபடுத்துவது அவன் கற்ற கல்வியால் தான். பொருளை இழந்தால் சம்பாதிக்கலாம். ஆனால் கல்வியை இழந்தால் மீண்டும் கற்க இயலாது. அதனால் தான் பருவத்தே பயிர் செய் என்றனர்.கல்வி ஓர் ஒளிவிளக்கு. இருக்கும் இடத்தை ஒளிமயம் ஆக்கும். அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவன் கற்றுவிட்டால், அப்படிப் பலருக்கும் ஒளி தருவது தான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள். கல்வியின் அவசியத்தை உணர்ந்து கற்க வேண்டும் .நன்றி.

### குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

வணக்கம். குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு பற்றி என்னுடைய கருத்துகளை சில நிமிடங்கள் பேசுகின்றேன். ஓடி விளையாட வேண்டிய பருவத்தில் வேலைக்குச் செல்வதைக் கண்டால் மனம் வேதனை அடைகின்றது. இளமையில் கல் என்ற ஔவையின் வாக்கு என்னவானது. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைகளுக்குச் சிறுவயதில் இரத்தசோகை, இளைப்பு, காச நோய் ஆகியன ஏற்படும். படிக்கும் வயதில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் மீது காவல் துறையில் புகார் அளிக்கலாம். எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி என்பது வெறும் ஏட்டளவில் இல்லாமல் நடைமுறையில் செயல்படுத்த நாம் போராட வேண்டும். நன்றி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## சொல்லக் கேட்டு எழுதுக.

1. இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும்.
2. கல்வியே அழியாத செல்வம்.
3. கல்வி இல்லாத நாடு விளக்கு இல்லாத வீடு.
4. பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்.
5. நூல்களை ஆராய்ந்து ஆழ்ந்து படிக்க வேண்டும்.

## கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களை வகைப்படுத்துக.

**நல்லூர், வடை, கேட்டல், முகம், அன்னம், செம்மை, காலை, வருதல், தோகை , பாரதிதாசன், பள்ளி, இறக்கை, பெரியது, சோலை, ஐந்து மணி, விளையாட்டு, புதன்.**

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| வடை | நல்லூர் | காலை | முகம் | செம்மை | கேட்டல் |
| அன்னம் | பள்ளி | புதன் | தோகை | பெரியது | வருதல் |
| பாரதிதாசன் | சோலை | ஐந்து மணி | இறக்கை | | விளையாட்டு |

### அறிந்து பயன்படுத்துவோம்

மூவிடம்

இடம் 3 வகைப்படும். அவை. 1. தன்மை 2. முன்னிலை 3.படர்க்கை

1. **தன்னைக் குறிப்பது தன்மை.**

   சான்று : நான், நாம், நாங்கள், என், எம், எங்கள்.

2. **முன்னால் இருப்பவரைக் குறிப்பது முன்னிலை.**

   சான்று : நீ, நீங்கள், நீர், நீவிர், உன், உங்கள்.

3. **தன்னையும், முன்னால் இருப்பவரையும் அல்லாமல் மூன்றாமவரைக் குறிப்பது படர்க்கை.**

   சான்று : அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, இவன், அவள், இவை.

## சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.

(அது, நீ, அவர்கள், அவைகள், அவை, நாம், என், உன்)

1. **உன்** பெயர் என்ன?
2. **நாம்** ஏழாம் வகுப்பு மாணவர்கள்.
3. **அவை** எப்படி ஓடும்.
4. **நீ** என்ன செய்து கொண்டிருக்கிறாய்.
5. **அவர்கள்** வந்து கொண்டு இருக்கிறார்கள்.

பருவம் 2 7

**பின்வரும் தொடர்களில் மூவிடப்பெயர்களை அடிக்கோடிடுக. அவற்றை வகைப்படுத்துக.**

1. **எங்கள்** வீட்டு நாய்க்குட்டி ஓடியது.
2. **இவர்**தான் **உங்கள்** ஆசிரியர்.
3. **நீர்** கூறுவது **எனக்குப்** புரியவில்லை.
4. **எனக்கு**, **அது** வந்ததா என்று தெரியவில்லை. **நீயே** கூறு.
5. **உங்களோடு** **நானும்** உணவு உண்ணலாமா?

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| எங்கள் | நீர் | இவர் |
| எனக்கு | உங்கள் | அது |
| நானும் | நீ | |
| | உங்களோடு | |

**கடிதம் எழுதுக.**

**உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையாளருக்குக் கடிதம் எழுதுக.**

**நூலகம் அமைத்துத் தர வேண்டி மடல்**

அனுப்புநர்

ச.முகிலன்,
பாரதிநகர்,
ஈரோடு.

பெறுநர்

ஆணையர் அவர்கள்,
பொதுநூலகத் துறை,
சென்னை - 600 002.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : நூலகம் அமைத்துத் தர வேண்டுதல்.

வணக்கம். எங்கள் பாரதி நகர் ஈரோட்டின் மையப் பகுதியை ஒட்டியே உள்ளது. இங்கு சுமார் 500 குடும்பங்கள் உள்ளன. 3000 மக்கள் வாழ்கின்றனர். பள்ளி, கல்லூரி செல்வோர் மற்றும் பட்டதாரி இளைஞர்கள் 1000 பேர் உள்ளனர். பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்க எங்கள் பகுதியில் நூலகம் இல்லை. அறிவை வளர்த்துக் கொள்ளவும், உலக நடப்புகளை அறியவும் எங்களால் இயலவில்லை.எனவே எங்கள் அறிவுக் கண்களைத் திறக்க எங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம். நன்றி பல.

நாள் : 03.5.2019 இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள,

இடம் : ஈரோடு. ச.முகிலன்.

**உறைமேல் முகவரி**

பெறுநர்
ஆணையர் அவர்கள்,
பொதுநூலகத் துறை,
சென்னை - 600 002.

## மொழியோடு விளையாடு




1. காலையில் பள்ளி மணி ________. விடை : ஒலிக்கும்
2. திரைப்படங்களில் விலங்குகள் ________ காட்சி குழந்தைகளுக்குப் பிடிக்கும். விடை : நடிக்கும்
3. கதிரவன் காலையில் கிழக்கே ________. விடை : உதிக்கும்
4. நாள்தோறும் செய்தித்தாள் ________ வழக்கம் இருக்க வேண்டும். விடை : வாசிக்கும்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.**

1. ________ புல் மேயும். **விடை : ஆ**
2. ________ சுடும். **விடை : தீ**
3. ________ பேசும். **விடை : கை**
4. ________ பறக்கும். **விடை : ஈ**
5. ________ மணம் வீசும். **விடை : பூ**

**பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.**

**(எ.கா) தா - கொடு**

தீ -------------- **விடை :நெருப்பு**

பா -------------- **விடை : பாடல்**

தை -------------- **விடை : தைத்தல்**

வை -------------- **விடை : புல்**

மை -------------- **விடை : அஞ்சனம்**

**பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.**

**ஆறு, விளக்கு, படி, சொல், கல், மாலை, இடி**

(எ.கா.)**ஆறு** - ஈ ஆறு கால்களை உடையது.
தஞ்சாவூரில் காவிரி ஆறு பாய்கிறது.

1. **விளக்கு** - பாடலின் பொருள் விளங்கியது.
அகல் விளக்கைக் கோவிலில் ஏற்றுவர்.
2. **படி** - வாயிற் படியில் அமராதே!
இளமையிலேயே படிக்க வேண்டும்.
3. **சொல்** - மூத்தோர் சொல் அமுதம்.
தஞ்சை சொல்(நெல்) வளம் மிகுந்தது.
4. **கல்** - காய்த்த மரம் கல் அடிபடும்.
இளமையில் கல்.
5. **மாலை** - மாலைநேரத்தில் விளையாட வேண்டும்.
பூமாலை தொடுத்தாள்.
6. **இடி** - இடி மின்னலுடன் மழை பெய்தது.
மரத்தின் மீது வண்டி இடித்துவிட்டது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


நிற்க அதற்குத் தக....

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| கோடை விடுமுறை | - Summer Vacation | நீதி | - Moral |
| குழந்தைத் தொழிலாளர் | - Child Labour | சீருடை | - Uniform |
| பட்டம் | - Degree | வழிகாட்டுதல் | - Guidence |
| கல்வியறிவு | - Literacy | ஒழுக்கம் | - Dicipline |

## மாதிரி வினாத்தாள்
### ஏழாம் வகுப்பு - தமிழ் - பருவம் - 2
### இயல் - இரண்டு

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

1. **பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது ____________.**
   அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்
2. **'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.**
   அ) வாய்த்து + ஈயின் ஆ) வாய் + தீயின்
   இ) வாய்த்து + தீயின் ஈ) வாய் + ஈயீன்
3. **'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ____________.**
   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
4. **காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு ____________.**
   அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி

**குறு விடை தருக.** **3 x 2 = 6**

5. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
6. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்?
7. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**சிறு விடை தருக.** **3 x 2 = 6**

8. 'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை நும் சொந்த நடையில் எழுதுக.
9. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

**அடிபிறழாமல் எழுதுக.** **1 x 4 = 4**

10. 'வைப்புழிக்' எனத் தொடங்கும் நாலடியார் பாடல்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 3 கவிதைப் பேழை

# ஒரு வேண்டுகோள்

**தேனரசன்**

தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.

வானம்பாடி, தென்றல், குயில் ஆகிய இதழ்களில் கவிதை எழுதியுள்ளார்.

இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்.

படைப்புகள் : மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் முதலிய கவிதை நூல்கள்.

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| பிரும்மாக்கள் | - படைப்பாளர்கள் | வனப்பு | - அழகு |
| நெடி | - நாற்றம் | பூரிப்பு | - மகிழ்ச்சி |
| மழலை | - குழந்தை | மேனி | - உடல் |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மயிலும் மானும் வனத்திற்கு __________ தருகின்றன.**
   அ) களைப்பு ஆ) வனப்பு இ) மலைப்பு ஈ) உழைப்பு **[விடை : ஆ]**

2. **மிளகாய் வற்றலின் __________ தும்மலை வரவழைக்கும்.**
   அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை **[விடை : அ]**

3. **அன்னை தான் பெற்ற __________ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறாா்.**
   அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) மழலையின் ஈ) கணவனின் **[விடை : இ]**

4. **'வனப்பில்லை' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது __________**
   அ) வனம் + இல்லை ஆ) வனப்பு + இல்லை
   இ) வனப்பு + யில்லை ஈ) வனப் + பில்லை **[விடை : ஆ]**

5. **'வார்ப்பு + எனில்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது __________**
   அ) வார்ப்எனில் ஆ) வார்ப்பினில்
   இ) வார்ப்பெனில் ஈ) வார்பு எனில் **[விடை : இ]**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**நயம் அறிக.**

**ஒரே எழுத்திலோ ஓசையிலோ முடியும் இயைபுச்சொற்களைப் பாடலில் இருந்து எடுத்து எழுதுக.**

1. பிரும்மாக்களே - சேர்ப்பவர்களே
2. உடைப்பவனின் - உழவனின்
3. சிகரங்களா - அலைகளா - காடுகளா - பள்ளத்தாக்குகளா - தோட்டங்களா
4. வனப்பில்லை - உயிர்ப்பில்லை

**குறு வினா**

**1. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை?**

அன்பும் பாசமும் தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை ஆகும்.

**2. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?**

இயற்கையின் விந்தைத் தோற்றங்கள் எவையும் கலை வடிவம் பெறலாம். ஆனால் அதில் மானுடப்பண்பு கட்டாயம் இருக்க வேண்டும். மானுடம் இல்லாத எந்த அழகும் அழகன்று. மனிதன் கலக்காத எதிலும் உயிர்ப்பில்லை.

**சிறு வினா**

**1. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**

✍ நீங்கள் பாறை உடைப்பவரின் சிலையைச் செதுக்கினால், அதில் வியர்வை நாற்றம் வீச வேண்டும்.

✍ உழவரின் உருவ வார்ப்பாக இருந்தால், அதில் ஈரமண்ணின் மணம் வீச வேண்டும்.

✍ தாயின் மகிழ்ச்சியான ஓவியத்தை வரைந்தால், அவரின் முகத்தில் அன்பும் பாசமும் நிறைந்து இருக்க வேண்டும்.

✍ சிறு குழந்தையின் சித்திரத்தைத் தீட்டினால் அதன் பால் மணம் கமழ வேண்டும்.

✍ ஆல்ப்ஸ் மலைச் சிகரங்கள் உள்ளிட்ட இயற்கையின் விந்தைத் தோற்றங்கள் எவையும் கலை வடிவம் பெறலாம். ஆனால் அதில் மானுடப்பண்பு கட்டாயம் இருக்க வேண்டும். மானுடம் இல்லாத எந்த அழகும் அழகன்று. மனிதன் கலக்காத எதிலும் உயிர்ப்பில்லை.

**சிந்தனை வினா**

**1. நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?**

நான் ஒரு ஓவியக்கலைஞராக இருந்தால் உயிரோட்டமுள்ள ஓவியங்களையும் மனித நேயச் சிந்தனையை வெளிப்படுத்தும் வகையிலும் மக்கள் விழிப்படைய விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஓவியங்களையும் சமுதாய முன்னேற்றத்திற்கான ஓவியங்களையும் உருவாக்குவேன்.

பருவம் 2 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒரு வேண்டு கோள் என்னும் கவிதையை எழுதியவர் ________.

அ) தேனரசன் ஆ) காளமேகப் புலவர்

இ) சுரதா ஈ) முடியரசன் [விடை : அ]

2. நீங்கள் பாறை உடைப்பவரின் சிலையைச் செதுக்கினால், அதில் ________ நாற்றம் வீசவேண்டும்.

அ) ஈரமண் ஆ) வியர்வை இ) அன்பு ஈ) பால் மணம் [விடை : ஆ]

3. உழவரின் உருவ வார்ப்பாக இருந்தால், ________ அதில் மணம் வீச வேண்டும்.

அ) ஈரமண் ஆ) வியர்வை இ) அன்பு ஈ) பால் மணம் [விடை : அ]

4. தாயின் மகிழ்ச்சியான ஓவியத்தை வரைந்தால், அவரின் முகத்தில் ________ நிறைந்திருக்க வேண்டும்.

அ) ஈரமண் ஆ) வியர்வை இ) அன்பு பாசம் ஈ) பால் மணம் [விடை : இ]

5. சிறு குழந்தையின் சித்திரத்தைத் தீட்டினால் அதன் ________ கமழ வேண்டும்.

அ) ஈரமண் ஆ) வியர்வை இ) அன்பு பாசம் ஈ) பால் மணம் [விடை : ஈ]

### பொருத்துக.

| வினா : | | விடை: | |
|---|---|---|---|
| 1. பிரும்மாக்கள் | - அழகு | 1. பிரும்மாக்கள் | - படைப்பாளர்கள் |
| 2. நெடி | - மகிழ்ச்சி | 2. நெடி | - நாற்றம் |
| 3. வனப்பு | - படைப்பாளர்கள் | 3. வனப்பு | - அழகு |
| 4. பூரிப்பு | - நாற்றம் | 4. பூரிப்பு | - மகிழ்ச்சி |

### குறு வினா

1. தேனரசன் கவிதைகள் எழுதிய இதழ்கள் யாவை?

❖ வானம்பாடி ❖ குயில் ❖ தென்றல்

2. தேனரசன் எழுதிய கவிதை நூல்கள் யாவை?

❖ மண்வாசல் ❖ வெள்ளை ரோஜா ❖ பெய்து பழகிய மேகம்

3. இயற்கையின் விந்தைத் தோற்றங்கள் என்று கவிஞர் தேனரசன் குறிப்பிடுவன எவை?

ஆல்ப்ஸ் மலைச் சிகரங்கள், அட்லாண்டிக் பெருங்கடல் அலைகள், அமேசான் காடுகள், பனிபடர் பள்ளத் தாக்குகள், தொங்கும் தோட்டங்கள் ஆகியன இயற்கையின் விந்தைத் தோற்றங்கள் என்று கவிஞர் தேனரசன் குறிப்பிடுகின்றார்.

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


4. **உழவரின் உருவ வார்ப்பில் நிறைந்து இருக்க வேண்டியவை யாவை?**
உழவரின் உருவ வார்ப்பாக இருந்தால், அதில் ஈரமண்ணின் மணம் வீச வேண்டும்.

5. **சிறு குழந்தையின் சித்திரத்தில் நிறைந்து இருக்க வேண்டியவை யாவை?**
சிறு குழந்தையின் சித்திரத்தைத் தீட்டினால் அதன் பால் மணம் கமழ வேண்டும்.

6. **ஒரு வேண்டுகோள் கவிதை இடம்பெறும் நூல் எது? அதனை எழுதியவர் யார்?**
ஒரு வேண்டுகோள் கவிதை இடம் பெறும் நூல் : பெய்து பழகிய மேகம். அதனை எழுதியவர் : கவிஞர் தேனரசன்.

## சிறு வினா

1. **கவிஞர் தேனரசன் பற்றிக் குறிப்பு வரைக.**
- ✍ கவிஞர் தேனரசன் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.
- ✍ வானம்பாடி, தென்றல், குயில் ஆகிய இதழ்களில் கவிதை எழுதியுள்ளார்.
- ✍ இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்.
- ✍ படைப்புகள் : மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் முதலிய கவிதை நூல்கள்.

## கற்பவை கற்றபின்

1. **உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு கலை பற்றிய தகவல்களைத் திரட்டுக.**
எனக்குப் பிடித்த கலை சிலம்பாட்டக் கலை. இது தமிழரின் தற்காப்புக் கலை. இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்பர். இது தடியைக் கையாளும் முறை. கால அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் எனப் பல கூறுகளைக்கொண்டது. சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பியினால் தொடுதல் போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.

2. **உழைப்பாளர்களின் பெருமையைக் கூறும் கவிதைகளைத் தொகுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| “நீங்கள் சேற்றில்<br>கால் வைத்ததல் தான்<br>நாங்கள் சோற்றில் கைவைக்கமுடியும்” | “உழைப்பாளியின்<br>வியர்வையே<br>அமுதம்” | ”உழைப்பாளிகளே<br>பூமியின்<br>கதிரவன்கள்” |

❖❀❖

பருவம் 2 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 3 கவிதைப் பேழை

# கீரைப்பாத்தியும் குதிரையும்

**மனப்பாடப் பாடல்**

கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால்- முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே.

**நூல்** : காளமேகப்புலவர் தனிப்பாடல் திரட்டு
**ஆசிரியர்** : காளமேகப்புலவர்

**காளமேகப்புலவர்**

காளமேகப்புலவரின் இயற்பெயர் வரதன். மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைந்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார். திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது தனிப்பாடல்கள் தனிப்பாடல் திரட்டு என்னும் நுலில் இடம் பெற்றுள்ளன. அந்நூலிலிருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

தமிழ் 7

## சொல்லும் பொருளும்

வண்கீரை - வளமான கீரை
பரி - குதிரை
முட்டப்போய் - முழுதாகச் சென்று
கால் - வாய்க்கால், குதிரையின் கால்.
மறித்தல் - தடுத்தல் (மண்ணை வெட்டித் தடுத்துப்பாத்தி கட்டுதல்).
எதிரிகளைத் தடுத்துத் தாக்குதல்.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் ___________

அ) யானை ஆ) குதிரை இ) மான் ஈ) மாடு [விடை : ஆ]

2. **பொருந்தாத ஓசை உடைய சொல் ________**

அ) பாய்கையால் ஆ) மேன்மையால்

இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால் [விடை : இ]

3. **'வண்கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) வண் + கீரை ஆ) வண்ணம் + கீரை

இ) வளம் + கீரை ஈ) வண்மை + கீரை [விடை : ஈ]

4. **கட்டி + அடித்தல் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) கட்டியிடித்தல் ஆ) கட்டியடித்தல்

இ) கட்டி அடித்தல் ஈ) கட்டு அடித்தல் [விடை : ஆ]

## சிறுவினா

1. **கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?**

| கீரைப்பாத்தி | குதிரை |
|---|---|
| ❖ மண்கட்டிகளை அடித்துத் தூளாக்குவர்.<br>❖ மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்திகளாக்கி வைத்திருப்பர்.<br>❖ வாய்க்காலில் மாறி மாறி நீர்ப்பாய்ச்சுவர்.<br>❖ நீர் கடைமடையின் இறுதிவரை சென்று மாற்றிவிடத் திரும்பும். | ❖ வண்டிகளில்கட்டி, அடித்து ஓட்டப்படும்.<br>❖ கால் மாறி மாறிப் பாய்ந்து செல்லும்.<br>❖ எதிரிகளை மறித்துத் தாக்கும்.<br>❖ போக வேண்டிய இடம் முழுதும் சென்று மீண்டும் திரும்பி வரும். |

- இத்தகைய காரணங்களால் கீரைப்பாத்தியும் குதிரையும் ஒத்திருக்கின்றன.

## சிந்தனை வினா

**நீங்கள் எவற்றைக் குதிரையோடு ஒப்பிடுவீர்கள்?**

நான் குதிரையையும் ஆற்றையும் ஒப்பிடுவேன். குதிரை மற்றும் ஆறு ஆகிய இரண்டும் ஓடும், சுழி இருக்கும். தாக்கும்.

## கூடுதல் வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **காளமேகப்புலவரின் இயற்பெயர்**

அ) வரதன் ஆ) சுப்புரத்தினம்

இ) எத்திராசுலு ஈ) சுப்ரமணியம் [விடை : அ]

பருவம் 2 7

2. **தடுத்தல் என்னும் பொருள் தரும் சொல் ------**

அ) வண்கீரை ஆ) பரி

இ) மறித்தல் ஈ) முட்டப்போய் **[விடை : இ]**

## குறுவினா

1. **காளமேகப்புலவர் - பெயர்க்காரணம் யாது?**

மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைந்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார்.

2. **காளமேகப்புலவர் இயற்றிய நூல்கள் யாவை?**

❖ திருவானைக்கா உலா ❖ சரசுவதி மாலை ❖ பரபிரம்ம விளக்கம் ❖ சித்திர மடல்

3. **காளமேகப் புலவர் கூறும் குதிரையில் இயல்புகள் யாவை?**

✍ வண்டிகளில் கட்டி, அடித்து ஓட்டப்படும்.
✍ கால் மாறி மாறிப் பாய்ந்து செல்லும்.
✍ எதிரிகளை மறித்துத் தாக்கும்.
✍ போக வேண்டிய இடம் முழுதும் சென்று மீண்டும் திரும்பி வரும்.

4. **இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**

ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடுதல் இரட்டுற மொழிதல் ஆகும். இதனை சிலேடை என்றும் கூறுவர்.

## சிறு வினா:

1. **காளமேகப்புலவர் குறிப்பு வரைக.**

✍ காளமேகப்புலவரின் இயற்பெயர் வரதன்.
✍ மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைந்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார்.
✍ திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.
✍ இவரது தனிப்பாடல்கள் தனிப்பாடல் திரட்டு என்னும் நுலில் இடம் பெற்றுள்ளன.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்

**இரு பொருள் தரும் சொற்கள் சிலவற்றை எழுதி, அவற்றின் இரு பொருள்களையும் எழுதுக.**

**(எ.கா) மாலை - மலர் மாலை, அந்திப்பொழுது.**

| | | | |
|---|---|---|---|
| ஆறு | - எண் , நதி | பார் | - உலகம், பார்த்தல் |
| அன்னம் | - சோறு, பறவை | திரை | - கடல் அலை, திரைச்சீலை |
| மதி | - அறிவு, நிலவு | படி | - படித்தல், படிக்கட்டு |
| நகை | - புன்னகை, அணிகலன் | இசை | - புகழ், சங்கீதம் |
| மெய் | - உடல், உண்மை | வேங்கை | - மரம், விலங்கு |
| திங்கள் | - மாதம், நிலவு | கிளை | - மரக்கிளை, உறவு |
| மாடு | - விலங்கு, செல்வம் | மா | - மாமரம், பெரிய |
| தை | - மாதம், தைத்தல் | மறை | - மறைத்தல், வேதம் |

❖❀❖

## நகைச்சுவைப் புதிர்

1. கடுமையான மழை நேரத்தில் ஒருவர் குடையின்றி பாதையில் நடந்து சென்றார். அவரின் தலைமுடி ஒன்று கூட நனையவில்லை. காரணம் என்ன?

2. ஒரு விமானம் விபத்துக்குள்ளாகிவிட்டது, தப்பியவர்களை எங்கு அடக்கம் செய்வார்கள்.

3. ஒரு ஆப்பிள் மரக்கிளையில் 10 ஆப்பிள்கள் இருந்தன. அவ்வழியில் 10 பேர் சென்றனர். அவர்களில் தலா ஒரு பழம் பறிக்க 9 ஆப்பிள்கள் எஞ்சியிருந்தன. எப்படி?

விடை பக்கம் : 170

❖❀❖

பருவம் 2 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 3 உரைநடை உலகம்

# பேசும் ஓவியங்கள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று ---------.
   அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம்
   இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல் [விடை : அ]

2. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் ----------.
   அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்
   இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம் [விடை : ஈ]

3. 'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------
   அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்
   இ) கோட் + டோவியம் ஈ) கோடி + ஓவியம் [விடை : ஆ]

4. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------
   அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு
   இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு [விடை : இ]

5. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------------
   அ) எழுத்து ஆணி ஆ) எழுத்தாணி
   இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி [விடை : ஆ]

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் ________ விடை : பாரதியார்
2. கலம்காரி ஓவியம் என்றுஅழைக்கப்படுவது ________ விடை : துணி ஓவியம்
3. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் ________ மீது பொறித்துப் பாதுகாத்தனர். விடை : செப்பேடுகளில்

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### குறு வினா

**1. ஓவியங்களின் வகைகள் யாவை?**

1. குகை ஓவியம் 2. சுவர் ஓவியம் 3. துணி ஓவியம்
4. ஓலைச்சுவடி ஓவியம் 5. செப்பேட்டு ஓவியம் 6. தந்த ஓவியம்
7. கண்ணாடி ஓவியம் 8. தாள் ஓவியம் 9. கருத்துப்பட ஓவியம்
10. நவீன ஓவியம்

**2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?**

குகை ஓவியங்களில் இருந்து செய்திகளை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காக குகைகளில் ஓவியம் வரைந்ததையும் பழந்தமிழர் வாழ்க்கை முறைகளையும் அறியலாம்.

**3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?**

கரிக்கோல், நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றைக் கொண்டு தாள் ஓவியங்களை வரைவர்.

**4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.**

அரண்மனைகள், மண்டபங்கள், கோவில்கள் ஆகியவற்றின் மேற்கூரைகளிலும் சுவர்களிலும் சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களாகும்.

**5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?**

நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், குறியீடுகள் ஆகியன செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் ஆகும்.

### சிறு வினா

**1. கேலிச்சித்திரம் என்றால் என்ன?**

மனித உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை தோன்றும் படி வரைவதைக் கேலிச்சித்திரம் என்பர்.

**2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.**

✍ ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாக வரைவர்.

✍ இவை பெரும்பாலும் புராண, இதிகாசக் காட்சிகளைக் கொண்டு இருக்கும்.

✍ இவை தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் மட்டுமே காணப்படுகின்றது.

### சிந்தனை வினா

**1. தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?**

யானையின் தந்தங்கள் மீது வரையப்படும் ஓவியங்கள் தந்த ஓவியங்கள் ஆகும். இவ்வகை ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுகின்றன. கேரளாவில் யானைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வயது முதிர்ந்த யானைகளும், தந்தங்களும் கேரளாவில் அதிகம் காணப்படுகின்றது. எனவே, தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுகின்றது.

பருவம் 2 7

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **ஆய கலைகள் மொத்தம் ---------**
அ) 62 ஆ) 96 இ) 64 ஈ) 63 [விடை : இ]

2. **பழந்தமிழரின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள உதவும் ஓவியம் ---------**
அ) குகை ஓவியம் ஆ) துணி ஓவியம்
இ) ஓலைச்சுவடி ஓவியம் ஈ) செப்பேட்டு ஓவியம் [விடை : அ]

3. **தஞ்சை பெரியகோயிலில் உள்ள ஓவியம் --------**
அ) சுவர் ஓவியம் ஆ) துணி ஓவியம்
இ) ஓலைச்சுவடி ஓவியம் ஈ) செப்பேட்டு ஓவியம் [விடை : அ]

4. **தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வரும் ஓவியம் ---------,**
அ) சுவர் ஓவியம் ஆ) துணி ஓவியம்
இ) ஓலைச்சுவடி ஓவியம் ஈ) செப்பேட்டு ஓவியம் [விடை : ஆ]

5. **கேரளாவில் அதிகம் காணப்படும் ஓவியம் --------**
அ) தந்த ஓவியம் ஆ) துணி ஓவியம்
இ) ஓலைச்சுவடி ஓவியம் ஈ) செப்பேட்டு ஓவியம் [விடை : அ]

6. **கண்ணாடி ஓவியம் வரையும் ஓவியர்கள் காணப்படும் இடம் -------**
அ) கோவை ஆ) கேரளா இ) தஞ்சாவூர் ஈ) ஆந்திரா [விடை : இ]

7. **கருத்துப்பட ஓவியம் முதன் முதலில் வெளிவந்த இதழ் -------**
அ) எழுத்து ஆ) இந்தியா இ) விடுதலை ஈ) கணையாழி [விடை : ஆ]

**குறுவினா**

1. **ஓவியம் வரையப் பயன்படும் துணியின் வேறுபெயர்கள் யாவை?**
❖ எழினி ❖ திரைச்சீலை ❖ கிழி ❖ படாம்

2. **பசார் பெயிண்டிங் என்றால் என்ன?**
நாட்காட்டி ஓவியங்களை பசார் பெயிண்டிங் என்பர். இதன் முன்னோடி கொண்டையராஜு.

3. **ஓவியத்தின் வேறுபெயர்கள் யாவை?**
❖ ஓவு ❖ ஓவம் ❖ சித்திரம்
❖ படம் ❖ படாம் ❖ வட்டிகைச் செய்தி

தமிழ் 7

4. **ஓவியம் வரைபவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

❖ கண்ணுள்வினைஞர் ❖ ஓவியப் புலவர் ❖ ஓவமாக்கள்

❖ கிளவி வல்லோன் ❖ சித்திரக்காரர் ❖ வித்தகர்

5. **புனையா ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடும் இலக்கியங்கள் யாவை?**

❖ நெடுநல்வாடை ❖ மணிமேகலை

❖❀❖

இயல் 3 விரிவானம்

# தமிழ் ஒளிர் இடங்கள்

பருவம் 2 7

**நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால். சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?**

### சரசுவதி மகால் நூலகம்

தஞ்சை சரசுவதி மகால் நூலகம் இது தான். இந்தியாவில் உள்ள பழமையான நூலகம் இது. கி.பி.1122 ஆம் ஆண்டு முதல் இந்த நூலகம் இயங்கி வருகின்றது. தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல மொழிகளில் ஓலைச் சவடிகள் கையெழுத்துப் படிகள் இங்கு உள்ளன.

### தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் இது. 1981ல் தமிழுக்காகத் தொடங்கப்பட்ட பல்கலைக் கழகம். வானத்தில் இருந்து பார்க்கும் போது தமிழ்நாடு என்ற பெயர் தெரியும் படி கட்டடங்கள் இருக்கின்றன. 5 புலங்களும் 25 துறைகளும் இங்கு உள்ளன.

### உ.வே.சா. நூலகம்

இது உ.வே.சா. நூலகம். இங்கு 2128 ஓலைச் சுவடிகள் மற்றும் 2041 தமிழ்நூல்களும் உள்ளன.அடுத்தது கன்னிமாரா நூலகம் 1896 ல் இது தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டின் மைய நூலகம் இது. 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு உள்ளன.

### வள்ளுவர் கோட்டம்

இது தான் சென்னை வள்ளுவர் கோட்டம். திருவள்ளுவரின் புகழை உலகறியச் செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. 1330 குறட்பாக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

### திருவள்ளுவர் சிலை

இது தான் கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை. தமிழக அரசு இதனை நிறுவியது. வள்ளுவர் சிலை 133 அடி உரத்தில் உள்ளது. சிலையின் எடை ஏழாயிரம் டன் எடை கொண்டது. தமிழரின் அடையாளம் இது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**பூம்புகார் சிற்பக் கலைக்கூடம்**

இது அதான் பூம்புகார் சிற்பக் கலைக்கூடம். 2000 ஆண்டுகளுக்கு முன் இந்த நகரம் சோழர்களின் தலை நகரம். இக் கூடம் எழுநிலை மாடம் கொண்டது. கண்ணகியின் வரலாறை விளக்கும் 49 சிற்பத்தொகுதிகள் இடமபெற்றுள்ளது.

இப்படி பல சிறப்புகள் கொண்ட இடங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களின் சிறப்புகளை எழுதி வருக.**

எங்கள் ஈரோட்டில் பெரியார் - அண்ணா நினைவகம், தொல்லாய்வுக் கூடம், பவானி சாகர் அணை, கொடிவேரி அணை, மிகப்பெரிய ஜவுளிச் சந்தை ஆகியவை உள்ளன. தந்தை பெரியார் அவர்கள் பயன்படுத்திய அனைத்துப் பொருட்களும் நூல்களும் புகைப்படங்களும் நினைவகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பழமையைப் பறைசாற்றும் கல்வெட்டுகள், தொல்பொருட்கள் பாதுகாப்பிடமாக வ.உ.சி. பூங்கா அருகில் உள்ள தொல்லாய்வுக் கூடத்தில் உள்ளன. பழமைமிக்க நீர்த்தேக்கம் பவானிசாகர்.

**2. நீங்கள் கண்டுகளித்த இடங்களின் தனித்தன்மைகளை எழுதுக.**

நான் கண்டுகளித்த இடம் குற்றாலம். வேனிற் காலத்தில் குற்றாலத்தில் வீசும் காற்று, மூலிகைகளின் அருங்குணங்களை இழுத்து வரும் காட்டாற்று நீர் அருவியாக மூலிகை நீராகப் பொழியும். தீராத நோய் கூட குற்றால அருவியில் குளித்தால் நீங்குமாம்.

❖❀❖

## நகைச்சுவைப் புதிர்

4. ஒரு தந்தைக்கு நான்கு பெண்பிள்ளைகள் இருந்தனர். நான்கு மகள்களில் ஒவ்வொரு மகளுக்கும் ஒவ்வொரு சகோதரர் இருந்தார் எனில் அவருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள்?

5. யாழினியின் அம்மாவுக்கு மூன்று பெண் குழந்தைகள். மூத்தவள் கண்மணி, இரண்டாமவள் தமிழரசி. கடைசி மகளின் பெயர் என்னவாக இருக்கும்?

விடை பக்கம் : 170

❖❀❖

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 3 கற்கண்டு

# தொழிற்பெயர்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற் பெயர் எது?

அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி [விடை : இ]

2. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற் பெயர் எது?

அ) ஊறு ஆ) நடு இ) விழு ஈ) எழுதல் [விடை : ஆ]

**பொருத்துக.**

| வினா : | விடை : |
|---|---|
| 1. ஒட்டகம் - முதனிலைத் தொழிற்பெயர் | 1. ஒட்டகம் - விகுதி பெற்ற தொழிற்பெயர் |
| 2. பிடி - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் | 2. பிடி - முதனிலைத் தொழிற்பெயர் |
| 3. சூடு - விகுதி பெற்ற தொழிற்பெயர் | 3. சூடு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |

**சிறு வினா**

1. வளர்தல், பேசுதல் - இவை எவ்வகைப் பெயர்கள்? விளக்கம் தருக.

வளர்தல், பேசுதல் - இவை விகுதி பெற்ற தொழிற் பெயர்கள். ‘தல்’ என்ற தொழிற்பெயர் விகுதி பெற்று வருவதால் இஃது விகுதி பெற்ற தொழிற் பெயர்கள் ஆயிற்று.

2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

முதனிலைத் திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.

**சான்று** : விடு - வீடு

## மொழியை ஆள்வோம்

**பேசுக.**

**நீங்கள் கண்டு வியந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பற்றி வகுப்பறையில் பேசுக.**

வணக்கம். நான் கண்டு வியந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பற்றிப் பேசுகின்றேன். சித்தன்னவாசல் ஓவியங்களையும் மாமல்லபுரத்துச் சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. சித்தன்னவாசல் ஓவியங்கள் அனைத்தும் உயிரோட்டம் உள்ளவையாக, உண்மையான காட்சிகள் போல காட்சி அளிக்கின்றன. ஓவியங்களா உயிருள்ள பொருளா என்று வியக்கும் வகையில் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக் கல்சிற்பங்கள் அருமையானது. பஞ்சபாண்டவர் ரதம், நந்தி ஆகியன கலை நயத்துடனும் நவீன வேலைப்பாடுகள் அமைந்து காணப்படுகின்றது. நம் கலையறிவுக்குச் சான்றாக இது உள்ளது. அனைவரும் அதனைக் கண்டு களிப்போம். நன்றி.

பருவம் 2 7

**கவிதையை நிறைவு செய்க.**

வானும் நிலவும் அழகு
வயலும் **பயிரும் அழகு**
**கடலும் அலையும் அழகு**
**காற்றும் குளிரும்** அழகு.

**படம் உணர்த்தும் கருத்தை ஐந்து வரிகளில் எழுதுக.**



ஒன்று கூடுவோம் நாம் ஒன்று கூடுவோம்
பச்சை மரங்களைக் காப்போம்
பசுமையை நேசிப்போம்! சுவாசிப்போம்!
இனியொரு விதி செய்வோம்
இயற்கையைப் போற்றவே!

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஒரு தொடரில் முதல் மற்றும் இறுதிச்சொல்லாகக் கொண்டு சொற்றொடர் உருவாக்குக.**

**(ஓவியக்கலை, இசை, கட்டடக்கலை, வண்ணங்கள்)**

**(எ.கா.) :** **ஓவியக்கலை** கண்ணையும் கருத்தையும் கவர்கிறது.
நுண்கலைகளுள் ஒன்று **ஓவியக்கலை**.

1. **இசை**க்கு மயங்காத உயிர்கள் இல்லை.
   எங்கும் தமிழ் **இசை**.
2. **கட்டடக்கலை**யில் தமிழர் சிறந்திருந்தனர்.
   சிறந்த கலை **கட்டடக்கலை**.
3. **வண்ணங்கள்** தீட்டி ஓவியம் வரைவோம்.
   மயில் தோகையில் எண்ணற்ற **வண்ணங்கள்.**

**இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.**

| | | |
|---|---|---|
| **(எ.கா.)** வீடு கட்டினான் | - வீடு + ஐ + கட்டினான் | = வீட்டைக் கட்டினான் |
| 1. கடல் பார்த்தான் | - கடல் + ஐ + பார்த்தான் | = கடலைப் பார்த்தான் |
| 2. புல் தின்றது | - புல் + ஐ + தின்றது | = புல்லைத் தின்றது |
| 3. கதவு தட்டும் ஓசை | - கதவு + ஐ + தட்டும் + ஓசை | = கதவைத் தட்டும் ஓசை |
| 4. பாடல் பாடினாள் | - பாடல் + ஐ + பாடினாள் | = பாடலைப் பாடினாள் |
| 5. அறம் கூறினார் | - அறம் + ஐ + கூறினார் | = அறத்தைக் கூறினார். |

தமிழ் 7

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தலைப்பு : எங்கள் ஊர்**

**முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்பு மிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - முடிவுரை**

**முன்னுரை :**

அழகான நகரம், அமைதியான நகரம் எங்கள் ஈரோடு ஆகும். எண்ணற்ற வளங்கள் பொங்கும் இடம் ஈரோடு. மனிதநேயம் தவழும் நகர் எங்கள் ஈரோடு. அச்சிறப்புமிகு நகர் பற்றிக் காண்போம்.

**அமைவிடம் :**

கரூர், சேலம், கோவை ஆகியற்றுக் கிடையே ஈரோடு நகர் அமைந்துள்ளது. காடுகளும் வயல்களும் சூழ்ந்து நடுவினில் இயற்கை அழகு தவழும் வண்ணம் ஈரோடு அமைந்துள்ளது. காவிரி ஆறு பாயும் புண்ணிய பூமி ஈரோடு ஆகும்.

**பெயர்க்காரணம் :**

இரண்டு ஓடைகள் ஓடுவதால் ஈரோடை எனப்பெயர் பெற்றது.இதுவே காலப்போக்கில் மருவி ஈரோடு என்று ஆனது. பிரம்மா ஐந்தாவது தலையைத் துண்டித்த போது அந்த மண்டையோடு சிவபெருமானோடு ஒட்டிக்கொண்டு பிரம்ம தோசம் பிடித்தது. அவர் தோசம் போக இந்தியா முழுவதும் நீராடினார். ஈரோட்டில் வந்து நீராடிய போது மண்டை ஓடு மூன்றாகப் பிரிந்து மூன்று இடத்தில் விழுந்தது. ஈர் (இறுதி) ஓடு விழுந்த இடம் ஈரோடு ஆயிற்று என்பர்.

**தொழில்கள் :**

வேளாண்மை, கைத்தறி, ஜமக்காளம், ஆடை ஆயத்தம் ஆகிய தொழில்கள் ஈரோட்டில் சிறந்து விளங்கிவருகின்றது.

**சிறப்புமிகு இடங்கள் :**

பெரியார் - அண்ணா நினைவகம், திண்டல் முருகன் கோயில், பிரப் தேவாலயம், பள்ளிபாளையம் தர்கா, பண்ணாரி அம்மன் கோவில், வ.உ.சி.பூங்கா ஆகியன ஈரேட்டில் சிறப்புமிகு இடங்கள் ஆகும்.

**திருவிழாக்கள் :**

மாரியம்மன், பண்ணாரி அம்மன், பாரியூர் அம்மன், அறச்சாலை அம்மன் ஆகிய கோயில்களின் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படும். திரளான பக்தர்கள் இதில் கலந்து கொள்வர்.

**மக்கள் ஒற்றுமை :**

இந்து, இஸ்லாம், கிறித்துவம் ஆகிய சமயங்கள் எங்கள் நகரில் இருந்த போதும் மக்கள் அனைவரும் ஒரு தாய் பிள்ளை போல ஒற்றுமையாகவே இருந்துவருகின்றோம். ஒரே பகுதியில் கோயில், பள்ளிவாசல், தேவாலயம் ஆகிய மூன்றும் அமைந்து எங்கள் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

பருவம் 2 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com


**முடிவுரை :**

நம் நகரின் அருமை பெருமைகளை அறிந்து, நகரைக் காத்து வளப்படுத்துவது நமது கடமையாகும்.

## மொழியோடு விளையாடு

**கீழ்க்காணும் புதிரைப்படித்து விடையைக் கண்டறிக.**

1. நான் இனிமை தரும் இசைக் கருவி.

   எனது பெயர் ஆறு எழுத்துகளை உடையது.

   அதில் இறுதி நான்கு எழுத்துகள் விலை உயர்ந்த ஒரு உலோகத்தைக் குறிக்கும்.

   முதல் இரண்டு மற்றும் கடைசி இரண்டு எழுத்துகளைச் சேர்த்தால் விலங்கின் வேறு பெயர் கிடைக்கும்.

   நான் யார்? **விடை : மிருதங்கம்**

2. நான் ஒரு காற்றுக் கருவி.

   நான் புல் வகையைச் சேர்ந்த தாவரத்திலிருந்து உருவாக்கப்படுகிறேன்.

   எனது பெயர் ஏழு எழுத்துகளைக் கொண்டது.

   முதல் இரண்டு எழுத்துகள் ஒரு தாவர வகையைக் குறிக்கும்.

   நான் யார்? **விடை : புல்லாங்குழல்**

**பின்வரும் பத்திகளைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

சாலை விபத்துகளைத் தவிர்க்கச் சாலைவிதிகளை அறிந்து ஒவ்வொருவரும் வாகனங்களை ஓட்ட வேண்டும்.

சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும். இருவழிச் சாலையின் மையத்தில் விட்டுவிட்டுப் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரி சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். வாகனங்களை முந்துவதற்குக் கோட்டுக்கு வலது பக்கம் உள்ள சாலையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது. இரட்டை மஞ்சள்கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது.

ஒருவழிப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திசையில் மட்டுமே வாகனங்களைச் செலுத்த வேண்டும். தடக்கோடுகள் இடப்பட்டுள்ள சாலையில் தடத்தின் உள்ளேயே வாகனங்களைச் செலுத்த வேண்டும். வாகனத்தைப் பின்தொடரும்போது மிகவும் நெருக்கமாகப் பின்தொடரக்கூடாது. திரும்பும் போது சைகை காட்ட அடையாள விளக்கை ஒளிரச் செய்ய வேண்டும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**வினாக்கள்:**

1. **சாலையின் எந்தப்பக்கமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும்?**

 சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும்.

2. **விட்டுவிட்டுப் போடப்படும் வெள்ளைக்கோடு எதனைக்குறிக்கும்?**

 இருவழிச் சாலையின் மையத்தில் விட்டுவிட்டுப் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரி சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும்.

3. **எந்தக் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை?**

 இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது. இரட்டை மஞ்சள்கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக் கூடாது.

4. **ஒருவழிப் பாதை எனப்படுவது யாது?**

 போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஒரே சாலையில் இரு கூறாகப் பிரிக்காமல், வாகனங்கள் செல்வதற்கோ அல்லது வருவதற்கோ மைக்கப்பட்டுள்ளவை ஒருவழிப்பாதை ஆகும்.

5. **வாகனங்களைப் பின் தொடர்வதற்கான முறையைக்கூறு.**

 வாகனத்தைப் பின்தொடரும்போது மிகவும் நெருக்கமாகப் பின்தொடரக்கூடாது. திரும்பும் போது சைகை காட்ட அடையாள விளக்கை ஒளிரச் செய்ய வேண்டும்.

**நிற்க அதற்குத் தக....**

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| படைப்பாளர் | - creator | அழகியல் | - aesthetics |
| சிற்பம் | - sculpture | தூரிகை | - brush |
| கலைஞர் | - artist | கருத்துப்படம் | - cartoon |
| கல்வெட்டு | - inscriptions | குகை ஓவியங்கள் | - cave paintings |
| கையெழுத்துப்படி | - manuscripts | நவீன ஓவியம் | - modern art |

❖❀❖

பருவம் 2 7

இயல் 3 வாழ்வியல்

# திருக்குறள்

**மனப்பாடப் பாடல்**

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்மை படாஅ தவர்.

**நூல்** : **திருக்குறள்**
**ஆசிரியர்** : **திருவள்ளுவர்**

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **__________ தீமை உண்டாக்கும்.**

அ) செய்யத் தகுந்த செயல்களைச் செய்வதால்
ஆ) செய்யத் தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
இ) செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால் **[விடை : இ]**

2. **தன் குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் __________ இருக்கக் கூடாது.**

அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு
இ) ஏழ்மை ஈ) செல்வம் **[விடை : அ]**

3. **'எழுத்தென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________**

அ) எழுத்து + தென்ப ஆ) எழுத்து + என்ப
இ) எழுத்து + இன்ப ஈ) எழுத் + தென்ப **[விடை : ஆ]**

4. **'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________**

அ) கரைந்து + இன்னும் ஆ) கரை + துண்ணும்
இ) கரைந்து + உண்ணும் ஈ) கரை + உண்ணும் **[விடை : இ]**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. **கற்றனைத்து + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது---**

அ) கற்றனைத்தூறும் ஆ) கற்றனைதூறும்

இ) கற்றனைத்தீரும் ஈ) கற்றனைத்தோறும் [விடை : அ]

## பொருத்துக.

| வினா | | விடை | |
|---|---|---|---|
| 1. கற்கும் முறை | - செயல் | 1. கற்கும் முறை | -பிழையில்லாமல் கற்றல் |
| 2. உயிர்க்குக் கண்கள் | - காகம் | 2. உயிர்க்குக் கண்கள் | - எண்ணும் எழுத்தும் |
| 3. விழுச்செல்வம் | - பிழையில்லாமல் கற்றல் | 3. விழுச்செல்வம் | - கல்வி |
| 4. எண்ணித் துணிக | - எண்ணும் எழுத்தும் | 4. எண்ணித் துணிக | - செயல் |
| 5. கரவா கரைந்துண்ணும் | - கல்வி | 5. கரவா கரைந்துண்ணும் | - காகம் |

## குறுவினா

1. **'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?**

நாம் ஒருவருடைய பண்பை அறிந்த அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நன்மை செய்தாலும் தீமை வந்து சேரும்.

2. **தீமை உண்டாக்கும் இரண்டு செயல்கள் யாவை?**

செய்யத்தகாத செயல்களைச் செய்வதாலும் செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதாலும் தீமை உண்டாகும்.

3. **துன்பத்தில் துன்பம் உண்டாக்குபவர் யார்?**

துன்பம் வந்த போது வருந்திக் கலங்காதவர்,அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவர்.

**பாடப்பகுதியிலிருந்து படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**

**விடை :**

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.





**விடை :**

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

1 0 2 3 8
அ ஆ க ச ட த



**கூடுதல் வினா**

## குறுவினா

1. **எப்படிக் கற்று? எப்படி நடக்க வேண்டும்?**

கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. கண் போன்றவை எவை?**

எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.

**3. மக்கள் அறிவு எதனைப் போல வளரவேண்டும்?**

தோண்டும் அளவிற்கு ஏற்ப மணற்கேணியில் நீர் ஊறும். அதுபோல் கற்கும் அளவிற்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும்.

**4. அழிவில்லாத சிறந்த செல்வம் எது ? ஏன்?**

அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை.

**5. ஒரு செயலை எப்படி செய்யவேண்டும்?**

எந்தச் செயலையும் நன்கு சிந்தித்த பின் தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

**6. யாரிடம் செல்வம் சேரும்?**

காகம் தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தன் சுற்றத்தாரைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய பண்பு உடையவர்களிடமே செல்வமும் சேரும்.

❖❀❖

## நகைச்சுவைப் புதிர் விடைகள்

1. அவரின் தலை மொட்டைத்தலை
2. தப்பியவர்களை அடக்கம் செய்யமாட்டார்கள்.
3. தலா என்பது ஒருவரின் பெயர். மற்ற 9 பேரும் பழம் பறிக்கவில்லை.
4. 5 பிள்ளைகள்.
5. யாழினி

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மாதிரி வினாத்தாள்

**ஏழாம் வகுப்பு - தமிழ் பருவம் - 2**
**இயல் - மூன்று**

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

1. மயிலும் மானும் வனத்திற்கு -------- தருகின்றன.

அ) களைப்பு ஆ) வனப்பு இ) மலைப்பு ஈ) உழைப்பு

2. 'வண்கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------

அ) வண் + கீரை ஆ) வண்ணம் + கீரை
இ) வளம் + கீரை ஈ) வண்மை + கீரை

3. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------

அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

4. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற் பெயர் எது?

அ) ஊறு ஆ) நடு இ) விழு ஈ) எழுதல்

**II. குறு விடை தருக.** **3 x 2 = 6**

5. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை?
6. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?
7. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

**III. சிறு விடை தருக.** **3 x 2 = 6**

8. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
9. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **1 x 4 = 4**

10. 'கட்டி அடிக்கையால்' எனத் தொடங்கும் இரட்டுறமொழிதல் பாடல்.

❖❀❖

பருவம் 2 7

## மாதிரி வினாத்தாள் - தொகுத்தறி மதிப்பீடு

**ஏழாம் வகுப்பு - தமிழ்**

**பருவம் - 2**

**காலம் : 2.00 மணி** **மதிப்பெண் : 60**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 14 x 1 = 14**

1. வேயா மாடம் எனப்படுவது --------.
அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது

2. உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை

3. "பெருங்கடல்" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல்
இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்

4. இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது.
அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி இ) இன்றாகி ஈ) இன்றாஆகி

5. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி
அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்டை ஈ) சமுக்கு

6. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------
அ) ஏடே + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்
இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்

7. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் -------.
அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

8. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ------- என அழைக்கப்படும்.
9. கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவா -------
10. கேரளாவில் அதிகம் காணப்படும் ஓவியம -------

**பொருத்துக.**

11. வங்கம் - பகல்
12. நீகான் - கப்பல்
13. எல் - கலங்கரை விளக்கம்
14. மாட ஒள்ளெரி - நாவாய் ஓட்டுபவன்

**II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளிக்க. 6 x 2 = 12**

15. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

16. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணைசெய்கிறது?
17. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
18. பெரிய கப்பற்படை கொண்டு பலநாடுகள் வென்ற சோழர்கள் யாவர்?
19. பாரதிதாசனின் மனதைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
20. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
21. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?
22. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
23. காளமேகப்புலவர் - பெயர்க்காரணம் யாது?
24. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?

**III. அடிபிறழாமல் எழுதுக.** **3 + 2 = 5**

25. ‘வானம் ஊன்றிய’ எனத் தொடங்கும் கலங்கரை விளக்கப் பாடல்.
26. தொட்டனைத்து எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

**IV. எவையேனும் மூன்றனுக்குச் சுருக்கமாக விடையளிக்க.** **3 x 2 = 6**

27. மண் ,பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?
28. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
29. பதத்தின் இருவகைகள் யாவை?
30. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
31. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

**V. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளில் விடையளிக்க.** **2 x 5 = 10**

32. அ) கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

(அல்லது)

ஆ) ‘இன்பத்தமிழ்க் கல்வி’ - பாடலின் மையக்கருத்தை நும் சொந்த நடையில் எழுதுக.

33. அ) சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.

(அல்லது)

ஆ) கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.** **2 x 5 = 10**

34. ‘ஆழ்கடலின் அடியில்’ கதையைச் சுருக்கி வரைக.
35. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - பயணத்தின் தேவை - தரைவழிப்பயணம் - கடல்வழிப்பயணம் - வான்வழிவழிப் பயணம் - முடிவுரை
36. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையாளருக்குக் கடிதம் எழுதுக.

**VII. கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களை வகைப்படுத்துக.** **1 x 3 = 3**

37. நல்லூர், வடை, கேட்டல், முகம், அன்னம், செம்மை, காலை, வருதல், தோகை, பாரதிதாசன், பள்ளி, இறக்கை, பெரியது, சோலை, ஐந்து மணி, விளையாட்டு, புதன்.

❖❀❖

பருவம் 2 7

# 7

# தமிழ்

## மூன்றாம் பருவம்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கவிதைப் பேழை

# விருந்தோம்பல்

**மனப்பாடப் பாடல்**

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு - நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்
ஒன்றாகு முன்றிலோ இல்.

**நூல்** : **பழமொழி நானூறு**
**ஆசிரியர்** : **முன்றுறை அரையனார்**

**முன்றுறை அரையனார்**

- பெயர் : முன்றுறை அரையனார்
- காலம் : கி.பி.4
- படைப்பு : பழமொழி நானூறு
- சமயம் : சமணர்

பருவம் 3

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| மாரி | - மழை | மடமகள் | - இளமகள் |
| வறந்திருந்த | - வறண்டிருந்த | நல்கினாள் | - கொடுத்தாள் |
| புகவா | - உணவாக | முன்றில் | - வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது. |

### பாடநூல் மதிப்பீட்டு வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மரம் வளர்த்தால் --------- பெறலாம்.**

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி [**விடை : ஆ**]

2. **'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------**

அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்
இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில் [**விடை : இ**]

7

3. **மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ----------**

அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று

இ) மாரியின்று ஈ) மாரியன்று **[விடை : அ]**

**குறு வினா**

1. **பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**

✍ அங்கவை ✍ சங்கவை

2. **'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' - எவ்வாறு?**

✍ மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை,சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர்.

✍ பாரி மகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

**சிந்தனை வினா**

**தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.**

ஈகை, உயிரிரக்கம், நடுவுநிலைமை, பிறருக்கென வாழ்தல், எளிய வாழ்க்கை, தூய அன்பு, உலகப்பொதுமை ஆகியன தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகள் ஆகும்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **திண்ணை என்பதைக் குறிக்கும் சொல் ----------.**

அ) மாரி ஆ) புகவா இ) மடமகள் ஈ) முன்றில் **[விடை : ஈ]**

2. **மாரி என்பதன் பொருள் ----------.**

அ) மழை ஆ) உணவு இ) இளமகள் ஈ) திண்ணை **[விடை : அ]**

3. **பழமொழி நானூறு நூலின் ஆசிரியர்**

அ) காரியாசான் ஆ) முன்றுறை அரையனார்

இ) விளம்பிநாகனார் ஈ) பாரி **[விடை : ஆ]**

4. **பழமொழி நானூறு --------- நூல்களுள் ஒன்று.**

அ) பதினெண்கீழ்க்கணக்கு ஆ) பதினெண்மேல்கணக்கு

இ) சிற்றிலக்கியம் ஈ) காப்பியம் **[விடை : அ]**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**குறு வினா**

**1. முன்றுறை அரையனார் - குறிப்பு வரைக.**

- ✍ பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார் ஆவார்.
- ✍ இவர் கி.பி. (பொ.ஆ.) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.
- ✍ பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறியமுடிகிறது.

**2. பழமொழி நானூறு - குறிப்பு வரைக.**

- ✍ பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- ✍ இது நானூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால், இது பழமொழி நானூறு என்னும் பெயர் பெற்றது.

**3. ''ஒன்றாகு முன்றிலோ இல்'' என்னும் பழமொழியின் பொருள் யாது?**

ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்பதே ''ஒன்றாகு முன்றிலோ இல்'' என்னும் பழமொழியின் பொருள் ஆகும்.

## கற்பவை கற்றபின்

**1. வள்ளல்கள் எழுவரின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

பாரி, திருமுடிக்காரி, வல்வில் ஓரி, ஆய் அண்டிரன், பேகன், நள்ளி, அதியமான் நெடுமானஞ்சி ஆகியோர் கடை எழுவள்ளல்கள்.

**2. விருந்தோம்பல் பண்பை விளக்கும் கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.**

ஓர் ஊரில் சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவரும் அவரது குடும்பமும் தினமும் யாரேனும் ஒருவருக்காவது விருந்தோம்பல் செய்வது வழக்கம். சிவனடியாரின் குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்தாலும் அதனைக்காட்டாது, விருந்தினரை உபசரிப்பர். விருந்தினர் உண்ட பின்புதான் அனைவரும் உண்ணுவர். காலையில் இருந்து மாலை வரை உணவு தயாராக இருந்தும் விருந்தினர் வராததால் யாரும் உண்ணாமல் பட்டினி கிடந்தனர். சிவனடியாரின் குழந்தைகளும் காலையில் இருந்து மாலை வரை பட்டினியாகக் கிடந்து, அழ ஆரம்பித்துவிட்டனர். இரவு நேரத்தில் பெரியவர் ஒருவர் வந்தார். ஆனால் அவரோ தான் யார்வீட்டிலும் உண்ணுவதில்லை, இரவு தங்குவதற்கு இடம்தாருங்கள், அது போதும் என்றார். சிவனடியார் தன் நிலையை உணர்த்தி, தாங்கள் உண்டால் தான். என்னுடைய குழந்தைகள் உண்ண முடியும் என்றார். குழந்தைகளுக்காக அந்தப் பெரியவரும் சாப்பிட்டார். பிறகு அனைவரும் உண்டனர்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 கவிதைப் பேழை

# வயலும் வாழ்வும்



| | |
|---|---|
| பெயர் | : கிருஷ்ணராயபுரம் வாசுதேவ ஜெகந்நாதன் |
| காலம் | : 11.04.1906 - 04.11.1988 |
| சிறப்பு | : உ.வே.சாவின் மாணவர், 1967இல் ‘வீரர் உலகம்’ என்னும் இலக்கிய விமர்சன படைப்பிற்கு சாகித்ய அகெதமி விருது. |
| படைப்புகள் | : அதியமான் நெடுமான் அஞ்சி, அதிசியப்பெண், அறுந்ததந்தி, ஆத்ம ஜோதி உள்ளிட்ட 134 நூல்கள்என்கதை, சங்கொலி |

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| குழி | - நில அளவைப்பெயர் | சீலை | - புடலை |
| சாண் | - நீட்டல் அளவைப்பெயர் | மடை | - வயலுக்கு நீர் வரும் வழி |
| மணி | - முற்றிய நெல் | கழலுதல் | - உதிர்தல் |

சும்மாடு - பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **உழவர் சேற்று வயலில் ---------- நடுவர்.**
   அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று **[விடை : ஈ]**
2. **வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ---------- செய்வர்.**
   அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை **[விடை : அ]**
3. **‘தேர்ந்தெடுத்து’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ----------.**
   அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து + தெடுத்து
   இ) தேர்ந்தது + அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து **[விடை : ஈ]**
4. **‘ஓடை + எல்லாம்’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல ----------.**
   அ) ஓடைஎல்லாம் ஆ) ஓடையெல்லாம்
   இ) ஓட்டையெல்லாம் ஈ) ஓடெல்லாம் **[விடை : ஆ]**

தமிழ் 7

**பொருத்துக.**

| வினா | | விடை | |
|---|---|---|---|
| 1. நாற்று | - பறித்தல் | 1. நாற்று | - நடுதல் |
| 2. நீர் | - அறுத்தல் | 2. நீர் | - பாய்ச்சுதல் |
| 3. கதிர் | - நடுதல் | 3. கதிர் | - அறுத்தல் |
| 4. களை | - பாய்ச்சுதல் | 3. களை | - பறித்தல் |

**வயலும் வாழ்வும் பாடலில் உள்ள மோனை,எதுகைச் சொற்களை எழுதுக.**

| மோனைச் சொற்கள் (முதல் எழுத்து ஒரே மாதிரியாக வருவது) | எதுகைச் சொற்கள் (இரண்டாவது எழுத்து ஒரே மாதிரியாக வருவது) |
|---|---|
| ஓடை - ஓடியோடி | சாலுசாலாத் - நாலுநாலா |
| மடமடன்னு - மண்குளிரத் | ஒண்ணரைக் குழி - மண்குளிர - நண்டும் |
| நாத்தெல்லம் - நாலுநாலா | சேத்துக்குள்ளே - நாத்தேல்லாம் |
| மணிபோலப் - மனதையெல்லாம் | கிழக்கத்தி - கழலுதையா |
| சும்மாடும் - சுறுசுறுப்பும் | |

**பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.**

(எ.கா.) போயி - **போய்**
பிடிக்கிறாங்க - **பிடிக்கிறார்கள்**
வளருது - **வளர்கிறது**
இறங்குறாங்க - **இறங்குகிறார்கள்**
வாரான் - **வரமாட்டான்**

**குறுவினா**

1. **உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?**
   நாற்றுப் பறிக்கும்போது உழவர்கள் வயல் வரப்பில் உள்ள நண்டுகளைப் பிடித்தனர்.

2. **நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?**
   கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து நெற்கதிரிலிருந்து நெல்மணியைப் பிரிப்பர். இதற்கு போரடித்தல் என்று பெயர்.

**சிறுவினா**

1. **உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.**
   ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் சுறுசுறுப்பாக நட்டனர். நடவு நட்ட வயலின் மண்குளிருமாறு மடைவழியே நீர்பாய்ச்சினர். நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன. பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைந்தன. அறுவடை செய்யும் ஆட்களுக்குப் பணம் கொடுத்தனர். அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டித் தலைக்குச் சும்மாடு வைத்துத் தூக்கிச் சென்று களத்தில் சேர்த்தனர். கதிரடித்த நெல்தாள்களைக் கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிந்தனை வினா**

**உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.**

ஆற்றங்கரையில் நாகரிகம் உருவாகக் காரணமானது உழவுத்தொழில். விதைகளை விதைப்பதும், அவற்றுக்கு நீர்பாய்ச்சி வளர்ப்பது மட்டுமே பழங்காலத்தில் நடைபெற்றது. பின்னர், மனிதன் தன் சுய அறிவால் உழவுத்தொழிலுக்கு உதவியாக மாடுகளைப் பயன்படுத்தி இயற்கை எருக்களைக் கொண்டு பயிரிட்டான். பின்னர் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, உழுகருவிகளையும் விதைத்தல் கருவிகளையும், பூச்சிக்கொல்லி, செயற்கை உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கினான்.

## கூடுதல் வினா

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே __________ எனப்படுகிறது. **விடை : நாட்டுப்புறப்பாடல்**

2. நாட்டுப்புறப்பாடல்களை __________ என்றும் வழங்குவர். **விடை : வாய்மொழி இலக்கியம்**

3. பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை __________ என்னும் நூலில் கி.வா. ஜெகந்நாதன் தொகுத்துள்ளார். **விடை : மலை அருவி**

**சிறுவினா**

**1. போரடித்தல் என்றால் என்ன?**

அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர். நெல் தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர். இதற்குப் போரடித்தல் என்று பெயர்.

## கற்பவை கற்றபின்

**1. வேளாண்மை சார்ந்த கருவிகளின் பெயர்களை எழுதி வருக.**

ஏர், மண்வெட்டி, உழவு இயந்திரம், விதைக்கலப்பை, களைவெட்டும் இயந்திரம், நீர் பாசன இயந்திரம், ஊசலாடும் கூடை, வேளாண் வானூர்தி, தாள்க்கத்தி, கதிரடி இயந்திரம், களம், படல், உமி நீக்கி, இணை அறுவடை இயந்திரம்.

❖❀❖

இயல் 1 உரைநடை உலகம்

# திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **திருநெல்வேலி ---------- மன்னர்களோடு தொடர்பு உடையது.**

அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ **[விடை : இ]**

2. **இளங்கோவடிகள் ---------- மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.**

அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய **[விடை : இ]**

3. **திருநெல்வேலி ---------- ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.**

அ) காவிரி ஆ) வைகை
இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி **[விடை : ஈ]**

**பொருத்துக.**

| வினா | | விடை | |
|---|---|---|---|
| 1. தண்பொருநை | - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம் | 1. தண்பொருநை | - தாமிரபரணி. |
| 2. அக்கசாலை | - குற்றாலம் | 2. அக்கசாலை | - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம் |
| 3. கொற்கை | - தாமிரபரணி | 3. கொற்கை | - முத்துக்குளித்தல் |
| 4. திரிகூடமலை | - முத்துக் குளித்தல் | 4. திரிகூடமலை | - குற்றாலம |

**குறு வினா**

1. **தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?**

பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி ஆகியவை தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் ஆகும்.

2. **கொற்கை முத்து பற்றிக் கூறுக.**

✍ தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் இருந்தது.
✍ இங்கு முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்றது.
✍ கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது.

## சிறு வினா

**1. திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.**

✍ திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத்தொழில். தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது.

✍ இங்குக் குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது.

✍ மானாவாரிப் பயிர்களாகச் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**2. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

✍ அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார் என்பர்.

✍ சங்கப்புலவர்களான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலியில் பிறந்து தமிழுக்குச் செழுமை சேர்த்துள்ளனர்.

✍ ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரைத் தமிழின்பால் ஈர்த்த பெருமை திருநெல்வேலிக்கு உரியது.

**3. திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றிக் கூறுக.**

✍ நெல்லையில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குச் சான்றாக உள்ளன.

✍ காவற்புரைத் தெரு என்று ஒரு தெரு உள்ளது. அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்கு சிறைவைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

✍ மேல வீதியை அடுத்து கூழைக்கடைத் தெரு உள்ளது. அதாவது தானியங்கள் விற்கும் கடைத் தெரு ஆகும்.

✍ முற்காலத்தில் பொன் நாணயங்களை உருவாக்குபவர் வாழ்ந்த இடம் அக்கசாலைத் தெரு. பெரு வணிகம் நடைபெற்ற இடம் பேட்டை.

## சிந்தனை வினா

**1. மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

✍ இயற்கை வளம் மிகுந்ததாக இருக்க வேண்டும்.

✍ அனைத்துப் பொருட்களும் அருகில் கிடைக்கும் படி இருக்க வேண்டும்.

✍ சாதி மத பேதமின்றி மதநல்லிணக்கத்தைப் போற்றும் படியாக இருக்க வேண்டும்.

✍ சுற்றுப்புறத்தூய்மை உடையதாக இருக்க வேண்டும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என அழைக்கப்படும் நகர் -----------.**
அ) பாளையங்கோட்டை ஆ) பேட்டை
இ) சேரன்மாதேவி ஈ) செங்கோட்டை [விடை : அ]

2. **முற்காலத்தில் வேணுவனம் என அழைக்கப்படும் இடம் -----------.**
அ) பாளையங்கோட்டை ஆ) பேட்டை
இ) சேரன்மாதேவி ஈ) செங்கோட்டை [விடை : ஆ]

3. **பாண்டியர்களின் இரண்டாவது தலைநகர் -----------.**
அ) பாளையங்கோட்டை ஆ) திருநெல்வேலி
இ) சேரன்மாதேவி ஈ) செங்கோட்டை [விடை : ஆ]

4. **இலக்கியங்களில் திரிகூடமலை என்று குறிக்கப்படும் மலை -----------.**
அ) பொதிகை மலை ஆ) குற்றால மலை
இ) பொருநை ஈ) பேட்டை [விடை : ஆ]

5. **திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு -----------.**
அ) காவிரி ஆறு ஆ) தாமிரபரணி ஆறு
இ) நொய்யல் ஆறு ஈ) வைகை ஆறு [விடை : ஆ]

6. **தண்பொருநை நதி என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டநதி -----------.**
அ) காவிரி ஆறு ஆ) தாமிரபரணி ஆறு
இ) நொய்யல் ஆறு ஈ) வைகை ஆறு [விடை : ஆ]

**குறுவினா**

1. **மூவேந்தர் யாவர்?**
சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர் மூவேந்தர் என்று அழைக்கப்பட்டனர்.

2. **திருநெல்வேலி என்னும் பெயர் பெற்ற தன் காரணம் யாது?**
நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது.

3. **திருநெல்வேலியில் சிறப்புமிக்க பழமையான மலைகள் யாவை?**
❖ பொதிகை மலை ❖ குற்றால மலை

4. **இரட்டை நகரங்கள் யாவை?**
திருநெல்வேலியும், பாளையங்கோட்டையும் இரட்டை நகரங்கள் என அழைக்கப் படுகின்றன.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. **பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படுவதன் காரணம் யாது?**

பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால், பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படுகின்றது.

6. **பண்டைய வரலாற்றை நினைவூட்டும் திருநெல்வேலி ஊர்கள் யாவை?**

❖ சேரன்மாதேவி ❖ கங்கைகொண்டான் ❖ திருமலையப்பபுரம்
❖ வீரபாண்டியப்பட்டினம் ❖ குலசேகரன் பட்டனம்

7. **திருநெல்வேலி ஈர்த்த அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் யாவர்?**

❖ ஜி.யு. போப் ❖ கால்டுவெல் ❖ வீரமாமுனிவர்

8. **திருநெல்வேலியில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் யாவர்?**

மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர்.

**சிறுவினா**

1. **திருநெல்வேலி -பெயர்க்காரணம் யாது?**

✍ முற்காலத்தில் திருநெல்வேலிக்கு மூங்கில் காடு என்னும் பொருள் கொண்ட ‘வேணுவனம்’ என்னும் பெயர் இருந்தது.

✍ மூங்கில் நெல் மிகுதியாக விளைந்ததால் அப்பகுதிக்கு ‘நெல்வேலி’ என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

✍ நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது.

**கற்பவை கற்றபின்**

1. **உங்களுடைய மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய செய்திகளைத் தேடித் தொகுக்க.**

கொடிவேரி அணை, வெள்ளோடு பறவைகள் சரணாலயம், பெரியார் - அண்ணா நினைவகம், பவானி சங்கமேஸ்வரர் கோயில், ஜவுளிச் சந்தை, அந்தியூர் குருநாத சாமி கோயில், பண்ணாரி அம்மன் கோயில், பவானி சாகர் ஆகியன ஈரோடு மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்கள்.

2. **தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள் பற்றிய செய்திகளைத் தொகுக்க.**

திருநெல்வேலி, திருப்பூர், வேலூர், கோவை, மதுரை, திருச்சி, சேலம், தூத்துக்குடி, தஞ்சாவூர் , திண்டுக்கல், தஞசாவூர், ஈரோடு - ஆகியன தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 1 விரிவானம்

# திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

- பெயர் : டி.கே. சிதம்பரநாதர் (ரசிகமணி டி.கே.சி)
- பணி : வழக்கறிஞர், எழுத்தாளர், திறனாய்வாளர்
- சிறப்புப் பெயர் : இரசிகமணி, தமிழிசைக்காவலர், கடித இலக்கிய முன்னோடி, வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர்
- காலம் : 16.09.1882 - 16.02.1954
- படைப்புகள் : கம்பர் தரும் இராமாயணம், ரசிகமணி கட்டுரைகள்

பருவம் 3

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**டி.கே.சி. குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறந்த புலவர்கள் பலர் உருவாகியுள்ளனர். அவர்களுள் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த புலவர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**எட்டையபுரம்:**

கவிமணி பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். எட்டையபுர சமஸ்தானம் நெடுகிலும் ஊர் ஊராய்ப் புலவர்களும் கவிராயர்களும் வாழ்ந்தனர். தேசிகவிநாயகனார் கன்னியாகுமரிப் பக்கம் - அதாவது நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்தவராய் இருந்தாலும் அவர் தமிழை அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் திருநெல்வேலி நகர்தான்.

பாரதியாரும் தேசிகவிநாயகனாரும் நம்மோடு ஒட்டியவர்கள்,அவர்களை விட்டுவிட்டு, கொஞ்சம் முந்தியுள்ள கவிஞர்களைப் பார்க்கலாம். கோயில்பட்டியிலிருந்து கிழக்கே எட்டு மைல் தூரத்தில்தான் பாரதியாரின் பிறப்பிடமாகிய எட்டையபுரம் இருக்கிறது. அங்கே சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் இருந்தவர் கடிகைமுத்துப் புலவர், அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

**சீவைகுண்டம் - கொற்கை:**

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் போகிற மார்க்கத்திலே பதினெட்டாவது மைலில் ஆற்றுக்கு வடகரையில் சீவைகுண்டம் இருக்கிறது. பிள்ளைப்பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார்.

கொற்கை என்கிற சிறு ஊர்தான் அது. அதன் புகழோ அபாரம். சுமார் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த ஒரு பெருங்கவிஞர் முத்தொள்ளாயிர ஆசிரியர்.

**கருவை நல்லூர்:**

சங்கரன்கோயிலுக்கு வடக்கே எட்டு மைலில் முக்கியமான ஸ்தலம் கருவைநல்லூர், இதற்குக் கரிவலம் வந்த நல்லூர் என்றும் பெயர். கோயிலும் சுற்று வீதிகளும் அழகாய் அமைந்திருக்கின்றன. இத்திருத்தலத்தின் சிறப்பில் தோய்ந்த புலவர் ஒருவர் திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி என்ற மூன்று நூல்களைப் பாடியிருக்கிறார்.

**குற்றாலம்:**

கவி இல்லாமலே மனசைக் கவரக்கூடிய இடம் குற்றாலம். கோயில், அருவி, சோலை பொதிந்த மலை, தென்றல் எல்லாம் சேர்த்து அமைந்திருப்பதைப் பார்த்தால், உலகத்திலேயே இந்த மாதிரி இடம் இல்லை என்றே சொல்லலாம். சுமார் ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் திருஞான சம்பந்தர் இங்கு வந்தார். நுண் துளி தூங்கும் குற்றாலம் என்று பாடினார்.

பிற்காலத்திலே எழுந்த தமிழ் இலக்கியங்களில் முக்கியமானது குற்றாலக் குறவஞ்சி, அஃது உண்மையான தமிழ்ப் பண்பும் கவிப்பண்பும் வாய்ந்தது. இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் குற்றாலத்துக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ள மேலகரத்தில் வாழ்ந்துவந்த திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய நூல்.

**முடிவுரை**

தமிழ்மணம் கமழும் நகர், தமிழ் வளர்த்த நகர் என்று போற்றுதலுக்குரிய நகர் திருநெல்வேலி என்பதை அறியமுடிகின்றது.

**கற்பவை கற்றபின்**

**1. உங்களுக்கு பிடித்த கவிதை ஒன்றைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

**வாழ்க்கை**

"பெட்டி படுக்கைகளை
சுமந்தபடி
ஒரு
பிரயாணம்

எப்போது சுமைகளை
இறக்கி வைக்கிறோமோ
அப்போது

சுற்றி இருப்பவர்கள்
நம்மைச்
சுமக்க தொடங்குகிறார்கள்".

**- மு. மேத்தா**

❖❀❖

தமிழ் 7

இயல் 1 கற்கண்டு

# அணி இலக்கணம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**குறுவினா:**

1. **உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக.**

ஒப்பிட்டுக் கூறப்படும் பொருளை உவமை அல்லது உவமாகம் என்பர். உவமையால் விளக்கப்படும் பொருளை உவமேயம் என்பர். 'போல', 'போன்ற' என்பவை உவம உருபுகளாகும்.

2. **உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி.உவம உருபு மறைந்து வந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி.

## கூடுதல் வினாக்கள்

**குறுவினா**

1. **அணி என்பதன் பொருள் யாது?**

அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள்.

2. **அணி என்றால் என்ன?**

ஒரு செய்யுளைச் சொல்லாலும், பொருளாலும் அழகு பெறச் செய்தலை அணி என்பர்.

3. **இல்பொருள் உவமை அணி என்றால் என்ன?**

உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவதை இல்பொருள் உவமை அணி என்பர்.

## கற்பவை கற்றபின்

**பின்வரும் தொடர்களில் உள்ள உவமை, உவமேயம், உவம உருபு ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதுக.**

| தொடர்கள் | உவமை | உவமேயம் | உவமஉருபு |
|---|---|---|---|
| மலரன்ன பாதம் | மலர் | பாதம் | அன்ன |
| தேன் போன்ற தமிழ் | தேன் | தமிழ் | போன்ற |
| புலி போலப் பாய்ந்தான் சோழன் | புலி | பாய்ந்தான் சோழன் | போல |
| மயிலொப்ப ஆடினாள் மாதவி | மயில் | ஆடினாள் மாதவி | ஒப்ப |

பருவம் 3 7

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.**

**நான் விரும்பும் கவிஞர்**

வணக்கம்.

பாவேந்தரே நான் விரும்பும் கவிஞராவார்.இளமையிலே வளமை மிகும் கவி பாடும் ஆற்றல் அவருக்கிருந்தது. கற்கண்டுச் சுவையனைய சொற்கொண்டு பாடினார். விற்கொண்டு அடிப்பது போல் விரைந்து வரும் சொல்லம்பால் தீமைகளைச் சாடினார்.

சமுதாயத்தையோ, மூட நம்பிக்கைகளையோ சாடும் போது புரட்சி வேகம் பிறக்கப்பாடினார்.

'ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்பராகி விட்டால் – ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி,
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!'

எனப் பாடியவர் அவர்.

'இருட்டறையில் உள்ளதடா உலகம்: சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே' எனக் குமுறினார். 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு வேரிற்பழுத்த பலா!' எனக் கூறி விதவையர் மணத்தை வேண்டினார்! 'புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!' எனச் சபதம் செய்தார். எண்ணற்ற தமிழ் நெஞ்சில் இன்றும் – என்றும் குடியிருப்பவர் நம் பாவேந்தன்.

நன்றி.

**எனக்குப் பிடித்த பாடல்.**

| இன்பத் தமிழ் | |
|---|---|
| தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத்<br>தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்<br>தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்<br>தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!<br>தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்<br>தமிழ் எங்கள் வாழ்விக்கு நிருமித்த ஊர்!<br>தமிழுக்கு மது வென்று பேர்! – இனபத்<br>தமிழ் எங்கள் செம் பயிருக்கு வேர்! | தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! இன்பத்<br>தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்!<br>தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்<br>தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!<br>தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்<br>தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!<br>தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! – இன்பத்<br>தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ! |

**சொல்லக் கேட்டு எழுதுக.**

1. மாடுகள் கொண்டு நிலத்தை உழுதனர்.
2. நீர்வளம் மிக்க ஊர் திருநெல்வேலி.
3. நெல்லையில் தமிழ்க் கவிஞர் பலர் வாழ்ந்தனர்.
4. அகத்தியர் வாழ்ந்த மலை பொதிகை மலை.
5. இல்லாத பொருளை உவமையாக்குவது இல்பொருள் உவமை அணி.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

| | |
|---|---|
| பனை மரமே பனை மரமே<br>ஏன் வளந்தே இத்தூரம்?<br>குடிக்கப் பதனியானேன்!<br>கொண்டு விற்க நுங்கானேன்!<br>தூரத்து மக்களுக்குத்<br>தூதோலை நானானேன்! | அழுகிற பிள்ளைகட்குக்<br>கிலுகிலுப்பை நானானேன்!<br>கைதிரிக்கும் கயிறுமானேன்!<br>கன்றுகட்டத் தும்புமானேன்!<br>- நாட்டுப்புறப்பாடல் |

**வினாக்கள்:**

1. **பனை மரம் தரும உணவுப் பொருள்கள் யாவை?**
பதனி, நுங்கு,
2. **பனை மரம் யாருக்கு கிலுகிலுப்பையைத் தரும்?**
பனை மரம் அழுகின்ற பிள்ளைகளுக்குக் கிலுகிலுப்பையைத் தரும்.
3. **'தூதோலை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.**
தூது + ஓலை.
4. **பனைமரம் மூலம் நமக்குக் கிடைக்கும் பொருள்களைப் பட்டியலிடுக.**
பதனி, நுங்கு, ஓலை. கிலுகிலுப்பை, கயிறு, தும்பு.
5. **பாடலுக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.**
பனைமரம்.

**பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**என்னைக் கவர்ந்த நூல்.**

**என்னைக் கவர்ந்த நூல் - சிலப்பதிகாரம்**

**முன்னுரை:**

அன்னைத் தமிழில் பல கோடி நூல்கள் இருப்பினும், என்னைக் கவர்ந்த நூல் சிலப்பதிகாரமே ஆகும். அதனைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**சிலப்பதிகாரம் அமைப்பு:**

சிலப்பதிகாரம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று பெரும் பிரிவுகளையும், முப்பது காதைகளாகிய சிறுபிரிவையும் கொண்டுள்ளது. இந்நூலை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார்.

**சிலப்பதிகாரக் கதை:**

புகார் நகரத்தில் கோவலனும், கண்ணகியும் திருமணம் செய்து வாழ்கின்றனர். கண்ணகியைப் பிரிந்து கோவலன் மாதவியுடன் வாழ்கின்றார். அவளைப்பிரிந்து மீண்டும் கண்ணகியுடன் மதுரை செல்கின்றார். கண்ணகியின் சிலம்பை விற்கச் சென்ற இடத்தில் கொல்லப்படுகின்றான்.கண்ணகி நீதியை நிலைநாட்டி மதுரையை எரித்து, வானுலகம் செல்கின்றாள்.

பருவம் 3
7

**சிறப்புகள்:**

- ✍ ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்.
- ✍ முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், நாடகக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் நூல்.
- ✍ குடிமக்களைக் கதை மாந்தராகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நூல் இது.

**கவர்ந்த காரணம்:**

மூவேந்தர்களைப் பற்றியும், முத்தமிழ் பற்றியும், முச்சுவை பற்றியும், முந்நீதிகளைப் பற்றியும் ஒரே நூலில் விளக்குவதால் சிலப்பதிகாரம் என்னை மிகவும் கவர்ந்தது. பொதுமக்களைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாலும் என்னைக் கவர்ந்தது இந்நூல்.

**முடிவுரை:**

சிலப்பதிகாரம் மிகவும் இனிமையான நூல் என்பதை அறிந்து, நான் படித்தேன், என்னைக் கவர்ந்தது. நீங்களும் படியுங்கள்! உங்களையும் கவரும்!

## மொழியோடு விளையாடு

**குறுக்கெழுத்துப் புதிர்.**

**தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப் பெயர்களையும் அவற்றின் சிறப்பையும் அறிவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | பூ | ர் | | 2 ஊ | ட் | டி |
| ண் | | சி | ச் | ரு | 3 தி | | 4 க | |
| டு | கா | ற் | 5 ஏ | | ரு | 6 செ | ன் | னை |
| க் | | | | ல் | வா | | னி | |
| க | சி | | | ன | ரூ | ர் | யா | 7 மு |
| ல் | கா | க் | ரை | 8 கா | ர் | க | கு | ண் |
| | வ | | து | க் | | ந | ம | ட் |
| | 9 சி | | 10 ம | டை | | து | ரி | ந் |
| டு | ரோ | 11 ஈ | | 12 கொ | | ரு | | து |
| 13 த | ஞ் | சா | வூ | ர் | | 14 வி | | றை |

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|
| 1. பின்னலாடை நகரம் - திருப்பூர் | 3. மலைக்கோட்டை நகரம் - திருச்சி |
| 2. மலைகளின் அரசி - ஊட்டி | 5. ஏழைகளின் ஊட்டி - ஏற்காடு |
| 6. தமிழகத்தின் தலைநகரம் - சென்னை | 8. மாங்கனித் திருவிழா - காரைக்கால் |
| 13. நெற்களஞ்சியம் - தஞ்சாவூர் | 11. மஞ்சள் மாநகரம் - ஈரோடு |
| **மேலிருந்து கீழ்** | **கீழிருந்து மேல்** |
| 1. பூட்டு நகரம் - திண்டுக்கல் | 9. பட்டாசு நகரம் - சிவகாசி |
| 3. தேர் அழகு நகரம் - திருவாரூர் | 10. தூங்கா நகரம் - மதுரை |
| 4. தெற்கு எல்லை - கன்னியாகுமரி | 12. மலைகளின் இளவரசி - கொடைக்கானல் |
| 7. புலிகள் காப்பகம் - முண்டத்துறை | 14. கர்மவீரர் நகரம் - விருதுநகர். |

**தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.**

1. **என் தாயார் என்னை ____________ காத்து வளர்த்தார்.**
(கண்ணை இமை காப்பது போல, தாயைக்கண்ட சேயைப் போல)
**விடை:கண்ணை இமை காப்பது போல**

2. **நானும் என் தோழியும் ____________ இணைந்து இருப்போம்.**
(இஞ்சி தின்ற குரங்கு போல, நகமும் சதையும் போல)
**விடை: நகமும் சதையும் போல**

3. **திருவள்ளுவரின் புகழை ____________ உலகமே அறிந்துள்ளது.**
(எலியும் பூனையும் போல, உள்ளங்கை நெல்லிக்கனி போல)
**விடை: உள்ளங்கை நெல்லிக்கனி போல**

4. **அப்துல் கலாமின் புகழ் ____________ உலகமெங்கும் பரவியது.**
(குன்றின்மேலிட்ட விளக்கு போல, குடத்துள் இட்ட விளக்கு போல)
**விடை: குன்றின் மேலிட்ட விளக்கு போல.**

5. **சிறுவயதில் நான் பார்தத நிகழ்ச்சிகள் ____________ என் மனத்தில் பதிந்தன.**
(கிணற்றுத்தவளை போல, பசுமரத்தாணி போல)
**விடை: பசுமரத்தாணி போல.**

**கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

**(எ.கா) திருநெல்வேலி - திரு, நெல், வேலி, வேல்**

1. நாகப்பட்டினம் __________ **விடை : நாகம், பட்டினம், பட்டி, நாடி.**
2. கன்னியாகுமரி __________ **விடை : கன்னி, குமரி, மரி, கனி.**
3. செங்கல்பட்டு __________ **விடை : செங்கல், பட்டு, கல், கட்டு.**
4. உதகமண்டலம் __________ **விடை : கமண்டலம், மண்டலம், உலகம், உண்.**
5. பட்டுக்கோட்டை __________ **விடை : பட்டு, கோட்டை, படை, கோடை.**

பருவம் 3 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



நிற்க அதற்குத் தக...

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| கரிகம் | - civilization | நீர்ப்பாசனம் | - irrigation |
| நாட்டுப்புறவியல் | - folklore | அயல்நாட்டினர் | - foreigner |
| அறுவடை | - harvest | வேளாண்மை | - agriculture |
| நீர்ப்பாசனம் | - irrigation | கவிஞர் | - poet |
| அயல்நாட்டினர் | - foreigner | நெற்பயிர் | - paddy |
| நாகரிகம் | - civilization | பயிரிடுதல் | - cultivation |
| நாட்டுப்புறவியல் | - folklore | உழவியல் | - agronomy |
| அறுவடை | - harvest | | |

❖❀❖

## மாதிரி வினாத்தாள்

### இயல் - ஒன்று

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

1. மரம் வளர்த்தால் __________ பெறலாம்.
அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2. 'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து + தெடுத்து
இ) தேர்ந்தது + அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து

3. திருநெல்வேலி __________ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

4. திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு __________
அ) காவிரி ஆறு ஆ) தாமிரபரணி ஆறு இ) நொய்யல் ஆறு ஈ) வைகை ஆறு

**II. குறுவிடை தருக.** **3 x 2 = 6**

5. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
6. கொற்கை முத்து பற்றிக் கூறுக.
7. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

**III. சிறு விடை தருக.** **3 x 2 = 6**

8. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
9. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

**IV. கட்டுரை எழுதுக.** **1 x 4 = 4**

10. என்னைக் கவர்ந்த நூல்.

❖❀❖

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## இயல் 2 கவிதைப் பேழை — புதுமை விளக்கு

### மனப்பாடப் பாடல்

வையகம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று.

**நூல் : நாலாயிரத்தில்யப் பிரப்பந்தம் முதல் திருவந்தாதி**
**ஆசிரியர்: பொய்கையாழ்வார்**

**பொய்கையாழ்வார்:**

✍ பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர்.

✍ நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி இவர் பாடியதாகும்.

**பூதத்தாழ்வார்:**

✍ பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் பிறந்தவர்.

✍ நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் உள்ள இரண்டாம் திருவந்தாதி இவர் பாடியதாகும்.

### சொல்லும் பொருளும்

| பாடல் - 1 | | பாடல் - 2 | |
|---|---|---|---|
| வையம் | - உலகம் | தகளி | - அகல்விளக்கு |
| வெய்ய | - வெப்பக்கதிர் வீசும் | ஞானம் | - அறிவு |
| சுடர் ஆழியான் | - ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால் | ஆர்வம் | - விருப்பம் |
| இடர் ஆழி | - துன்பக்கடல் | சுடர் | - ஒளி |
| சொல்மாலை | - பாமாலை | நாரணன் | - திருமால் |

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. "இடர் ஆழி நீங்குகவே" - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ________.

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம் [விடை : அ]

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. 'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது____________

அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர்

இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர் [விடை : இ]

3. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது____________

அ) இன்பு உருகு ஆ) இன்பும் உருகு

இ) இன்புருகு ஈ) இன்பருகு [விடை : இ]

**பொருத்துக.**

| வினா : | | விடை : | |
|---|---|---|---|
| 1. அன்பு | - நெய் | 1. அன்பு | - தகளி |
| 2. ஆர்வம் | - தகளி | 2. ஆர்வம் | - நெய் |
| 3. சிந்தை | - விளக்கு | 3. சிந்தை | - இடுதிரி |
| 4. ஞானம் | - இடுதிரி | 4. ஞானம் | - விளக்கு |

**குறு வினா**

1. பொய்கையாழ்வாரும்பூதத்தாழ்வாரும்அகல்விளக்காகஎவற்றைஉருவகப்படுத்துகின்றனர்?

பொய்கையாழ்வார் அகல்விளக்காகப் பூமியையும், பூதத்தாழ்வார் அகல்விளக்காக அன்பையும் உருவகப்படுத்துகின்றனர்.

2. பொய்கைஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டினார்?

பொய்கைஆழ்வார் தன் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினார்.

**சிறுவினா**

1. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

ஞானத்தமிழ் பயின்ற பூதத்தாழ்வார் அன்பையே அகல்விளக்காகவும், ஆர்வத்தையே நெய்யாகவும், இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் கொண்டு, ஞான ஒளியாகிய சுடர்விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினார்.

**சிந்தனை வினா**

1. பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?

நான் அறிவு, தன்னம்பிக்கை, முயற்சி, கடின உழைப்பு, ஊக்கம், கல்வி, உயிர், உண்மை ஆகியவற்றையெல்லாம் விளக்காக உருவகப்படுத்துவேன்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **பூமியைப் பொய்கை ஆழ்வார் உருவகப்படுத்துவது ---------.**
   அ) அகல் விளக்கு ஆ) கடல் இ) பாமாலை ஈ) அன்பு [விடை : அ]

2. **துன்பத்தைப் பொய்கை ஆழ்வார் உருவகப்படுத்துவது ---------.**
   அ) அகல் விளக்கு ஆ) கடல் இ) பாமாலை ஈ) அன்பு [விடை : ஆ]

3. **சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடையவர் --------.**
   அ) திருமால் ஆ) பொய்கை ஆழ்வார்
   இ) பூதத்தாழ்வார் ஈ) பேயாழ்வார் [விடை : அ]

4. **அந்தாதி என்பது --------- வகைகளுள் ஒன்று.**
   அ) காப்பிய ஆ) புதின
   இ) சிற்றிலக்கிய ஈ) பேரிலக்கிய [விடை : இ]

5. **நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாடலைத் தொகுத்தவர் ----------.**
   அ) நாதமுனி ஆ) பொய்கை ஆழ்வார்
   இ) பூதத்தாழ்வார் ஈ) பேயாழ்வார் [விடை : அ]

**குறு வினா**

1. **அந்தாதி என்றால் என்ன?**
   ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவது அந்தாதி ஆகும்.

2. **முதலாழ்வார் மூவர் யாவர்?**
   ✍ பொய்கை ஆழ்வார் ✍ பூதத்தாழ்வார் ✍ பேயாழ்வார்

3. **நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் - குறிப்பு வரைக.**
   ✍ திருமாலைப் போற்றிப் பாடிவர்கள் பன்னிரு ஆழ்வார்கள்.
   ✍ அவர்கள் பாடிய பாடல்கள் தொகுப்பே 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' ஆகும்.
   ✍ இதனைத் தொகுத்தவர் : நாதமுனி.

## கற்பவை கற்றபின்

**பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைத் திரட்டுக.**

✍ பொய்கை ஆழ்வார் ✍ பூதத்தாழ்வார் ✍ பேயாழ்வார்
✍ திருமழிசைஆழ்வார் ✍ நம்மாழ்வார் ✍ மதுரகவி ஆழ்வார்
✍ பெரியாழ்வார் ✍ ஆண்டாள் ✍ திருமங்கை ஆழ்வார்
✍ தொண்டரடிப் பொடியாழ்வார் ✍ திருப்பாணாழ்வார் ✍ குலசேகர ஆழ்வார்.

❖❀❖

இயல் 2 கவிதைப் பேழை

# அறம் என்னும் கதிர்

**மனப்பாடப் பாடல்**

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

**நூல்** : அறநெறிச்சாரம்
**ஆசிரியர்** : முனைப்பாடியார்

**முனைப்பாடியார்:**

முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர்.

காலம் : கி.பி13 ஆம் நூற்றாண்டு.

படைப்பு : அறநெறிச்சாரம்

தமிழ்

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| வித்து | - விதை | களை | - வேண்டாத செடி |
| ஈன | - பெற | பைங்கூழ் | - பசுமையான பயிர் |
| நிலன் | - நிலம் | வன்சொல் | - கடுஞ்சொல் |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7

1. **காந்தியடிகள் எப்போதும் ---------ப் பேசினார்.**

அ) வன்சொற்களை ஆ) அரசியலை
இ) கதைகளை ஈ) வாய்மையை [விடை : ஈ]

2. **'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ------------.**

அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல்
இ) இனிமை + சொல் ஈ) இன் + சொல் [விடை : இ]

**3. அறம் + கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ----------.**

அ) அற கதிர் ஆ) அறுகதிர் இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர் **[விடை : இ]**

**4. 'இளமை ' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் -------.**

அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை **[விடை : அ]**

## பொருத்துக.

| வினா | | விடை | |
|---|---|---|---|
| 1. விளைநிலம் | - உண்மை | 1. விளைநிலம் | - இன்சொல் |
| 2. விதை | - இன்சொல் | 2. விதை | - ஈகை |
| 3. களை | - ஈகை | 3. களை | - வன்சொல் |
| 4. உரம் | - வன்சொல் | 4. உரம் | - உண்மை |

## குறுவினா

**1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?**

அறக்கதிர் விளைய உண்மையை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்.

**2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச் சாரம் எதனைக் குறிப்பிடுகின்றது?**

நீக்கவேண்டிய களை என்று வன்சொல்லை அறநெறிச் சாரம் குறிப்பிடுகின்றது.

## சிறுவினா

**1. இளம்வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?**

- ✍ இன்சொல்லை விளை நிலமாகக் கொள்ள வேண்டும்.
- ✍ அதில் ஈகை என்னும் பண்பை விதையாகக் கொண்டு விதைக்க வேண்டும்.
- ✍ வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும்.
- ✍ உண்மைபேசுதல் என்னும் எருவினை இடுதல் வேண்டும்.
- ✍ அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும்.
- ✍ அப்போது தான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும்.

- இளம்வயதில் இச்செயல்களைச் செய்ய வேண்டும் என்று முனைப்பாடியார் கூறுகின்றார்.

## சிந்தனை வினா

**1. இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

அன்பு, இன்சொல் பேசுதல், உண்மை பேசுதல், களவாமை, புறங்கூறாமை, எளிமை, சிக்கனம், மனஉறுதி, கோபம் கொள்ளாமை, நேர்மை ஆகியன இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகளாகக் கருதுகின்றேன்.

பருவம் 3
7

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **முனைப்பாடியாரின் காலம் -----------.**
அ) கி.பி.5 ஆ) கி.பி.13 இ) கி.பி.10 ஈ) கி.பி.12 [விடை : ஆ]

2. **அறநெறிச் சாரம் --------- பாடல்களைக் கொண்டது.**
அ) 225 ஆ) 223 இ) 252 ஈ) 525 [விடை : அ]

3. **இளம் வயதிலேயே விதைக்க வேண்டிய பண்பு-----------.**
அ) இனியசொல் ஆ) ஈகை
இ) வன்சொல் ஈ) உண்மைபேசுதல் [விடை : ஆ]

4. **இளமையில் பாய்ச்ச வேண்டிய நீர் ----------.**
அ) அன்பு ஆ) ஈகை
இ) வன்சொல் ஈ) உண்மைபேசுதல் [விடை : அ]

5. **வித்து என்பதன் பொருள் ------------.**
அ) களை ஆ) பெற இ) நிலம் ஈ) விதை [விடை : ஈ]

### குறுவினா

1. **முனைப்பாடியார் -குறிப்பு வரைக.**
- ✍ முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர்.
- ✍ காலம் : கி.பி13 ஆம் நூற்றாண்டு.
- ✍ படைப்பு : அறநெறிச்சாரம்

2. **அறநெறிச்சாரம் -குறிப்பு வரைக.**
- ✍ முனைப்பாடியார் இயற்றிய நூல் : அறநெறிச்சாரம்
- ✍ 225 பாடல்களைக் கொண்டது.
- ✍ அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச் சாரம் எனப்பெயர்பெற்றது.

3. **எதனை விளைநிலமாகக் கொள்ள வேண்டும் என்று முனைப்பாடியார் கூறுகின்றார்?**
இனிய சொல்லை விளைநிலமாகக் கொள்ள வேண்டும் என்று முனைப்பாடியார் கூறுகின்றார்.

## கற்பவை கற்றபின்

1. **பிறருடன் பேசும் போது நீங்கள் பயன்படுத்தும் இன்சொற்களைத் தொகுத்துக் கூறுக.**

வாழ்க வளமுடன், வணக்கம், நலமா, அன்புடையவரே, சகோதரரே, நன்று, அருமை, இனிமை, பாராட்டு, வாழ்த்துகள், வெற்றி உமதே, முயற்சி திருவினையாக்கும் ஆகியன பிறருடன் பேசும் போது நான் பயன்படுத்தும் இன்சொற்கள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. உன் அன்னை பயன்படுத்திய இன்சொல்லால் நீ மகிழ்ந்த நிகழ்வு ஒன்றைக் கூறுக.**

ஒரு முறை நான் தேர்வில் தோல்வி அடைந்து விட்டேன். என் நண்பர்கள், அப்பா, ஆசிரியர் எனப் பலரும் என்னைத் திட்டினார்கள். ஆனால் என் அன்னை மட்டும், தோல்வியே வெற்றியின் முதல் படி. இப்போது நீ பெற்றிருப்பது தோல்வியன்று, வெற்றியின் முதல் படி கவலைப்படாதே என்றார். அவ்வினிமைச் சொல் என்னை ஊக்கப்படுத்தியது.

❖❀❖

இயல் 2 உரைநடை உலகம்

# ஒப்புரவு நெறி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காக என்பது -------- நெறி.**

அ) தனியுடைமை ஆ) பொதுவுடைமை
இ) பொருளுடைமை ஈ) ஒழுக்கமுடைமை [விடை : ஆ]

**2. செல்வத்தின் பயன் -------- வாழ்வு.**

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற [விடை : இ]

**3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை -------- என்றும் கூறுவர்.**

அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை [விடை : அ]

**4. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் --------**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) முடியரசன் ஈ) கண்ணதாசன் [விடை : ஆ]

**எதிர்ச்சொற்களைப் பொருத்துக.**

| வினா | | விடை | |
|---|---|---|---|
| 1. எளிது | - புரவலர் | 1. எளிது | - அரிது |
| 2. ஈதல் | - அரிது | 2. ஈதல் | - ஏற்றல் |
| 3. அந்நியர் | - ஏற்றல் | 3. அந்நியர் | - உறவினர் |
| 4. இரவலர் | - உறவினர் | 4. இரவலர் | - புரவலர் |

பருவம் 3 7

**தொடர்களில் அமைத்து எழுதுக.**

1. குறிக்கோள் -----------------

**விடை: வாழ்க்கை குறிக்கோள் உடையது.**

2. கடமைகள்----------------------

**விடை: ஒரு குடிமகனாக நம் நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஏராளம்.**

3. வாழ்நாள் -----------------------

**விடை: வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் குன்றக்குடி அடிகளார்**

4. சிந்தித்து ----------------------

**விடை: ஒரு செயல் செய்வதற்கு முன் நன்றாகச் சிந்தித்து செயல்பட வேண்டும்.**

**குறு வினா**

**1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?**

பொருளீட்டுவதைவிடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

**2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?**

மற்றவர்களுக்கு வழங்கி மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கான நோக்கமாகும்.

**சிறு வினா**

**1. ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?**

- ஒருவர் செய்யும் செயலானது அது தரும் பயனைவிட, செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது.
- தரத்தைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது, உதவி செய்தல் எதற்காக? தற்காப்புக்காகவும் இலாபத்திற்காகவும் கூட உதவி செய்யலாமே!
- சொல்லப்போனால் இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான்.
- அதே உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவிசெய்தவதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

**2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?**

- ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது, அதைத் தடுப்பார் யாருமில்லை.
- ஊருணித்தண்ணீர் எடுத்து அனுபவிக்கப்படுவது. பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


✍ பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில் கொண்டல்ல.

✍ மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது.

✍ நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் பயன்படுத்தலாம்.

**சிந்தனை வினா**

**ஒப்புரவுக்கும் உதவிசெய்தலுக்கும் வேறுபாடு யாது?**

உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைத்து, உதவி செய்தவதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு. இல்லை என்று கேட்போருக்கு நாமே அவருக்குத் தேவையானதைக் கொடுப்பது உதவி செய்தல். ஒப்புரவில் பெறுபவர் உறவினர். உதவி செய்தலில் பெறுபவர் ஏழைகள் அனைவரும்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **ஒப்புரவு நெறியை அறிமுகம் செய்வது ----------.**

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) புறநானூறு ஈ) பழமொழி [விடை : அ]

2. **செல்வத்தப் பயனே ஈதல் - என்று கூறும் கூறும் ----------.**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து [விடை : ஆ]

3. **தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது ----------.**

அ) ஊருணி ஆ) பயன்மரம் இ) மருந்து மரம் ஈ) ஒப்புரவு [விடை : அ]

4. **ஊருணி, பயன்மரம் பற்றிக் குறிப்பிடும் நூல ----------.**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து [விடை : அ]

5. **வாழ்க்கையின் கருவி ----------.**

அ) ஒப்புரவு ஆ) பொருள் இ) வறுமை ஈ) மருந்து [விடை : ஆ]

6. **ஊருணியை அகழ்ந்தவன் ----------.**

அ) திருவள்ளுவர் ஆ) அப்பரடிகள் இ) மனிதன் ஈ) வள்ளல் [விடை : இ]

7. **செல்வத்துப் பயன் ---------- வாழ்க்கை.**

அ) ஒப்புரவு ஆ) பொருள் இ) வறுமை ஈ) மருந்து [விடை : அ]

பருவம் 3 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**குறுவினா**

1. **மனிதர்கள் தம் படைப்பாற்றல் கொண்டு படைத்தவையாக குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?**
   ✍ ஊருணி ✍ பயன்மரம் ✍ மருந்து மரம்
2. **எவற்றை மனித வாழ்க்கையில் நடைபெறும் போராட்டம் என்று குன்றக்குடி அடிகளார் கூறுகின்றார்?**
   பொருள் ஈட்டல், சேர்த்தல், பாதுகாத்தல் மனித வாழ்வில் நடைபெறும் ஒரு பணி இல்லை ஒரு போராட்டம் என்கின்றார் குன்றக்குடி அடிகளார்.
3. **ஒப்புரவு நெறி என்றால் என்ன?**
   அறநெறியில் பொருள் ஈட்டித் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதே ஒப்புரவு நெறி ஆகும்.
4. **குன்றக்குடி அடிகளார் இயற்றிய நூல்கள் யாவை?**
   ✍ நாயன்மார் அடிச்சுவட்டில் ✍ குறட்செல்வம் ✍ ஆலயங்கள் சமுதாய மையங்கள்
5. **குன்றக்குடி அடிகளார் நடத்திய இதழ்கள் யாவை?**
   ✍ அருளோசை ✍ அறிக அறிவியல்

**சிறுவினா**

1. **ஊருணி , பயன்மரம் பற்றி வள்ளுவர் குறிப்பிடும் குறட்பாக்கள் எவை?**

”ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.”

“பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.”

- ஆகியன ஊருணி, பயன்மரம் பற்றி வள்ளுவர் குறிப்பிடும் குறட்பாக்கள் ஆகும்.

**கற்பவை கற்றபின்**

**பிறருக்காக உழைத்துப் புகழ்பெற்ற சான்றோர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் பகிர்க.**

✍ பாரி, திருமுடிக்காரி, வல்வில் ஓரி, ஆய் அண்டிரன், பேகன், நள்ளி, அதியமான் நெடுமானஞ்சி ஆகிய கடை எழுவள்ளல்கள் பிறருக்காவே தம்வாழ்நாள் முழுதும் வாழ்ந்தவர்கள்.

✍ சீதக்காதி ஏழைகளுக்காகவே வாழ்ந்தவர்.

✍ காந்தியடிகள் நம் நாட்டு மக்களுக்காவே வாழ்ந்தவர்.

✍ அம்பேத்கர், பெரியார், அயோத்திதாசப் பண்டிதர் தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காகவே வாழந்தவர்.

✍ அன்னை தெரஸா தொழுநோயாளிகள் மற்றும் ஆதரவற்றோருக்காகவே வாழ்ந்தவர்.

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 2 விரிவானம்

# உண்மை ஒளி

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்த துறவிகள் ஜென் துறவிகள். அவர்களின் சிந்தனைக் கதையே ஜென் கதைகள். அக்கதைகளுள் ஒன்று 'உண்மை ஒளி.'

**குருவும் சீடர்களும் :**

ஜென் குருவிடம் சிலர் பாடக் கற்றுக் கொண்டு இருந்தனர். ஒரு நாள் உண்மை ஒளி எது? என்பதைப் பற்றிப் பாடம் சொல்லிக் கொண்டு இருந்தார். பசி, தாகம், தூக்கம் ஆகியவை அனைத்து உயிர்களுக்கும் ஒன்றே. இரவு பகல் போல இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்று குரு சொல்லிக் கொடுத்தார். பிறகு சீடர்களிடம், ''இருள் கலைந்து வெளிச்சம் வந்துவிட்டது'' என்று எப்படி அறிவீர்கள்? என்றார்.

**உண்மை ஒளி :**

அதற்கு சீடன் ஒருவன், "தொலைவில் தெரிவது குதிரையா? கழுதையா? என்பதைக் காணக்கூடிய அளவு வெளிச்சம் நான் அறிவேன்'' என்றான்.மற்றொருவன், "தொலைவில் தெரிவது ஆலமரமா? அரசமரமா? என்பதைக் காணக்கூடிய நேரத்தில் உண்மையாக விடிந்ததை நான் அறிவேன்'' என்றான். இவை எல்லாம் தவறு என்றார் குரு. ஒரு மனிதரைக் காணும் போது என் உடன் பிறந்தவர் என்று எப்போது உணர்கிறீர்களோ, அப்போது தான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்பது பொருள் என்றார் குரு.

**குருவை ஏமாற்றிய திருடன் :**

ஒரு நாள் குரு குதிரையில் அருகில் உள்ள சிற்றூருக்குப் புறப்பட்டுச் செல்கின்றார். சாலையோரத்தில. ஒருவன் மயங்கிக் கிடந்தான். குரு அவனிடம் தண்ணீர் கொடுத்து' நீ யார்?' என்று கேட்க, அவன் 'பக்கத்து ஊர் செல்ல வேண்டும். பசியால் மயங்கி விழுந்துவிட்டேன்.' என்றான். குரு இரக்கம் கொண்டு அவனை குதிரை மீது அமரச்செய்தார். குதிரையை அடித்து அவன் வேகமாகச் சென்று விட்டான். அவன் திருடன் என்பதையும் , தான் ஏமாற்றப்பட்டதையும் அறிந்தார்.

**திருடனுக்கு அறிவுரை :**

குதிரை வாங்க குரு குதிரைச் சந்தைக்குச் சென்றார். அங்கு அந்தத் திருடன் குதிரையை விற்றுக் கொண்டிருந்தார். குரு யாரிடமும் எதையும் சொல்லாதே! என்றார். அதற்கு திருடன், இவர் ஏமாந்தது யாருக்காவது தெரிந்தால் அவமானம் என்று நினைக்கின்றாரோ? என்று மனதில்நினைத்தான். அதற்கு குரு, நான் ஏமாந்து போனது தெரிந்தால் உண்மையில் சாலையில் மயக்கம் அடைந்து யார் கிடந்தாலும் அவருக்கு யாரும் உதவ மாட்டார்கள் என்றார்.குருவின் பெருமையை நினைத்து தலைகுனிந்தான் திருடன்.

பருவம் 3 7

**முடிவுரை :**

ஒருவரை ஏமாற்றுவது மற்றவர்களுக்குச் செய்யும் உதவியைக்கூட தடுக்கும் என்பதை இக்கதை மூலம் அறியமுடிகின்றது.

## கற்பவை கற்றபின்

**1. ஜென் கதைகளில் வேறு சிலவற்றை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

### மன நிறைவு

ஓர் ஊரில் செல்வன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் அளவுக்கதிகமாகச் செல்வம் இருந்தது. வேலையாட்கள் நிறைய பேர் இருந்தனர். ஆனால் அவனால் மனம் நிறைவுடன் வாழ முடியவில்லை. ஒரு நாள் அந்த ஊருக்கு ஜென் துறவி ஒருவர் வந்தார். அவரிடம் செல்வந்தன் தனக்கு மனநிறைவுக்கு வழி சொல் வேண்டினான். துறவி மூன்று கல்லைச் செல்வந்தனைத் தூக்கத் செய்து மலை மீது அவனால் ஏறமுடியவில்லை. மிகவும் கனமாக உள்ளது ,என்னால் தூக்க முடியவில்லை என்றான். துறவி ஒருகல்லைத் தூக்கிப் போடச் சொன்னார். இதே போலவே ஒவ்வொரு முறையும் கூற ஒவ்வொரு கல்லாய் தூக்கிப் போடச் சொன்னார். இறுதியில் துறவி இப்போது பாரம் குறைந்ததா? என்றார். செல்வந்தரும் ,ஆம்! என்றார். உன்னிடம் உள்ள அளவில்லாத செல்வம்தான் பாரம். அதனை ஏழைகளுக்கு கொடுத்துவிட பாரம் குறைந்து உன்மனம் நிறைவடையும் என்றார். அவனும் அப்படியே செய்து மன நிறைவு அடைந்தேன்.

❖❀❖

## விடுகதைகள் - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 . ஊசி | 2. முள் | 3. சூரியன் | 4. அகப்பை | 5. வாழை | 6. நட்சத்திரம் |
| 7. வானம் | 8. அணில் | 9. தொடர்வண்டி | 10. மிளகாய் | 11. மழை | 12. நத்தை |
| 13. கடிகாரம் | 14. ஊசி | 15. மிருதங்கம் | 16. வளையல் | 17. மரம் | 18. தண்ணீர் |
| 19. மழை | 20. பெட்ரோல் | 21. எறும்புகள் | 22. வியர்வை | 23. உப்பு | 24. குளிர் |
| 25. குடை | 26. நிலா | 27. மஞ்சள் | 28. சீப்பு | 29. நாக்கு | 30. தேங்காய் |
| 31. தலைமுடி | 32. வாழைப்பூ | 33. இலை | 34. கரும்பு | 35. தேன்கூடு | 36. மின்சாரம் |
| 37. மிளகாய் | 38. கைத்தடி | | | | |

❖❀❖



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 2 கற்கண்டு

# அணி இலக்கணம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### குறுவினா:

**1. உருவக அணியை விளக்குக.**

உவமை வேறு, உவமிக்கப்படும் பொருள் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.

**சான்று :** “வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக”

பூமி அகல் விளக்காகவும் , கடல் நெய்யாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளதால், உருவக அணி ஆயிற்று.

**2. உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| இரு பொருள்களுக்கும் உருவகப் படுத்ததுதல். | இருபொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வருவது. |

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

**1. ஒரு பொருளை விளக்க மற்றொரு பொருளை உவமையாகக் கூறுவது ---------.**

அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) எடுத்துக்காட்டு உவமை அணி [**விடை : அ**]

**2. “வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக” எனத் தொடங்கும் பாடலில் இடம்பெறும் அணி ---------.**

அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) எடுத்துக்காட்டு உவமை அணி [**விடை : ஆ**]

**3. இருபொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வருவது ---------.**

அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) எடுத்துக்காட்டு உவமை அணி [**விடை : இ**]

பருவம் 3 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**குறுவினா**

**1. உவமை, உருவகம் - விளக்குக.**

| உவமை | உருவகம் |
|---|---|
| ‘தேன் போன்ற தமிழ்’ என்று கூறுவது உவமை ஆகும். | ‘தமிழ்த்தேன்’ என்று கூறுவது உருவகம். |

**2. ஏகதேச உருவக அணி என்றால் என்ன? சான்று தருக.**

இருபொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வருவது, ஏகதேச உருவக அணி ஆகும்.

**சான்று :** பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமே கட்டளைக் கல். - திருக்குறள்

## கற்பவை கற்றபின்

**உவமைத்தொடர்களை எழுதி அவற்றை உருவகங்களாக மாற்றுக.**

| உவமை | உருவகம் | உவமை | உருவகம் |
|---|---|---|---|
| மலர் போன்ற முகம் | முகமலர் | கயல் போன்ற விழி | விழிக்கயல் |
| முத்துப் போன்ற பல் | பல்முத்து | பவளம் போல வாய் | வாய்ப்பவளம் |
| பூ போன்ற விரல் | விரற்பூ | தேன் போன்ற தமிழ் | தமிழ்த்தேன் |
| மதி போன்ற முகம் | முகமதி | அமுதம் போன்ற தமிழ் | தமிழமுதம் |
| குயில் போன்ற குரல் | குரல் குயில் | கொவ்வை போல் இதழ் | இதழ்க்கொவ்வை |

## மொழியை ஆள்வோம்

**பேசுக.**

**நீதிக் கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.**

ஓர் ஊரில் செல்வன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் அளவுக்கதிகமாகச் செல்வம் இருந்தது. வேலையாட்கள் நிறைய பேர் இருந்தனர். ஆனால் அவனால் மனம் நிறைவுடன் வாழ முடியவில்லை. ஒரு நாள் அந்த ஊருக்கு ஜென் துறவி ஒருவர் வந்தார். அவரிடம் செல்வந்தன் தனக்கு மனநிறைவுக்கு வழி சொல் வேண்டினான். துறவி மூன்று கல்லைச் செல்வந்தனைத் தூக்கச் செய்து மலை மீது அவனால் ஏறமுடியவில்லை. மிகவும் கனமாக உள்ளது ,என்னால் தூக்க முடியவில்லை என்றான். துறவி ஒருகல்லைத் தூக்கிப் போடச் சொன்னார். இதே போலவே ஒவ்வொரு முறையும் கூற ஒவ்வொரு கல்லாய் தூக்கிப் போடச் சொன்னார். இறுதியில் துறவி இப்போது பாரம் குறைந்ததா? என்றார். செல்வந்தரும், ஆம்! என்றார். உன்னிடம் உள்ள அளவில்லாத செல்வம் தான் பாரம். அதனை ஏழைகளுக்கு கொடுத்துவிட பாரம் குறைந்து உன்மனம் நிறைவடையும் என்றார். அவனும் அப்படியே செய்து மன நிறைவு அடைந்தேன்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



### சொல்லக் கேட்டு எழுதுக.

1. பொய்கையாழ்வார் திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தார்.
2. இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ளவேண்டும்.
3. வாழ்க்கை குறிக்கோள் உடையது.
4. செல்வத்துப் பயன் ஒப்புரவு வாழ்க்கை.
5. உவமையும் உவமேயமும் ஒன்றாக அமைவது உருவக அணி.

### அறிந்து பயன்படுத்துவோம்.

ஏதேனும் ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவப்படுவது வினாவாகும் வினா கேட்கப் பயன்படுத்தும் சொற்கள் வினாச்சொற்கள் எனப்படும்.

'எது, என்ன, எங்கு, எப்படி, எத்தனை, எப்பொழுது, எவற்றை, எதற்கு, ஏன், யார், யாது, யாவை போன்றன வினாச் சொற்கள் ஆகும்.

### சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.

1. நெல்லையப்பர் கோவில் --------- உள்ளது? **விடை : எங்கு**
2. முதல் ஆழ்வார்கள் --------- பேர்? **விடை : மூன்று**
3. --------- சொற்களைப் பேச வேண்டும்? **விடை : எப்படிப்பட்ட**
4. அறநெறிச் சாரம் பாடலை ---------? **விடை : யார்**
5. அறநெறிச் சாரம் என்பதன் பொருள் ---------? **விடை : யாது**

### பின்வரும் தொடரைப் படித்து வினாக்கள் எழுதுக.

**பூங்கொடி தன் தோழியுடன் திங்கட்கிழமை காலையில் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.**

**(எ.கா.) பூங்கொடி பள்ளிக்கு எப்படிச் சென்றாள்?**

1. பூங்கொடி யாருடன் பள்ளிக்குச் சென்றாள்?
2. பூங்கொடிஎப்பொழுது பள்ளிக்குச் சென்றாள்?
3. பூங்கொடி தோழியுடன் எங்கு சென்றாள்?

### தலைப்புச்சொற்களை முழு சொற்றொடர்களாக எழுதுக.

(எ.கா) தலைப்புச்செய்தி : தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடக்கம் - வானிலை மையம் அறிவிப்பு.

**விடை :** தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

பருவம் 3

7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

1. **சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவன் - மாவட்ட ஆட்சியர் பாராட்டு.**
சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவனை மாவட்ட ஆட்சியர் பாராட்டினார்.

2. **தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடக்கம் - மக்கள் ஆர்வத்துடன் வருகை.**
தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடக்கியதை அடுத்து, அதைக் காண மக்கள் ஆர்வத்துடன் வருகை தந்தனர்.

3. **தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி - தமிழக அணி வெற்றி.**
தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டியில் தமிழக அணி வெற்றி பெற்றுள்ளது.

4. **மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி - ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம்.**
மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியில் ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

5. **மாநில அளவிலான பேச்சுப் போட்டி - சென்னையில் இன்று தொடக்கம்.**
மாநில அளவிலான பேச்சுப் போட்டியானது சென்னையில் இன்று தொடங்க உள்ளது.

**கட்டுரை எழுதுக.**

## ஒற்றுமையே உயர்வு

### முன்னுரை

தனி மரம் தோப்பாகாது. அதுபோல தனித்திருந்தால் வெற்றி கிடைக்காது. ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே உயர்வு கிடைக்கும்.

### சான்றோர் பொன்மொழி

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார் திருமூலர் . 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார் திருவள்ளுவர். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றார் பாரதியார். இப்படிப்பட்ட சான்றோரின் பொன்மொழிகள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

### ஒற்றுமையின் உயர்வு

வீட்டில் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் இந்தக் குடும்பம் உயர்வடையும். அந்தக் குடும்பம் உயர்ந்தால், அந்த ஊர் உயரும் , அந்த ஊர் உயர்ந்தால் அந்த நகரமே உயரும். ஒற்றுமையால் அந்த நகரம் உயர்ந்தால் நம் நாடே உயரும். நம் மக்கள் காந்தியடிகளுடன் ஒற்றுமையாகச் செயல்பட்டதால் தான் நமக்கு விடுதலையும் கிடைத்தது.

### ஒற்றுமையின் விளைவு

புயல், சுனாமி, வெள்ளப் பெருக்கு, பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது எல்லாம் பல சமூக சேவை அமைப்புகள் ஒன்று கூடி ஒற்றுமையுடன் ஓடோடி மக்களைக் காப்பற்றினர். அதுமட்டும் அல்லாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கி, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்விடங்களை மீண்டும் கட்டமைத்துக் கொடுத்தனர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**ஒருமையுணர்வு**

அல்லா, இயேசு, சிவன் ஆகிய மும்மதக் கடவுள்களும் மூன்றெழுத்தில் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்க்கும் போது நாம் அனைவரும் ஒன்றுபட்டு மதநல்லிணக்கத்தோடு வாழவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

மதம், சாதி, இனம் ஆகிய வேறுபாடு இன்றி மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அப்பொழுது தான் நாட்டில் ஒற்றுமை நிலவும் என்பதை அறிந்து செயல்படுவோம்.

## மொழியோடு விளையாடு

**கீழ்க்காணும் படங்கள் சார்ந்த சொற்களை எழுதுக.**





**படம் - 1**

(எ.கா) கரும்பலகை, வகுப்பறை, பாடப் புத்தகம், மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள்.

**படம் - 2**

(எ.கா.) மரம், நடைபாதை, ஊஞ்சல், சருக்கு மரம், செடிகள்.

**கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் தொடர்கள் உருவாக்குக. (விதை , கட்டு, படி , நிலவு , நாடு , ஆடு)**

| | | | |
|---|---|---|---|
| **(எ.கா.)** | **விதை** | **-1. விதை நெல் வாங்கினான்.** | **2. சோளம் விதைத்தான்.** |
| | கட்டு | - 1. கட்டுச்சோறு உண்டான். | 2. வீடு கட்டினான். |
| | படி | - 1. படிக்கட்டில் அமர்ந்தான். | 2. நூலைப் படித்ததான். |
| | நிலவு | - 1. நிலவைப் பார்த்தான். | 2. கடும் வெப்பம் நிலவுகிறது. |
| | நாடு | - 1. நாட்டை நேசி. | 2. நூலகத்தை நாடினான். |
| | ஆடு | - 1. ஆடு புல் தின்னும். | 2. நாட்டியம் ஆடினாள். |

## நிற்க அதற்குத் தக..

**கலைச் சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| குறிக்கோள் | - Objective | செல்வம் | - Wealth |
| லட்சியம் | - Ambition | பொதுவுடைமை | - Communism |
| கடமை | - Responsibility | அயலவர் | - Neighbour |
| வறுமை | - Poverty | ஒப்புரவு நெறி | - Reciproрcity |
| நற்பண்பு | - Courtesy | | |

❖❀❖

பருவம் 3 7

இயல் 2 வாழ்வியல்

# திருக்குறள்

**மனப்பாடப் பாடல்**

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

**நூல்** : **திருக்குறள்**

**ஆசிரியர்** : **திருவள்ளுவர்**

**ஆசிரியர்** : திருவள்ளுவர்

**காலம்** : 2000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்

**வேறுபெயர்கள்** : செந்நாப்போதார், பொய்யில்புலவர், முதற்பாவலர்.

தமிழ் 7

**சொல்லும் பொருளும் :**

| | |
|---|---|
| வினை - செயல் | பிணி - நோய் |
| ஓவா - ஓயாத | மாட்சி - சிறப்பு |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்க.**

1. **---------- ஒரு நாட்டின் அரணன்று.**

அ) காடு ஆ) வயல்

இ) மலை ஈ) தெளிந்த நீர் [விடை : ஆ]

2. **மக்கள் அனைவரும் ---------- ஒத்த இயல்புடையவர்கள்.**

அ) பிறப்பால் ஆ) நிறத்தால்

இ) குணத்தால் ஈ) பணத்தால் [விடை : அ]

3. **'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------.**

அ) நான் + என்ப ஆ) நா + டென்பது
இ) நாடு + என்ப ஈ) நாடு + டேன்ப **[விடை : இ]**

4. **கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல ---------.**

அ) கணிஇல்லது ஆ) கணில்லது
இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது **[விடை : ஈ]**

**பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்று வரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.
2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.
3. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம் கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

**விடை : 2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.**

பருவம் 3

## குறு வினா

1. **ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?**

பொருள், கருவி, காலம், செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தும் ஆராய்ந்து அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2. **ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?**

✍ தெளிந்த நீர் ✍ நிலம் ✍ மலை ✍ நிழல் உடைய காடு

- ஆகிய நான்கும் ஒரு நாட்டிற்கு அரண்கள் ஆகும்.

3. **சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?**

மிக்க பசி, ஓயாத நோயும், அழிவு செய்யும் பகை சேராமல் நல்லவகையில் நடைபெறுவதே நாடு ஆகும்.பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடு.

**படங்களுக்கு பொருத்தமான திருக்குறளை எழுதுக.**






மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.

7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com





உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. **ஒரு செயலைச் செய்யும் போது மற்றொரு செயலைச் செய்வதற்கு வள்ளுவர் கூறிய உவமை**

அ) யானை ஆ) புலி இ) மான் ஈ) கொக்கு **[விடை : அ]**

2. **பிணி என்னும் சொல்லின் பொருள் ------------.**

அ) உலகம் ஆ) நோய் இ) செயல் ஈ) காலம் **[விடை : ஆ]**

3. **பிறப்பொக்கும் ----------- உயிர்க்கும்.**

அ) எல்லா ஆ) அனைத்து இ) மக்கள் ஈ) இயல்பு **[விடை : அ]**

**குறு வினா:**

1. **செயலை எப்படிச் செய்ய வேண்டும்?**

ஒரு யானை கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அதுபோல ஒரு செயலைச் செய்யும் போது அச்செயலால் மற்றொரு செயலைச் செய்து முடிக்க வேண்டும்.

2. **கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுபவர் யார்?**

தாம் கற்றவற்றைக் கற்றவர் முன் தெளிவாகச் சொல்பவரே கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுபவர் ஆவர்.

3. **எவை சிறப்பியல்புகளால் ஒத்திருப்பதில்லை?**

பிறப்பால் மக்கள் அனைவரும் சமம், ஆனால் அவரவர் செய்யும் நன்மை, தீமையாகியச் செயல்களால் இவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

❖❀❖

## மாதிரி வினாத்தாள்
**ஏழாம் வகுப்பு - தமிழ் பருவம் - 3**
**இயல் - இரண்டு**

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

1. “இடர் ஆழி நீங்குகவே ” - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ----------.

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

2. ‘இன்சொல்’ என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ----------.

அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல்

இ) இனிமை + சொல் ஈ) இன் + சொல்

3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை -------- என்றும் கூறுவர்.

அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

**II. பொருத்துக.** **4 x 1 = 4**

4. அன்பு - நெய்
5. ஆர்வம் - தகளி
6. சிந்தை - விளக்கு
7. ஞானம் - இடுதிரி

**III. குறுவிடை தருக.** **2 x 2 = 4**

8. பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?
9. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச் சாரம் எதனைக் குறிப்பிடுகின்றது?

**IV. சிறு விடை தருக.** **2 x 3 = 6**

10. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
11. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?

**V. அடிபிறழாமல் எழுதுக.** **3 x 1 = 3**

12. வையம் .... எனத் தொடங்கும் பொய்கை ஆழ்வார் பாடல்.

❖❁❖

பருவம் 3 7

இயல் 3 கவிதைப் பேழை

# மலைப்பொழிவு

**மனப்பாடப் பாடல்**

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் - அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!

தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு - தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு!

இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு - தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு!

**நூல் : இயேசு காவியம்**
**ஆசிரியர் : கண்ணதாசன்**

**கண்ணதாசன்:**

| | |
|---|---|
| இயற்பெயர் | : முத்தையா |
| சிறப்புப்பெயர் | : கவியரசு |
| பணி | : ஏராளமான திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதியுள்ளார். தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார். |
| படைப்புகள் | : ஆட்டனத்தி ஆதிமந்தி, குமரிக் காண்டம், சேரமான் காதலி, மாங்கனி, தைப்பாவை, இயேசு காவியம் முதலியன. |

தமிழ் 7

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| சாந்தம் | - அமைதி | மகத்துவம் | - சிறப்பு |
| பேதங்கள் | - வேறுபாடுகள் | தாரணி | - உலகம் |
| இரக்கம் | - கருணை | தத்துவம் | - உண்மை |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ------------.**

அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு [விடை : ஆ]

2. **சாந்த குணம் உடையவர்கள் ------------ முழுவதையும் பெறுவர்.**

அ) புத்தகம் ஆ) செல்வம் இ) உலகம் ஈ) துன்பம் [விடை : இ]

3. **'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------------.**

அ) மலை + யளவு ஆ) மலை + அளவு

இ) மலையின் + அளவு ஈ) மலையில் + அளவு [விடை : ஆ]

4. **'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------------.**

அ) தன் + னாடு ஆ) தன்மை + நாடு

இ) தன் + நாடு ஈ) தன்மை + நாடு [விடை : இ]

5. **இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ------------.**

அ) இவையில்லாது ஆ) இவைஇல்லாது

இ) இவயில்லாது ஈ) இவஇல்லாது [விடை : அ]

### பொருத்துக.

**வினா :**

1. சாந்தம் - சிறப்பு
2. மகத்துவம் - உலகம்
3. தாரணி - கருணை
4. இரக்கம் - அமைதி

**விடை :**

1. சாந்தம் - அமைதி
2. மகத்துவம் - சிறப்பு
3. தாரணி - உலகம்
4. இரக்கம் - கருணை

### குறு வினா

1. **இந்த உலகம் யாருக்கு உரியது?**

சாந்தம் என்ற அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.

2. **உலகம் நிலைதடுமாறக் காரணம் யாது?**

சாதிகளும் கருத்து வேறுபாடுகளும் உலகம் நிலைதடுமாறக் காரணம் ஆகும்.

3. **வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?**

வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற நல்ல உள்ளத்தோடு வாழ வேண்டும்.

## சிறுவினா

**சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?**

- ✍ சாந்தம் என்ற அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது. அவர்களே தலைவர்கள் என்ற உண்மையை இயேசுநாதர் கூறினார்.
- ✍ வாழ்க்கையில் தேவைப்படுவது பொறுமை. அது மண்ணையும் விண்ணையும் ஆட்சிசெய்யும் பெருமை உடையது என்றார்.
- ✍ சாதிகளும் கருத்து வேறுபாடுகளும் உலகம் நிலைதடுமாறுகின்றது.
- ✍ அறத்தை நம்பினால் சண்டை இல்லாமல் உலகம் அமைதியாகிவிடும்.
- ✍ பொருள் ஈட்டுவதிலும் அறவழியைப் பின்பற்ற வேண்டும்.

## சிந்தனை வினா

**எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?**

எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ மதம், சாதி, இனம், மொழி, ஏழை, பணக்காரன் ஆகியன ஒழிய வேண்டும். பொறாமை, வன்முறை, அறியாமை ஆகியன அழிந்து மனிதநேயம் மலர வேண்டும்.அனைவரும் ஒன்றெனக் கருத வேண்டும்.

## கூடுதல் வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **முத்தையா என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் ----------.**
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) சுரதா ஈ) கண்ணதாசன் **[விடை : ஈ]**

2. **இயேசு காவியத்தை இயற்றியவர் ----------.**
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) சுரதா ஈ) கண்ணதாசன் **[விடை : ஈ]**

3. **---------- உடையோரே நற்பேறு பெற்றவர் ஆவர்.**
   அ) சாந்தம் ஆ) அமைதி இ) இரக்கம் ஈ) அன்பு **[விடை : இ]**

4. **ஆசையில் விழுந்த மனித வாழ்வு --------- போன்றது.**
   அ) பாலைவனம் ஆ) மலர்சோலை இ) உலகம் ஈ) அமைதி **[விடை : அ]**

5. **கவியரசு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் ----------.**
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) சுரதா ஈ) கண்ணதாசன் **[விடை : ஈ]**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## குறு வினா

**1. இறைவனின் இரக்கத்தை பெறுவோர் யார்?**

இரக்கம் உடையவரே பேறு பெற்றவர் ஆவர். அவர்கள் பிற உயிர்களின் மீது இரக்கம் காட்டி இறைவனின் இரக்கத்தைப் பெறுவர்.

**2. ஆசையில் விழுந்தவன் வாழ்வு பற்றி கண்ணதாசன் கூறுவனவற்றை எழுதுக.**

மனிதன் ஆசையில் விழுந்துவிட்டால் அவனது வாழ்வு பாலைவனம் போல் பயனற்றதாகிவிடும்.

**3. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாறும் எப்போது?**

மனிதன் நல்ல உள்ளத்தோடு வாழ்ந்தால், அவன் வாழ்க்கை மலர்ச்சோலையாக மாறிவிடும்.

**4. உண்மையில்லா உறவுகளாக வாழ்பவர் யாவர்?**

மனிதர்கள் சண்டைச் சச்சரவுகளால் தாமும் துன்புற்றுப் பிறரையும் துன்புறுத்துகின்றனர். மேலும் இவர்கள் தன்னாடு என்றும், பிறர் நாடு என்றும் பேசி உண்மையில்லா உறவுகளாக வாழ்கின்றனர்.

## சிறுவினா

**கண்ணதாசன் பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

1. இயற்பெயர் : முத்தையா
2. சிறப்புப்பெயர் : கவியரசு
3. பணி : ஏராளமான திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதியுள்ளார். தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.
4. படைப்புகள் : ஆட்டனத்தி ஆதிமந்தி, குமரிக் காண்டம், சேரமான் காதலி, மாங்கனி, தைப்பாவை, இயேசு காவியம் முதலியன.

## கற்பவை கற்றபின்

**இயேசுவின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

ஒரு நாள் பெரிய பிரசங்க கூட்டம் ஒன்று நடைபெற்று வந்தது. அங்கு ஒரு சிறுவன் இயேசுவைக் காண வந்தான். அங்கு சுமார் 5000 பேர் இருந்தனர். சிறுவன் 5 ரொட்டி, 2 மீன்கள் கொண்டு வந்தான். அதனை இயேசு ஆசிர்வதிக்க அவை பலவாகப் பெருகி 5000 பேருக்குக் கொடுக்கப்பட்டு மீதம் 12 கூடைகள் இருந்தன.

❖❀❖

பருவம் 3 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 3 கவிதைப் பேழை

# தன்னை அறிதல்

**சே. பிருந்தா**

✍ புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர்.

✍ படைப்புகள் : மழை பற்றிய பகிர்தல்கள் , வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **கூடுகட்டத் தெரியாத பறவை ---------.**

அ) காக்கை ஆ) குயில்
இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி [**விடை : ஆ**]

2. **'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------.**

அ) தா + ஒரு ஆ) தான் + னொரு இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு [**விடை : இ**]

### குறுவினா

1. **காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச்சொன்னது?**

காக்கைக்குக் கூட்டில் உள்ளது காக்கைக் குஞ்சு அல்ல, குயில் குஞ்சு தான் என்று ஒருநாள் தெரியவந்தது. எனவே, இனி நாம் சேர்ந்து வாழ முடியாது என்று கூறி குயில் குஞ்சைப் போகச் சொன்னது.

2. **குயில் குஞ்சு தன்னை எப்போது 'குயில்' என உணர்ந்தது?**

ஒரு விடியலில் குயில் குஞ்சு "கூ" என்று கூவியது. அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது.

### சிறுவினா

**குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.**

✍ காக்கைக்குக் கூட்டில் உள்ளது காக்கைக் குஞ்சு அல்ல, குயில் குஞ்சு தான் என்று ஒருநாள் தெரியவந்தது. எனவே, இனி நாம் சேர்ந்து வாழ முடியாது என்று கூறி குயில் குஞ்சைப் போகச் சொன்னது.

✍ அதனால் தாய் காக்கையைவிட்டுச் செல்ல முடியவில்லை. அந்த மரத்திலேயே வாழ ஆரம்பித்தது. 'கா' என்று கத்த முயற்சித்தது, அதனால் முடியவில்லை.

✍ அதற்குக் கூடுகட்டத் தெரியாது. அம்மா, அப்பா, தோழர் யாரும் இல்லை.குளிர், மழை, வெயில் ஆகியவற்றைக் கடந்தது. தானே இரை தேடத் தொடங்கியது.

✍ வாழ்கையை வாழப் பழகிவிட்டது. ஒரு விடியலில் குயில் குஞ்சு "கூ" என்று கூவியது, அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது.

**சிந்தனை வினா**

**உங்களிடம் உள்ள தனித்தன்மைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

✍ அனைவரிடமும் அன்பாகப் பழகுவது,
✍ உண்மை பேசுவது,
✍ தன்னம்பிக்கையுடன் இருப்பது,
✍ மனம் தளராமை

- ஆகியவை என்னிடம் உள்ள தனித்தன்மைகள் ஆகும்.

**கூடுதல் வினா**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'தன்னை அறிதல்' கவிதை இடம்பெறும் நூல் -----------.**

அ) மழை பற்றிய பகிர்தல்கள் ஆ) வீடு முழுக்க வானம்
இ) மகளுக்குச் சொன்ன கதை ஈ) எதுவுமில்லை [விடை : இ]

2. **குயில் ----------ன் கூட்டில் முட்டையிட்டது.**

அ) காக்கை ஆ) குருவி இ) குயில் ஈ) புறா [விடை : அ]

**குறுவினா**

1. **காக்கையின் கூட்டில் முட்டையிட்டது எது?**
குயில் காக்கையின் கூட்டில் முட்டையிட்டது.

2. **காக்கையைப் போலக் கரைய முயன்றது எது?**
குயில் குஞ்சு காக்கையைப் போலக் கரைய முயன்றது.

3. **தன்னை அறிதல் என்ற கவிதையின் உட்பொருள் யாது?**
"நாமும் நமது ஆற்றலை உணர்ந்து கொண்டால் வாழ்வில் சாதனைகள் புரியலாம்."

4. **கவிஞர் சே.பிருந்தா குறிப்பு வரைக.**

✍ புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர் சே.பிருந்தா.
✍ மழை பற்றிய பகிர்தல்கள் , வீடு முழுக்க வானம் , மகளுக்குச் சொன்ன கதை ஆகியன இவரது படைப்புகள் ஆகும்.

**கற்பவை கற்றபின்**

**பறவைகள், விலங்குகள் ஆகியவற்றுக்கு உரிய தனிச்சிறப்புகளைப் பட்டியலிடுக.**

1. நாய், பூனை - மோப்ப சக்தி
2. காக்கை - கூடி உண்ணும், துக்கத்தை கூடி அனுசரிக்கும்.
3. கிளி - பேசும்

❖❀❖

பருவம் 3 7

இயல் 3 உரைநடை உலகம்

# கண்ணியமிகு தலைவர்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **காயிதேமில்லத் --------- பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.**

அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை [விடை : ஆ]

2. **'காயிதேமில்லத்' என்னும் அரபுச்சொல்லுக்குச் --------- என்பது பொருள்.**

அ) சுற்றுலா வழிகாட்டி ஆ) சமுதாய வழிகாட்டி
இ) சிந்தனையாளர் ஈ) சட்டவல்லுநர் [விடை : ஆ]

3. **விடுதலைப்போராட்டத்தின் போது காயிதேமில்லத் --------- இயக்கத்தில் கலந்து கொண்டார்.**

அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக்காய்ச்சும்
இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை [விடை : ஈ]

4. **காயிதேமில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் ---------.**

அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம்
இ) ஊராட்சி மன்றம் ஈ) நகர்மன்றம் [விடை : ஆ]

5. **'எதிரொலித்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ---------.**

அ) எதிர் + ரொலித்தது ஆ) எதில் + ஒலித்தது
இ) எதிர் + ஒலித்தது ஈ) எதி + ரொலித்தது [விடை : இ]

6. **முதுமை + மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------.**

அ) முதுமொழி ஆ) முதுமைமொழி
இ) முதியமொழி ஈ) முதல்மொழி [விடை : அ]

**குறு வினா**

1. **விடுதலைப் போராட்டத்தில் காயிதேமில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.**

✍ நாடுமுழுவதும் விடுதலைப்போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொள்ள காந்தியடிகள் இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

✍ காந்தியடிகளின் இத்தகைய வேண்டுகோள் காயிதேமில்லத்தின் மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்தியது.

✍ கல்வியைவிட நாட்டு விடுதலை மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.

தமிழ் 7

2. **காயிதேமில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைபிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.**

காயிதேமில்லத் அவர்கள் தன் மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார். பெரிய தலைவர் என்பதால் திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடக்கும் என அனைவரும் நினைத்தனர்.பெண்வீட்டாரிடம் மணக்கொடை வாங்காமல் மிக எளிமையாக மகன் திருமணத்தை நடத்தினார்.

## சிறு வினா

**ஆட்சிமொழி பற்றிய காயிதேமில்லத்தின் கருத்தை விளக்குக.**

ஆட்சிமொழி தேர்வு செய்யும் கூட்டத்தில் காயிதேமில்லத், “பழமையான மொழிகளில் ஒன்றைத்தான் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழி என்று தான் நான் உறுதியாகச் சொல்வேன். மண்ணிலே முதன் முதலாகப் பேசப்பட்ட மொழி திராவிட மொழிகள் தான். அவற்றுள் இலக்கிய செறிவு கொண்ட தமிழ்மொழி தான் மிகப்பழமையான மொழி. அதனைத் தான் நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும் ”என்று குறிப்பிட்டார்.

## சிந்தனை வினா

**நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணியைச் செய்வீர்கள்?**

- ✍ தமிழை உலகமொழி ஆக்குவேன்.
- ✍ ஏழ்மை நிலையை ஒழித்து, அனைத்தும் அனைவருக்கும் என்பதை நடைமுறைக்குக் கொண்டு வருவேன்.
- ✍ சாதி, மத ஏற்றத்தாழ்வுகளை நீக்குவேன்.
- ✍ இந்திய நதிகளை இணைப்பேன்.

ஆகியவற்றை நான் தலைவராக இருந்தால், மக்களுக்குச் செய்வேன்.

## கூடுதல் வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **‘கண்ணியமிகு ’என்னும் அடைமொழியால் சிறப்பிக்கப்படும் தலைவர் ---------.**

அ) காந்தியடிகள் ஆ) நேரு
இ) பெரியார் ஈ) காயிதேமில்லத் [விடை : ஈ]

2. **இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போர் மூண்ட ஆண்டு ----------.**

அ) 1962 ஆ) 1972 இ) 1926 ஈ) 1960 [விடை : அ]

3. **காயிதேமில்லத்தின் இயற்பெயர் ---------.**

அ) முகமது அலி ஆ) முகமது ஜின்னா
இ) முகமது இசுமாயில் ஈ) முகமது மைதீன் [விடை : இ]

பருவம் 3 7

4. **காயிதேமில்லத் ஜமால் முகமது கல்லூரியை உருவாக்கிய இடம்-----------------.**

அ) திருச்சி ஆ) தஞ்சை இ) கோவை ஈ) மதுரை [**விடை : அ**]

**குறுவினா**

1. **காயிதேமில்லத் அவர்கள் பற்றி தந்தை பெரியார் கூறியது யாது?**

"இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்.-என்று காயிதேமில்லத் குறித்துத் தந்தைப் பெரியார் கூறினார்.

2. **காயிதேமில்லத் அவர்கள் பற்றி அறிஞர் அண்ணா கூறியது யாது?**

"தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்'' என்று காயிதேமில்லத் குறித்து அறிஞர் அண்ணா கூறினார்.

3. **காயிதேமில்லத் - பெயர்க்காரணம் யாது?**

காயிதேமில்லத்தின் இயற்பெயர் முகமது இசுமாயில். ஆனால் மக்கள் அன்போடு காயிதேமில்லத் என்று அழைத்தனர். காயிதேமில்லத் என்பதன் பொருள் சமுதாய வழிகாட்டி. அப்பெயருக்கு ஏற்ப வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

**சிறுவினா**

1. **காயிதேமில்லத்தின் கல்விப்பணி குறித்து எழுதுக.**

கல்வி ஒன்றுதான் ஒட்டுமொத்தச் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எண்ணினார் காயிதேமில்லத். "கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை'' என்ற முதுமொழிக்கு ஏற்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தார். திருச்சியில் ஜமால் முகமது கல்லூரியை உருவாக்கினார். கேரளாவில் ஃபரூக் கல்லூரி உருவாக காரணமாக இருந்தார்.

2. **காயிதேமில்லத் மேற்கொண்ட அரசியல் பணிகள் யாவை?**

- 1946 முதல் 1952 வரை சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்.
- இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினர்.
- இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர்.
- மக்களவை உறுப்பினர்.

**கற்பவை கற்றபின்**

**எளிமையின் அடையாளமாக வாழ்ந்த பிற தலைவர்கள் குறித்து வகுப்பறையில் பேசுக.**

அனைவருக்கும் வணக்கம். எளிமையின் அடையாளமாக வாழ்ந்தவர் காந்தியடிகள் பற்றிப் பேசுகின்றேன். காந்தியடிகள் எளிமையின் சிகரமாக வாழ்ந்தவர். சிறிய துண்டு பென்சில். காகிதம் ஆகியவற்றைக்கூட குப்பையில் போடாமல் பிற பயன்பாட்டிற்காகக் காந்தியடிகள் வைத்துக்கொள்வார். ஆடம்பரத்தை அறவே வெறுத்தார். வழக்கத்திற்கு மாறாக வெறும் ஒரணாவைச் செலவு செய்த தன் மனைவியைக் கண்டித்தார். உண்ணக் கஞ்சி இல்லாதவர் மத்தியில் ஆடம்பரமாக அணிவது பாவம் என்றார். எளிமையான கதர் உடையையே உடுத்தினார். தமது குடும்பத்தார் அனைவரையும் அதனையே உடுத்தச் செய்தார். நாமும் அவர் போல எளிமையாக வாழ்வோம் . நன்றி.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 3 விரிவானம்

# பயணம்

**பாவண்ணன்:**

சிறுகதை, கவிதை, கட்டுரை எனப் பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களில் எழுதிவருகின்றார்.

கன்னட மொழியில் இருந்து பலநூல்களைத் தமிழ் மொழியில் பெயர்த்துள்ளார்.

படைப்புகள் : வேர்கள்தொலைவில்இருக்கின்றன,நேற்றுவாழ்ந்தவர்கள், கடலோர வீடு, பாய்மரக் கப்பல், மீசைக்கார பூனை, பிரயாணம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**'பயணம்' கதையைச் சுருக்கி எழுதுக.**

### முன்னுரை

பிறருக்கு உதவி செய்து மகிழ்ந்த ஒருவரின் கதைதான் 'பயணம்'. இக்கதையைப் 'பிரயாணம்' என்னும் நூலில் பாவண்ணன் படைத்துள்ளார்.

### மிதிவண்டி ஆசை

20 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. அஞ்சலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மிதிவண்டியின் மீது ஆசை வைத்துத் தனது மூன்றாவது மாதச் சம்பளத்தில் மிதி வண்டி ஒன்றை வாங்குகின்றார். மிதிவண்டியில் செல்லுவது தான் அவருக்குப் பொழுதுபோக்கு. தெரிந்த இடம் தெரியாத இடம் என எல்லாவற்றுக்கும் மிதிவண்டிதான். கிருஷ்ணராஜ சாகர் அணை , மகாபலிபுரம் ஆகிய இடங்களுக்கு எல்லாம் மிதிவண்டியிலே தான் பயணம்.

### மிதிவண்டியில் பயணம்

ஹாசன் வழியாக மங்களூர் செல்ல வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் ஆசை.இரண்டு நாட்கள் மிதிவண்டி பயணத்தில் ஹாசனை அடைந்தார். ஒரே நாளில் வெப்பம், மழை, குளிர் மாறி மாறி வந்தது.மழைத் தூரலில் அடுத்த ஊர் வரை சென்றார். பெரிய இறக்கத்தில் இறங்கும் போது மிதிவண்டியில் காற்று இறங்கிவிட்டது. காற்றடிக்கும் கருவியும் இல்லை.நீண்ட தூரம் நடந்தும் யாரையும் காணவில்லை.

### குடிசை வீட்டுச் சிறுவன்

ஒரு குடிசை வீடு தெரிந்தது. அதில் ஒரு சிறுவனும் அவனது அம்மாவும் இருந்தனர். பெங்களூரில் இருந்து மிதிவண்டியில் வந்ததைச் சொன்னதும் அந்தச் சிறுவனால் நம்ப

பருவம் 3 7

முடியவில்லை. மனம் இருந்தால் எங்கு வேண்டும் என்றாலும் மிதிவண்டியில் செல்லாம் என்றார். மிதிவண்டி ஆர்வத்தைச் சிறுவன் சொன்னான். அவனது மாமா வீட்டில் மிதிவண்டி உள்ளது, அவர் இல்லாத போது குரங்கு பெடல் போட்டு ஓட்டுவேன் என்றான். காலைப்பொழுதுவிடிந்ததும்பக்கத்துஊரில்உள்ளசந்திரேகௌடாஎன்பவர்மிதிவண்டியைச் சரி செய்து தருகின்றார். சிறுவனுக்கு மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொடுக்கிறார்.

**பயணம் தொடர்கின்றது..**

அம்மாவின்அனுமதி பெற்று, அரிசிக்கெர என்ற இடத்தில் தன் மாமா வீட்டில் விடச்சொல்லி சிறுவன் கேட்டான். சிறுவனுடன் பயணம் தொடர்ந்தது. அவரிடம் இருந்து மிதிவண்டியை வாங்கி சிறிது தூரம் ஓட்டினான். மாமா வீடு நெருங்கும் சிறிது தூரத்திற்கு முன்னதில் இருந்து மிதிவண்டியை மீண்டும் சிறுவன் ஓட்டக் கேட்டான். சிறுவனின் மிதிவண்டி ஆர்வத்தைக் கண்டு ஓட்டக் கொடுத்தார். மிதிவண்டி சிறுவன் ஓட்டிக்கொண்டு இருக்கும் போது, அவனிடம் சொல்லாமல் பேருந்தில் ஏறி செல்கின்றார்

**முடிவுரை**

ஆசைப்பட்டு வாங்கிய மிதிவண்டியைத் தியாகம் செய்து, சிறுவனின் மனம் மகிழச் செய்த அவரின் கருணை உள்ளம் பாராட்டுக்குரியது.

**“கருணை உள்ளம் கடவுள் வாழும் இல்லம்”**

தமிழ் 7

## கற்பவை கற்றபின்

1. **நீங்கள் சென்று வந்த பயணம் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

நாங்கள் மிதிவண்டியில் அருகில் உள்ள பறவைகள் சரணாலயத்திற்குச் சுற்றுலா சென்றோம். மிகுந்த உற்சாகத்துடன் பயணம் தொடர்ந்தது. அம்மன் கோயில் ஒன்றின் அருகில் உணவு உண்டோம். கோயில் வாசலில் மாற்றுத்திறனாளி ஒருவர் உணவின்றி வாடிக்கிடந்ததைப் பார்த்தோம். உணவுப்பொட்டலம் ஒன்றினைக் கொடுத்து, அவரை உணவு உண்ண வைத்து, மகிழ்ந்து அவருடன் உரையாடினோம்.பிறகு பறவைகள் சரணாலயம் வந்தோம். சிறு தானியங்களைப் பறவைகள் உண்ண தட்டில் வைத்தோம். பிறகு விளையாடி விட்டு மாலையில் மிதிவண்டியில் மீண்டும் வீடு திரும்பினோம்.

2. **நீங்கள் சுற்றுலா செல்ல மேற்கொண்ட ஆயத்தப் பணிகள் பற்றிப் பேசுக.**

வணக்கம், சென்னைக்குச் சுற்றுலா செல்ல முடிவு எடுத்தோம். உடைகள், உணவுகள், நொறுக்குத் தீனிகள், மருந்துகள், போர்வை, துண்டு, பற்பசை. சோப்பு ஆகியவற்றைப் பையில் எடுத்து வைத்தோம். முன்பதிவு செய்த பயணச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்து வைத்துக் கொண்டோம். அலைபேசி, மின்னேற்றி ஆகியவற்றையும் ஆயத்தப்படுத்தி வைத்தோம்.

❖❀❖

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 3 கற்கண்டு

# ஆகுபெயர்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகிவருவது ----------.**

அ) பொருளாகுபெயர் ஆ) சினையாகுபெயர்

இ) பண்பாகுபெயர் ஈ) இடவாகுபெயர் [விடை : அ]

2. **இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது ----------.**

அ) முதலாகுபெயர் ஆ) சினையாகுபெயர்

இ) தொழிலாகுபெயர் ஈ) பண்பாகுபெயர் [விடை : ஆ]

3. **மழை சடசடவெனப் பெய்தது. - இத்தொடரில் அமைந்துள்ளது ----------.**

அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி

இ) தொழிலாகுபெயர் ஈ) பண்பாகுபெயர் [விடை : ஆ]

4. **அடுக்குத்தொடரில் ஒரே சொல் ---------- முறை வரை அடுக்கி வரும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து [விடை : இ]

**குறுவினா:**

1. **ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?**

ஒரு பெயர்ச்சொல் அதன் பொருளைக் குறிக்காமல் , அதனோடு தொடர்பு உடைய வேறு ஒன்றிற்கு வரும் போது அது ஆகுபெயர் ஆக மாறும்.

**சான்று :** வெள்ளை - வெண்மை நிறம், வெள்ளை அடித்தான் - வெள்ளை நிறமுடைய சுண்ணாம்பிற்குரியது.

2. **இரட்டைக்கிளவி என்பது யாது ? சான்று தருக.**

இரட்டையாக இணைந்து வந்து, பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்கள் இரட்டைக்கிளவி ஆகும்.

**சான்று :** விறுவிறு, மளமள.

பருவம் 3 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிறுவினா**

**1. பொருளாகுபெயரையும் சினையாகுபெயரையும் வேறுபடுத்துக.**

| பொருளாகு பெயர் | சினையாகு பெயர் |
|---|---|
| 1. ஒரு பொருளின் பெயர் சினை(உறுப்பு)க்கு ஆகிவருவது பொருளாகு பெயர். | 1. சினையின் பெயர் பொருளுக்கு ஆகிவருவது சினையாகுபெயர். |
| 2. **சான்று : மல்லிகை சூடினாள்** மல்லிகை என்பது பொருளின் பெயர். அது அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்துள்ளது. | 2. **சான்று : தலைக்கு ஒரு பழம் கொடு** தலை என்பது சினையின் பெயர். அது அதன் பொருளுக்கு ஆகி வந்துள்ளது. |

**2. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் ஒப்பிடுக.**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| தனிச்சொற்களாகப் பிரித்தால் பொருள் தரும். | தனிச்சொற்களாகப் பிரித்தால் பொருள் தராது. |
| ஒரு சொல் நான்கு முறை வரை அடுக்கி வரும். | ஒரு சொல் இரண்டு முறை மட்டுமே வரும். |
| சொற்கள் தனியே நிற்கும். | சொற்கள் இணைந்தே நிற்கும். |
| விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருளில் வரும். | வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் மட்டுமே வரும். |

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**1. போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது என்பது -----------குச் சான்றாகும்.**

அ) இடவாகுபெயர் ஆ) காலவாகுபெயர்
இ) பண்பாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர் **[விடை : அ]**

**2. திசம்பர் சூடினாள் என்பது -----------குச் சான்றாகும்.**

அ) இடவாகுபெயர் ஆ) காலவாகுபெயர்
இ) பண்பாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர் **[விடை : ஆ]**

**3. இனிப்பு தின்றான் என்பது -----------குச் சான்றாகும்.**

அ) இடவாகுபெயர் ஆ) காலவாகுபெயர்
இ) பண்பாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர் **[விடை : இ]**

**4. பொங்கல் உண்டான் என்பது -----------குச் சான்றாகும்.**

அ) இடவாகுபெயர் ஆ) காலவாகுபெயர்
இ) பண்பாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர் **[விடை : ஈ]**

தமிழ் 7

**குறுவினா**

**1. இடவாகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.**

"சடுகுடு போட்டியில் இந்தியா வென்றது " - என்பதில் தமிழ்நாடு என்னும் பெயர் இவ்விடத்தைச் சேர்ந்த விளையாட்டு அணியைக் குறிப்பதால் இடவாகுபெயர் ஆகும்.

**2. காலவாகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.**

"திசம்பர் சூடினாள் " - என்பதில் திசம்பர் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் மலரும் பூவைக் குறிப்பதால் காலவாகுபெயர் ஆகும்.

**3. பண்பாகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.**

"இனிப்பு தின்றான்" - என்பதில் இனிப்பு என்னும் பண்புப்பெயர் தின்பண்டத்தைக் குறிப்பதால் பண்பாகுபெயர் ஆகும்.

**4. தொழிலாகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.**

"பொங்கல் உண்டான் " - என்பதில் பொங்கல்என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் உருவான உணவினைக் குறிப்பதால் தொழிலாகுபெயர் ஆகும்.

**கற்பவை கற்றபின்**

**1. பள்ளி நூலகத்திலிருந்து நூல் ஒன்றை எடுத்து வந்து அந்நூலில் ஆகுபெயர்களாக இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களைத் தொகுக்க.**

**நூல் : பெரியாரின் பெண்ணியக் கனவுகள்**

**ஆசிரியர் : ச.சேட்டு மதார்சா**

| பொருளாகுபெயர் | இடவாகுபெயர் | காலவாகுபெயர் |
|---|---|---|
| 1. முல்லைக் கொடி துவண்டது போல்<br>2. வெப்பங்காயாய் கசந்தது. | 1. இந்தியா விடுதலை பெற்றது.<br>2. தமிழ்மண் மகிமை | 1.ஞாயிறு போனது. |
| **சினையாகுபெயர்** | **பண்பாகுபெயர்** | **தொழிலாகுபெயர்** |
| 1. தலை நிமிரவேண்டும் | 1. வெள்ளையனைத் துரத்தினர். | ----- |

**2. அன்றாடப் பேச்சு வழக்கில் இடம்பெறும் அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றைத் தொகுக்க.**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| போ போ | பரபரப்பாக |
| வா வா | சொரசொரன்னு |
| பார்த்து பார்த்து | தகதகன்னு |
| பார் பார் | மடமடன்னு |
| ஓடு ஓடு | சலசலப்பு |
| செல் செல் | விறுவிறு |
| நன்று நன்று | வலவலன்னு |
| அருமை அருமை | நெகுநெகுன்னு |

பருவம் 3 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com


## மொழியை ஆள்வோம்

### கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

**உண்மை**

வணக்கம். உண்மை என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் உங்கள் முன் பேசுகின்றேன். வாய்மையே வெல்லும் என்பது நம் நீதித் துறையின் அடிப்படைக் கொள்கை. உண்மையை மட்டுமே இந்த உலகம் ஏற்கும். உண்மை பேசுபவனுக்குத் தான் நாளை சொர்க்கம் கிடைக்கும். வள்ளுவர் கூட உண்மைக்கு என்றே வாய்மை என்ற அதிகாரத்தையே வகுத்துள்ளார். பத்துக் குறளில் உண்மையை அழகாக வள்ளுவர் விளக்குவின்றார். உண்மை பேசி உயர்ந்தவன் மன்னன் அரிச்சந்திரன். உண்மை பேசி உலக உத்தமர் ஆனார் காந்தியடிகள். எனவே நாமும் உண்மை பேசுவோம்! வாழ்வில் உயர்வோம்! நன்றி.

### சொல்லக் கேட்டு எழுதுக.

1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது பொறுமை.
2. குயில் குளிரில் நடுங்கியது , மழையில் ஒடுங்கியது, வெயிலில் காய்ந்தது.
3. இரக்கம் உடையோர் அருள் பெற்றவர் ஆவர்.
4. காயிதே மில்லத் என்னும் சொல்லுக்குச் "சமுதாய வழிகாட்டி" என்று பொருள்.
5. விடியும் போது குளிரத் தொடங்கியது.

### கீழ்க்காணும் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கவிதை எழுதுக.

| அன்பு | தன்னம்பிக்கை |
|---|---|
| பண்பு மூவெழுத்து<br>பரிவு மூவெழுத்து<br>உறவு மூவெழுத்து<br>நட்பு மூவெழுத்து<br>இவை இணையும்<br>அன்பு மூவெழுத்து. | ஒற்றைக்காலில் நிற்பது<br>பூவின் தன்னம்பிக்கை..<br>முள்ளில் மலர்வது<br>ரோஜாவின் தன்னம்பிக்கை..<br>உருகியும் ஒளிதருவது<br>மெழுகுவர்த்தியின் தன்னம்பிக்கை..<br>வறுமையில் சாதனையே<br>மனிதனின் தன்னம்பிக்கை! |

### சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

**(எனவே , ஏனெனில், அதனால், ஆகையால், அது போல, இல்லையென்றால், மேலும் )**

(எ.கா.) காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்ய விரும்பாதவர். **ஏனெனில்** அவர் எளிமையை விரும்பியவர்.

1. நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். **இல்லையென்றால்** துன்பப்பட நேரிடும்.
2. குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. **ஆகையால்** காக்கையின் கூட்டில் முட்டையிடும்.

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். **ஏனெனில்** மரங்கள் தான் மழைக்கு அடிப்படை.
4. பிறருக்குக் கொடுத்தலே செல்வத்தின் பயன். **எனவே** பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்.
5. தமிழகத்தில் மழை பெய்து வருகின்றது. **மேலும்** இரண்டு நாட்கள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு.

**கடிதம் எழுதுக.**

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

54, குறிஞ்சி வீதி,
தமிழ்நகர்,
மதுரை - 2.
03.6.2019.

அன்புள்ள அத்தைக்கு,

உங்கள் அன்பு அண்ணன் மகன் எழுதும் கடிதம். நானும் என் அப்பா , அம்மா ஆகியோரும் நலமாக இருக்கின்றோம். அதுபோல தங்கள் நலத்தையும் மாமாவின் நலத்தையும் அறிய ஆவலாக இருக்கின்றேன். அடுத்த மாதம் முதல் வாரம் முதல் எங்கள் ஊரில் மாரியம்மன் கோயில் திருவிழா நடைபெற இருக்கின்றது.ஒரு வாரம் இத்திருவிழா நடைபெறும். ஊரே அலங்காரமாக இருக்கும். பூச்சாட்டல் , காப்புக்கட்டல் ,பூமிதித்தல் , அலகு குத்தல், பொங்கல் வைத்தல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும். அத்தனை நிகழ்வுகளில் தாங்களும் மாமாவும் அவசியம் கலந்துகொள்ள எங்கள் இல்லத்திற்கு வரவேண்டும். அப்பாவும் அம்மாவும் நேரில் வந்தும் அழைப்பார்கள்.அன்புடன் முடிக்கின்றேன்.உடன் பதில் எழுதுங்கள்.

இப்படிக்கு,
அன்புள்ள அண்ணன் மகன்,
அ. முரளி.

**உறைமேல் முகவரி**

ச. தமிழரசி,
12,திரு.வி.க. நகர்,
சென்னை - 5.

பருவம் 3

7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மொழியோடு விளையாடு

**குறிப்புகளைக் கொண்டு இடமிருந்து வலமாகக் கட்டங்களை நிரப்புக.**

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 நூ | ல் | க | ள் | | | | | |
| | | | | 2 தி | ரு | க் | கு | ற | ள் | | | | |
| | | | 3 அ | ற | நெ | றி | ச் | சா | ர | ம் | | | |
| | | 4 கு | ற் | றா | ல | க் | கு | ற | வ | ஞ் | சி | | |
| 5 தி | ரி | கூ | ட | ரா | ச | ப் | ப | க் | க | வி | ரா | ய | ர் |
| | | 4 சு | ப் | பு | ர | த் | தி | ன | தா | ச | ன் | | |
| | | | 3 கு | ம | ர | கு | ரு | ப | ர | ர் | | | |
| | | | | 2 பா | ர | தி | தா | ச | ன் | | | | |
| | | | | | 1 நூ | ல | க | ம் | | | | | |

1. நூலகத்தில் இருப்பவை ---------. ( நூல்கள்) நூல்கள் நிறைந்துள்ள இடம் ---------. (நூலகம்)
2. உலகப்பொது மறை ---------. (திருக்குறள்) புரட்சிக்கவிஞர் ---------. (பாரதிதாசன்)
3. முனைப்பாடியார் இயற்றியது --------- (அறநெறிச்சாரம்) நீதி நெறி விளக்கம் பாடியவர் ---------. (குமரகுருபரர்)
4. குற்றால மலைவளத்தைக் கூறும் நூல் ---------. (குற்றாலக்குறவஞ்சி) சுரதா என்பதன் விரிவாக்கம் ---------. (சுப்புரத்தினதாசன்)
5. குற்றாலக்குறவஞ்சியைப் பாடியவர் ----------. (திரிகூடராசப்பக்கவிராயர்)

**கீழ்க்காணும் படங்களைப் பார்த்து இரட்டைக் கிளவி அமையுமாறு தொடர் உருவாக்குக.**






**(எ.கா.) மழை சடசட வெனப் பெய்தது.**

பறவை படபட வெனப் பறந்தது.

புகைவண்டி சடசட வெனச் சென்றது.

மரக் கிளை சடசட வென முறிந்தது.

**கீழ்க்காணும் அறிவிப்பைப் படித்து அதன்பின் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.**

**தீ விபத்தும் பாதுகாப்பு முறைகளும்**

**வினாக்கள் மற்றும் விடைகள்**

1. **தீ விபத்தினால் பெரிய பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு, செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?**

வீடு மற்றும் பொது இடங்களில் தீ பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு, எச்சரிக்கை ஒலிப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்க வேண்டும். தரமான மின் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.சமையல் செய்யும் போது இருக்கமான உடைகளை அணிய வேண்டும். பட்டாசுகளைப் பாதுகாப்பான இடங்களில், பெரியவர் பாதுகாப்புடன் வெடிக்க வேண்டும்.பணியாளர்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும்.

2. **தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாகச் செய்ய வேண்டிய செயல்கள் யாவை?**

தீயணைப்புத் துறைக்குத் தகவல் சொல்ல வேண்டும். தீ விபத்து ஏற்பட்ட பகுதியில் மின் இணைப்பை உடனடியாகத் துண்டிக்க வேண்டும். தீ அணைப்பான்கள் கொண்டு தீயை அணைக்க முயற்சிக்க வேண்டும். ஆடையில் தீப்பிடித்தால் தரையில் படுத்து உருள வேண்டும். தீக்காயம் பட்ட இடத்தை நீர் கொண்டு குளிர்விக்க வேண்டும்.

3. **பொது இடங்களில் தீவிபத்து ஏற்பட்டால் வெளியேறும் முறையைக் கூறுக.**

தீ விபத்து ஏற்பட்டால் அவசர கால வழியில் செல்ல வேண்டும். அருகில் உள்ள கட்டிடங்களுக்குத் தீ பரவாமல் இருக்கும் வகையில் முன்னெச்சரிக்கை செய்ய வேண்டும்.

4. **தீ விபத்து ஏற்பட்டால் செய்யக் கூடாதவை யாவை?**

மின் தூக்கியைப் பயன்படுத்தக் கூடாது. எண்ணெய்த் தீயில் நீரை ஊற்றக் கூடாது. தீக்காயம் பட்ட இடத்தில் எண்ணெய், பேனா மை ஆகியவற்றைத் தடவக் கூடாது.

5. **உடலில் தீப்பற்றினால் செய்ய வேண்டிய முதலுதவி யாது?**

உடலில் தீப்பற்றினால் தரையில் படுத்து உருள வேண்டும். தீக்காயம் பட்ட இடத்தை நீர் கொண்டு குளிர்விக்க வேண்டும்.

**நிற்க அதற்குத் தக...**

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| சமயம் | - Religion | எளிமை | - Simplicity |
| ஈகை | - Charity | கண்ணியம் | - Dignity |
| கொள்கை | - Doctrine | தத்துவம் | - Philosophy |
| நேர்மை | - Integrity | வாய்மை | - Sincerity |
| உபதேசம் | - Preaching | வானியல் | - Astronomy |

❖❁❖

பருவம் 3 7

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மாதிரி வினாத்தாள்

**ஏழாம் வகுப்பு - தமிழ் பருவம் - 3**

**இயல் - மூன்று**

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ---------.

அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

2. 'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------.

அ) தா + ஒரு ஆ) தான் + னொரு இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு

3. விடுதலைப் போராட்டத்தின் போது காயிதேமில்லத் --------- இயக்கத்தில் கலந்து கொண்டார்.

அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக்காய்ச்சும்

இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை

**II. பொருத்துக.** **4 x 1 = 4**

4. சாந்தம் - சிறப்பு
5. மகத்துவம் - உலகம்
6. தாரணி - கருணை
7. இரக்கம் - அமைதி

**III. குறுவிடை தருக.** **2 x 2 = 4**

8. காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச்சொன்னது?
9. காயிதே மில்லத் பெயர்க்காரணம் பற்றி எழுதுக?

**IV. சிறு விடை தருக.** **2 x 3 = 6**

10. குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.
11. பொருளாகுபெயரையும் சினையாகுபெயரையும் வேறுபடுத்துக.

**V. அடிபிறழாமல் எழுதுக.** **3 x 1 = 3**

12. 'வாழ்க்கை 'என்பது முதல் 'பொய்யுறவு' என்பது வரை உள்ள மலைப்பொழிவுப்பாடல்.

❖❀❖

தமிழ் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மாதிரி வினாத்தாள் - தொகுத்தறி மதிப்பீடு
### ஏழாம் வகுப்பு - தமிழ்
### பருவம் - 3

காலம் : 2.00 மணி மதிப்பெண் : 60

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 14 x 1 = 14**

1. ‘ஞானச்சுடர்’ என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது -----------.
அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்

2. ‘இளமை ‘ என்னும் சொல்லின் எதிர்ச்சொல் -----------.
அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை

3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ----------- என்றும் கூறுவர்.
அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

4. கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----------.
அ) கணிஇல்லது ஆ) கணில்லது இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது

5. மரம் வளர்த்தால் ----------- பெறலாம்.
அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

6. இளங்கோவடிகள் ----------- மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.
அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய

7. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ------------.
அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

8. ‘தானொரு‘ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----------.
அ) தா + ஒரு ஆ) தான் + னொரு இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு

9. விடுதலைப்போராட்டத்தின் போது காயிதேமில்லத் ----------- இயக்கத்தில் கலந்து கொண்டார்.
அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக்காய்ச்சும்
இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை

10. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது ------------.
அ) முதலாகுபெயர் ஆ) சினையாகுபெயர்
இ) தொழிலாகுபெயர் ஈ) பண்பாகுபெயர்

**பொருத்துக.**

11. விளைநிலம் - உண்மை
12. விதை - இன்சொல்
13. களை - ஈகை
14. உரம் - வன்சொல்

பருவம் 3 — 7

**II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளிக்க. 6 x 2 = 12**

15. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?
16. பொய்கைஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டினார்?
17. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?
18. 'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' – எவ்வாறு?
19. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
20. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
21. காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச்சொன்னது?
22. காயிதே மில்லத் பெயர்க்காரணம் பற்றி எழுதுக?
23. குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.
24. காயிதேமில்லத் அவர்கள் பற்றி தந்தை பெரியார் கூறியது யாது?

**III. அடிபிறழாமல் எழுதுக. 3 + 2 = 5**

25. 'வையகம் தகளியா ' எனத் தொடங்கும் புதுமை விளக்குப் பாடல்.
26. உறுபசி எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

**IV. எவையேனும் மூன்றனுக்குச் சுருக்கமாக விடையளிக்க. 3 x 2 = 6**

27. உருவக அணியை விளக்குக.
28. உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக.
29. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?
30. அணி என்றால் என்ன?
31. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?

**V. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளில் விடையளிக்க. 2 x 5 = 10**

32. அ) பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

(அல்லது)

ஆ) உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

33. அ) ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?

(அல்லது)

ஆ) திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க. 2 x 5 = 10**

34. 'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.
35. பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
"என்னைக் கவர்ந்த நூல்"
36. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
37. கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் தொடர்கள் உருவாக்குக.
விதை, கட்டு, படி, நிலவு, நாடு, ஆடு **1 x 3 = 3**

❖❀❖

தமிழ் 7